IMPROVED EDITION.

NEETIMANJARIVILAKKAM,

PART II.

WITH NOTES.

BY

PUNDIT N. A. SABAPATHY CHETTIAR,

The Late Tamil Pandit of Pasumalai College.

நீதிமஞ்சரிவிளக்கம்.

யாழ்ப்பாணத்து நல்லூர்,

பண்டிதர்

அ. சபாபதிச்செட்டியாரவர்கள்

செய்தது.

அவர்சகோதரரும்

நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலைத்

தலைமை உபாத்தியாயருமாகிய

அ. இராமலிங்கச்செட்டியாரால்

யாழ்ப்பாணம்

நாவலர் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1912.

Copy Right Reserved.

PREFACE.

The last edition of Neetimanjari Vilakkam by my brother, the late Mr. N. A. Sabapathychettiar, Tamil Pundit, Pasumalai College, Madura, having been exhausted, I have brought out this edition with some improvements.

It is a text for Training Schools, Girls' Schools, Teachers' Certificate Examinations &c. and I hope Candidates will find this edition very helpful.

It is my intention to publish shortly another edition with additional notes including explanations of allusions, short biographical sketches of the authors of the different sections, translations of Stanzas and papers with answers set in various examinations in Ceylon and India.

A. R.

Nallur,
January 1914

பொருளடக்கம்

		பக்கம்.
1.	இனியவை நாற்பது	1
2	இன்னா நாற்பது	19
3.	நன்னெறி	30
4	நளவெண்பா	49
5	அரிச்சந்திர புராணம்	55
6.	நீதிநெறி விளக்கம்	59
7.	அறநெறிச் சாரம்	89
8	பழமொழி	107
9.	திரிகடுகம்	119
10.	நான்மணிக் கடிகை	133
11.	சிறுபஞ்ச மூலம்	152
12.	தாயுமானவர் பாடல்	168

நீதிமஞ்சரி விளக்கம்.

இரண்டாம் பாகம்.

மதுரைத் தமிழாசிரியர் மகனார்

பூதஞ்சேந்தனார் இயற்றிய

இனியவை நாற்பது.

நீதிமஞ்சரி—பழைய நீதிநூல்களாகிய பூங்காவினின்றும் ஆய்ந்தெடுத்த கவிப்பூங்கொத்து. எனவே நீதிச்செய்யுட்டிரட்டு என்பது அதன் கருத்து.

இனியவை நாற்பதென்பது இனியவற்றை யுணர்த்தும் நாற்பது செய்யுளையுடைய நூலென இரண்டாம் வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாய் இந்நூலுக்குக் காரணக் குறியாயிற்று.

யானை யுடையபடை காண்டன் மிகவினிதே
யூனைத்தின் றூனைப் பெருக்காமை முன்னினிதே
கான்யாற் றடைகரை யூரினி தாங்கினிதே
மான முடையார் மதிப்பு.

(பதவுரை.) யானையுடைய-யானைப்படையோடு கூடிய, படை-சேனையை, காண்டல்-பார்த்தல், மிக இனிது-மிக இனிதே யாம், ஊனை-(பிறிதொன்றின்) மாமிசத்தை, தின்று-புசித்து, ஊனை-(தன்னு தேகத்தை, பெருக்காமை-வளர்க்காமை. மூன்-எவற்றிலும்) . மேலாக, இனிது-இனிதேயாம், கான் அடை-சோலைஅடுத்த, ஆறு-ஆற்றின், கரை-கரையிலுள்ள, ஊர்-நாடு, இனிது-(பலவளங்களையும் உடைமையால்) இனிதேயாம், மானம்-அறிவை, உடையார்-உடையவர்களது, மதிப்பு-நன்கு மதிப்பு, இனிது-இனிதேயாம்.

(பொழிப்புரை.) யானைப்படையோடுகூடிய சேனையைப் பார்த்தலும், பிறிதொன்றின் மாமிசத்தைப் புசித்துத் தனது தேகத்தை வளர்க்காமையும், சோலைநெருங்கிய யாற்றங்கரையி லுள்ள ஊரும், பெரியோர்களாற் செய்யப்படும் நன்குமதிப்பும் இனியனவேயாம்.

(இலக்கணமுடிபு.) காண்டல், பெருக்காமை, ஊர், மதிப்பு-எழுவாய், இனிது-பயனிலை. இனிது-இனிமை என்னும் பண்படியாகப்பிறந்த குறிப்புவினைமுற்று. யானை-ஆகுபெயர். (பின்திய ஊன்-ஆகுபெயர். காண்டல்தொழிற்பெயர். காண்-பகுதி, தல்-விகுதி, தகரம் டகரமாகத் திரிதல் சந்தி. பெருக்காமை-எதிர்மறைத் தொழிற்பெயர்; அது பெருக்கு என்னும் பிறவினைப் பகுதியும் மை என்னுந் தொழிற்பெயர் விகுதியும் அவற்றிற்கு இடையே * ஆ என்னும் எதிர்மறை இடைநிலையும் பெற்று, பகுதி ஈற்றுகரங்கெட்டு, உகரங்கெடநின்ற ககரமெய்யின்மேல் இடைநிலை ஆகார உயிரேறி முடிந்தது. ஆங்கு-இடைச்சொல். உடையார்-குறிப்புவினை வினையாலணையும் பெயர். உடைய-குறிப்புவினைப்பெயரெச்சம். இல்லார்-அதன்மறுதலை. (க)

---

* ஆ என்பதை எதிர்மறைவிகுதியென்பர்சிலர்; எதிர்மறை இடைநிலை யென்பதே சேனாவரையர், சிவஞானமுனிவர்முதலியோர் துணிவு. நடவா என்னும் அஃறிணைப் பலவின்பாற் படர்க்கை வினைமுற்றில் ஆகாரம் வேறுவிகுதி வேண்டாது தானே எதிர்மறைப் பொருளோடு பலவின்பாற் படர்க்கைப்பொருளை யுந்தந்து நிற்றலின், அங்குமாத்திரம் விகுதியேயாமென்றறிக.

கொல்லாமை முன்னினிது கோல்கோடி மாராயஞ்
செய்யாமை முன்னினிது செங்கோல னாகுதல்
எய்துந் திறத்தா லினிதென்ப யார்மாட்டும்
பொல்லாங் குரையாமை நன்கு.

(ப-ரை.) கொல்லாமை - ஒருயிரையுங்கொல்லாதிருத்தல், முன் இனிது-மேலாக இனிதேயாம், (அரசன்) கோல்-நீதி, கோடி-தவறி. மாராயம்-பெரிய அரசியலை. செய்யாமை-செய்யா தொழிதல், முன் இனிது-மேலாக இனிதேயாம், எய்தும்-(அரசன்) அடையவேண்டிய, திறத்தால்-குணங்களுள், செங்கோலனாகுதல்-செவ்விய கோலையுடைய னாகுதல், இனிது-இனிதேயாம், யார்மாட்டும்-எவரிடத்தும், பொல்லாங்கு-தீமைகளை, உரையாமை-சொல்லாது விடுதல், நன்கு-நன்மையேயாம், என்ப-என்று அறிந்தோர் கூறுவர்.

(பொ-ரை.) ஒருயிரையுங்கொல்லா திருத்தலும், அரசன் நீதிதவறி அரசியல் செய்யாதொழிதலும், செங்கோலையுடைய னாதலும். எவரிடத்திலுந் தீயனவற்றைச் சொல்லாதொழிதலும் இனியனவேயாமென்று அறிந்தோர்சொல்லுவர்.

(இ-பு.) மஹா ராஜ்யம் என்பது மாராயமென வந்தது, அறிந்தோர், தோன்றா எழுவாய். என்ப-பயனிலை, என்ப என் என்னும் பகுதியும் ப என்னும் எதிர்காலத்தை யுணர்த்தும் பலர்பாற் படர்க்கை விகுதியும் பெற்று முடிந்தது. கொல்லாமை, செய்யாமை, உரையாமை-எதிர்மறைத்தொழிற்பெயர்கள். முன் என்பது மிகவென்னும் பொருளில்வந்த இடைச்சொல். கோல்-ஆகுபெயர். பொல்லாங்கு, நன்கு, பண்புச்சொற்கள். கோடி-வினையெச்சம். யார்மாட்டும் ஏழாம்வேற்றுமை விரி. மாட்டு-சொல்லுருபு. ஆகுதல்-ஆ பகுதி கு சாரியை, தல் தொழிற் பெயர்விகுதி. (௨)

ஆற்றாக் துணையா லறஞ்செய்கை முன்னினிதே
பாற்பட்டார் கூறும் பயமொழி மாண்பினிதே

வாய்ப்புடைய ராகி வலவைக ளல்லாரைக்
காப்படையக் கோட லினிது.

(ப-ரை.) ஆற்றும்-(தன்னாற்) கூடிய, துணையால்-அளவில், அறம்-தருமத்தை, செய்கை-செய்தல், முன் இனிது-மேலாக இனிதேயாம், பால்-(அறிவின்) பகுதியில், பட்டார்-சென்றவர், கூறும்-சொல்லும், பய மொழி-உறுதி வார்த்தையின். மாண்பு-பெருமை, இனிது-ஆனிதேயாம், வாய்ப்பு-கிடைத்தலே, உடைய ராகி-உடையவராய், வலவைகள் அல்லாரை-எளியவரை, காப்பு-காவலாக, அடைய-பொருந்த, கோடல்-கொள்ளுதல், இனிது-இனிதேயாம்.

(பொ-ரை.) ஒருவன் தன்னால் கூடியவளவுந் தருமத்தைச் செய்தலும், அறிவுடையோர் சொல்லும் உறுதி மொழிகளின் பெருமையும், எளியவரைக் காத்துக்கொள்ளுதலும் இனியனவேயாம்.

(இ-பு.) செய்கை-தொழிற்பெயர், செய்-பகுதி. கை-தொழிற்பெயர் விகுதி. கூறும்-பெயரெச்சம். கூறு என்னும் பகுதியும் உம் என்னும் பெயரெச்ச விகுதியும் பெற்று, பகுதியீற்றுக் குற்றுகரங் கெட்டு, உகரங் கெட நின்ற றகரமெய்யின்மேல் விகுதி முதல் உகரவுயிர் ஏறிமுடிந்தது. மாண்பு-பண்புப்பெயர். வாய்ப்பு-தொழிறபெயர். அல்லார்-எதிர்மறைக் குறிப்புவினையாலணையும்பெயர். பாற்பட்டார்-பால் என்பதனோடு படு எனும் வினையடி புணர்ந்து ஒருசொல்லாகிய பாற்படு-பகுதி, ஆர்-விகுதி; உகரக்கேடு சந்தி; பகுதியிரட்டி யிறந்தகாலங்காட்டியது விகாரம். காப்பு, கோடல், தொழிற்பெயர்கள். வலவை. வலியுடையோன். வலம்-பகுதி. ஐ-பெயர்விகுதி. (ரு.)

தங்க ணமர்வுடையார் தாம்வாழ்தன் முன்னினிதே
யங்கண் விசும்பி னகனிலாக் காண்பினிதே
பங்கமில் செய்கைய ராகிப் பரிந்தியார்க்கு
மன்புடைய ராத லினிது.

(ப-ரை.) தங்கண் - தம்மேல், அமர்வுஉடையார் - விருப்பம் உடையாரிடத்து, தாம்-தாம், வாழ்தல் (இருந்து) வாழ்தல், முன் இனிது-மிக இனிதேயாம், அம்-அழகோடு, கண்-இடமகன்ற, விசும்பின்-ஆகாயத்திலுள்ள, அகல்-பரந்த, நிலா-சந்திரிகையை, காண்பு-காண்டல், இனிது-இனிதேயாம், யார்க்கும்-எவர்க்கும், பங்கமில்-குற்றம் இல்லாத செய்கையராகி-தொழிலையுடையவராகி, பரிந்து இரங்கி, அன்புடையராதல்-அன்புடையராயொழுகுதல், இனிது-இனிதேயாம்.

(பொ-ரை.) தம்மேல் விருப்ப முடையவரிடத்தில் இருந்து வாழ்தலும், சந்திரிகையைக்காணலும், எவர்க்கும் அன்புடையராய் வாழ்தலும் இனியனவேயாம்.

(உ-பு.) அமர்வு, காண்பு, வாழ்தல், தொழிற் பெயர்கள் உடையார்-குறிப்புவினையாலணையும் பெயர். இல் என்பது ஆகாரச்சாரியையும், அ என்னும் பெயரெச்சவிகுதியும், அவற்றிற்கிடையே தகர வெழுத்துப்பேறுந் தொக்க எதிர்மறைப் பெயரெச்சம். ஆகி-வினையெச்சம்; அது பரிந்து என்னும் வினையெச்சத்தைக்கொண்டு முடிந்தது. அகல்நிலா-வினைத் தொகை. (ச)

கடமுண்டு வாழாமை காண்ட லினிதே
நிறைமாண்பில் பெண்டிரை நீக்க லினிதே
மனமாண்பி லாதாரை யஞ்சி யகற
லெனைமாண்பு தானினிது நன்கு.

(ப-ரை.) கடம்-கடன் (வாங்கி), உண்டு-புசித்து, வாழாமை-சீவியாமையை, காண்டல்-செய்தல், இனிது-இனிதேயாம், நிறை மாண்பு-கற்பாகிய குணம், இல் இல்லாத, பெண்டிரை-மனைவியை, நீக்கல்-தள்ளிவிடுதல், இனிது-இனிதேயாம், மனம்-மனத்தில், மாண்பு-மாட்சிமை, இலாதாரை-இல்லாதவர்களை, அஞ்சி-பயப்பட்டு, அகறல்-நீங்குதல், எனைமாண்பு-எவ்வகைப்பட்ட குணத்தினும், நன்கு-மிக, இனிது-இனிதேயாம.

(பொ-ரை) கடன் வாங்கிய பொருள்கொண்டு வாழா திருத்தலும், கற்பில்லாதமனைவியை நீக்குதலும், மனக்குற்ற முடையவரைக் கண்டவளவிலே அஞ்சி நீங்கிவிடுதலும் இனியனவேயாம்,

(இ-பு.) கடன் என்பது கடம் எனப்*போலியாயிற்று. உண்டு-இறந்தகால வினையெச்சம்; அது வாழாமையென்னும் எதிர்மறைத் தொழிற்பெயரைக் கொண்டுமுடிந்தது. நிறை மாண்பு பண்புத்தொகை. நிறை-கற்பு, மனமாண்பு எழாம் வேற்றுமைத்தொகை. இலாதார்-எதிர்மறைக் குறிப்பு வினையாலணையும்பெயர். அஞ்சி-வினையெச்சம்; அது அகறல் என்னுந் தொழிற்பெயரைக்கொண்டு முடிந்தது. நன்கு-பண்புப்பெயர். தான்-அசை.

குழவி பிணியின்றி வாழ்த லினிதே
கழறு மவையஞ்சான் கல்வி யினிதே
மயலிக ளல்லராய் மாண்புடையார்ச் சேருந்
திருவுந்தீர் வின்றே லினிது.

(ப-ரை.) குழவி-சிறுகுழந்தைகள், பிணியின்றி-நோயில்லாமல், வாழ்தல் சீவித்தல், இனிது.இனிதேயாம், அவை-சபையை, அஞ்சான்-அஞ்சாதவனாய், கழறும்-பேசும், கல்வி-(ஒருவனுடைய) கல்வியானது, இனிது-இனிதேயாம். மயலிகள்-மயக்கமுடையவர்கள், அல்லராய்-அல்லாதவராய்: மாண்பு-நற்குண நற்செய்கைகளை, உடையார்-உடையவர்களை, சேரும்-அடையும், திருவும்-செல்வமும், தீர்வு-நீங்குதல், இன்றேல்-இலதாயின். இனிது-இனிதேயாம்.

(பொ-ரை) குழந்தைகள் பிணியின்றி வாழ்தலும், சபையிலே அஞ்சாது பேசுவோனுடைய கல்வியும், நற்குண நற்செய்கையுடையவர்களுடைய செல்வமும் இனியனவேயாம்.

---

*போலியாவது ஓரெழுத்து நிற்றற்குரியவிடத்து மற்றோரெழுத்துப் பொருள்வேறுபடா வண்ணம் ஒத்து நடத்தல்.

(இ-பு.) இன்றி-குறிப்புவினையெச்சம்; அது-வாழ்தல் என்னுந்தொழிற்பெயரைக்கொண்டு முடிந்தது. *அவையஞ்சான்-இரண்டாம்வேற்றுமைத் தொகையெனினும் ஐந்தாம்வேற்றுமைத் தொகையெனினும்பொருந்தும். குழவி-இருதிணைக்குமுரியபொதுப்பெயர். ‡மயலி-உயர்திணை இருபாற்கும் உரிய பொதுப்பெயர். உடையார்ச்சேரும் இரண்டாம்வேற்றுமைத் தொகை. தீர்வு-தொழிற்பெயர். இன்றேல்-குறிப்பு வினையெச்சம்; அது இனிது என்பதைக்கொண்டு முடிந்தது. (சு)

மான மழிந்தபின் வாழாமை முன்னினிதே
தான மழியாமை தானடங்கி வாழ்வினிதே
ஊனமொன் றின்றி யுயர்ந்து பொருளுடைமை
மானிடவர்க் கெல்லா மினிது.

(ப-ரை.) மானம்-மரியாதை, அழிந்தபின் - கெட்டபின், வாழாமை, உயிர்வாழாமை, முன் இனிது-மிக இனிதேயாம், தானம்-நன்னிலை, அழியாமை-கெடாதபடி, தான் அடங்கி-தான் அமைந்து, வாழ்வு-வாழுதல், இனிது-இனிதேயாம், ஊனம்-குற்றம், ஒன்று-சிறிதும், இன்றி-இல்லாது, உயர்ந்து-மேற்பட்டு, பொருளுடைமை செல்வத்தை யுடைமை, எல்லாமானிடவர்க்கும்-எல்லா மனுடர்களுக்கும், இனிது-இனிதேயாம்.

(பொ-ரை.) மரியாதை நீங்கியபின்-உயிர் வாழாமையும், நன்னிலை கெடாதபடி வாழ்தலும், குற்றஞ்சிறிதமில்லாது செல்வமுடைமையும், மானுடர்களுக்கெல்லாம் இனியனவேயாம்.

(இ-பு) அழிந்தபின்-அழிந்தவழி என்னும் பொருட்டாய் வந்த இறந்தகாலவினையெச்சம்; வாழாமை என்னும் எதிர்

---

* அச்சப்பொருளுக்கு இரண்டாம் வேற்றுமையுருபும் ஐந்தாம்வேற்றுமை யுருபும் வரும் என்பது தொல்காப்பியர்கருத்து.

‡ ஊமை வந்தான், ஊமை வந்தாள் என்பதுபோல மயலிவந்தான், மயலி வந்தாள் என்பதும் உயர்திணை யிருபாற்கும் பொதுவாம்.

மறைத் தொழிற்பெயரைக்கொண்டு முடிந்தது. அழிந்த என்னும் பெயரெச்சம் பின் என்னுங் காலப்பெயர்கொண்டது எனினும் பொருந்தும். அடங்கி-இறந்தகாலவினையெச்சம்; அது வாழ்வுஎன்னுந்தொழிற்பெயரைக் கொண்டுமுடிந்தது இன்றி-குறிப்பு வினையெச்சம்; அது உயர்ந்து என்னும் இறந்தகால வினையெச்சத்தைக் கொண்டுமுடிந்தது. உயர்ந்து என்பது உடைமை என்னுங் குறிப்பு வினையைக்கொண்டு முடிந்தது. * எல்லாம்-இருதிணை மூவிடப் பொதுப்பெயர். ஒன்றுமின்றியெனற்பாலது ஒன்றின்றியென இழிவுசிறப்பும்மை தொக்குநின்றது (எ)

குழவி தளர்நடையைக் காண்ட லினிதே
யவர்மழலை கேட்ட லமிழ்தி னினிதே
வினையுடையான் வந்தடைந்து வெய்துறும் போழ்தும்
மனனஞ்சா னாகு லினிது.

(ப-ரை.) குழவி-குழந்தைகளுடைய, தளர்-தளர்ந்த, நடை-நடையை, காண்டல்-காணுதல், இனிது-இனிதேயாம், அவர்-அக்குழந்தைகளுடைய, ‡மழலை-மழலைச்சொற்களை, கேட்டல்-கேட்டல், அமிழ்தின்-அமிர்தத்தைப் பார்க்கிலும், இனிது-இனிதேயாம், வினையுடையான்-போருக்குரியவன், வந்தடைந்து-வந்துசேர்ந்து, வெய்து-வெம்மையாய், உறும்போழ்தும்-நெருங்கும்போதும், மனன்-(அரசன்) மனம், அஞ்சானாகல்-அஞ்சாதெதிர்த்தல், இனிது-இனிதேயாம்.

(பொ-ரை.) குழந்தைகளுடைய தளர்ந்த நடையைக் காண்டலும், அவருடைய மழலைச்சொற்களைக் கேட்டலும், பகைவன் வந்து நெருங்கியகாலத்தும் அரசன் அஞ்சாது எதிர்த்தலும் இனியனவேயாம்.

(இ-பு.) தளர்நடை-வினைத்தொகை. அவர்-சுட்டுப்பெயர்; அ என்னும் பகுதியும் அர் என்னும் பலர்பால்விகுதியும் பெற்று

---

* நாமெல்லாம், நீரெல்லாம், அவரெல்லாம், அவையெல்லாம் எனவரும்.

‡ மழலை திரம்பாச்சொல், குதலையெனினும் பொருந்தும்.

இடையில் வகரமெய் தோன்றி, அம்மெய்யின்மேல் விகுதியூர்தல் அகரவுயிரேறி முடிந்தது. மழலைகேட்டல்-இரண்டாம் வேற்றுமைத் தொகை. அமிழ்தின் இனிது-ஐந்தாம்வேற்றுமைவிரி; உயர்வு கருதிய எல்லைப்பொருளில் வந்தது. காக்கையிற் கரிது களம்பழம் என்றாற்போல். வினையுடையான்-சத்துரு. வந்து-வினையெச்சம்; அது அடைந்து என்னும் வினையெச்சத்தைக் கொண்டுமுடிந்தது. வெய்து-வினைமுற்று வினையெச்சமாயிற்று. உறும்-பெயரெச்சம்; அது போழ்து என்னுங்காலப்பெயர் கொண்டது. மனம்-மனன் எனப்போலியாயிற்று. அஞ்சான்-எதிர்மறைவினையாலணையும்பெயர். (௮)

கற்றார்முற் கல்வி யுரைத்தன் மிகவினிதே
மிக்காரைச் சேர்தன் மிகமாண முன்னினிதே
எட்டுணை யானு மிரவாது தானீதல்
எத்துணையு மாற்ற வினிது.

(ப-ரை.) கற்றார்முன்-(நூல்களைக்) கற்றவருடைய சபையிலே, கல்வி-(தான்கற்ற) கல்வியை, உரைத்தல்-சொல்லியேற்றுதல், மிக இனிது-மேலாக இனிதேயாம், மிக்காரை-அறிவானுயர்ந்தாரை, சேர்தல்-அடைதல், மிகமாண-மிகமாட்சிமைப்பட, முன் இனிது-மேலாக இனிதேயாம், எட்டுணையானும்-சிறிதும், இரவாது-யாசியாமல், தான் ஈதல்-தான் பிறருக்குக் கொடுத்தல், எத்துணையும்-எவ்வளவும், ஆற்ற-மிக, இனிது-இனிதேயாம்.

(பொ-ரை.) கற்றவர்களுடைய சபையிலே கற்றகல்வியைச்சொல்லி யேற்றுதலும், அறிவுடையோரைச் சேர்தலும்; இரவாது பிறருக்குக் கொடுத்தலும் இனியனவேயாம்.

(இ-பு.) மிக இனிது-உரிச்சொற்றொடர். மிக்கார்-வினையாலணையும்பெயர். இரவாது-எதிர்மறைவினையெச்சம்; அது ஈதல் என்னுந் தொழிற்பெயரைக்கொண்டு முடிந்தது. ஆற்ற-உரிச்சொல்; இரவாது-இர என்னும் பகுதியும் உ என்னும் வினையெச்ச விகுதியும் ஆ என்னும் எதிர்மறை இடைநிலையும் பெற்று, வகர மெய்தோன்றி, தோன்றிய மெய்யின்மேல் எதிர்மறை ஆ

காரம் ஏறி இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையே தகரவெழுத்துப்பேறும் பெற்று முடிந்தது. (௯)

நட்டார்ப் புறங்கூறான் வாழ்த னனியினிதே
பட்டாங்கு பேணிப் பணிந்தொழுகன் முன்னினிதே
முட்டில் பெரும்பொரு ளாக்கியக்கான் மற்றது
தக்குழி யீதலே நன்று.

(ப-ரை.) நட்டாரை-உற்றாரை, புறங்கூறான்-புறத்திற் பழித்துப் பேசாதவனாய், வாழ்தல்-சீவித்தல், நனி-மிகவும், இனிது-இனிதேயாம், பட்டாங்கு-உண்மைநெறிகளை, பேணி-விரும்பி, பணிந்து- (யாவருக்கும்) பணிவுடையனாய், ஒழுகல்-நடத்தல், முன் இனிது-மிக இனிதேயாம், முட்டு இல்-குறைவு இல்லாத, பெரும்பொருள்-பெரிய செல்வத்தை, ஆக்கியக்கால்-தேடியவிடத்து, அது-அப்பொருளை, தக்குழி-சற்பாத்திரத்தில், ஈதலே-கொடுத்தலே, நன்று-இனிதேயாம்.

(பொ-ரை.) உற்றாரைப் புறங்கூறாதிருத்தலும், உண்மை நெறிகளை விரும்பி எவரிடத்தும் பணிவுடையனாயொழுகுதலும், சற்பாத்திரத்திற் கொடுத்தலும் இனியனவேயாம்.

(இ-பு) நட்டார்-வினையாலணையும் பெயர். புறங்கூறான்-வினைமுற்று வினையெச்சமாயிற்று. நனி இனிது-உரிச்சொற்றொடர். பட்டாங்கு-ஆகுபெயர். பேணி-வினையெச்சம்; அது பணிந்து என்னும் எச்சத்தைக்கொண்டு முடிந்தது. பேணி-பேணு என்னும் பகுதியும் இ என்னும் வினையெச்சவிகுதியும் பெற்று பகுதியீற்றுகரங்கெட்டு உகரங்கெடநின்ற ணகரவொற்றின்மேல் விகுதி இகரவுயிர் ஏறி முடிந்தது. பணிந்து-ஒழுகல் என்னுந் தொழிற்பெயரைக்கொண்டு முடிந்தது. பணிந்து-பணி என்னும் பகுதியும் உ என்னும் வினையெச்சவிகுதியும் த் என்னும் இடைநிலையும் த் என்னுஞ்சந்தியும் சந்தியால்வந்த தகரவொற்று நகரமெல்லொற்றாதலாகிய விகாரமும் பெற்று, விகுதி உகரம் தகரவிடை நிலையில் ஏறி முடிந்தது. ஒழுகல்-ஒழுகு என்னும் பகுதியும் அல் என்னுந் தொழிற்பெயர் விகுதியும்பெற்று, பகுதியீற்றுகரங்கெட்டு

உகரங்கெடநின்ற ககரமெய்யின்மேல் விகுதிமுதல் அகரவுயிரேறிமுடிந்தது. பெரும் பொருள்-பண்புத்தொகை. ஆக்கியக்கால்-வினையெச்சம்; அது ஆக்கு என்னும் பிறவினைப் பகுதியும் கால் என்னும் எதிர்கால வினையெச்ச விகுதியும் அவைகளுக்கு இடையே, இன்சாரியையும் அகரச்சாரியையும் பெற்று, பகுதியீற் றுகரங்கெட்டு உகரங் கெடநின்ற ககரமெய்யின்மேற் சாரியை இகரவுயிரேறி, சாரியையீற்று னகரமெய் குறைந்து யகரவுடம்படுமெய் தோன்றி அம்மெய்யின்மேல் சாரியை அகரவுயிரேறி விகுதிக் ககரமிகுந்து முடிந்தது. மற்று-இடைச்சொல். தக்க உழித்க்குழி எனக் குறைந்து நின்றது, நன்று-குறிப்புவினைமுற்று. ()

சலவரைச் சாரா விடுத லினிதே
புலவர்தம் வாய்மொழி போற்ற லினிதே
மலர்தலை ஞாலத்து மன்னுயிர்க் கெல்லாம்
தகுதியால் வாழ்த லினிது.

(ப-ரை.) *சலவரை-பகைவரை, சாராவிடுதல்-அடையாதிருத்தல், இனிது-இனிதேயாம், புலவர்தம்-அறிவுடையவருடைய, வாய்மொழி-வாயினின்றுவரும் சொற்களை, போற்றல்-காத்துக்கொள்ளுதல், இனிது-இனிதேயாம், மலர்தலை-பரந்த இடத்தையுடைய, ஞாலத்து-பூமியின்கண், மன்-நிலைபெற்ற, உயிர்க்கு எல்லாம்-ஆன்மாக்களுக்கெல்லாம், தகுதியால்-ஒழுக்கத்தோடு, வாழ்தல்-வாழுதல், இனிது-இனிதேயாம்.

(பொ-ரை.) பகைவரைச் சேராதிருத்தலும், அறிவுடையோர் வாய்ச்சொற்களைக் காத்துக்கொள்ளலும், ஒழுக்கத்தோடு வாழ்தலும் இனியனவேயாம்.

(இ-பு.) சலவர்-காரணம்பெயர். சாராவிடுதல்-எதிர்மறைத்தொழிற்பெயர்; சார் என்னும் பகுதியும் தல் என்னுந்தொழிற்பெயர் விகுதியும் சார்என்னும் பகுதிக்கும் விடு என்னும் விகுதிக்

---

* சலவர் என்பதற்கு கோபிகள் என்றும் வஞ்சகர் என்றும் பொருள் கூறுவாருமுளர்.

கும் இடையே, எதிர்மறை ஆகார இடைநிலையும் பெற்று முடிந்தது. வாய்மொழி-நீக்கப் பொருளில்வந்த ஐந்தாம்வேற்றுமைத்தொகை; அது வாயினின்றுவரும் மொழியென விரியும். மலர்தலை-வினைத்தொகை. ஞாலத்து என்பதில் அத்து சாரியை இடைச்சொல்; தலைஞாலம்-இரண்டாம்வேற்றுமை உருபும் பயனுமுடன் றொக்க தொகை; அது தலையையுடைய ஞாலம் என விரியும். மன்-இடைச்சொல். (கக)

பிறன்கைப் பொருள்வெளவான் வாழ்த லினிதே
அறம்புரிந் தல்லவை நீக்க லினிதே
மறந்தேயு மாணா மயரிகட் சேராத்
திறந்தெரிந்து வாழ்த லினிது.

(ப-ரை.) பிறன்-பிறனுடைய, கைப்பொருள்-கையின்கணுள்ள செல்வத்தை, வெளவான்-கவராதவனாய், வாழ்தல்-வாழுதல், இனிது-இனிதேயாம், அறம்-தருமத்தை, புரிந்து-செய்து, அல்லவை-பாவத்தை, நீக்கல்-தள்ளிவிடுதல், இனிது-இனிதேயாம், மறந்தேயும்-மனஞ்சோர்ந்தும், மாணா-மாட்சிமையில்லாத, மயரிகள்-அறிவிலிகளை, சேரா-அடையாத, திறம்-பகுதியை, தெரிந்து-அறிந்து, வாழ்தல்-வாழுதல், இனிது-இனிதேயாம்.

(பொ-ரை.) பிறனுடைய பொருளைக் கவராது வாழ்தலும் தருமத்தைச்செய்து பாவத்தை நீக்கலும், மறந்தும் அறிவிலாதவரைச் சேராது வாழ்தலும் இனியனவேயாம்.

(இ-பு.) கைப்பொருள்-ஏழாம்வேற்றுமை உருபும் பயனுமுடன் தொக்க தொகை: அது கையின்கணுள்ள பொருள் என விரியும். வெளவான்-எதிர்மறை வினைமுற்று எச்சமாய் நின்றது. புரிந்து-இறந்தகால வினையெச்சம்; அது நீக்கல் என்னுந் தொழிற்பெயரைக்கொண்டு முடிந்தது. மாணாத, சேராத, என்னும் எதிர்மறைப் பெயரெச்சங்கள், மாணா, சேரா என விறுதிகுறைந்து நின்றன. திறந்தெரிந்து, இரண்டாம் வேற்றுமைத்தொகை. தெரிந்து-வினையெச்சம். மயரி-உயர்திணை இருபாற்கும் உரிய பொதுப்பெயர்; ஊமை என்பதுபோலக் கொள்க. (கஉ)

வெல்வது வேண்டி வெகுளாதா னோன்பினிதே
ஒல்லுந் துணையுமொன் றுய்ப்பான் பொறையினிதே
இல்லது காமுற் றிரங்கி யிடர்ப்படார்
செய்வது செய்த லினிது.

(ப-ரை.) வெல்வது-(தான்) வெல்வதை, வேண்டி-விரும்பி, வெகுளாதான்-கோபியாதவனுடைய, நோன்பு-பொறுமை, இனிது-இனிதேயாம், ஒல்லும் துணையும்-(தன்னால் இயன்றமட்டும், ஒன்று-(தான்மேற்கொண்ட) தொன்றை, உய்ப்பான்-நடத்துபவனுடைய, பொறை-வன்மை, இனிது-இனிதேயாம், இல்லது-(தனக்கு) இல்லாததை, காமுற்று-விரும்பி, இரங்கி-மனம் வருந்தி, இடர்ப்படார்-துன்பத்துட் படாமல், செய்வது-(இயலுந்தொழிலைச்) செய்தல், இனிது-இனிதேயாம்.

(பொ-ரை.) வெற்றியை விரும்பிக் கோபியாதவனுடைய பொறுமையும், தன்னாலியன்றமட்டுந் தான் மேற்கொண்ட தொன்றை நடத்துபவனுடைய வன்மையும், தனக்கியலாததனை விரும்பி மனமிரங்கித் துன்பத்துட்படாமல் இயலுந் தொழிலைச் செய்தலும் இனியனவேயாம்.

(இ-பு.) வெல்வது-தொழிற்பெயர்; அது வெல் என்னும் பகுதியும், * து வென்னுந் தொழிற்பெயர் விகுதியும், எதிர்காலத்தை யுணர்த்தும் வகர இடைநிலையும், அகரச்சாரியையும் பெற்றுமுடிந்தது. வேண்டி-இறந்தகாலவினையெச்சம்; அது வெகுளாதான் என்னும் எதிர்மறை வினையாலணையும் பெயரின் பகுதியைக்கொண்டு முடிந்தது. நோன்பு-தொழிற்பெயர். ஒன்று-எண்ணுருபெயர். உய்ப்பான்-தெரிநிலை வினையாலணையும் பெயர். பொறை-தொழிற்பெயர். இல்லது-குறிப்புவினையாலணையும் பெயர். காமுற்று-இறந்தகால வினையெச்சம்; அது இரங்கி என்னும் இறந்தகால வினையெச்சத்தைக்கொண்டு முடிந்தது. இடர்ப்படார்-வினைமுற்று வினையெச்சமாயிற்று. (கசு)

* து-விகுதி-வெல்வது, வெல்கின்றது, வென்றது என முக்கால இடைநிலைகளோடு கூடியும் வரும்.

தானங் கொடுப்பான் றகையாண்மை முன்னினிதே
மானம் படவரின் வாழாமை முன்னினிதே
ஊனங்கொண் டாடா ருறுதி யுடையவை
கோண்முறையாற் கோட லினிது.

(ப-ரை.) தானங்கொடுப்பான்-தானஞ்செய்பவனது, ‡ தகை ஆண்மை-அறிவின் றலைமை, முன் இனிது-மேலாக இனிதேயாம், மானம்பட-பெருமைகெட, வரின்-வந்ததாயின், வாழாமை-இறந்துவிடுதல், முன் இனிது-மேலாக இனிதேயாம், ஊனம்-குற்றத்தை, கொண்டாடார்-பாராட்டாது, உறுதியுடையவை-நன்மையுள்ளனவற்றை, கோள் முறையால்-கொள்ளும் வழியால், கோடல்-கொள்ளுதல், இனிது-இனிதேயாம்.

(பொ-ரை.) தானஞ் செய்பவனது அறிவின் பெருமையும், ஒருவன் மானங்கெடுமாயின் இறந்து விடுதலும், குற்றத்தைக் கொண்டாடாது குணத்தைக் கொண்டாடுதலும் இனியனவேயாம்.

(இ-பு.) கொடுப்பான்-வினையாலணையும்பெயர். ஆண்மை என்பதில் மை விகுதி தன்மைப்பொருளில் வந்தது. பட-எதிர்கால வினையெச்சம்; அது வரின் என்னும் வினையெச்சத்தைக் கொண்டு முடிந்தது. கொண்டாடார் எதிர்மறைத் தெரிநிலை வினைமுற்று வினையெச்சமாயிற்று. கோள்-முதனிலைத் தொழிற்பெயர். தகை யாண்மை-ஆறும்வேற்றுமைத் தொகை, ஊனங் கொண்டாடார்-இரண்டாம் வேற்றுமைத்தொகை; அது ஊனத்தைக் கொண்டாடாரென விரியும். (கஎ)

கயவரைக் கைஇகந்து வாழ்த லினிதே
உயர்வுள்ளி யூக்கம் பிறத்தலினிதே
எளிய ரிவரென் றிகழ்ந்துரையா ராகி
ஒளிபட வாழ்த லினிது.

---

‡ தகை-அறிவு.

(ப-ரை.) கயவரை-கீழ்மக்களை, கையிகந்து-கைவிட்டு, வாழ்தல்-வாழுதல், இனிது-இனிதேயாம், உயர்வு-உயர்ச்சியை, உள்ளி-நினைத்து, ஊக்கம்-உள்ளக்கிளர்ச்சி, பிறந்தல்-தோன்றுதல், இனிது-இனிதேயாம், இவர் எளியர் என்று-இவர் எளியவரென்று, இகழ்ந்து-இகழ்ந்து, உரையாராகி- (பிறராற்) பேசப்படாராகி, ஒளி-கீர்த்தி, பட-உண்டாக, வாழ்தல்-வாழுதல், இனிது-இனிதேயாம்.

(பொ-ரை.) கீழ்மக்களைக் கைவிட்டு வாழுதலும், உயர்ச்சியை நினைந்து உள்ளக்கிளர்ச்சி கொள்ளுதலும், கீர்த்தியோடு வாழுதலும் இனியனவேயாம்.

(இ-பு.) கயவர்-காரணப்பெயர். கையிகந்து-இறந்தகால வினையெச்சம். உயர்வுள்ளி-இரண்டாம் வேற்றுமைத் தொகை. உள்ளி-இறந்தகால வினையெச்சம். இவர்-சுட்டுப்பெயர். என்று என்னும் எச்சம் இகழ்ந்து என்னும் இறந்தகால வினையெச்சத்தைக் கொண்டு முடிந்தது. உரையாராகி என்னும் வினையெச்சம் வாழ்தலென்னுந் தொழிற்பெயரைக்கொண்டு முடிந்தது. (கரு)

அடைந்தார் துயர்கூரா வாற்ற லினிதே
கடங்கொண்டுஞ் செய்வன செய்த லினிதே
சிறந்தமைந்த கேள்விய ராயினு மாராய்ந்
தறிந்துரைத்த லாற்ற லினிது.

(ப-ரை.) அடைந்தார்-தம்மை (அடைக்கலமாகச்) சேர்ந்தவர், துயர்கூரா-துன்பமடையாமல், ஆற்றல்-தாங்குதல், இனிது-இனிதேயாம், கடம்-கடன், கொண்டும்-வாங்கியும், செய்வன-செய்யத்தகுந்தவைகளை, செய்தல்-செய்துமுடித்தல், இனிது-இனிதேயாம், சிறந்து-சிறப்புற்று, அமைந்த-நிறைந்த, கேள்வியராயினும்- (நூற்) கேள்வியை யுடையவராயினும், ஆராய்ந்து-ஆலோசித்து, அறிந்து-உணர்ந்து, உரைத்தல்- (ஒன்றைச்) சொல்லுதல், ஆற்ற இனிது-மிக இனிதேயாம்.

(பொ-ரை.) தம்மை அடைக்கலம் புகுந்தவர் துன்பமடையாமற் றாங்குதலும், கடன்வாங்கியுஞ் செய்யத்தகுவனவற்றைச்

செய்துமுடித்தலும், சிறந்தகல்வி யுடையராயினும் ஆலோசித்துப் பேசுதல் இனியனவேயாம்.

(இ-பு.) அடைந்தார்-வினையாலணையும் பெயர். கூராமல் என்னும் எதிர்கால வினையெச்சம் கூரா என விகுதிகெட்டு நின்றது. உம்மை இழிவு சிறப்பு. செய்வன-அஃறிணைப் பலவின்பாற் படர்க்கை வினையாலணையும் பெயர்; அது ஐயுருபேற்றது. அமைந்த இறந்தகாலப் பெயரெச்சம்; அது கேள்வியர் என்னும் பெயரைக்கொண்டு முடிந்தது. ஆராய்ந்து என்னும் இறந்தகால வினையெச்சம் அறிந்து என்னும் இறந்தகால வினையெச்சத்தைக் கொண்டு முடிந்தது. அறிந்து-உரைத்த லென்னுந் தொழிற்பெயரைக்கொண்டு முடிந்தது. (கசு)

கற்றறிந்தார் கூறுங் கருமப் பொருளினிதே
பற்றமையா வேந்தன்கீழ் வாழாமை முன்னினிதே
தெற்றெனவின்றித் தெளிந்தாரைத் தீங்கூக்காப்
பத்திமையிற் பாங்கினிய தில்.

(ப-ரை.) கற்று அறிந்தார்- (நூல்களைக்) கற்றுணர்ந்தவர், கூறும்-சொல்லும், கருமப்பொருள்-உறுதிப்பொருள், இனிதே-இனிதேயாம், பற்று-அன்பு, அமையா-பொருந்தாத, வேந்தன் கீழ்-அரசனுடைய (ஆளுகைக்கு) கீழ், வாழாமை-வாழாதிருத்தல், முன் இனிது-மேலாகவினிதேயாம். * தெற்றெனவு இன்றி-ஆராய்ந்து, பாங்கு- (தனக்கு) உரிமையாக, ‡ தெளிந்தாரை-தெளிந்துகொள்ளப் பட்டவரிடத்தில், (செயப்படும்) தீங்கு ஊக்கா-குற்றமில்லாத, பத்திமையில்-அன்பினும், இனியது இல்-இனியது வேறில்லை,

(பொ-ரை) கற்றோர் சொல்லும் உறுதிப்பொருளும், அன்பில்லாத அரசன்கீழ் வாழாமையும், அரசன் தனக்குரிமையாகத் தெளிந்துகொண்டவர்களிடத்தில் அன்புவைத்தலும் இனியனவேயாம்.

---

* தெற்றெனவு=விரைவு.

‡ தெளிந்தார்=ஆராய்ந்து தொழிலுக்குரிமையாகக் கொண்டவர்.

(இ-பு.) கூறும்-பெயரெச்சம். கருமப்பொருள்-நான்காம் வேற்றுமையுருபும் பயனுமுடன் றொக்கதொகை; அது கருமத்துக்குரிய பொருளென விரியும். அமையா, ஊக்கா, தகரவொற்றும் அகரவிகுதியுந்தொக்க எதிர்மறைப் பெயரெச்சங்கள். வேந்தன்கீழ் வாழாமை-எழாம்வேற்றுமைவிரி கீழ்-எழாம்வேற்றுமை உருபு. ஊக்கா ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; அது பத்திமையென்னும் பெயரைக்கொண்டு முடிந்தது. இனியது-குறிப்புவினையாலணையும்பெயர். * இல்லை என்பது இல் எனக்கடைக்குறைந்துநின்ற பொதுவினைக்குறிப்பு. தெளிந்தாரை-இரண்டாம்வேற்றுமை யுருபு மயக்கம். (கஎ)

எல்லியம் போது வழங்காமை முன்னினிதே
சொல்லுங்காற் சோர்வின்றிச் சொல்லுதன் மாண்பினிதே
புல்லிக் கொளினும் பொருளல்லார் தங்கேண்மை
கொள்ளா விடுத லினிது.

(ப-ரை.) எல்லியம்போது-இராக்காலத்திலே, வழங்காமை-(தனி) வழிச்செல்லாமை, முன் இனிது-மிக வினிதேயாம், சொல்லுங்கால்-(ஒன்றைச்) சொல்லும்பொழுது, சோர்வு இன்றி-(சொற்களிலே) சோர்வுபடாமல், சொல்லுதல்-சொல்லுதலாகிய. மாண்பு-மாட்சி, இனிது-இனிதேயாம், புல்லிக்கொளினும்-(வலியவந்து) சினேகித்துக் கொண்டாலும், பொருளல்லார் தம்-ஒருபொருளாக மதிக்கப்படாதவருடைய, கேண்மை-நட்பை, கொள்ளாவிடுதல்-கொள்ளாது நீக்குதல், இனிது-இனிதேயாம்.

(பொ-ரை.) இராக்காலத்திலே தனிவழிப் போகாமையும், ஒன்றைச் சொல்லும்பொழுது சொற்களிற் சோர்வுபடாமற் சொல்லுதலும், வலியவந்து சிநேகித்தாலும் கீழ்மக்களுடைய நட்பைக்கொள்ளாது நீக்கிவிடுதலும் இனியனவேயாம்.

---

* வேறு, இல்லை, உண்டு என்னும் இம்மூன்று வினைக்குறிப்பு முற்றுச்சொற்களும், யார் என்னும் வினாவினைக்குறிப்பு முற்றுச்சொல்லும், இருதிணையைம்பான் மூவிடங்கட்கும் பொதுவாகி வரும்.

(இ-பு.) எல்லியம் என்பதில் அம் சாரியை இடைச்சொல். புல்லி-இறந்தகால வினையெச்சம்; அது கொளினும் என்னும் வினையெச்சத்தைக்கொண்டு முடிந்தது. (கஅ)

சிற்றா ளுடையான் படைக்கல மாண்பினிதே
நட்டா ருடையான் பகையாண்மை முன்னினிதே
எத்துணையு மாற்ற வினிதென்ப பால்படும்
கற்றா வுடையான் விருந்து.

(ப-ரை.) சிற்றாள்-ஏவலாளர்களை, உடையான்-உடையவனது, படைக்கல மாண்பு-ஆயுதங்களின் பெருமை, இனிது-இனிதேயாம், நட்டார்-சுற்றத்தாரை, உடையான்-உடையவனுடைய, பகை ஆண்மை-பகைவலிமை, முன் இனிது-மிக வினிதேயாம், பால்படும்-பாலைக்கொடுக்கும், கன்று ஆ-கன்றையுடைய பசுவை, உடையான்-வைத்திருப்பவன், * விருந்து-(இடும்) விருந்து, எத்துணையும்-எவ்வளவும், ஆற்ற-மிகவும், இனிது என்ப-இனிதென்று (அறிந்தோர்) சொல்லுவர்.

(பொ-ரை.) ஏவலாளர்களுடையவனது ஆயுதவலிமையும், சுற்றத்தாரை யுடையவனுடைய பகை வலிமையும், பாற்பசுவை யுடையவனிடம் விருந்தும் இனியனவேயாமென்று அறிந்தோர் சொல்லுவர்.

(இ-பு.) அறிந்தோர்-தோன்றா எழுவாய், என்ப-பயனிலை. பகையாண்மை-ஆறாம் வேற்றுமைத்தொகை.[1] கற்றா-இரண்டாம் வேற்றுமை உருபும் பயனு முடன்றொக்கதொகை; அது கன்றை யுடைய ஆ என விரியும். கன்று-என்னும் மென்றொடர்க்குற்றுகரம் கற்று என வன்றொடராய்த் திரிந்து ஆகாரவுயிர் வந்தபொழுது உகரங்கெட்டு உகரங்கெடநின்ற றகரமெய்யின்மேல் வருமொழி ஆகாரமேறிக் கற்றா என நின்றது. உடையான்-குறிப்பு வினையாலணையும் பெயர். (கக)

---

* விருந்து=புதுமை, அது புதிதாய் வந்தவர்களுக்கு இடும் உணவின் மேனின்றது.

பிச்சைபுக் குண்பான் பிளிறாமை முன்னினிதே
துச்சி லிருந்து துயர்கூரா மாண்பினிதே
உற்றபே ராசை கருதி யறனொரூஉம்
ஒற்க மிலாமை யினிது.

(ப-ரை.) பிச்சைபுக்கு-பிச்சையேற்று, உண்பான்-புசிப்பவன், பிளிறாமை-கோபியாமை, முன் இனிது-மிகவினிதேயாம், * துச்சில் இருந்து-ஒதுக்குக்குடியிருந்து, துயர் கூரா-துன்பப்படாத, மாண்பு-பெருமை, இனிது-இனிதேயாம், உற்ற-பொருந்திய, பேராசை-பேரவாவை, கருதி-நினைத்து, அறன்-தருமத்தை, ஒரூஉம்-சிதைக்கும், (வினைகளைச் செய்து) ஒற்கம் இலாமை மனத்தளர்ச்சி அடையாமை, இனிது-இனிதேயாம்.

(பொ-ரை.) பிச்சையேற்றுண்பவன் கோபியாதிருத்தலும், ஒதுக்குக் குடியிருந்து வருந்தாமையும், தருமத்தைக் கெடுக்கும் வினைகளைச்செய்து மனந் தளராமையும் இனியனவேயாம்.

(இ-பு.) புக்கு-இறந்தகால வினையெச்சம்; அது புகு என்னும் பகுதி புக்கு என விகாரப்பட்டு இறந்த காலங் காட்டிற்று. பிளிறாமை-எதிர்மறைத் தொழிற்பெயர். உற்ற-இறந்தகாலப் பெயரெச்சம்; அது பேராசை என்னும் பெயரைக்கொண்டு முடிந்தது. ஒற்கம்-தொழிற்பெயர். (உ0)

கபில தேவர்

இயற்றிய

இன்னா நாற்பது.

இன்னா நாற்பதென்பது இன்னாதனவற்றை யுணர்த்தும் நாற்பது செய்யுளையுடைய நூல் என அன்மொழித் தொகையாய் இந்நூலுக்குக் காரணக்குறியாயிற்று.

---

* துச்சில்-ஒதுக்கிடம்.

கொடுங்கோன் மறமன்னர் கீழ்வாழ்த லின்னா
நெடுநீர் புணையின்றி நீந்துத லின்னா
கடுமொழி யாளர் தொடர்பின்னா வின்னா
தடுமாறி வாழ்த லுயிர்க்கு.

(ப-ரை.) மறம்-கொலைத்தொழிலையுடைய, மன்னர்-அரசருடைய, ‡ கொடுங்கோல் கீழ்-கொடுங்கோலின்கீழ், வாழ்தல்-வாழுதல், இன்னா-துன்பமேயாம், நெடுநீர்-பரந்த நீரை, புணை இன்றி-தெப்பமில்லாமல், நீந்துதல்-கடத்தல், இன்னா-துன்பமேயாம், கடுமொழி-வன் சொற்களை, ஆளர்-நீக்காதவருடைய, தொடர்பு-நட்பு, இன்னா-துன்பமேயாம், தடுமாறி-ஒருநிலையின்றி, வாழ்தல்-வாழுதல், உயிர்க்கு-ஆன்மாக்களுக்கு, இன்னா-துன்பமேயாம்.

(பொ-ரை.) கொலைத் தொழிலையுடைய அரசர்களுடைய கொடுங்கோலின்கீழ் வாழ்தலும், கடல் முதலியவற்றைத் தெப்பமின்றிக் கடத்தலும், கடுஞ் சொற்களைச் சொல்லுபவர்களோடு கொள்ளுஞ் சினேகமும், உயிர்களுக்கு ஒருநிலையின்றி வாழ்தலுந் துன்பமேயாம்.

(இ-பு.) மறமன்னர்-இரண்டாம் வேற்றுமை உருபும் பயனுமுடன்றொக்க தொகை. கோலின்கீழ்-கீழ் ஏழாம்வேற்றுமையுருபு. நெடுநீர், கடுமொழி, பண்புத்தொகைகள். கடுமொழியாளர் என்று பாடங்கொண்டு கடுமையாகிய மொழியை யாள்பவரென்று பொருள்கொள்வதும் பொருந்தும். (உக)

எருதி லுழவர்க்குப் போகீர மின்னா
கருவிகண் மாறிப் புறங்கொடுத்த லின்னா
திருவுடை யாரைச் செறலின்னா வின்னா
பெருவலியார்க் கின்னா செயல்.

(ப-ரை.) எருது இல்-உழவுகாளைக ளில்லாத, உழவர்க்கு-உழவுத்தொழிலாளர்களுக்கு, போகு ஈரம்-விரைவிலே உலரக்கூ

‡ கொடிய நோய்போல விருத்தலின் கொடுங்கோலென்றார்.

டியவீரம், இன்னா-துன்பமேயாம், கருவிகள்-சேனைகள், மாறி-மாறுபட்டு, புறங்கொடுத்தல்-யுத்தகளத்திலே புறங்காட்டி யோடுதல், இன்னா-துன்பமேயாம், திருவுடையாரை-அருட்செல்வமாகிய கல்வியுடையவரை, செறல்-கோபித்தல், இன்னா-துன்பமேயாம், பெருவலியார்க்கு-பெரிய வலிமையுடைய (அரசர்க்கு), இன்னா செயல்-துன்பத்தைச் செய்தல், இன்னா-(தனக்கு) துன்பமேயாம்.

(பொ-ரை.) தமக்கென உழவுகாலைகளில்லாத உழவர்களுக்கு விரைவிலே உலரக்கூடிய ஈரமும், யுத்தகளத்தினின்று சேனைகண்மாறிப் புறங்காட்டி யோடுதலும், அறிவினையுடையவர்களைக் கோபித்தலும், அரசர்களுக்குத் துன்பஞ்செய்தலுந் துன்பமேயாம்.

(இ-பு.) இல்லாத-இல் எனக் குறைந்துநின்றது. போகீரம்-வினைத்தொகை. திருவுடையார்-இரண்டாம் வேற்றுமைத்தொகை. செறல்-தொழிற்பெயர்; அது செறு என்னும் பகுதியும் அல் என்னுந் தொழிற்பெயர் விகுதியும் பெற்று, பகுதியீற்றுகரங்கெட்டு உகரங்கெடநின்ற றகரமெய்யின்மேல் விகுதி அகரவுயிரேறி முடிந்தது.

ஆற்ற லிலாதான் விடுத்த படையின்னா
நாற்ற மிலாத மலரின் வனப்பின்னா
தேற்றமிலாதான் றுணிவின்னா வாங்கின்னா
மாற்ற மறியா னுரை.

(ப-ரை.) ஆற்றல் இலாதான்-வலிமையில்லாதவன், விடுத்த-செலுத்திய, படை-ஆயுதம், இன்னா-துன்பமேயாம். நாற்றம் இலாத-நறுமணம் இல்லாத, மலரின்-பூவின், வனப்பு-அழகு, இன்னா-துன்பமேயாம், தேற்றம்-ஆராய்ந்து தெளிதல், இலாதான் இல்லாதவனுடைய, துணிவு-முயற்சி, இன்னா-துன்பமேயாம், மாற்றம்-பொருள், அறியான்-அறியாதவனுடைய, உரை-சொற்கள், இன்னா-துன்பமேயாம்.

(பொ-ரை.) வலிமையில்லாதவன் செலுத்திய ஆயுதமும், நறுமணமில்லாதபூவின் அழகும், ஆராய்ந்து தெளியாதவனுடைய முயற்சியும், பொருளறியாதவன் சொல்லுஞ் சொல்லுந் துன்பமேயாம்.

(இ-பு.) இலாதான்-எதிர்மறைக் குறிப்பு வினையாலணையும் பெயர். விடுத்த-இறந்தகாலப் பெயரெச்சம். படை-தொழிற்பெயர்; அது படு என்னும் பகுதியும் ஐ என்னுங் கருவிப்பொருள் விகுதியும்பெற்று, பகுதியீற்று உகரங்கெட்டு உகரங்கெடநின்ற டகர மெய்யின்மேல் விகுதி ஐகாரவுயிரேறி முடிந்தது. மலர்-இகரவிகுதி புணர்ந்துகெட்டது. தேற்றம், துணிவு,—தொழிற்பெயர்கள். அறியான்-எதிர்மறை வினையாலணையும் பெயர். உரை-காரண இடுகுறிப்பெயர்; முக்கண னென்பதுபோல. ஆங்கு-அசை. (உ௩)

பொருளுணர்வா ரில்வழிப் பாட்டுரைத்த லின்னா
இருள்கூர் சிறுநெறித் தாந்தனிப்போக் கின்னா
அருளிலார் தங்கட் செலவின்னா வின்னா
பொருளில்லார் வண்மை புரிவு

(ப-ரை.) பொருள்-பொருளின், (சிறப்பை) உணர்வார்-அறிந்து மகிழ்வார், இல்வழி-இல்லாதவிடத்து, பாட்டு-செய்யுளை-உரைத்தல்-சொல்லுதல், இன்னா-துன்பமேயாம், இருள்கூர்-இருள்பரந்த, சிறுநெறி-சிறுவழியின்கண், தாம்-தாம், தனிப்போக்கு-தனித்துப்போதல், இன்னா-துன்பமேயாம், அருளிலார்கண்-கிருபையில்லாதவரிடத்து, செலவு- (ஒன்றைவிரும்பிச்) செல்லுதல், இன்னா-துன்பமேயாம், பொருளிலான்-தரித்திரன், வண்மை-கொடையை, புரிவு-விரும்புதல், இன்னா-துன்பமேயாம்.

(பொ-ரை.) செய்யுளின் பொருட்சிறப்பை அறிந்து மகிழ்வார் இல்லாதவிடத்து ஒருவன் செய்யுளைச் சொல்லுதலும், இருள்பரந்த சிறுவழியிலே தனித்துச்செல்லுதலும், அருளில்லாதவரிடத்து ஒன்றை விரும்பிச் செல்லுதலும், தரித்திரர் கொடுக்க விரும்புதலுந் துன்பமேயாம்.

(இ-பு.) உணர்வார்-வினையாலணையும் பெயர். இல்வழி-குறிப்புவினையெச்சம்; அது உரைத்தல் என்னுந் தொழிற்பெயரைக்கொண்டு முடிந்தது. போக்கு-தொழிற்பெயர். (உ௪)

உடன்பா டிலாத மனைவிதோ ளின்னா
இடனில் சிறியாரோ டியாத்தநட் பின்னா
இடங்கழி யாளர் தொடர்பின்னா வின்னா
கடமுடையார் காணப் புகல்.

(ப-ரை.) உடன்பாடு இலாத-(தன்னோடு) உடம்படுதல் இல்லாத, மனைவி-மனையாளுடைய, தோள்-தோளைச் சேர்தல், இன்னா-துன்பமேயாம். இடன் இல்-மனவிரிவில்லாத, சிறியாரோடு-சிறியவர்களோடு, யாத்த-தொடுத்த, நட்பு-சிநேகம், இன்னா-துன்பமேயாம், இடங்கழியாளர்-காமுகருடைய, தொடர்பு-நட்பு, இன்னா-துன்பமேயாம், கடம் உடையார்-கடன் தந்தவர், காண- காணும்படி, புகல்-(அவர்முன் கடன்கொண்டவன்) புகுதல், இன்னா-துன்பமேயாம்.

(பொ-ரை.) தன்னோடு உடம்படுதல் இல்லாத மனைவியினுடைய தோளைச் சேர்தலும், சிறியவர்களோடு கொண்ட சிநேகமும், காமுகருடைய சிநேகமும், கடன்கொடுத்தவர் காணும்படி செல்லுதலும் துன்பமேயாம்.

(இ-பு.) உடம்பாடு எனினும் உடன்பாடெனினு மொக்கும். உடம்பாடு-முதனிலைத் தொழிற்பெயர். யாத்த-இறந்தகாலப் பெயரெச்சம்; அது யா என்னும் பகுதியும் அ என்னும் பெயரெச்ச விகுதியும் அவற்றிற்கு இடையே த் என்னும் இறந்தகால இடைநிலையும்பெற்று இடைநிலைத் தகர மிகுந்து இடைநிலைத் தகரமெய்யின்மேல் விகுதி அகர வுயிரேறி முடிந்தது. உடையார்-வினையாலணையும் பெயர். (உ௫)

உண்ணாது வைக்கும் பெரும்பொருள் வைப்பின்னா
நண்ணாப் பகைவர் புணர்ச்சி நனியின்னா

கண்ணி லொருவன் வனப்பின்னா வாங்கின்னா
எண்ணிலான் செய்யுங் கணக்கு.

(ப-ரை.) உண்ணாது-(தான்) உண்ணாது, வைக்கும்- (சம்பாதித்து) வைக்கும், பெரும்பொருள் வைப்பு-பெரியசெல்வம். இன்னா-துன்பமேயாம், நண்ணா-சேராத, பகைவர்-சத்துருக்களுடைய, புணர்ச்சி-நட்பு, நனி-மிகவும், இன்னா-துன்பமேயாம், கண்-அறிவு, இல்-இல்லாத, ஒருவன்-ஒருவனுடைய, வனப்பு-அழகு, இன்னா-துன்பமேயாம், எண் இலான்-கணிதநூலைக் கல்லாதவன், செய்யும்-செய்கின்ற, கணக்கு-கணக்கு, இன்னா-துன்பமேயாம்.

(பொ-ரை.) தான் உண்ணாது சம்பாதித்துவைக்குஞ் செல்வமும், பகைவருடைய நட்பும், அறிவு இல்லாதவனுடைய அழகும், கணிதநூலைக் கல்லாதவன் செய்யுங் கணக்கும் துன்பமேயாம்.

(இ-பு.) வைப்பு-தொழிலாகுபெயர். உண்ணாது-எதிர்மறை வினையெச்சம்; அது வைக்குமென்னும் பெயரெச்சத்தைக்கொண்டு முடிந்தது. நண்ணாத-எதிர்மறைப் பெயரெச்சம்; அது நண்ணா எனக் குறைந்துநின்றது. பொருள் வைப்பு-இருபெயரொட்டுப் பண்புத்தொகை. நனி இன்னா-உரிச்சொற்றொடர். எண்-ஆகுபெயர். செய்யும்-எதிர்காலப் பெயரெச்சம்; அது கணக்கு என்னும் பெயரைக்கொண்டு முடிந்தது. ஆங்கு-அசை. (உசு)

குலத்திற் பிறந்தவன் கல்லாமை யின்னா
நிலத்திட்ட நல்வித்து நாறாமை யின்னா
நலத்தகையார் நாணின்மை யின்னாவாங் கின்னா
கலத்தல் குலமில் வழி.

(ப-ரை.) குலத்தில்-உயர்ந்த குடியில், பிறந்தவன்-பிறந்தவன், கல்லாமை- (கற்கவேண்டிய நூலைக்) கற்காமை, இன்னா-துன்பமேயாம், நிலத்து இட்ட-நிலத்திலே விதைத்த, நல்வித்து-நல்ல விதை, நாறாமை-முளையாதிருத்தல், இன்னா-துன்பமே

யாம், நலத்தகையார்-அழகாற்றகுந்த பெண்கள், நாண்-(தங்களுக்குரிய) ‡ நாணம், இன்மை இல்லாதிருத்தல், இன்று-துன்பமேயாம், குலம் இல்வழி ஒத்தகுலம் இல்லாதவிடத்து, கலத்தல்-கலந்துகொள்ளுதல், இன்று-துன்பமேயாம்.

(பொ-ரை.) உயர்குடியிற் பிறந்தவன் கற்கவேண்டியவற்றைக் கற்காதொழிதலும், நிலத்திலே விதைத்த வித்து முளையாதுவிடுதலும், பெண்கள் நாணமில்லாதிருத்தலும், ஒத்தகுலமில்லாத இடத்துக் கலந்துகொள்ளுதலுந் துன்பமேயாம்.

(இ-பு.) குலத்திற்பிறந்தவன்-ஏழாம்வேற்றுமைவிரி. கல்லாமை-எதிர்மறைத் தொழிற்பெயர், இட்ட-இறந்தகாலப் பெயரெச்சம்; அது வித்து என்னும் பெயரைக்கொண்டு முடிந்தது. நாமை-எதிர்மறைத் தொழிற்பெயர். நலத்தகையார்-அழகினாலேதக்கவர். இல்வழி-குறிப்புவினையெச்சம்; அது இன்று என்னுங் குறிப்புவினைமுற்றைக்கொண்டு முடிந்தது. ஆங்கு-அசை.

மாரிநாட் கூவுங் குயிலின் குரலின்று
வீரமி லாளர் கடுமொழிக் கூற்றின்று
மாரி வளம்போக்கி னூர்க்கின்று வாங்கின்று
மூரி யெருத்தி னுழவு.

(ப-ரை.) கூவும்-கூவுகின்ற, குயிலின்-குயிலினது, குரல்-சத்தம், மாரிநாள்-கார்காலத்தில், இன்று-(பிரிந்தவர்களுக்குத்) துன்பமேயாம், வீரம் இலாளர்-வலிமையில்லாதவர், கடுமொழி-வன்சொற்களை, கூற்று-சொல்லுதல், இன்று-துன்பமேயாம், மாரிவளம்-மழைவளம், போக்கின்-குன்றின், ஊர்க்கு ஊரவர்களுக்கு, இன்று-துன்பமேயாம், மூரி எருத்தின்- (உழவு பழகாத) வலிமையுடைய எருத்தினது, உழவு-உழவு, இன்று-துன்பமேயாம்.

(பொ-ரை.) பிரிந்தவர்களுக்குக் கார்காலத்திலே குயிலினுடைய சத்தமும், வன்மையில்லாதவர் கடுஞ்சொற்சொல்லுதலும்,

‡ நாணம்-பெண்களுக்கு இயல்பாகவுள தொருதன்மை.

மழைவளங் குன்றுதலும், உழவுபழகாத எருத்தினுடைய உழவுந் துன்பமேயாம்.

(இ-பு.) கூவும் எதிர்காலப் பெயரெச்சம்; அது குயிலென்னும் பெயரைக்கொண்டு முடிந்தது. குயிலின் குரல்-ஆறும்வேற்றுமைத்தொகை. போகின்-எதிர்கால வினையெச்சம்; அது இன்னாவென்னுங் குறிப்புவினை முற்றைக்கொண்டு முடிந்தது. மூரியெருது-இரண்டாம்வேற்றுமையுருபும் பயனுமுடன்றொக்கதொகை. எருது உழவு-எருத்து உழவெனப் பிறவொற்றிரட்டினது. ()

ஈத்த வகையா னுவவாதார்க் கீப்பின்னா
பாத்துண லில்லா ருழைச்சென் றுணலின்னா
மூத்த விடத்துப் பிணியின்னா வாங்கின்னா
வோத்திலாப் பார்ப்பா னுரை.

(ப-ரை.) ஈத்த-கொடுத்த, வகையால்-அளவில், உவவாதார்க்கு-திருப்தியடையாதாருக்கு, ஈப்பு-(ஒருபொருளைக்) கொடுத்தல், இன்னா துன்பமேயாம், பாத்து-(உண்பதனைப் பசித்தவுயிர்கட்குப்) பகுத்து, உணவு-உண்ணுதல், இலார் உழை-இல்லாதவரிடத்து, சென்று-போய், உணல்-புசித்தல், இன்னா-துன்பமேயாம், மூத்த இடத்து-கிழப்பருவத்திலே, பிணி-(வந்த) நோய், இன்னா-துன்பமேயாம், ஓத்து-வேதம், இலா-ஓதாத, பார்ப்பான்-பிராமணனுடைய, உரை-வாய்ச்சொற்கள், இன்னா-துன்பமேயாம்.

(பொ-ரை.) கொடுத்த அளவிலே திருப்தியடையாதவருக்குக் கொடுத்தலும், பசித்தவுயிர்கட்குப் பகுத்துண்ணுதல் இல்லாதவரிடத்துப் புசித்தலும், கிழப்பருவத்திலே வந்த நோயும், வேதமோதாத பிராமணனுடைய வாய்ச்சொற்களுந் துன்பமேயாம்.

(இ-பு.) பகுத்து என்பது பாத்துஎன மரீஇயிற்று, பாத்து-இறந்தகால வினையெச்சம். இல்லாருழை என்பதில் உழை ஏழாம்வேற்றுமையுருபு. உணல்-தொழிற்பெயர். மூத்த-இறந்தகாலப் பெயரெச்சம். (உகூ)

பெரியாரோ டியாத்த தொடர்விடுத லின்னா
அரியவை செய்து மெனவுரைத்த லின்னா
பரியார்க்குத் தாமுற்ற கூற்றின்னா வின்னா
பெரியார்க்குத் தீய செயல்.

(ப-ரை.) பெரியாரோடு- (குணத்தாற்) பெரியவரோடு, யாத்த-கட்டுண்ட. தொடர்-சிநேகத்தை, விடுதல்-கைவிடுதல், இன்னா-துன்பமேயாம், அரியவை-செய்தற்கரியவைகளை. செய்துமென-செய்வோமென்று மேற்கொண்டு. உரைத்தல்-சொல்லுதல், இன்னா-துன்பமேயாம், பரியார்க்கு- இரக்கமில்லாதவர்க்கு, தாம் உற்ற-தமக்கு வந்த (துன்பத்தை), கூற்று-சொல்லுதல், இன்னா-துன்பமேயாம், பெரியார்க்கு- (அறிவாற்) பெரியவர்களுக்கு, தீயசெயல்-தீமைகளைச் செய்தல், இன்னா-துன்பமேயாம்.

(பொ-ரை.) பெரியவர்களோடு கொண்ட சிநேகத்தை விட்டுவிடுதலும், செயற்கரிய செயல்களைச் செய்வோமென்று சொல்லுதலும், இரக்கமில்லாதவரிடத்திலே தமக்குற்ற துன்பத்தைச் சொல்லுதலும், அறிவுடையோருக்குத் தீமைசெய்தலுந் துன்பமேயாம்.

(இ-பு.) யாத்த-இறந்தகாலப் பெயரெச்சம். தொடர்-முதனிலைத் தொழிற்பெயர். விடுதல்-தொழிற்பெயர். செய்தும்-தன்மைப்பன்மை எதிர்கால வினைமுற்று. பரியார்-வினையாலணையும் பெயர். கூற்று-தொழிற்பெயர். தீயசெயல்-இரண்டாம் வேற்றுமைத்தொகை; அது தீயனவற்றைச் செய்தலென விரியும். (ங0)

கல்லாதா னூருங் கலிமாப் பரிப்பின்னா
அல்லாதான் சொல்லு முரையின் பயனின்னா
இல்லார்வாய்ச் சொல்லி னயமின்னா வாங்கின்னா
கல்லாதான் கோட்டி கொளல்.

(ப-ரை.) கல்லாதான்- (குதிரையேற்றத்தைக்) கற்காதவன், ஊரும்-செல்லும், கலிமா-கடிவாளம் பூண்ட குதிரையில், பரிப்பு-ஏறிச்செல்லுதல், இன்னா-துன்பமேயாம், அல்லாதான்-கல்

வியறிவில்லாதான், சொல்லும்-சொல்லுகின்ற, உரையின்-சொல்லின், பயன்-பொருள், இன்னா-துன்பமேயாம், இல்லார்-வறியவருடைய, வாய்ச்சொல்-வாயினின்றும் வருஞ் சொல்லினது, நயம்-பயன், இன்னா துன்பமேயாம், கல்லாதான்- (நூல்களை நல்லாசிரியனை யடைந்து சந்தேக விபரீதமறக்) கற்காதவன், கோட்டி- (கற்றோருடைய) சபையில், கொளல்-ஒன்றைச்சொல்ல மேற்கொள்ளுதல், இன்னா-துன்பமேயாம்.

(பொ-ரை.) குதிரையேற்றந் தெரியாதவன் குதிரையேறிச் செல்லுதலும், அறிவிலான் சொல்லுஞ் சொற்களின் பயனும், வறியவருடைய வாய்ச்சொல்லும், நல்லாசிரியனை யடைந்து சந்தேகவிபரீதமற நூல்களைக் கற்காதவன் சபையிலே யொன்றைச் சொல்லுதலுந் துன்பமேயாம்.

(இ-பு.) கலினமா என்பது-கலிமா எனக் குறைந்துநின்றது. கல்லாதான்-எதிர்மறை வினையாலணையும் பெயர். இல்லார்-எதிர்மறைக் குறிப்புவினையாலணையும் பெயர். வாய்ச்சொல்-நீக்கப்பொருளில் வந்த ஐந்தாம் வேற்றுமைத் தொகை; அது வாயினின்றும் வருஞ் சொல்லென விரியும். (௩க)

பண்ணமையா யாழின்கீழ்ப் பாடல் பெரிதின்னா
எண்ணறியா மாந்த ரொழுக்குநாட் கூற்றின்னா
மண்ணின் முழவி னொலியின்னா வாங்கின்னா
தண்மையி லாளர் பகை.

(ப-ரை.) பண்-இசை, அமையா-அமைக்கப்படாத, யாழின்கீழ்-வீணையின் இசையோடு சேர்ந்து, பாடல்-பாடுதல், பெரிது-மிகவும், இன்னா-துன்பமேயாம், எண்-ஆலோசித்து, அறியா-(நடக்கவேண்டியவற்றை) அறியாத, மாந்தர்-மனுடர்களால், ஒழுக்கும்-ஒழுகப்படும், நாள்-வாழ்நாளின், கூற்று-பகுதிகள், இன்னா-துன்பமேயாம், மண்இல்-மார்ச்சனையில்லாத, முழவின்-மிருதங்கத்தின், ஒலி-ஓசை, இன்னா-துன்பமேயாம், தண்மை-சாந்தம், இலாளர்-இல்லாதவருடைய, பகை-பகைமை, இன்னா-துன்பமேயாம்.

(பொ-ரை.) இசையமைக்கப்படாத வீணையினிசையோடு சேர்ந்துபாடுதலும், ஆலோசித்து நடவாத மனுடர்களுடைய வாழ்நாட்களும், மார்ச்சனையில்லாத மிருதங்கத்தினோசையும், சாந்தமில்லாதவர்களுடைய பகைமையுந் துன்பமேயாம்.

(இ-பு.) எண்-முதனிலைத் தொழிற்பெயர். அறியா ஈறுதொக்க எதிர்மறைப் பெயரெச்சம். ஒழுக்கும் எதிர்காலப் பெயரெச்சம்; அது நாளென்னும் பெயரைக்கொண்டு முடிந்தது. பகை தொழிற்பெயர்; அது பகு என்னும் பகுதியும் ஐ என்னுந் தொழிற்பெயர்விகுதியும் பெற்று, பகுதியீற் றுகரங்கெட்டு உகரங்கெடநின்ற ககரமெய்யிலே விகுதி ஐகாரமேறி முடிந்தது. ஆங்கு-அசை. (௫௨)

பொருளிலான் வேளாண்மை காமுறுத லின்னா
நெடுமாட நீணகர்க் கைத்தின்மை யின்னா
அடுமனை பார்த்திருந் தூணின்னா வின்னா
கெடுமிடத்துக் கைவிடுவார் நட்பு.

(ப-ரை.) பொருள் இலான்-செல்வமில்லாதவன், வேளாண்மை-உபகாரஞ்செய்தலை, காமுறுதல்-விரும்புதல், இன்னா-துன்பமேயாம், நெடுமாடம்-பெரிய மாடங்களையுடைய, நீள்-பெரிய, நகர்-நகரத்தின்கண், கைத்து-பொருள், இன்மை-இல்லாமலிருத்தல், இன்னா-துன்பமேயாம், அடுமனை-பிறருடைய மனையை, பார்த்து-எதிர்பார்த்து, இருந்து-இருந்து, ஊண்-உண்ணுதல், இன்னா-துன்பமேயாம், கெடும் இடத்து-தாழ்வு வந்தவிடத்து, கைவிடுவார்-கைவிடுபவருடைய, நட்பு-சிநேகம், இன்னா-துன்பமேயாம்.

(பொ-ரை.) செல்வமில்லாதவன் உபகாரஞ்செய்ய விரும்புதலும், பெரிய பட்டணத்திற் பொருளில்லாமலிருத்தலும், பிறருடைய மனையை எதிர்பார்த்திருந்து உண்ணலும், தாழ்வுவந்தவிடத்துக் கைவிடுபவருடைய சிநேகமுந் துன்பமேயாம்.

(பொ-பு.) அடுத்த என்பது அடு எனத் தொகுத்தல் விகார

மாயிற்று. நெடுமாடம்-பண்புத்தொகை. நீணகர்-வினைத்தொகை. கைத்து-கையின்கணுள்ளது. ஊண் என்னுஞ் செயப்படுபொருட் பெயர்ப்பகுபதம் உண் என்னும் பகுதியோடு ஐ என்னுஞ் செயப்படுபொருளை யுணர்த்தும் விகுதி புணர்ந்து அவ்விகுதி கெட்டுப் பகுதி முதனீண்டு முடிந்தது. (௩௩)

துறைமங்கலம்.

சிவப்பிரகாச சுவாமிகள்

இயற்றிய

நன்னெறி.

என்று முகம னியம்பா தவர்கண்ணும்
சென்று பொருள்கொடுப்பர் தீதற்றோர்—துன்றுசுவை
பூவிற் பொலிகுழலாய் பூங்கை புகழ்வோ
நாவிற் குதவு நயந்து.

(ப-ரை.) பூவின்-பூவினால், பொலி-பொலிகின்ற, குழலாய்-கூந்தலையுடையவளே, தீது-குற்றம், அற்றோர்-அற்றவராகிய பெரியோர், என்றும்-யாதொருநாளிலும், (தமக்கு) முகமன்-உபசாரவார்த்தைகளை, இயம்பாதவர்கணணும்-சொல்லாதவரிடத்திலும், பொருள்-தமக்குக் கிடைத்தபொருளை (தாமேகொண்டு), சென்று-போய், கொடுப்பர்-கொடுப்பார், பூங்கை-அழகிய கையானது. புகழ்வோ-(தன்னைப்) புகழ்தற்கா, துன்றுசுவை-(தனக்குக்) கிடைத்த மதுரமாகிய உணவை, நாவிற்கு-நாவினுக்கு, நயந்து-விரும்பிக் (கொண்டுபோய்), உதவும்-கொடுக்கும், (புகழ்தற்கன்று.)

(பொ-ரை) பூவினாற் பொலிகின்ற கூந்தலையுடையவளே! கையானது புகழ்ச்சியைக் கருதாது தனக்குக்கிடைத்த மதுரமா

கிய உணவை நாவினுக்கு விரும்பிக் கொண்டுபோய்க் கொடுக்கும்; அதுபோலப் பெரியோர் ஒருநாளும் உபசாரவார்த்தை சொல்லாதவரிடத்திலும் தமக்குக் கிடைத்த பொருளைத் தாமேகொண்டுபோய்க் கொடுப்பார்.

(கருத்துரை.) பெரியோர் உபசாரவார்த்தை பேசாதவருக்குந் தாமே தேடிப்போய்ப் பொருள் கொடுப்பார்.

(இ-பு.) தீதற்ருேர்-எழுவாய். கொடுப்பர்-பயனிலை. இயம்பாதவர்-எதிர்மறை வினையாலணையும் பெயர். சென்று-இறந்தகால வினையெச்சம்; அது கொடுப்பர் என்னும் எதிர்காலத் தெரிநிலைவினைமுற்றைக் கொண்டு முடிந்தது. அற்ருேர்-வினையாலணையும்பெயர். நயந்து-இறந்தகால வினையெச்சம்; அது உதவும் என்னுஞ் * செய்யுமென்னு முற்றைக்கொண்டு முடிந்தது, பூங்கை என்பது பண்புத்தொகை. புகழுவோ என்பதிலுள்ள ஓகாரம் எதிர்மறைப்பொருட்டு. சுவை-பண்பாகுபெயர்.

பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் வேறு
பிறர்க்குதவி யாக்குபவர் பேறும்—பிறர்க்குதவி
செய்யாக் கருங்கடனீர் சென்று புயன்முகந்து
பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு.

(ப-ரை.) பிறர்க்கு-பிறருக்கு, உதவி-உபகாரம், செய்யார்-செய்யாதவருடைய, பெருஞ்செல்வம்-பெரிய செல்வமானது, வேறு-பிறிதேயாயினும், பிறர்க்கு-பிறருக்கு, உதவி-உபகாரம், ஆக்குபவர்-செய்பவருடைய, பேறு ஆம்-செல்வமாகும், பிறர்க்கு-பிறருக்கு, உதவிசெய்யா-உபகாரஞ் செய்யாத, கரும்-கரிய, கடல்-சமுத்திரத்துள், நீர்-நீரை, புயல்-மேகமானது, சென்று-போய், முகந்து-மொண்டுவந்து, பிறர்க்கு-பிறருக்கு, பெய்யா-பெய்து, கொடுக்கும்-கொடுக்கும்.

---

* செய்யுமென்னுமுற்றுப் பலர்பாற்படர்க்கையிலும் முன்னிலையிலுந் தன்மையிலும் வாராது.

(பொ-ரை.) பிறருக்கு உபகாரப்படாத சமுத்திர சலத்தை மேகமானது மொண்டுவந்து பிறருக்குக் கொடுக்கும்; பிறருக்கு உபகாரஞ் செய்யாதவருடைய செல்வமானது வேறாயினும், பிறருக்கு உபகாரஞ்செய்பவருடைய செல்வமாகும்.

(க-ரை.) ஒருவர் உபகரிக்கும்பொருள் பிறர்பொருளே யாயினும், அஃதுபகரிப்போர் பொருளாகவே கொள்ளப்படும்.

(இ-பு.) செல்வம்-எழுவாய். ஆம்-பயனிலை. பிறர்-இடைச்சொல்லடியாகப் பிறந்த பலர்பாற்பெயர். உதவிசெய்யார்-இரண்டாம் வேற்றுமைத்தொகை. செய்யார்-எதிர்மறை வினையாலணையும் பெயர். ஆக்குபவர்-வினையாலணையும் பெயர். பேறு-முதனிலைத் தொழிற்பெயர்; ஆகுபெயராய் நின்றது. சென்று இறந்தகால வினையெச்சம்; அது முகந்து என்னும் இறந்தகால வினையெச்சத்தைக்கொண்டு முடிந்தது. முகந்து-பெய்யா என்னும் எச்சத்தைக்கொண்டு முடிந்தது பெய்யா-இறந்தகால வினையெச்சம்; அது கொடுக்குமென்னும் முற்றைக்கொண்டு முடிந்தது.

நீக்க மறுமிருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கி னவர்பெருமை நொய்தாகும்—பூக்குழலாய்
நெல்லி னுமிசிறிது நீங்கிப் பழமைபோற்
புல்லினுந் திண்மைநிலை போம்.

(ப-ரை. பூக்குழலாய்-பூக்களை முடித்த கூந்தலையுடையவளே, நீக்கம்-பிரிவு, அறும்-இல்லாத, இருவர்-(சிநேகர்) இருவர், நீங்கி-(பகைத்துச் சிறிதுகாலம்) பிரிந்து, புணர்ந்தாலும்-(முன்போலவே) கூடினாலும், நோக்கின்-பார்க்குமிடத்து, அவர்-அவருடைய, பெருமை-பெருமை, நொய்து ஆகும்-அற்பமாகும், நெல்லின்-நெல்லினின்றும், உமி-உமியானது, சிறிது-சிறிது, நீங்கி-நீங்கி, பழமைபோல்-முன்போலவே, புல்லினும்-கூடினும், திண்மை-(அதற்குமுன்னே முளைத்தற்குக் காரணமாக அந்நெல்லினிடத்திருந்த) வலியினது, நிலை-நிலையானது, போம்-கெட்டுப்போம்.

(பொ-ரை.) பூக்களை முடித்த கூந்தலையுடையவளே! நெல்லினது உமி சிறிது நீங்கிப் பழமைபோலக் கூடினாலும் நீங்குவ

தற்கு முன்னே முளைத்தற்குக் காரணமாக அந்நெல்லினிடத்திருந்த வலிமை கெட்டுப்போம்; அதுபோலச் சிநேகிதர் இருவர் பகைத்துச் சிறிதுகாலம் பிரிந்து முன்போலக் கூடினாலும் அவருடைய சிநேகம் முன்னிருந்த பெருமையினுங் குறைந்துவிடும்.

(க-ரை. பகைத்துக் கூடியவருடைய நட்பு வலியுடையதன்று.

(இ-பு) பெருமை-எழுவாய். நொய்தாகும்-பயனிலை. நீக்கமறும்-எழுவாய்த்தொடர். நோக்கின்-எதிர்கால வினையெச்சம்; அது நொய்தாகும் என்னும் வினைமுற்றைக்கொண்டு முடிந்தது. அவர்-உயர்திணைப் பலர்பாற் சுட்டுப்பெயர். பூசுகுழல் இரண்டாம்வேற்றுமைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. நெல்லினுமி-நீக்கப்பொருளில்வந்த ஐந்தாம்வேற்றுமைவிரி. நீங்கி-இறந்தகால வினையெச்சம்; அது புணர்ந்தாலும் என்னும் எதிர்கால வினையெச்சத்தைக்கொண்டு முடிந்தது. போகும்-செய்யுமென் முற்று; அது போமென இடைக்குறைந்து நின்றது. ()

கடலே யனையம்யாங் கல்வியா லென்னும்
அடலே றனையசெருக் காழ்த்தி—விடலே
முனிக்கரசு கையான் முகந்து முழங்கும்
பனிக்கடலு முண்ணப் படும்.

(ப-ரை.) யாம்-நாம், கல்வியால்-கல்வியறிவினால், கடலே-சமுத்திரத்தை, அனையம்-ஒப்பேம், என்னும் என்று கொள்கின்ற, அடல்-வலிமைபொருந்திய, ஏறு-ஆண் சிங்கத்தினது, அனைய-செருக்கைப்போலும், செருக்கு-செருக்கிலே. ஆழ்த்தி- (உங்களை) அமிழ்த்தி, விடல்-விடாதிருங்கள், முழங்கும்-ஒலிக்கின்ற, பனிக்கடலும்-குளிர்ச்சிபொருந்திய சமுத்திரமும், ‡ முனிக்கு அரசு-முனிவர்களுக்குத் தலைவராகிய அகத்திய முனிவருடைய, கையால்-கையினால், முகந்து-மொண்டு, உண்ணப்படும்-பருகப்படும்.

‡ துவட்டா என்னும் பெயரையுடைய ஒரு அசுரன் தனது புத்திரனை முன்னொருகாலத்திலே இந்திரன் கொன்றதினிமித்

(பொ-ரை.) அகத்தியமகாமுனிவருடைய கையினாற் சமுத்திரமும் உண்ணப்படும், ஆதலால் நாங் கல்வியினாலே சமுத்திரத்தை யொப்போமென்று கொள்ளுஞ் செருக்கிலே உங்களை அமிழ்த்திவிடாதிருங்கள்.

(க-ரை.) எத்துணைப் பெருங்கல்வியுடையருஞ் செருக்கடைவாராயின், வல்லவரொருவராலே தப்பாது வெல்லப்படுவர்.

(இ-பு.) நீங்கள்-தோன்றா எழுவாய். விடல்-பயனிலை. யாம்-தன்மைப் பன்மைப்பெயர். அனையம்-தன்மைப்பன்மைக் குறிப்பு வினைமுற்று. செருக்கு-பண்புப்பெயர். ஆழ்த்தி-இறந்தகால வினையெச்சம். விடல் அல்-ஈற்று எதிர்மறை வியங்கோள் வினைமுற்று. அரசு-சொல்லால் அஃறிணையாயும் பொருளால் உயர்திணை

தம் பழிவாங்கும்படி விருத்திரனென்ற ஒரு அசுரனை யனுப்பினான். அவ்விருத்திராசுரன் இந்திரனோடு எதிர்த்து யுத்தஞ்செய்யும் பொழுது இந்திரனுடைய புயத்தில் இருப்புலக்கையால் அடித்தான்; உடனே இந்திரன் அறிவுமயங்கி விழுந்து சிறிதுநேரங் கழிந்தபின் அறிவுதெளிந்து எழுந்து இனி இவ்வசுரனை வெல்லுதலரிதென்று நினைத்துப் பிரமாவோடு ஆலோசிக்கப் பிரமா விஷ்ணுவிடம்போய் நிகழ்ந்த சமாசாரத்தைச் சொன்னார். அப்பொழுது விஷ்ணு இந்திரனைப்பார்த்து உனது குலிசாயுதம் மிகப்பழையது ஆதலால் சத்துருக்களைக் கொல்லமாட்டாது. உனக்குப் புதிதொன்று வேண்டும். ததீசிமகாமுனிவரிடத்திற் போய் அவர் முதுகெலும்பைக் கேள் என்ன, அப்படியே இந்திரனும் ததீசிமுனிவரிடம் போய்க் கேட்டான். உடனே அவர் தமது முதுகெலும்பைக் கொடுத்தார். அதைப் பெற்று விசுவகன்மாவிடங் கொடுத்துக் குலிசமாகச் செய்வித்துக்கொண்டு விருத்திராசுரனுடனே யுத்தம்பண்ணப் போனான். விருத்திராசுரன் எதிர்த்து யுத்தம்பண்ண முடியாமற் கடலில் விழுந்து ஒளித்தான். இந்திரனும் கடலுக்குள் விழுந்து தேடிக் காணாமையால் மனம்வருந்திப் பிரமாவிடஞ்சொன்னான். பிரமா அகஸ்திய மகாமுனிவரிடம் போய்ச் சொல்லுதியென்றார். அவ்வாறே அகஸ்தியமகாமுனிவரிடம் போய்ச்சொல்ல, உடனே அவர் தமது உள்ளங்கையிலே விருத்திரன் ஒளித்த கடலை அடக்கி உறிஞ்சிவிட்டார். இதன் விரிவைத் திருவிளையாடற் புராணத்தில் இந்திரன் பழிதீர்த்த படலத்திற் காண்க.

யாயும் வந்தபெயர். முகந்து-இறந்தகால வினையெச்சம்; அது உண்ணப்படுமென்னுஞ் செயப்பாட்டு வினைமுற்றைக்கொண்டு முடிந்தது முழங்கும்-பெயரெச்சம்; அது கடலென்னும் பெயரைக்கொண்டு முடிந்தது. ஏ-ஈற்றசை. (௩௭)

உள்ளங் கவர்ந்தெழுந் தோங்குசினங் காத்துக்
கொள்ளுங் குணமே குணமென்க—வெள்ளம்
தடுத்த லரிதோ தடங்கரைதான் பேர்த்து
விடுத்த லரிதோ விளம்பு.

(ப-ரை.) உள்ளம்-மனத்தை, கவர்ந்து-தன்வயத்துத் தாங்கிக்கொண்டு, எழுந்து-எழுந்து, ஓங்கு-வளர்கின்ற, சினம்-கோபத்தை, காத்துக்கொள்ளும்-அடக்கிக்கொள்ளுகின்ற, குணமே-குணமே, குணம் என்க-(அருமையாகிய) குணமென்று அறியக்கடவாய், வெள்ளம்-(பெருகிவருகின்ற) வெள்ளத்தை, தடுத்தல்-(கட்டித்) தடுத்தல், அரிதோ-அரியதோ, தடம்-(முன் கட்டப்பட்டிருந்த) பெரிய, கரை-கரையை, பேர்த்து-உடைத்து, விடுதல்-(அதனுள் அடக்கியிருந்த வெள்ளத்தைப் புறத்திலேசெல்ல) விட்டுவிடுதல், அரிதோ-அரியதோ, விளம்பு-நீ சொல்வாயாக.

(பொ-ரை.) கோபத்தை யடக்கிக்கொள்ளுகிற குணமே அருமையாகிய குணமென்று அறியக்கடவாய்; பெருகிவருகின்ற வெள்ளத்தைக் கட்டித்தடுத்தல் அரியதோ. முன் கட்டப்பட்டிருந்த கரையை யுடைத்து அதனுளடங்கிய வெள்ளத்தைப் புறத்தே செல்லவிடுதல் அரியதோ? நீ சொல்லு.

(க-ரை.) கோபத்தைச் செய்தல் எளிது, கோபத்தை அடக்கல் அரிது ஆதலின், அரியதைச் செய்தலே பெருமை.

(இ-பு) நீ-தோன்றா எழுவாய். என்க-பயனிலை. உள்ளம்-தொழிற்பெயர். கவர்ந்து-இறந்தகால வினையெச்சம்; அது எழுந்து என்னும் இறந்தகால வினையெச்சத்தைக்கொண்டு முடிந்தது. எழுந்து-ஓங்கு என்னும் ஈறுதொக்க பெயரெச்சத்தைக்கொண்டு முடிந்தது. ஓங்கு சினம்-வினைத்தொகை. காத்து-இறந்த

கால வினையெச்சம்; அது கொள்ளுமென்னும் பெயரெச்சத்தைக்கொண்டு முடிந்தது. அரிது-குறிப்புவினைமுற்று. தடங்கரை-உரிச்சொற்றொடர். * விளம்பு-முன்னிலை ஏவல் வினைமுற்று. தான்-அசைநிலை. (௩அ)

தங்குறைதீர் வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறைதீர்க் கிற்பார் விழுமியோர்—திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா துலகில்
நிறையிருளை நீக்குமே நின்று.

(ப-ரை.) விழுமியோர்-மேலோர், தம்-தமது, குறை-குறை, தீர்வு-நீங்குதலை, உள்ளார் நினையாராகி, பிறர்க்கு-பிறருக்கு, உறூஉம்-வந்த, வெம்-வெவ்விய, குறை-குறையை, தளர்ந்து-மனந்தளர்ந்து, தீர்க்கிற்பார்-நீக்குவார், திங்கள் சந்திரனனவன். கறை-(தனது) களங்கமாகிய, இருளை-இருளை, நீக்க-நீக்குதற்கு, கருதாது-நினையாமல், மேல்-ஆகாயத்திலே, நின்று-நின்று, உலகின்-உலகத்து, நிறை-நிறைந்த, இருளை-இருளை, நீக்கும் நீக்குவான்.

(பொ-ரை.) சந்திரனனவன் தனது களங்கமாகிய இருளை நீக்க நினையாமல் ஆகாயத்திலே நின்று உலகத்து நிறைந்தவிருளை நீக்குவான்; அதுபோல மேலோர் தமதுகுறை நீங்குதலை நினையாராய்ப் பிறர்க்குவந்த குறையை நீக்குவார்.

(க-ரை.) மேலோர் தங்குறையை நீக்காது பிறர்குறையை நீக்குவர்.

(இ-பு.) விழுமியோர்-எழுவாய். தீர்க்கிற்பார்-பயனிலை. தங்குறை-ஆறும் வேற்றுமைத்தொகை. தீர்வுள்ளார்-இரண்டாம் வேற்றுமைத்தொகை. தளர்ந்து-இறந்தகால வினையெச்சம்; அது தீர்க்கிற்பார் என்பதைக்கொண்டு முடிந்தது. உறூஉம்-இன்னிசை நிறைக்கவந்த அளபெடை. வெங்குறை, கறையிருள், பண்புத்தொகைகள். கருதாது-எதிர்மறை வினைமுற்று வினையெச்சமாயிற்று. நிறையிருள்-வினைத்தொகை. (௩௯)

---

* ஏவல்வினை முற்றுக்களில் பெரும்பாலும் ஏவலையுணர்த்தும் ஆய் விகுதி புணர்ந்து கெட்டுநிற்கும்.

இல்லா னுக் கன்பிங் கிடம்பொரு ளேவன்மற்
றெல்லா மிருந்துமவற் கென்செய்யும் — நல்லாய்
மொழியிலார்க் கேது முதுநூ றெரியும்
விழியிலார்க் கேது விளக்கு.

(ப-ரை.) நல்லாய்-நற்குணங்களுடையவளே! இங்கு-இவ்வுலகத்தில், அன்பு-அன்பு, இலானுக்கு-இல்லாதவனுக்கு, இடம்-இடமும், பொருள்-பொருளும், ஏவல்-ஏவலுமாகிய, எல்லாம்-இவையெல்லாம், இருந்தும்-இருந்தும், அவற்கு-அவனுக்கு, என் செய்யும்-யாதுபயனைச் செய்யும், * மொழி இலார்க்கு-பேச்சில்லாதவராகிய ஊமைகளுக்கு, முது-பழமையாகிய. நூல்-நூல், ஏது-யாதுபயனைச் செய்யும், தெரியும்-பார்க்கின்ற, ‡ விழி இலார்க்கு-கண்ணில்லாதவராகிய குருடருக்கு, விளக்கு-தீபம், ஏது-யாதுபயனைச் செய்யும்.

(பொ-ரை.) நற்குணமுடைய பெண்ணே! ஊமைகளுக்குப் பழைய நூல்களும், குருடர்களுக்குத் தீபமும் பிரயோசனப்படா; அவைபோல அன்பில்லாதவனுக்கு இடம்பொருளேவலாகிய எல்லாமிருந்தும் அவைகள் பிரயோசனப்படா.

(க-ரை.) அன்பில்லாதவன் இடம்பொருளேவல்களுடையவனாயினும், அவைகொண்டு தருமமும் புகழுஞ் செய்துகொள்ள மாட்டான்.

(இ-பு.) இடம், பொருள், ஏவல்-எழுவாய். என்செய்யும்-பயனிலை. இல்லான்-இன்மையென்னும் பண்படியாகப் பிறந்த குறிப்புவினையாலணையும் பெயர். அன்பு-பண்புப்பெயர். இங்கு-சுட்டிடைச்சொல். எல்லாம்-பொதுப்பெயர். ஏவல்-தொழில் ஆகுபெயர். இருந்து-இறந்தகால வினையெச்சம்; என என்னும் வினாவினைப்பெயர் என்னென இடைக்குறைந்து நின்றது. நல்லாய்-விளியுருபேற்ற பெயர். ஏது-வினாவிடைச் சொல்லடியாக வந்த குறிப்புவினைமுற்று. மற்று-அசை. (௪0)

* மொழியிலார்-ஊமைகள்.
‡ விழியிலார்-குருடர்கள்.

இன்சொலா லன்றி யிருநீர் வியனுலகம்
வன்சொலா லென்று மகிழாதே—பொன்செ
யதிர்வளையாய் பொங்கா தழற்கதிராற் றண்ணென்
கதிர்வரவாற் பொங்குங் கடல்.

(ப-ரை.) பொன்-பொன்னாலே, செய்-செய்யப்பட்ட, அதிர்-ஒலிக்கின்ற, வளையாய்-வளையல்களையுடையவளே, இரு-பெரிய, நீர்-கடல்சூழ்ந்த, வியன்-பரந்த, உலகம்-உலகத்திலுள்ளவர், இன்சொலால்-இன்சொல்லினால், அன்றி-அல்லாமல், வன்சொலால் கடுஞ்சொல்லினால், என்றும்-எந்நாளும், மகிழாது-மகிழ்ச்சியடையார், கடல்-கடலானது, தண் என்-குளிர்ச்சிபொருந்திய, கதிர்-கிரணங்களையுடைய சந்திரன், வரவால்-வருகையினாலே, பொங்கும்-பொங்கும், (அதுவன்றி) அழற்கதிரால்-சூடுபொருந்திய கிரணங்களையுடைய சூரியன் வருகையினாலே, பொங்காது-பொங்காது.

(பொ-ரை.) பெண்ணே! கடலானது குளிர்ச்சிபொருந்திய கிரணங்களையுடைய சந்திரனது வருகையினாலே பொங்குவதன்றிச் சூரியனது வருகையினாலே பொங்காததுபோல் உலகத்திலுள்ளவர்கள் இன்சொல்லாலல்லாமல் வன்சொல்லால் மகிழ்ச்சியடையார்.

(க-ரை.) இன்சொலினாலன்றி வன்சொலினால் ஒருவரும் மகிழ்ச்சியடையார்.

(இ-பு) உலகம்-எழுவாய். மகிழாது-பயனிலை. சொல்-காரண இடுகுறிப்பெயர். அன்றி-குறிப்புவினையெச்சம். வியனுலகம்-வினைத்தொகை. உலகம்-இடவாகுபெயர். மகிழாது-எதிர்மறைத் தெரிநிலை வினைமுற்று. பொங்காது-எதிர்மறைத் தெரிநிலைவினை முற்று. ஏ-அசை. (௪௧)

நல்லோர் வரவா னகைமுகங்கொண் டின்புறீஇ
அல்லோர் வரவா னழுங்குவார்—வல்லோர்
திருந்துங் தளிர்காட்டித் தென்றல்வரத் தேமா
வருந்துஞ் சுழல்கால் வர.

(ப-ரை.) வல்லோர்-(கல்வியறிவில்) வல்லவர், நல்லோர்-நல்லவருடைய, வரவால்-வருகையினாலே, முக நகை-முகமலர்ச்சி, கொண்டு கொண்டு, இன்பு-இன்பத்தை, உறீஇ-அடைந்து, அல்லோர்-தீயவருடைய, வரவான்-வருகையினாலே, அழுங்குவார்-துன்பத்தையடைவார், தேமா-தேமாமரமானது, தென்றல்-தென்றற்காற்று, வர-வர, தளிர்-தளிரை, காட்டி-காட்டி, திருந்தும்-சிறப்புற்றிருக்கும், சுழல்கால்வர-சுழல்காற்றுவர, வருந்தும்-வருந்தும்.

(பொ-ரை.) தேமாமரமானது தென்றற்காற்று வரத் தளிரைக்காட்டிச் சிறப்புற்றுச் சுழல்காற்றுவர வருந்துவதுபோலக் கற்றவர்கள் நல்லவருடைய வருகையினாலே முகமலர்ச்சிகொண்டு இன்பமடைந்து தீயவருடைய வருகையினாலே துன்பமடைவார்.

(க-ரை.) கல்வியறிவுடையவருக்கு நல்லோர் வரவினாலே இன்பமும், தீயோர் வரவினாலே துன்பமும் விளையும்.

(இ-பு.) வல்லோர்-எழுவாய். அழுங்குவார்-பயனிலை. நகைமுகம்-முன்பின்னாகத்தொக்க ஆறும் வேற்றுமைத்தொகை. கொண்டு-இறந்தகால வினையெச்சம்; அது இன்புறீஇ என்னும் வினையெச்சத்தைக்கொண்டு முடிந்தது. அழுங்குவார்-உயர்திணைப் பலர்பாற் படர்க்கை எதிர்காலவினைமுற்று. திருந்தும்-எதிர்காலவினைமுற்று. (௯௨)

எழுத்தறியார் கல்விப் பெருக்க மனைத்தும்
எழுத்தறிவார்க் காணி னிலையாம்—எழுத்தறிவார்
ஆயுங் கடவு ளவிர்சடைமுன் கண்டளவில்
வீயுஞ் சுரநீர் மிகை.

(ப-ரை.) எழுத்து-இலக்கணநூலை, அறியார்-அறியாதவருடைய, கல்வி-மற்றைக்கல்வியினது, பெருக்கம் அனைத்தும்-பெருக்கம் முழுவதும், எழுத்து-இலக்கணநூலை அறிவார்-அறிந்தவ

4725a

ரை, காணின்-கண்டால், இலை இல்லாமற்போகும், * "சுரநீர்-ஆகாய கங்கையினுடைய, மிசை-பெருக்கமானது. எழுத்து-எழுத்துக்களி னியல்பை, அறிவார்-அறியும் பெரியோர். ஆயும்-ஆராய்கின்ற, கடவுள்-சிவபெருமானது, அவிர்-விளங்குகின்ற, சடை-சடையை, முன்-தன்முன், கண்ட அளவில்-கண்டவளவிலே, வீயும்-நீங்கிவிடும்."

(பொ-ரை.) ஆகாய கங்கையினது பெருக்கமானது சிவபெருமானது சடையைக் கண்டவளவிலே நீங்கிய தன்மைபோல இலக்கணநூலை யறியாதவருடைய கல்வியின் பெருமைமுழுதும் இலக்கணநூலை யறிந்தவரைக் கண்டவளவிலே நீங்கிவிடும்.

---

* பகீரதன் என்கின்ற அரசன் தன் குருவாகிய வசிட்டரை வணங்கி, சுவாமி என்முன்னோர்களாகிய சகரர்கள் கபிலமுனியின் கோபாக்கினியினால் இறந்துவிட்டார்களே, அவர்களுக்கு நற்கதி கிடைக்கவேண்டுமே, அதற்கு அடியேன் யாது செய்யவேண்டுமென்று கேட்க, இதற்குப் பிரமாவை நோக்கித் தவஞ்செய்தால் அவர்களுக்கு நற்கதி யுண்டாகுமென்று குருசொல்ல, பிரமாவை நோக்கிப் பதினாயிரவருஷந் தவஞ்செய்தான். அப்பொழுது பிரம்மா வெளிப்பட்டு உனது தவத்துக்கு மகிழ்ச்சியடைந்தோம். உன் முன்னோர்களுடைய எலும்புகளிலும், சாம்பரிலும், கங்கைவந்து விழுமானால் நற்கதியடைவார்கள். அந்தக் கங்கை பூமிக்கு வரும்பொழுது மிக்க வேகத்தோடுவரும். அதன் வேகத்தைத் தாங்க வல்லவர் திருக்கைலாசத்தில் எழுந்தருளியிருக்குஞ் சிவனேயல்லாமல் வேறொருவருமில்லை. ஆதலால் அச்சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்யென்று சொல்லிப்போனார். அங்ஙனமே சிவபெருமானை நோக்கிச் சிலகாலந் தவஞ்செய்தான். சிவபெருமான் வெளிப்பட்டு உனது உள்ளக்கருத்தின்படி செய்தருளுகின்றோமென்று சொல்லி மறைந்தருளினார். பின்பு கங்கையை நோக்கிச் சிறிதுகாலந் தவஞ்செய்தான். அப்பொழுது கங்கையொரு பெண்ணுருவங்கொண்டுவந்து இராசாவே! நீர் தவஞ்செய்கின்றீரே, அக்கங்கை பூமியில்வந்தால் அவளுடைய வேகத்தைப் பொறுக்கத்தக்கவர் யார்? உம்முடன் சிவபெருமான் விளையாட்டுக்குச்சொல்லி மறைந்தார் என்றுசொல்லிப் போயினாள். அதன்பின் சிவபெருமானை நோக்கிச் சிறிதுகாலந் தவஞ்செய்தான். அப்பொழுது சிவபெருமான் வெளிப்பட்டு மீட்டும் என் தவஞ்செய்கிறாயென்று கேட்டார். சுவாமீ! கங்கை

(க-ரை.) இலக்கணநூலுணர்ச்சி யில்லாதவருடைய கல்வி இலக்கணநூலுணர்ச்சி யுடையாரெதிரே பயன்படாது.

(இ-பு.) பெருமை-எழுவாய். இலை-பயனிலை. எழுத்து-ஆகுபெயர். அறியார்-எதிர்மறைத் தெரிநிலைவினையாலணையும் பெயர். பெருக்கம்-தொழிற்பெயர். காண்ன்-எதிர்கால வினையெச்சம்; அது இலை என்னும் பொதுவினைக் குறிப்புமுற்றைக்கொண்டு முடிந்தது. ஆயும்-பெயரெச்சம். அவிர்சடை-வினைத்தொகை. முன்-இடைச்சொல். ஆம்-அசை. (சரு)

ஆக்கு மறிவா னலது பிறப்பினால்
மீக்கொ ளுயர்விழிவு வேண்டற்க—நீக்கு
பவரா ரரவின் பருமணிகண் டென்றுங்
கவரார் கடலின் கடு.

(ப-ரை.) மீக்கொள்-மேலாகக் கொள்கின்ற, உயர்வு-உயர்வையும், இழிவு-(கீழாகக் கொள்கின்ற) இழிவையும், ஆக்கும்-(ஒருவனுக்கு நற்குணங்களை) உண்டாக்குகின்ற, அறிவான்-கல்வியறிவான், அலது-அல்லாமல், பிறப்பினால்-சாதியினாலே, வேண்டற்க-விரும்பாதிருக்கக் கடவீர், அரவின்-(நஞ்சையுடைய) பாம்பினிடத்துண்டாகின்ற, பரு-பருத்த, மணி-மாணிக்கத்தை, கண்டு-கண்டு, நீக்குபவர்-நீக்குவார், யார்-யாவர், கடலின்-பாற்கடலினிடத்தே, கடு-(உண்டாகிய) நஞ்சை, என்றும்-ஒருநாளும், கவரார்.கொள்ளார்.

(பொ-ரை.) பாம்பினிடத் துண்டாகிய மாணிக்கத்தைக் கண்டு நீக்குபவரும் பாற்கடலினிடத்துண்டாகிய நஞ்சைக்கொள்வாருமில்லை; ஆதலால் ஒருவனுடைய உயர்வையும், இழிவையும், கல்வியறிவினாலல்லாமல் சாதியினாலே விரும்பாதிருங்கள்.

இப்படிச் சொன்னனென்று சொன்னன். நீ அஞ்சவேண்டாம். அந்தக்கங்கை எவ்வளவு வேகமாய் வந்தாலும் காக்கிறேனென்று திருவாய் மலர்ந்தருளிப் போனர். உடனே கங்கையை நோக்கித் தவஞ்செய்தான். பின்பு சகல உலகமும் அஞ்சும்படி கங்கை பிரவாகித்து வந்தது. அப்பொழுது சிவபெருமான் தமது சடையிலே புல்நுனித் துளிபோல அடக்கியருளினர்.

(க-ரை.) உயர்குலத்தானாயினும் அறிவில்லாதவனை இழிந்தவனாகவும், இழிகுலத்தானாயினும் அறிவுடையவனை உயர்ந்தவனாகவும் கொள்ளல்வேண்டும்.

(இ-பு.) ஒருவன்-தோன்றா எழுவாய். வேண்டற்க-பயனிலை. ஆக்கும்-பெயரெச்சம். அல்லது வினையெச்சக்குறிப்பு. வேண்டற்க-எதிர்மறை வியங்கோள் வினைமுற்று. நீக்குபவர்-வினையாலணையும் பெயர். பருமணி-வினைத்தொகை. ஆர்-வினாவினைக் குறிப்புமுற்று. கவாரார்-எதிர்மறைப் பலர்பாற் றெரிநிலைவினைமுற்று. கடு-இரண்டாம்வேற்றுமை இறுதிக்கட்டொக்கது.

உண்டு குணமிங் கொருவர்க் கெனினுங்கீழ்
கொண்டு புகல்வதவர் குற்றமே—வண்டுமலர்ச்
சேக்கை விரும்புஞ் செழும்பொழில்வாய் வேம்பன்றோ
காக்கை விரும்புங் கனி.

(ப-ரை.) இங்கு-இவ்வுலகத்திலே, ஒருவர்க்கு-ஒருவருக்கு, குணம்-நற்குணம், உண்டு எனினும்-உளதாயினும், கீழ்-கீழோர், கொண்டு-எடுத்து, புகல்வது-பேசுவது, அவர்-அவருடைய, குற்றமே-குற்றமேயாகும், செழும்-செழுமையாகிய, பொழில்வாய்-சோலையினிடத்தே, மலர்ச்சேக்கை-பூவாகிய மெத்தையை, வண்டு-வண்டுகள், விரும்பும்-விரும்பும், வேம்பு அன்றோ-வேப்பம்பழமன்றோ, காக்கை-காக்கைகள், விரும்பும்-விரும்பும், கனி-பழம்.

(பொ-ரை.) ஒருவரிடத்து நற்குண முளதாயினும், காக்கை வேப்பம்பழத்தை விரும்புவதுபோலக் கீழோர் அவருடைய குற்றத்தையே யெடுத்துப் பேசுவர்; மலர்ச்சேக்கையை வண்டு விரும்புவதுபோல (மேலோர் அவருடைய குணத்தையே யெடுத்துப் பேசுவர்.)

(க-ரை) ஒருவனிடத்துள்ள நற்குணத்தையே மேலோர் எடுத்துப் பேசுவர். தீக்குணத்தையே தீயரெடுத்துப் பேசுவர்.

(இ-பு.) புகல்வது-எழுவாய். குற்றம்-பயனிலை. கீழ்-பண்பாகுபெயர். உண்டு-பொதுவினைக் குறிப்புமுற்று. இங்கு-சுட்டு

ப்பெயர். * ஒருவர்-உயர்திணை யிருகூற்றொருமைப் படர்க்கைப் பொதுப்பெயர். எனினும்-வினையெச்சம். புகல்வது-தொழிற்பெயர். மலர்ச்சேக்கை, செழும்பொழில்-பண்புத்தொகைகள். பொழில்வாய்வேம்பு-ஏழாம்வேற்றுமை விரி. வாய்-உருபு. (சரு)

உடலின் சிறுமைகண் டொண்புலவர் கல்விக்
கடலின் பெருமை கடவார்—மடவரால்
கண்ணளவாய் நின்றதோ காணுங் கதிரொளிதான்
விண்ணளவா யிற்றோ விளம்பு.

(ப-ரை.) மடவரால்-இளம் பெண்ணே, ஒள்புலவர்-ஒளிதங்கிய புலவருடைய, உடலின்-சரீரத்தின், சிறுமைகண்டு-சிறுமையைக்கண்டு, கல்விக்கடலின்- (அவரது) கல்வியாகிய கடலின், பெருமை-பெருமையை, கடவார்- (ஒருவரும்) கடக்கமாட்டார், கதிர்-சூரியனுடைய ஒளியோடுகூடி, காணும்-காணுகின்ற, ஒளி-கருமணியொளியானது, கண்- (தனக்கிடமாகிய சிறிய) கண்ணின், அளவாய்-அளவாயடங்கி, நின்றதோ-நின்றதோ! விண்- (தான் காண்கின்ற பெரிய) ஆகாயத்தின், அளவு ஆயிற்றோ-அளவாக வியாபித்து நின்றதோ? விளம்பு-நீ சொல்வாயாக.

(பொ-ரை) பெண்ணே! புலவர்களுடைய உடலின் சிறுமையைக் கண்டு அவரது கல்விப்பெருக்கத்தின் பெருமையையொருவருங் கடக்கமாட்டார்; சூரியனுடைய ஒளியோடுகூடிக் காணுகின்ற கருமணியொளி தனக்கிடமாகிய கண்ணினளவாக வடங்கிநின்றதோ ஆகாயத்தினளவாக வியாபித்து நின்றதோ? நீ சொல்லு.

(க-ரை.) உருவத்தாற் சிறியவரும் அறிவினாற் பெரியவராயிருப்பர்.

---

* ஒருவரென்பது வினையையும், வினைக்குறிப்பையுங்கொண்டு முடியும். ஒருவர் வந்தார் என்பதில் விகுதிக்கேற்பச் சொன்மாத்திரத்திற் பன்மைவினையை யேற்றாலும் பொருளால் ஒருமைவினையேயாம்.

(இ பு.) ஒருவர்-எழுவாய். கடவார்-பயனிலை. உடலின் சிறுமை-ஆறும் வேற்றுமைத்தொகை. மடவரால்-விளிபுருபேற்ற பெயர். ஆய்-இறந்தகால வினையெச்சம்; அது நின்றதோ வென்னும் வினையைக்கொண்டு முடிந்தது. விளம்பு-முன்னிலை யேவல் வினைமுற்று- தான்-அசை. (சசு)

கைம்மா றுகவாமற் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
தம்மா லியலுதவி தாஞ்செய்வர்—அம்மா
முளைக்கு மெயிறு முதிர்சுவை நாவிற்கு
விளைக்கும் வலியனதா மென்று.

(ப-ரை.) கற்று அறிந்தோர்-கற்றறிந்தவர், கைம்மாறு-பிரதியுபகாரத்தை, உகவாமல்-விரும்பாமல், மெய்வருந்தி-சரீரம் வருத்தமுற்று, தம்மால் இயல்-தம்மால் இயன்ற, உதவி-உதவிகளை, தாம்செய்வர்-தாமே செய்வார், முளைக்கும்-முளைக்கின்ற, எயிறு-பற்களானவை, நாவிற்கு- (தமக்கு ஒருபகாரமுஞ்செய்தற்கியலாத) நாக்குக்கு, வலியன-கடினமாகிய தின்பண்டங்களை, தாம் மென்று-தாமே மென்றுகொடுத்து, முதிர்சுவை-நிறைந்த சுவையை, விளைக்கும்-உண்டாக்கும்.

(பொ-ரை.) பற்கள் தமக்கோருபகாரமுஞ் செய்தற்கியலாத நாக்குக்குக் கடினமாகிய தின்பண்டங்களைத் தாமேமென்று கொடுத்து மிகச்சுவையை யுண்டாக்குவதுபோலக் கற்றறிந்தவர்கள் பிரதியுபகாரத்தை விரும்பாமல் வருந்தித் தம்மாலியன்ற வுதவியைத் தாமேசெய்வர்.

(க-ரை.) அறிவுடையவர் கைமாறு வேண்டாமலே பிறருக்குத் தம்மாலியன்ற உதவிகளைச் செய்வர்.

(இ-பு.) அறிந்தோர் எழுவாய். செய்வர்-பயனிலை. உகவாமல்-எதிர்மறைவினையெச்சம் இயலுதவி, முதிர்சுவை வினைத்தொகைகள். மென்று-இறந்தகால வினையெச்சம்; அது விளைக்குமென்னும் வினைமுற்றைக்கொண்டு முடிந்தது. அம்மா-வியப்பிடைச்சொல். (சஎ)

பேரறிஞர் தாக்கும் பிறர்துயரந் தாங்கியே
வீரமொடு காக்க விரைகுவார்—நேரிழாய்
மெய்சென்று தாக்கும் வியன்கோ லடிதன்மேல்
கைசென்று தாங்குங் கடிது.

(ப-ரை-) நேர்இழாய்-தகுதியாகிய ஆபரணத்தையுடையவளே! பேரறிஞர்-பெரிய அறிவையுடையவர், தாக்கும்-வருத்துகின்ற, பிறர்-பிறருடைய, துயரம்-துன்பத்தை, வீரமொடு-வீரத்தோடு, தாங்கி-தாமேற்றுக்கொண்டு, காக்க-(அவரைப்)பாதுகாத்தற்கு, விரைகுவார்-விரைந்துபோவார், மெய்சென்று-உடம்பிலேபோய், தாக்கும்-தாக்குகின்ற, வியன்கோல்-பெரியகோலினுடைய, அடி-அடியை, கை-கையானது, கடிதுசென்று-சீக்கரம்போய், தன்மேல்-தன்மேலே (படும்படி), தாங்கும்-ஏற்றுக்கொள்ளும்.

(பொ-ரை.) ஆபரணத்தை யுடையவளே! உடம்பிலே தாக்குகின்ற அடியைக் கையானது சீக்கிரம்போ யேற்றுக்கொள்வதுபோல அறிவுடையோர் பிறருடைய துன்பத்தை வீரத்தோடு தாமேற்றுக்கொண்டு அவரைப் பாதுகாத்தற்கு விரைந்து போவார்.

(க-ரை.) பேரறிவுடையோர் பிறருக்கு வருந் துன்பத்தை விரைந்து நீக்குவார்.

(இ-பு.) அறிஞர்-எழுவாய். விரைகுவார்-பயனிலை. நேர் இழை-அன்மொழித்தொகை; இழை-இழாய் என விளியுருபேற்றது. தாக்கும்-பெயரெச்சம்; அது துயரமென்னும் பெயரைக் கொண்டு முடிந்தது. தாங்கி-இறந்தகால வினையெச்சம்; அது காக்க என்னும் எதிர்கால வினையெச்சத்தைக்கொண்டு முடிந்தது. காக்க என்னும் எச்சம் விரைகுவார் என்னும் வினைமுற்றைக்கொண்டு முடிந்தது. (சஅ)

அறிவுடையா ரன்றி யதுபெறுர் தம்பால்
செறிபழியை யஞ்சார் சிறிதும்—பிறைநுதால்

வண்ணஞ்செய் வாள்விழியே யன்றி மறைகுருட்டுக்
கண்ணஞ்சு மோவிருளைக் கண்டு.

(ப-ரை.) பிறைநுதால்-பிறைபோலும் நெற்றியையுடைய வளே! அறிவுடையார்-அறிவுடையவரே, அன்றி-அல்லாமல், அது பெறார்-அவ்வறிவைப்பெறாத மூடர், தம்பால்-தம்மிடத்தில், செறிபழியை-நெருங்கிவரும் பழிக்கு, சிறிதும்-சிறிதும், அஞ்சார்-பயப்படார், வண்ணம்செய்-அழகுசெய்கின்ற, வாள்-ஒளியையுடைய, விழியே-கண்களே, அன்றி-அல்லாமல், மறை-(ஒளி) மறைந்த, குருட்டு-குருட்டு, கண்-கண்களானவை, இருளை-இருட்டை, கண்டு-கண்டு, அஞ்சுமோ-பயப்படுமோ? (அஞ்சா.)

(பொ-ரை.) பிறைபோலும் நெற்றியை யுடையவளே! ஒளியையுடைய கண்களே யல்லாமல், ஒளிமறைந்த குருட்டுக்கண்களானவை இருட்டைக்கண்டு அஞ்சா; அவைபோல அறிவுடையவரேயல்லாமல், மூடர் தம்மிடத்து நெருங்கிவரும் பழிக்குச் சிறிதும் பயப்படார்.

(க-ரை.) பழிக்கு அறிவுடையோர் அஞ்சுவர்; மூடர் அஞ்சார்.

(இ-பு.) பெறார்-எழுவாய். அஞ்சார்-பயனிலை. அது-சுட்டுப்பெயர். செறிபழி-வினைத்தொகை. பிறைநுதால்-உவமைத்தொகை. செய்விழி-வினைத்தொகை. விழியே என்பதில் ஏகாரம் தேற்றம். மறைகுருடு-வினைத்தொகை. அஞ்சுமோ என்பதில் ஓகாரம் எதிர்மறை. (சக)

தக்கார்க்கே யீவர் தகார்க்களிப்பா ரில்லென்று
மிக்கார்க் குதவார் விழுமியோர்—எக்காலும்
நெல்லுக் கிறைப்பதே நீரன்றிக் காட்டுமுளி
புல்லுக் கிறைப்பரோ போய்.

(ப-ரை.) தக்கார்க்கே-யோக்கியருக்கே, ஈவர்-கொடுப்பர், தகார்க்கு-அயோக்கியருக்கு, அளிப்பார்-கொடுப்பார், இல்லென்று-இல்லையென்று அறிந்து, விழுமியோர்-மேலோர், மிக்கார்க்கு-

நன்னெறிகடர்தவராகிய அயோக்கியருக்கு, உதவார்-கொடார், எக்காலும்-எக்காலத்தும், நீர்-நீரை, நெல்லுக்கு-நெற்பயிருக்கே, இறைப்பதே யன்றி-இறைப்பதல்லாமல், காட்டு-காட்டினிடத்தே, முளி உலரும், புல்லுக்கு-புல்லுக்கு, போய் இறைப்பரோ-போய் இறைப்பாரோ (இறையார்.)

(பொ-ரை.) எக்காலத்தும் நீரை நெற்பயிருக்கே இறைப்பதன்றிப் புல்லுக்கு இறையார், அதுபோல மேலோர் யோக்கியருக்கே கொடுப்பார். அயோக்கியருக்குக் கொடுப்பவரிலர் என்றறிந்து அயோக்கியருக்குக் கொடார்.

(க-ரை.) மேலோர் யோக்கியருக்கேயன்றி அயோக்கியருக்குக் கொடார்.

(இ-பு.) விழுமியோர்-எழுவாய். உதவார்-பயனிலை. தக்கார், மிக்கார்-வினையாலணையும்பெயர். இறைப்பது-தொழிற்பெயர். உதவார்-எதிர்மறை வினையாலணையும்பெயர். முளிபுல்-வினைத்தொகை. இறைப்பரோ என்பதில் ஓகாரம் எதிர்மறை. ஏ-இரண்டும் பிரிநிலைக்கண்வந்தன. (ஙo)

நல்லார் செயுங் கேண்மை நாடோறு நன்றாகும்
அல்லார் செயுங்கேண்மை யாகாதே—நல்லாய்கேள்
காய்முற்றிற் றின்றீங் கனியா மிளந்தளிர்நாள்
போய்முற்றி னென்னாகிப் போம்.

(ப-ரை.) நல்லாய்-நற்குணத்தை யுடையவளே! கேள்-கேட்பாயாக, நல்லார்-நல்லோர், செயும்-செய்யும், கேண்மை-சிநேகமானது, நாடோறும்-தினந்தோறும், நன்று ஆகும்-நன்றாகிவளரும், அல்லார்-தீயோர், செயும்-செய்யும், கேண்மை-சிநேகமானது, ஆகாது-நல்லதாகாது, காய்முற்றின்-காயானது (நாள்சென்று) முற்றினால், தின்-தின்னுதற்குரிய, தீம்-மதுரமாகிய, கனி ஆம்-கனியாகும், இளந்தளிர்-இளந்தளிரானது, நாள்போய்-நாள்சென்று, முற்றின்-முற்றினால், என்-யாது, ஆகிப்போம்-ஆகிப்போகும்.

(பொ-ரை.) நற்குணமுடையவளே! காயானது முற்றினால் தின்னுதற்குரிய கனியாகும். இளந்தளிர் முற்றினால் அங்ஙனமாகாது, அதுபோல நல்லவர்களுடைய சிநேகந் தினந்தோறும் நன்றாகிவளரும் தீயோருடைய சிநேகம் நன்றாகாது கெடும்.

(க-ரை,) நல்லோர் நட்பு நாள்செல்லச்செல்ல இனிதாகும். தீயோர்நட்பு அங்ஙனமாகாது கெடும.

(இ-பு.) கேண்மை-எழுவாய் நன்றாகும், ஆகாது-பயனிலை. காய், தளிர், கனி-வினைமுதற்பொருளை யுணர்த்தும் இகரவிகுதிபுணர்ந்து கெட்டபெயர்கள். தோறும் பன்மைப்பொருளையுணர்த்திவந்த இடைச்சொல். முற்றின்-எதிர்கால வினையெச்சம். இளந்தளிர்-பண்புத்தொகை. தின்கனி-வினைத்தொகை. ஏ-அசை. (ருக)

பொன்னணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி
மன்னு மறிஞரைத்தா மற்றொவ்வார்—மின்னுமணி
பூணும் பிறவுறுப்புப் பொன்னே யதுபுனையாக்
காணுங்கண் ணொக்குமோ காண்.

(ப - ரை.) பொன்னே - இலக்குமியைப் போன்றவளே! பொன்-பொன்னாபரணத்தை, அணியும்-அணியும், வேந்தர்-அரசர், புனையா (அதனை) அணியாத, பெருங்கல்வி-பெரிய கல்விப்பொருள், மன்னும்-நிலைபெற்ற, அறிஞரை-விவேகிகளுக்கு, ஒவ்வார்-ஒப்பாகார், மின்னும்-விளங்குகின்ற, அணி-ஆபரணத்தை, பூணும்-அணிந்துகொள்கின்ற, பிறவுறுப்பு- (கைகால் முதலிய) மற்றையவயவங்களானவை, அது புனையா-அதனையணியாத, காணும்-பார்க்கின்ற, கண்-கண்களுக்கு, ஒக்குமோ-ஒப்பாகுமோ (ஒப்பாகா.)

(பொ-ரை.) இலக்குமியைப் போன்றவளே! ஆபரணத்தையணிந்துகொள்கின்ற கை கால் முதலிய வவயவங்கள் அதனையணியாத கண்களுக்கு ஒப்பாகா; அதுபோல ஆபரணத்தையணியும் அரசர் அதனையணியாத கல்விப்பொருள் நிலைபெற்ற விவேகிகளுக்கு ஒப்பாகார்.

(க-ரை.) வித்துவான்களுக்கு அரசர்களும் ஒப்பாகார்.

(இ-பு.) வேந்தர்-எழுவாய். ஒவ்வார்-பயனிலை. புனையா-ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். மன்னும்-இடைச்சொல் லடியாகப்பிறந்த பெயரெச்சம். அறிஞரை-உருபு மயக்கம். ஒவ்வார்-எதிர்காலத் தெரிநிலைவினைமுற்று. அணிபூணும்-இரண்டாம் வேற்றுமைத்தொகை, தாம், மற்று-அசை. காண்-முன்னிலையசை. (ருஉ)

புகழேந்திப்புலவர்

இயற்றிய

நளவெண்பா.

காதல் கவறாடல் கள்ளுண்டல் பொய்ம்மொழிதல்
ஈதன் மறுத்த லிவைகண்டாய்—போதில்
சினையாமை வைகுந் திருநாடா செம்மை
நினையாமை பூண்டார் நெறி.

* (ப-ரை.) போதில்-தாமரைமுதலிய நீர்ப்பூக்களில், சினை-கருப்பத்தையுடைய, ஆமை-ஆமைகள், வைகும்-இருக்கின்ற, திருநாடா-அழகிய (நிடத) நாட்டு அரசனே, செம்மை-அறத்தை, நினையாமை-சிந்தியாமையை, பூண்டார்-விரதமாகக் கொண்டவருடைய, நெறி-ஒழுக்கம், காதல்-(தன்மனையாளல்லாத மற்றைப் பெண்களை) விரும்புதல், கவறு ஆடல்-(சதுரங்கமுதலிய) சூது ஆடுதல், கள்ளுண்டல்- (அறிவை மயக்கும் பொருளாகிய) கள்ளுண்டல், பொய் மொழிதல்-உள்ளதை இல்லதாகவும் இல்லதையுள்ளதாகவும் சொல்லுதல், ஈதல் மறுத்தல்-(சற்பாத்திரருக்குக்) கொடுத்தலை மறுத்தல் ஆகிய, இவை-இவைகளேயாம்.

* புட்கரனோடு நளன் சூதாடத் தொடங்கியபொழுது மந்திரிகள் சொல்லியது.

(பொ-ரை.) நிடதநாட்டரசனே தன் மனையாளல்லாத மற்றைப் பெண்களை விரும்புதலும், கவறு சதுரங்கமுதலியவற்றாலாடுதலும். அறிவை மயக்கும் கள்ளையுண்டலும், பொய்சொல்லலும், சற்பாத்திரருக்குக் கொடுத்தலை மறுத்தலும் ஆகிய இவைகளே தருமத்தை நினையாதவர்கள் விரதமாகக்கொண்ட ஒழுக்கங்களாம்.

(க ரை.) அறவொழுக்கம் இல்லாதவர்கள் செய்யுந் தொழில்கள் வியபிசார முதலியவைகளேயாம்.

(இ-பு.) நெறி-பால்பகாவஃறிணைப்பெயர். நாடா-விளியுருபேற்ற பெயர். காதல், கவருடல், கள்ளுண்டல், பொய்மொழிதல், ஈதன்மறுத்தன், செவ்வெண், நினையாமை-இரண்டாம்வேற்றுமையுருபும் பயனுமுடன் றொக்கதொகை. நினையாமை-எதிர்மறைத் தொழிற்பெயர். கணடாய்-முன்னிலை அசை. (௫௩)

அறத்தைவேர் கல்லு மருநரகிற் சேர்க்கும்
திறத்தையே கொண்டருளைத் தேய்க்கும்—மறத்தையே
பூண்டுவிரோ தஞ்செய்யும் பொய்ச்சூதை மிக்கோர்கள்
தீண்டுவரோ வென்றார் தெரிந்து.

(ப-ரை.) அறத்தை-தருமத்தை, வேர் கல்லும்-வேரோடுபிடுங்கும், அருநரகில்-கிட்டுதற்கரிய கொடிய நரகத்திலே, சேர்க்கும்-செலுத்தும், திறத்தையே-மனவலிமையை, கொண்டு-மேற்கொண்டு, அருளை-(ஆன்மாக்களிலே செய்யத்தகுந்த) கிருபையை, தேய்க்கும்-அழிக்கும், மறத்தையே-பாவத்தையே, பூண்டு-விரதமாகக் கொண்டு, விரோதஞ் செய்யும்-பகைகொள்ளச் செய்யுமென்று, தெரிந்து-அறிந்தும், பொய்ச் சூதை-மாயச் சூதாடுதலை, மிக்கோர்கள்- (தருமநெறியிலே யொழுகும்) பெரியோர்கள், தீண்டுவரோ-தீண்டுவார்களா, என்றார்-என்று மந்திரிகள் சொன்னார்கள்.

(பொ-ரை.) தருமத்தை வேரோடு பிடுங்கும், கொடிய நரகத்திலே செலுத்தும், கிருபையை யழிக்கும், பாவத்தையே மேற்கொண்டு பகைகொள்ளச்செய்யும் என்று அறிந்தும், மாயச்

சூதைத் தருமநெறியிலொழுகும் பெரியோர்கள் தீண்டுவார்களா என்று மந்திரிகள் சொன்னார்கள்.

(க-ரை.) சூதாடுதல் தருமமுதலியவற்றைக் கெடுத்து நரகத்திலே செலுத்திவிடும்.

(இ-பு.) மந்திரிகள்-தோன்றா எழுவாய். என்றார்-பயனிலை. தெரிந்து-இறந்தகால வினையெச்சம்; அது தீண்டுவரோ என்னும் வினைமுற்றைக்கொண்டு முடிந்தது. பொய்ச்சூது-இரண்டாம்வேற்றுமையுருபும் பயனுமுடன்றொக்க தொகை; அது மாயத்தையுடைய சூதென விரியும். ஏ-இரண்டாம் பிரிநிலை. ஓகாரம்-எதிர்மறை. தெரிந்துதெரிந்தும் என உம்மை விரிக்க. (ருச)

உருவழிக்கு முண்மை யுயர்வழிக்கும் வண்மைத்
திருவழிக்கு மானஞ் சிதைக்கும்—மருவும்
ஒருவரோ டன்பழிக்கு மொன்றல்ல சூது
பொருவரோ தக்கோர் புரிந்து.

(ப-ரை.) உரு அழிக்கும்-அழகைக் கெடுக்கும், உண்மை-சத்தியத்தை, அழிக்கும்-கெடுக்கும், உயர்வு-உயர்ச்சியை, அழிக்கும்-கெடுக்கும், வண்மைத்திரு-(தனக்கும் பிறருக்கும்) உபகாரமாகிய செல்வத்தை, அழிக்கும்-கெடுக்கும், மானம்-மானத்தை, சிதைக்கும்-கெடுக்கும், ஒருவரோடு-ஒருவரோடு, மருவும்-பொருந்திய, அன்பு-அன்பை, அழிக்கும்-கெடுக்கும், ஒன்றல்ல-(தருங்கேடுகள்) பல (ஆதலால்), தக்கோர்-அறிவாலுயர்ந்தோர், புரிந்து-விரும்பி, சூது-சூதை, பொருவரோ-ஆடுவாரோ (ஆடார்.)

(பொ-ரை.) சூதாடுதல் அழகையும் சத்தியத்தையும் உயர்ச்சியையும், தனக்கும் பிறர்க்கும் உபகாரமாகிய செல்வத்தையும் மானத்தையும் ஒருவரோடுகொண்ட அன்பையும் கெடுக்கும். ஆதலால் அறிவுடையோர்கள் விரும்பி ஆடார்கள்.

(க-ரை.) சூதாடுதல் அழகு செல்வம் மானம் அன்பு இவைகளைக் கெடுக்கும்.

(இ-பு.) தக்கோர்-எழுவாய். பொருவரோ-பயனிலை. புரிந்து-இறந்தகால வினையெச்சம். அது பொருவரோ என்னும் வினைமுற்றைக்கொண்டு முடிந்தது. அன்பழிக்கும்-இரண்டாம் வேற்றுமைத்தொகை. அழிக்கும் என்பதை உண்மையோடுங் கூட்டுக. (ருரு)

வேலை கரையிழந்தால் வேத நெறிபிறழ்ந்தால்
ஞால முழுது நடுவிழந்தால்—சீலம்
ஒழிவரோ செம்மை யுரைதிறம்பாச் செய்கை
அழிவரோ செங்கோ லவர்.

(ப-ரை.) வேலை-சமுத்திரம், கரை இழந்தால்-(தனக்குரிய) எல்லையைக் கடந்து சென்றாலும், வேதநெறி-வேதவழியே யொழுகுமொழுக்கம், பிறழ்ந்தால்-மாறுபட்டாலும், ஞாலம் முழுதும்-உலகத்திலுள்ளவர்களெல்லாரும், நடு இழந்தால்-நீதியைக் கைவிட்டாலும், செங்கோலவர்-செவ்விய கோலைச் செலுத்தும் அரசர்கள், சீலம் ஒழிவரோ-நல்லொழுக்கத்தை விடுவரோ, செம்மை உரை-உண்மைநூலுக்கு, திறம்பா-மாறுபடாத, செய்கை-தொழில்களை, அழிவரோ-விட்டுவிடுவரோ.

(பொ-ரை.) செங்கோலைச் செலுத்தும் அரசர்கள், சமுத்திரம் தனக்குரிய எல்லையைக் கடந்து சென்றாலும், வேதவழியேயொழுகு மொழுக்கம் மாறுபட்டாலும், உலகத்திலுள்ளவர்கள் நீதியைக் கைவிட்டாலும், நல்லொழுக்கத்தையும் உண்மைநூல்களுக்கு மாறுபடாத தொழில்களையுங் கைவிடார்கள்.

(க-ரை.) அரசர்கள் ஒருகாலத்தும் நல்லொழுக்கத்தையும் நற்செயல்களையுங் கைவிடார்கள்.

(இ-பு.) செங்கோலவர்-எழுவாய். ஒழிவரோ, அழிவரோ-பயனிலை. ஞாலம்-இடவாகுபெயர். திறம்பா-ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம், உரை-ஆகுபெயர். ஒழிவரோ அழிவரோ என்பவைகளில் ஓகாரம் எதிர்மறை. நடுவிழந்தால்-இரண்டாம் வேற்றுமைத்தொகை. (ருசு)

பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்
றென்னுடைய ரேனு முடையரோ—இன்னடிசில்
புக்களையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
மக்களையிங் கில்லா தவர்.

(ப-ரை.) இன் அடிசில்-இனிய சோற்றை, புக்கு- (புசிக்குமிடத்து) வந்து, அளையும்-அளைகின்ற, தாமரைக்கை-செந்தாமரை மலர்போன்ற கையையும், பூ-செவ்வாம்பற் பூப்போல, நாறும்-தோற்றுகின்ற, செய்யவாய்-சிவந்த வாயையுமுடைய, மக்களை-குழந்தைகளை, இங்கு-இவ்வுலகத்தில், இல்லாதவர்-பெறுதவர், பொன்-செல்வத்தை, உடையரேனும்-உடையவராயினும், புகழ் உடையரேனும்-கீர்த்தியை யுடையராயினும், மற்று என்னுடையரேனும்-வேறு எவற்றை யுடையராயினும், உடையரோ-(அவற்ருலுண்டாகிய பயனை) உடையராவாரோ (ஆகார்.)

(பொ-ரை.) செவ்விய கையையும் சிவந்த வாயையுமுடைய குழந்தைகளைப் பெறுதவர் செல்வம் கீர்த்தி முதலிய பலவற்றையுமுடையராயினும், அவற்ருலுண்டாகிய பயனை உடையவராகார்.

(க-ரை.) பிள்ளையில்லாவிடின் செல்வமுதலியவற்ருற் பயனில்லை.

(இ-பு.) இல்லாதவர்-எழுவாய். உடையரோ-பயனிலை. அடிசில்-தொழிலாகுபெயர். தாமரைக்கை-உவமைத்தொகை. இல்லாதவர்-எதிர்மறைக் குறிப்புவினையாலணையும் பெயர். எனும்-இடைச்சொல். உடையரோ என்பதில் ஓகாரம் எதிர்மறை. (ருஎ)

சொன்ன கலையின் றுறையனைத்துந் தோய்ந்தாலும்
என்ன பயனுடைத்தா மின்முகத்து—முன்னம்
குறுகுதலைக் கிண்கிணிக்காற் கோமக்கள்பால்வாய்ச்
சிறுகுதலை கேளாச் செவி.

(ப-ரை.) இன்முகத்து-இனிய முகத்தையும், முன்னம்-(தம்) முன்னே, குறுகுதலை-வருதலையுடைய, கிண்கிணி-சிறுசதங்

கையை (அணிந்த), கால்-காலையுமுடைய, கோமக்கள்-அழகிய குழந்தைகளுடைய, பால்வாய்-பால்மணநீங்காத வாயினின்றும் வரும். சிறுகுதலை-மழலைச் சொற்களை, கேளாச் செவி-கேளாத காதுகள், சொன்ன கலையின்-சொல்லப்பட்ட கலைகளின், துறை அனைத்தும்-பகுதிகளையெல்லாம், தோய்ந்தாலும்-கேட்டிருந்தாலும், என்ன பயன் உடைத்தாம்-யாதுபிரயோசனம் உடையனவாம். (ஒருபயனு முடையனவன்று.)

(பொ-ரை.) இனிய முகத்தையும் சிறு சதங்கைகளணிந்த காலையுமுடைய குழந்தைகளின் மழலைச் சொற்களைக் கேளாத செவிகள் சொல்லப்பட்ட கலைகளையெல்லாங் கேட்டிருந்தாலும் பயன்படா.

(க-ரை.) குழந்தைகளுடைய குதலையைக் கேட்டலே செவிக்கின்பமாம்.

(இ-பு.) பயன்-எழுவாய். என்-பயனிலை. கிண்கிணிக்கால்-இரண்டாம் வேற்றுமையுருபும் பயனு முடன்தொக்கதொகை; அது கிண்கிணியை அணிந்த கால் என விரியும். வாய்க்குதலை-நீக்கப்பொருளில்வந்த ஐந்தாம் வேற்றுமைத்தொகை; அது வாயினின்றும் வரும் குதலையென விரியும். (டுஅ)

சினக்கதிர்வேற் கண்மடவாய் செல்வர்பாற் சென்றீ
எனக்கென்னு மிம்மாற்றங் கண்டாய்—தனக்குரிய
தானந் துடைத்துத் தருமத்தை வேர்பறித்து
மானந் துடைப்பதோர் வாள்.

(ப-ரை.) சினம்-கோபக் குறிப்பையும், கதிர்-ஒளியையும் உடைய, வேற்கண்-வேல்போன்ற கண்களையுடைய, மடவாய்-தமயந்தியே, செல்வர்பால்-செல்வர்களிடத்து, சென்று-போய், எனக்கு ஈ என்னும்-எனக்குச் சிறிதுபொருள் கொடுங்கள் என்னும், இம்மாற்றம்-இந்த இழிவரவுச்சொல், தனக்குரிய-தனக்குரிமையாகவுடைய, தானம்-பரலோகத்தை, துடைத்து-நீக்கி, தருமத்தை-புண்ணியத்தை, வேர் பறித்து-வேரோடு

களைந்து, மானம்-மானத்தையும், துடைப்பது-போக்குவதாகிய, ஓர் வாள்-ஒரு வாளாம்.

(பொ-ரை.) தமயந்தியே செல்வர்களிடத்திற் போய் எனக்குச் சிறிதுபொருள் ஈயுங்கள் என்னும் இழிவரவுச்சொல் ஒருவனுடைய மேற்கதியை யிழப்பித்துப் புண்ணியத்தைக் களைந்து மானத்தைப் போக்கும் வாளேயாகும்.

(க-ரை.) இரத்தலினு மிக்க இழிவரவு வேறு இல்லை.

(இ-பு.) மாற்றம்-எழுவாய். வாள்-பயனிலை. வேற்கண்-உவமைத்தொகை. ஈ-முன்னிலை யேவல் வினைமுற்று. சென்று-இறந்தகால வினையெச்சம். இது உருவக அலங்காரம். (ருக)

வீரகவிராயர்

இயற்றிய

அரிச்சந்திரபுராணம்.

சேய்மை யண்மையி லுயிர்க்கொரு துணையெனச் சிறந்த
வாய்மை யாலகந் தூய்மையா மற்றிலை புறத்தைத்
தூய்மை செய்வது நீரலாற் சொல்லின்வே றுளதோ
நோய்மை செய்யினும் வாய்மையே நோன்பெமக் கறிதி.

‡ (ப-ரை.) உயிர்க்கு-மக்களுயிர்க்கு, சேய்மை-தூரம், அண்மை-சமீபம், இல்-இல்லாமல், ஒரு-ஒப்பற்ற, துணை என-துணையென்று (அறிந்தோர்) சொல்லும்படி, சிறந்த-உயர்ந்த, வாய்மை

---

‡ காசி அரசனுடைய கட்டளைப்படி கொலைசெய்ய அரிச்சந்திரன் தன் மனைவியைக் கட்டிக்கொண்டு போம்பொழுது விசுவாமித்திரர் நாடு நான் கொடுக்கவில்லையென்று பொய்சொல்லுக என்ன, இருவரும் அம்முனியைப் பார்த்துக் கூறியது.

யால்-சத்தியத்தால், அகம்-மனம், தூய்மையாம்-சுத்தமாகும், மற்று இல்லை-வேறொன்றாற் சுத்தமாதல் இல்லை, சொல்லின்-சொல்லுமிடத்து, அம்புறத்தை-அழகிய உடம்பை, தூய்மை செய்வது-சுத்தமாக்குவது, நீரலால்-நீரேயல்லாமல், வேறுளதோ-வேறுபொருளுண்டோ, நோய்மை செய்யினும்-துன்பத்தைச்செய்தாலும், வாய்மையே சத்தியமே, எமக்கு நோன்பு-எங்களுக்கு விரதமென்று, அறிதி-அறியக்கடவாய்.

(பொ-ரை.) உடம்பைச் சுத்தமாக்குவது நீரன்றி வேறில்லை; அதுபோல, மனத்தைச் சுத்தமாக்குவது, மக்களுயிர்க்கு ஒப்பற்ற துணையென்று அறிந்தோர் சொல்லும்படி சிறந்த சத்தியமேயன்றி வேறில்லை; ஆதலால், துன்பத்தைச்செய்யினுஞ் சத்தியமே விரதமென்று அறியக்கடவாய்.

(க-ரை.) சத்தியம் மனத்தைச் சுத்தமாக்கும், ஆதலால் அதுவே எங்கள் விரதமென்றார்.

(இ-பு.) நீ- தோன்றா எழுவாய். அறிதி-பயனிலை. அகம்-இடவாகுபெயர். ஓ-இரண்டும் எதிர்மறைப்பொருட்டு. செய்வது-தொழிற்பெயர். அம்புறமெனவும் அறிதியெனவும் பாடந் திரித்துக்கொள்க. (சுO)

புலைய னும்விரும் பாதவிப் புன்புலால் யாக்கை
நிலையெ னுமருண் டுயிரினு நெடிதுறச் சிறந்தே
தலைமை சேர்தரு சத்தியம் பிறழ்வது தரியேம்
கலையு ணர்ந்தநீ யெமக்கிது கழறுவ தழகோ.

(ப-ரை.) புலையனும்-(புலாலுண்ணும்) நீசனும், விரும்பாத-இச்சிக்கப்படாத, இப் புன்புலால்-இந்தவிழிந்த புலால்நாற்றத்தையுடைய, யாக்கை-உடம்பை, நிலைஎனு-நிலையென்று, மருண்டு-மயங்கி, உயிரினும்-ஆன்மாவைப் பார்க்கினும், நெடிதுற-மிக, சிறந்து-சிறப்புற்று, தலைமைசேர்தரு-மேன்மை பொருந்திய, சத்தியம்-சத்தியத்தினின்றும், பிறழ்வது-தவறுதலை, தரியேம்-சகிக்கமாட்டேம், (ஆதலால்) கலையுணர்ந்தநீ-வேதமுதலிய

கலைகளெல்லாவற்றையுங் கற்றுணர்ந்தநீ, எமக்கு-எங்களுக்கு, இது-இதை, கழறுவது-சொல்லுதல், அழகோ-அழகா (அழகன்று.)

(பொ-ரை.) புலாலை விரும்பி யுண்ணும் நீசனாலும் விரும்பப்படாத உடம்பை நிலையென்று மயங்கி உயிரினும் பார்க்கச் சிறந்த சத்தியத்தினின்றுந் தவறமாட்டோம், ஆதலால் வேதமுதலிய கலைகளையெல்லாங் கற்றுணர்ந்த நீ எங்களுக்கு இதைச்சொல்லுதல் அழகன்று.

(க-ரை.) சத்தியம் உயிரினும்பார்க்கச் சிறந்தது.

(இ-பு.) கழறுவது-எழுவாய். அழகோ-பயனிலை வேதமுதலிய கலைகளிலெல்லாம் சத்தியமே சிறந்ததருமமென்று சொல்லியிருப்பதைக் கற்றுணர்ந்தும் உனக்கு இத்தகாதவார்த்தை கூடாதென்பார் கலையுணர்ந்தநீயென விசேடித்தார். யாக்கை தொழிற்பெயர். மருண்டு-இறந்தகால வினையெச்சம். உம்மை-இரண்டனுள் முன்னையது இழிவு சிறப்பு, பின்னையது-உயர்வுசிறப்பு. ஒ-எதிர்மறை. சத்தியம் பிறழ்வது நீக்கப்பொருளில்வந்த ஐந்தாம் வேற்றுமைத்தொகை. கழறுவது-தொழிற்பெயர். (௬௧)

இம்மை யம்மைவீ டெனமறை புலங்கொள வியம்பும்
மும்மை யுந்தரு முறையுடைத் தெனுநிலை முரணி
எம்மையாழ்வயிற் றடக்கிமீட் டுமிழ்கலா வெரிவாய்
வெம்மைகூர்நர குய்க்கினு மெய்மையை விடேமால்.

(ப-ரை.) மறை-வேதங்கள், புலம்கொள- (ஆன்மாக்கள்) அறிந்துய்யும்படி, இயம்பும்-சொல்லுகின்ற, இம்மை என-இம்மைப்பயனும், அம்மை என-மறுமைப்பயனும், வீடு என-முத்தியும் ஆகிய, மும்மையும்-மூன்றையும், தரும்-தருகின்ற, முறையுடைத்தெனும்-முறைமையை யுடைத்தென்னும், நிலைமுரணி-நிலையினின்றும் வேறுபட்டு, எம்மை-எங்களை, ஆழ்வயிறு-ஆழ்ந்தவயிற்றில், அடக்கி-அடக்கிக்கொண்டு, மீட்டு-மறுபடியும், உமிழ்கலா-உமிழ்ந்துவிடாத, வெம்மைகூர்-மிகுந்த வெப்பத்தையுடைய,

எரிவாய்நரகு-எரிவாய் நரகத்தில், உய்க்கினும்-செலுத்திவிட்டா லும், மெய்மையை-சத்தியத்தை, விடேம்-விடுவோமல்லேம்.

(பொ-ரை.) வேதங்களிற்சொல்லிய இம்மை மறுமை வீ டென்னும் மூன்றையும் தரும் முறைமையை யுடைத்தென்னும் நிலையினின்றும் வேறுபட்டு எங்களை உண்டு மீட்டும் உமிழாத எரி வாய்நரகிற் செலுத்தினாலும் சத்தியத்தை விடேம்.

(க-ரை.) இம்மை மறுமை வீடு என்னு மூன்றையும் இழந் தாலும் சத்தியத்தை விடமாட்டேம்.

(இ-பு.) யாம்-தோன்றா எழுவாய். விடேம்-பயனிலை. எரி வாய்நரகம்-இருபத்தெட்டுக்கோடி நரகத்திலொன்று. உடைத்து-அஃறிணை யொன்றன்பாற் படர்க்கைக் குறிப்புவினைமுற்று. நிலை மூரணி-நீக்கப்பொருளில் வந்த ஐந்தாம்வேற்றுமைத் தொகை. ஆழ்வயிறு-வினைத்தொகை. உமிழ்கலா-ஈறுதொக்க எதிர்மறைப் பெயரெச்சம். விடேம்-தன்மைப்பன்மை எதிர்மறைவினைமுற்று. மும்மையும் என்பதன்கண் உம்மைமுற்று. உய்க்கினும் உம்மை எதிர்மறை. (சுஉ)

பதியி ழந்தனம் பாலனை யிழந்தனம் படைத்த
நிதியி ழந்தன மினிநமக் குளதென நினைக்குங்
கதியி ழக்கினுங் கட்டுரை யிழக்கிலே மென்றார்
மதியி ழந்துதன் வாயிழந் தருந்தவன் மறைந்தான்.

(ப-ரை.) பதி இழந்தனம்-(இப்பொழுது) நாட்டை இழந் துவிட்டோம். பாலனை இழந்தனம்-புத்திரனை இழந்துவிட்டோம், படைத்த- (வருந்திச்) சம்பாதித்த, நிதி இழந்தனம்-செல்வத்தை யும் இழந்துவிட்டோம், இனி-இனிமேல், நமக்கு உளது என-நம க்குள்ளதென்று, நினைக்கும்-எண்ணும், கதி-மோட்சத்தை, இழக் கினும்-இழந்துவிட்டாலும், கட்டுரை-சத்தியத்தை, இழக்கிலேம்-இழந்துவிடமாட்டோம், என்றார்-என்று சொன்னார்கள். அருந்த வன் அரியதவத்தையுடைய விசுவாமித்திரன், மதி இழந்து-அறி விழந்து, தன்வாயிழந்து-தன் வாய்ச்சொல்லையும் இழந்து, மறை ந்தான்-கரந்து போயினான்.

(பொ-ரை.) இப்பொழுது நாட்டையும் புத்திரனையும் செல்வத்தையும் இழந்துவிட்டோம்; இனிமேல் மோட்சத்தை யிழந்துவிட்டாலும் சத்தியத்தை யிழக்கமாட்டோம் என்று அரிச்சந்திரன் சொல்ல, அதைக்கோட்ட விசுவாமித்திரன் தன் அறிவையும் வாய்ச்சொல்லையும் இழந்து போயினான்.

(க-ரை.) மோட்சத்தை இழந்தாலும் சத்தியத்தை இழக்கமாட்டோம்.

(இ-பு.) இராஜா, அருந்தவன்-எழுவாய். என்றூர் மறைந்தான்-பயனிலை. இழந்தனம்-தன்மைப் பன்மை இறந்தகாலவினைமுற்று. படைத்த-இறந்தகாலப்பெயரெச்சம். இனி-இடைச்சொல். வாய்-ஆகுபெயர். கதியிழக்கினும் என்பதன் உம்மை எதிர்மறை. (சுரு)

குமரகுருபரசுவாமிகள்

அருளிச்செய்த

நீதிநெறிவிளக்கம்.

அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டும்—உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை.

(ப-ரை.) அறம்-தருமத்தையும், பொருள் - பொருளையும், இன்பமும்-இன்பத்தையும், வீடும்-மோட்சத்தையும், பயக்கும்-கொடுக்கும், புறங் கடை-கடைவாயிலின்புறத்தே, நல்லிசையும்-நல்லகீர்த்தியையும், நாட்டும்-நிலைநிறுத்தும், உறும்-மீக்க, ஒன்று-ஒப்பற்ற, கவல்-துன்பம், உற்றுழியும்-உற்றவிடத்தும், கைகொடுக்கும்-(ஊன்றுகோல்போல) உதவும், (ஆதலால்), சிற்றுயிர்க்கு-

சில்வாழ்நாட்களையுடைய உயிர்களுக்கு, உற்ற-பொருந்திய, துணை-துணை, கல்வியின்-கல்வியைப்பார்க்கினும், ஊங்கு-மிக்கது, இல்லை-வேறில்லை.

(பொ-ரை.) கல்வியானது அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய நான்கையுங் கொடுத்தலானும், புறத்தே கீர்த்தியை நாட்டலானும், துன்பம் வந்தவிடத்து ஊன்றுகோல்போல உதவுதலானும் சில் வாழ்நாட்களையுடைய உயிர்களுக்கு அக்கல்வியினும் பார்க்கச் சிறந்த துணையில்லை.

(க - ரை.) அறம் பொருள் இன்பம் வீடு கீர்த்தி ஆகிய இவற்றைத் தருதலால், கல்வியே உயிர்களுக்குச் சிறந்த துணை.

(இ-பு.) துணை-எழுவாய். இல்லை-பயனிலை. இன்பம்-பண்புப்பெயர். வீடு விடுதல் என்னுந் தொழிற்பெயர்; தல்விகுதிகெட்டு, கெட்டவழி முதனீண்டது. கவல்-முதனிலைத் தொழிற்பெயர். உற்றுழி-வினையெச்சம். கடைப்புறம் புறங்கடையென இலக்கணப் போலியாயிற்று. ஊங்கு-இடைச்சொல். (சுச)

எத்துணைய வாயினுங் கல்வி யிடமறிந்
துய்த்துணர் வில்லெனி னில்லாகும்—உய்த்துணர்ந்துஞ்
சொல்வன்மை யின்றெனி னென்னா மஃதுண்டேல்
பொன்மலர் நாற்ற முடைத்து.

(ப-ரை.) எத்துணைய-எவ்வளவு, ஆயினும்-ஆனாலும். இடம் அறிந்து-நல்லாசிரியனையறிந்து, கல்வி-கல்வியை, உய்த்து உணர்வு-ஆராய்ந்துணர்தல், இல் எனின்-இல்லையாயின், இல் ஆகும்-இல்லையாகும், உய்த்துணர்ந்தும்-ஆராய்ந் துணர்ந்தும், சொல்வன்மை-(பிறருக்குத் தாமறிந்தவற்றைச்) சொல்லுந்திறம், இன்று எனின்-இல்லையாயின், என் ஆம்-என்னபயன் ஆகும், அஃது-அச்சொல்வன்மை, உண்டேல்-உண்டானால், (அவ்வன்மை) பொன்மலர்-பொன்னாற்செய்த மலர், நாற்றம்-வாசனையை, உடைத்து-உடையதுபோலும்.

(பொ-ரை.) ஒருவன் நல்லாசிரியனையறிந்து கல்வியை ஆராய்ந்துணராஞயின் அவன் கற்ற கல்வி எவ்வளவாயினும் பய ன்படாதாம், அங்ஙனமே ஆராய்ந்துணர்ந்தும் பிறருக்குச் சொ ல்லும் சொல்வன்மை இல்லையாயின் அக்கல்வி என்ன பிரயோச னத்தைத் தரும், அஃதுண்டாஞல் பொன்மலர் நாற்றமுடைய துபோலும்.

(க-ரை.) ஒருவன் நல்லாசிரியனிடத்திலே கற்றும் சொல் வன்மை அவனிடத்து இல்லையாயின் அக்கல்வி பிறருக்குப் பய ன்படாவாம்.

(இ-பு.) பயன்-தோன்றா எழுவாய். இல்லாகும், என்ஞகு ம், ஒக்கும்-பயனிலை. உய்த்து-இரண்டும் இறந்தகால வினையெச் சம்; அவை முறையே உணர்வு என்னுந் தொழிற்பெயரையும் உ ணர்ந்து என்னும் வினையெச்சத்தையுங்கொண்டு முடிந்தன. அஃ து-சுட்டுப்பெயர். உண்டேல்-எதிர்கால வினையெச்சம்; அது உ டைத்து என்னும் வினைமுற்றைக்கொண்டு முடிந்தது. பொன் மலர்-பொன்ஞற் செய்யப்பட்ட மலரென மூன்றும் வேற்றுமை யுருபும் பயனுமுடன் ருெக்கதொகையாய் நின்றது. (௬௫)

வருந்தித்தாங் கற்றன வோம்பாது மற்றும்
பரிந்து சிலகற்பான் ருெடங்கல்—கருந்தனம்
கைத்தலத்த வுய்த்துச் சொரிந்திட் டரிப்பரித்தாங்
கெய்த்துப் பொருள்செய் திடல்.

(ப-ரை.) வருந்தி-பிரயாசப்பட்டு, தாம் கற்றன-தாம் படித் தவற்றை, ஓம்பாது-பாதுகாத்துக்கொள்ளாமல், மற்றும்-வேறும், பரிந்து-வருந்தி, சில-சில நூல்களை, கற்பான்-(புதிதாகக்) கற்கும் படி, தொடங்கல்-புகுதல், கைத்தலத்த-கையின்கணுள்ள, கருந் தனம்-பெருந்திரவியத்தை, உய்த்துச் சொரிந்திட்டு-வீசி எறி ந்துவிட்டு, அரிப்பு அரித்து-அரிப்புத் தொழிலைச்செய்து, எய் த்து-இளைத்து, பொருள்செய்திடல்-வேறுபொருளைப் புதிதாகச் சம்பாதித்தலோடொக்கும்.

(பொ-ரை.) வருந்தித் தாங் கற்றவைகளைச் சிந்தியாமல் வேறுநூல்களைப் புதிது புதிதாகக் கற்கத்தொடங்கல் கையிலே கிடைத்த திரவியத்தைப் புறத்தே யெறிந்துவிட்டு அரிப்புத்தொழிலைச் செய்து வேறு பொருளைச் சம்பாதித்தலோடொக்கும்.

(க-ரை.) கற்ற நூற்பொருளைப் பலகாலுஞ் சிந்திக்கவேண்டும்.

(இ-பு.) தொடங்கல்-எழுவாய். ஒக்கும்-பயனிலை. சில-பலவின்பாற் படர்க்கைக் குறிப்புவினையாலணையும் பெயர். கற்பான்-பான் ஈற்று எதிர்கால வினையெச்சம். ஓம்பாது-எதிர்மறை வினையெச்சம். அரிப்பு-அரித்தலையுடைய பொருண்மே னிற்றலால் தொழிலாகுபெயர். ஆங்கு, உம்-அசைநிலைகள். (௬௬)

கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்
மற்றோ ரணிகலம் வேண்டாவாம்—முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே
அழகுக் கழகுசெய் வார்.

(ப-ரை.) கற்றோர்க்கு-வித்துவான்களுக்கு, கல்விநலனே-கல்வி அழகே, கலன் அல்லால்-ஆபரணமன்றி, மற்று ஓர்-வேறோர், அணிகலம்-ஆபரணம், வேண்டாவாம்-வேண்டுவதில்லை, முற்ற முழுமணி-நன்றாய் முற்றிய இரத்தினத்தால் அழுத்திச் செய்யப்பட்ட, பூணுக்கு-ஆபரணத்துக்கு, பூண்-(வேறு) ஆபரணம். வேண்டா-வேண்டியதில்லை, யாரே-யாவர்தாம், அழகுக்கு, அழகுசெய்வார்-அழகைச் செய்பவர்கள்.

(பொ-ரை.) வித்துவான்களுக்குக் கல்வி ஆபரணமன்றி வேறு ஆபரணம் வேண்டுவதில்லை. நன்றாய் முற்றிய இரத்தினமழுத்திச் செய்யப்பட்ட ஆபரணததுக்கு வேறு ஆபரணம் வேண்டியதில்லை. அழகுக்கு அழகுசெய்பவர் யார்?

(க-ரை.) வித்துவான்களுக்குக் கல்வியே ஆபரணம்.

(இ-பு.) கலம்-எழுவாய். வேண்டாவாம்-பயனிலை. கலம்-

கலன் எனப் போலியாயிற்று. மணிப்பூண்-மூன்றும் வேற்றுமை யுருபும் பயனுமுடன்றொக்கதொகை. ஆம்-அசை. (சு௭)

முற்று முணர்ந்தவ ரில்லை முழுவதூஉங்
கற்றன மென்று களியற்க—சிற்றுளியால்
கல்லுந் தகருந் தகரா கனங்குழாய்
கொல்லுலைக் கூடத்தி னால்.

(ப-ரை.) கனங்குழாய்-கனத்த காதணியையுடையவளே, முற்றும்-எல்லாம், உணர்ந்தவர்-அறிந்தவர்கள், இல்லை-இல்லை, (ஆதலால்), முழுவதூஉம்-எல்லாவற்றையும், கற்றனம் என்று-யாம் கற்றுணர்ந்துவிட்டோமென்று, களியற்க-செருக்கடையா திருக்க, சிற்றுளியால்-சிறிய உளியினால், கல்லும்-பெரிய மலைகளும், தகரும் உடையும், கொல் உலை-கொல்லனுடைய உலையிலுள்ள, கூடத்தினால்-சம்மட்டியினால், தகரா-உடையாவாம்.

(பொ-ரை.) கனத்த காதணியையுடையவளே! எல்லாவற்றையும் அறிந்தவர்கள் ஒருவருமில்லை, ஆதலால் எல்லாவற்றையுங் கற்றுணர்ந்தோமென்று செருக்கடையாதிருக்க. சிற்றுளியினாலே மலைகளும் உடையும், கொல்லனுடைய சம்மட்டியினாலோ உடையாவாம்.

(க-ரை.) எல்லாவற்றையுங் கற்றுணர்ந்தோமென்று செருக்கடையற்க.

(இ-பு.) ஒருவன்-தோன்றா எழுவாய். களியற்க-பயனிலை. கனங்குழை-அன்மொழித்தொகை. களியற்க-எதிர்மறை வியங்கோள் வினைமுற்று. கல்-பால்பகாவஃறிணைப்பெயர். கொல் என்பது-கொல்லனென்னும் உயர்திணைப்பொருளை யுணர்த்தி நின்றதோர் அஃறிணைச்சொல். (சு௮)

தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென் றகமகிழ்க—தம்மினும்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றவெல்லாம்
எற்றே யிவர்க்குநா மென்று.

(ப-ரை.) தம்மின்-தம்மைப்பார்க்கிலும், மெலியாரை-வறியவரை, நோக்கி-பார்த்து, தமது உடைமை- தமதுபொருள், பெரிது என்று-பெரியதென்று, அகம்மகிழ்க-மனம் மகிழக்கடவர், தம்மினும்-தம்மைப்பார்க்கினும், கற்றாரை-கற்றவர்களை, நோக்கி-பார்த்து, நாம் கற்ற-நாங்கற்றவை, எல்லாம்-முழுவதும். இவர்க்கு-இவருடைய கல்விக்கு, எற்று என்று-எவ்வளவிற்றென்று, கருத்து-மனம், அழிக-வருந்துக.

(பொ-ரை.) ஒருவன் தம்மினும் வறியவரைப்பார்த்துத் தமது பொருள் பெரிதென்று மனமகிழ்தலும், தம்மினுங் கற்றவரைப்பார்த்து நாங் கற்றவைகளெல்லாம் இவருடைய கல்விக்கு எவ்வளவிற்றென்று மனம் வருந்துதலும் செய்யக்கடவன்.

(க-ரை.) தம்மினும் வறியவரைப்பார்த்துத் தாம்பொருளுடையோமென்று மனம் மகிழ்தலும், தம்மினுங் கற்றவரைப்பார்த்துத் தமது கல்வி மிகச்சிறிது என்று மனம் வருந்துதலும் வேண்டும்.

(இ-பு.) ஒருவன்-தோன்றா எழுவாய். மகிழ்க, அழிக-பயனிலை. எற்று-வினாவிடைச்சொல் அடியாகவந்த அஃறிணையொன்றன்பாற் படர்க்கை வினைமுற்று. அம்மா-வியப்பிடைச்சொல். தம்மின்மெலியார்-உயர்வுகருதிய எல்லைப்பொருளில் வந்த ஐந்தாம்வேற்றுமை விரி. மகிழ்க, அழிக-வியங்கோள் வினைமுற்றுக்கள். (௬௯)

கல்வி யுடைமை பொருளுடைமை யென்றிரண்டு
செல்வமுஞ் செல்வ மெனப்படும்—இல்லார்
குறையிரந்து தம்முன்னர் நிற்பபோற் றாமுந்
தலைவணங்கித் தாழப் பெறின்.

(ப-ரை.) இல்லார்-வறியவர், குறையிரந்து-தங்கள் குறைகளைச்சொல்லி யாசித்து, தம்முன்னர்-தம்முன்பே, நிற்பபோல்-(பணிந்து) நிற்பதுபோல, தாமும்-தாமும், தலைவணங்கி-தலைவணங்கி, தாழப்பெறின்-பணிவுடையராயொழுகின், கல்வி உடை

மை-கல்விப்பொருள், பொருளுடைமை-செல்வப்பொருள், என்று இரண்டு-என்றுசொல்லப்பட்ட இரண்டு; செல்வமும்-செல்வங்களும், செல்வமெனப்படும்-செல்வமென்று (உயர்ந்தோரால்) எடுத்துச் சொல்லப்படும்.

(பொ-ரை.) வறியவர்கள் செல்வர்களிடத்தில் தங்கள் குறைகளைச் சொல்லி நிற்பதுபோலக் கல்விப்பொருள் செல்வப்பொருள்களை யுடையவர்களும் உயர்ந்தோர்களிடத்திற் பணிவுடையவர்களா யொழுகுவாராயின் அப்பொழுது அவர்களுடைய கல்வியுஞ் செல்வமும் செல்வமென்று உயர்ந்தோரால் எடுத்துச் சொல்லப்படும்.

(க-ரை.) உயர்ந்தோரிடத்தில் வணக்கமில்லாவிட்டால் கல்வியுஞ் செல்வமும் பெருமையடையா.

(இ-பு.) செல்வம்-எழுவாய். எனப்படும்-பயனிலை. நிற்பது என்னுந் தொழிற்பெயர்-நிற்ப என ஈறு தொக்குநின்றது. கல்வியுடைமை செல்வமுடைமை-இருபெயரொட்டுப் பண்புத்தொகைகள். இரந்து-இறந்தகால வினையெச்சம். நிற்பது என்னுந் தொழிற்பெயர் நிற்ப எனக் குறைந்து நின்றது. (௭௦)

ஆக்கம் பெரியார் சிறியா ரிடைப்பட்ட
மீச்செலவு காணி னனிதாழ்ப—தூக்கின்
மெலியது மேன்மே லெழச்செல்லச் செல்ல
வலிதன்றே தாழுந் துலைக்கு.

(ப-ரை.) ஆக்கம் பெரியார்-செல்வத்தாற் பெரியவர்கள், ஆக்கம் சிறியாரிடை-செல்வத்தாற் சிறியவரிடத்து, பட்ட-உண்டாகிய, மீச்செலவு-மிகுந்த செலவை, காணின்-கண்டால், நனி தாழ்ப-மிகவுந் தாழ்வார்கள், தூக்கின்-ஆராயின், துலைக்கு-துலாக்கோலில், மெலியது-நொய்யபொருளுள்ள தட்டு, மேன்மேல்-மேலும் மேலும், எழச்செல்லச்செல்ல-உயரச் செல்லுந்தோறும், வலிது அன்றே-திண்ணிய பொருளுள்ள தட்டல்லவா, தாழும்-தாழாநிற்கும்,

(பொ-ரை.) செல்வத்தாற் பெரியவர்கள் செல்வத்தாற் சிறியவர்களிடத்துண்டாகிய மிகுந்தசெலவைக்கண்டால் மிகவுந் தாழ்வார்கள். ஆராயின் தராசுகோலில் நொய்யபொருளுள்ள தட்டு உயரவுயர, திண்ணியபொருளுள்ள தட்டல்லவா தாழாநிற்கும்.

(க-ரை.) பெரிய செல்வமுடையவர்கள் சிறிய செல்வமுடையவர்களுடைய மிகுந்த செலவைக் காணுந்தோறும் தாம் தாழ்வார்கள்.

(இ-பு.) பெரியார்-எழுவாய். தாழ்ப-பயனிலை. ஆக்கம் என்பது பின்னுங் கூட்டப்பட்டது. செல்லச் செல்ல-வினையெச்சஅடுக்கு. மேன்மேல்-இடைச்சொல் அடுக்கு. ஆக்கம்-தொழிலாகுபெயர். நனிதாழ்ப-உரிச்சொற்றொடர். (எக)

தன்னை வியப்பிப்பான் றற்புகழ்தல் தீச்சுடர்
நன்னீர் சொரிந்து வளர்த்தற்றால்—தன்னை
வியவாமை யன்றே வியப்பாவ தின்பம்
நயவாமை யன்றே நலம்.

(ப-ரை.) தன்னை-தன்னை, வியப்பிப்பான்-(பிறர்) நன்கு மதிக்கும்பொருட்டு, தற்புகழ்தல்-தன்னைத்தானே புகழ்ந்துகொள்ளுதல், நல்நீர்-நல்லநீரை, சொரிந்து- (விளக்குத் தகழியிலே) பெய்து, தீச்சுடர்-தீபத்தை, வளர்த்தற்று-பிரகாசிப்பித்தலோடொக்கும், இன்பம் இன்பத்தை, நயவாமை அன்றே-விரும்பாமலிருத்தல் அல்லவா, நலம்-இன்பமாகும், வியப்பாவது-நன்கு மதிப்பாவது, தன்னை வியவாமை அன்றே-தன்னைத்தான் நன்கு மதியாமல் இருத்தல் அல்லவா.

(பொ-ரை.) ஒருவன் இன்பத்தை விரும்பாமல் இருத்தலே இன்பமாகும். தன்னைத்தான் நன்குமதியாமல் இருத்தலே நன்குமதிப்பாகும். ஆதலால் பிறர் தன்னை நன்குமதிக்கும்பொருட்டுத் தன்னைத்தானே புகழ்ந்துபேசுதல் நீரை விளக்குத்தகழியிற் பெய்து தீபத்தைப் பிரகாசிப்பித்தலோடொக்கும்.

(க-ரை.) தற்புகழ்ச்சியால் பெருமை நீங்கிவிடும்.

(இ-பு.) புகழ்தல், வியப்பு-எழுவாய். வளர்த்தற்று, வியவாமை-பயனிலை. வளர்த்தாலற்று என்பது வளர்த்தற்று எனக் குறைந்துநின்றது. வியப்பிப்பான்.வினையெச்சம். வியவாமை, நயவாமை-எதிர்மறைத் தொழிற்பெயர்கள். (எஉ)

பிறராற் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமே நோற்பதொன் றுண்டு—பிறர்பிறர்
சீரெல்லாந் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார்யார்க்குந் தாழ்ச்சி சொலல்.

(ப-ரை.) பிறரால்-அயலாரால், பெருஞ்சுட்டு-நன்குமதிக்கப்படுதலை, வேண்டுவான்-விரும்புவான், யாண்டும்-எப்பொழுதும், மறவாமே-மறவாமல், நோற்பது-செய்யத்தக்கது, ஒன்று-ஒருசெயல், உண்டு-உளது, (அஃதாவது) பிறர்பிறர்-மற்றையோருடைய, சீரெல்லாம்-குணங்களையெல்லாம், தூற்றி-பலருமறிய எடுத்துச்சொல்லி, சிறுமை-குற்றங்களை, புறங்காத்து-புறத்தில் விடாமற்காத்து, யார்யார்க்கும்-எவ்வெவர்க்கும், தாழ்ச்சிசொலல்-பணிவான சொற்களைச் சொல்லுதலேயாம்.

(பொ-ரை.) அயலாரால் நன்குமதிக்கப்படுதலை விரும்புபவன் எப்பொழுதும் மறவாமற் செய்யவேண்டிய செயல் ஒன்றுளது. அஃதாவது அயலாருடைய குணங்களையெடுத்துப் பலருமறியச்சொல்லிக் குற்றங்களை மறைத்து யாவர்க்கும் பணிவான வசனங்களைச் சொல்லுதலேயாம்.

(க-ரை.) பிறர்குற்றங்களை வெளியிடாமல் குணத்தையெடுத்துப்பேசுதலால் தனது பெருமை விளங்கும்.

(இ-பு.) ஒன்று-எழுவாய். உண்டு-பயனிலை. பிறர்-இடைச்சொல்லடியாகப் பிறந்த பெயர். மறவாமே-எதிர்மறை வினையெச்சம்; அது நோற்பது என்னுந் தொழிற்பெயரைக்கொண்டு முடிந்தது. புறர்பிறர்-அடுக்குத்தொடர். சீரெல்லாம்-ஒருமையிற் பன்மைவந்த வழுவமைதி. புறங்காத்து-எழாம்வேற்றுமைத் தொகை.

கற்பன ஊழற்றார் கல்விக் கழகத்தாங்
கொற்கமின் றூத்தைவா யங்காத்தல்—மற்றுத்தம்
வல்லுரு வஞ்சன்மி னென்பவே மாபறவை
புல்லுரு வஞ்சுவ போல்.

(ப-ரை.) கற்பன-கற்றற்கு ஏதுவாகிய, ஊழ் அற்றார்-நல்வினையில்லாதவர், கல்விக்கழகத்து-வித்துவான்களுடைய சபையில், ஒற்கம்-நாவடக்கம், இன்று-இன்றி, ஊத்தைவாய்-அசுத்தமுடைய வாயை, அங்காத்தல்-திறத்தல், (எத்தன்மைத்தெனின்) மாபறவை-மிருகங்களும் பட்சிகளும், புல் உரு-புல்லினாற் செய்யப்பட்ட உருவத்தை (க்கண்டு), அஞ்சுவபோல்-பயப்படுதல்போல, தம்வல்உரு-தமது பெரிய உருவத்தை (க்கண்டு), அஞ்சன்மின்-அஞ்சாதிருங்கள், என்ப-என்று சொல்லுதல்போலாம்.

(பொ-ரை.) நூல்களைக் கல்லாதவர் வித்துவான்களுடைய சபையிலே நாவடக்கமில்லாமல் வாயைத்திறத்தல் எத்தன்மைத்தெனின் மிருகங்களும் பட்சிகளும் புல்லினாற் செய்யப்பட்ட உருவத்தைக்கண்டு பயப்படுவதுபோல, தம்முடைய பெரிய உருவத்தைக்கண்டு பயப்படாதிருங்கள் என்று சொல்லுதல்போலாம்.

(க-ரை.) கல்வியறிவில்லாதவர் வித்துவான்களுடைய சபையிலே வாய்திறந்தால் அவமானமடைவார்கள்.

(இ-பு.) அங்காத்தல்-எழுவாய். ஒக்கும்-பயனிலை. ஊழ் அற்றார்-இரண்டாம்வேற்றுமைத்தொகை. ஊத்தைவாய்-இரண்டாம் வேற்றுமையுருபும் பயனுமுடன்றொக்கதொகை. வல்லுரு-பண்புத்தொகை. அஞ்சன்மின்-எதிர்மறை ஏவற்பன்மைவினைமுற்று. மாபறவை-உம்மைத்தொகை. புல்லுரு-மூன்றாம் வேற்றுமையுருபும் பயனுமுடன்றொக்கதொகை. ஆங்கு-மற்று. அசை. (௭௪)

கற்றன கல்லார் செவிமாட்டிக் கையுறாஉம்
குற்றந் தமதே பிறிதன்று—முற்றுணர்ந்தும்
தாமவர் தன்மை யுணராதார் தம்முணரா
ஏதிலரை நோவ தெவன்.

(ப-ரை.) கற்றன-(தாம்) கற்ற நூற்பொருள்களை, கல்லார்-மூடர்களுடைய, செவி-காதுகளில், மாட்டி-புகுத்தி, கையுறூஉம் (அவரால்) அவமதிக்கப்படும், குற்றம்-குற்றம், தமதே-தம்முடையதே, (அல்லாமல்) பிறிது அன்று-அவருடையதன்று, (ஆதலால்) தாம் முற்றும்-தாம் எல்லாவற்றையும், உணர்ந்தும்-அறிந்தும், அவர்தன்மை-அம் மூடருடைய தன்மையை, உணராதார்-அறியாதவர், தம் உணரா-தமது தன்மையை உணராத, எதிலரை-பிறரை, நோவது-வெறுத்தல், எவன்-யாது.

(பொ-ரை.) கற்றோர் தாமறிந்த நூற்பொருள்களை மூடர்களுக்குச் சொல்லி அவரால் அவமதிக்கப்படுங்குற்றம் அக்கற்றோருடையதன்றி அவருடையதன்று. அக்கற்றோர் எல்லாவற்றையு முணர்ந்தும் அம்மூடருடைய தன்மை அறியாதிருக்க, தம்மை யறியாத பிறரை வெறுத்தல் என்னை?

(க-ரை.) கற்றவர்கள் தாங்கற்ற நூற்பொருளை மூடர்களுக்குச் சொன்னால் அவமதிப்படைவார்கள்.

(இ-பு.) நோவது-எழுவாய். எவன்-பயனிலை. கல்லார் செவி-ஆறாம்வேற்றுமைத்தொகை. செவிமாட்டி-ஏழாம்வேற்றுமைத்தொகை. மாட்டி-இறந்தகால வினையெச்சம். அது கையுறூஉம் என்னும் பெயரெச்சத்தைக்கொண்டு முடிந்தது. உணராதார்-வினையாலணையும்பெயர். நோவது-தொழிற்பெயர். எவன்-குறிப்புவினைமுற்று. (௭௫)

கண்ணிற் சொலிச்செவியி னோக்கு மிறைமாட்சி
புண்ணியத்தின் பாலதே யாயினும்—தண்ணளியால்
மன்பதை யோம்பாதார்க் கென்னும் வயப்படைமற்
றென்பயக்கு மாணல் லவர்க்கு.

(ப-ரை.) வயப்படை-வெற்றியைத்தரும் ஆயுதம், ஆண் அல்லவர்க்கு-ஆண்மையில்லாதவருக்கு, என் பயக்கும்-யாது பிரயோசனத்தைக் கொடுக்கும், (அதுபோல) * கண்ணிற்சொலி-

* தமது பரிசனங்களை யரியதொழிலிற் செலுத்தப் பார்வையாற் குறிப்பித்தலால் கண்ணிற்சொலி யென்றார்.

கண்களாற்சொல்லி, * செவியின்-செவியால், நோக்கும்-பார்க்கும், இறைமாட்சி-அரசவாழ்க்கை, புண்ணியத்தின்-நல்வினையின், பாலது-பகுதியையுடையது, ஆயினும்-ஆனாலும், தண்ணளியால்-கிருபையினால், மன்பதை-மனுடர்களை, ஓம்பாதார்க்கு-காத்துக்கொள்ளாத அரசருக்கு, என் ஆம்-யாதுபயன்படும்.

(பொ-ரை.) வெற்றியையுடைய ஆயுதம் ஆண்மையில்லாதவருக்குப் பிரயோசனப்படாததுபோலக் கண்களாற்சொல்லிச் செவியினாற் பார்க்கும் அரசவாழ்க்கை புண்ணியத்தினால் வந்தாலும் குடிகளைக் காத்துக்கொள்ளாவிடிற் பிரயோசனப்படாது.

(க-ரை.) அரசவாழ்வு புண்ணியத்தால் வந்தாலும் குடிகளைப் பாதுகாவாவிடிற் பயனில்லை.

(இ-பு.) இறைமாட்சி-எழுவாய். என்னும்-பயனிலை. கண்ணிற்சொலி-கருவிப்பொருளில் வந்த ஐந்தாம் வேற்றுமை விரி. சொலி-இறந்தகால வினையெச்சம். அது நோக்கும் என்னும் பெயரெச்சத்தைக்கொண்டு முடிந்தது. செவியினோக்கும்-கருவிப்பொருளில் வந்த ஐந்தாம்வேற்றுமைவிரி. ஓம்பாதார்-எதிர்மறைவினையாலணையும் பெயர். ஏ-பிரிநிலை உம்மைசிறப்பு. (எக)

குடிகொன் றிறைகொள்ளுங் கோமகற்குக் கற்றா
மடிகொன்று பால்கொளலு மாண்பே—குடியோம்பிக்
கொள்ளுமா கொள்வோர்க்குக் காண்டுமே மாநிதியம்
வெள்ளத்தின் மேலும் பல.

(ப-ரை.) குடிகொன்று-குடிகளைவருத்தி, இறைகொள்ளும்-வரிவாங்கும், கோமகற்கு-அரசனுக்கு, கன்று ஆ-கன்றையுடைய பசுவினது, மடிகொன்று-முலையையறுத்து, பால்கொளலும்-பாலைக் கொள்ளுதலும், மாண்பு-தக்கது, குடிஓம்பி-குடிகளைப் பாதுகாத்து, கொள்ளுமா-கொள்ளவேண்டிய பங்கை, கொள்வோர்க்கு-வாங்கும் அரசர்களுக்கு, மாநிதியம்-பெரியசெல்வம்,

---

* தமது நாட்டில் நடப்பனவற்றை ஒற்றுவராற் கேட்டறிதலால் செவியினோக்கு மென்றார்.

வெள்ளத்தின் மேலும்-வெள்ளமென்னுந் தொகைக்கு மேலும், பல-பலவாக, காண்டும்-காணுதும்.

(பொ-ரை.) குடிகளை வருத்தித் திறைவாங்கும் அரசனுக்குப் பசுவினுடைய முலையையறுத்துப் பாலைக்கொள்ளுதலுந் தக்கது. குடிகளைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டிய திறையை வாங்கும் அரசர்களுக்குப் பெரியசெல்வம் வெள்ளமென்னுந் தொகைக்குமேலும் பெருகக்காணுதும்.

(க-ரை.) குடிகளை வருத்தித் திறைவாங்கும் அரசியல் குன்றிவிடும். குடிகளை வருத்தாது திறைவாங்கும் அரசியல் பெருகும்.

(இ-பு.) கொளல், நாம்-எழுவாய். மாண்பு, காண்டும்-பய னிலை. காண்டும்-தன்மைப்பன்மை வினைமுற்று. குடிகொன்று, மடிகொன்று, இறைகொள்ளும், குடியோம்பி-இரண்டாம்வேற்றுமைத் தொகைகள். மாநிதியம்-உரிச்சொற்றொடர். (எஎ)

முடிப்ப முடித்துப்பின் பூசுவ பூசி
உடுப்ப வுடுத்துண்ப வுண்டு—இடித்திடித்துக்
கட்டுரை கூறிற் செவிக்கொளா கண்விழியா
நெட்டுயிர்ப்போ டுற்ற பிணம்.

(ப-ரை.) முடிப்ப முடித்து-முடிக்கவேண்டியவைகளை முடித்து, பின்-பின்பு, பூசுவபூசி-பூசவேண்டிய வாசனைத்திரவியங்களைப் பூசி, உடுப்பஉடுத்து-உடுக்கும் உடைகளையுடுத்து, உண்ப உண்டு-உண்ணும் உணவுகளையுண்டு, இடித்து இடித்து-(மந்திரிகள் முதலாயினோர்) நெருங்கிநெருங்கி, கட்டுரை கூறில்-உறுதிமொழிகளைச் சொன்னால், செவிக்கொளா-காதினுற் கொள்ளாது, கண் விழியா-கண்விழியாத (அரசர்கள்), நெட்டுயிர்ப்போடுற்ற-பெருமூச்சோடுகூடிய, பிணம்-நடைப்பிணங்களாவார்கள்.

(பொ ரை) முடிக்கவேண்டியவைகளை முடித்துப் பூசவேண்டிய வாசனைத்திரவியங்களைப் பூசி உடுக்கவேண்டிய உடைகளையுடுத்து உணணும் உணவுகளை யுண்டு மந்திரிகள் முதலாயினோர் நெருங்கி நெருங்கி உறுதிமொழிகளைச் சொன்னாற் காதினாற்

கேளாமலும் கண்களை விழியாமலும் இருக்கும் அரசர்கள் நடைப்பிணங்களாவார்கள்,

(க-ரை.) தமக்கு வேண்டியவற்றை நோக்கிக் குடிகளுக்கு வேண்டியவற்றை நோக்காத அரசர்கள் பிணங்களுக்கொப்பாவர்.

(இ-பு.) அரசர்கள்-தோன்றா எழுவாய். பிணம்-பயனிலை. முடிப்ப, பூசுவ, உடுப்ப, உண்ப-வினையாலணையும் பெயர்கள். கொளா-வினைமுற்று வினையெச்சமாயிற்று, உண்ணு-செய்யா என்னும் வாய்பாட்டு இறந்தகால வினையெச்சம்.

ஒற்றிற் றெரியா சிறைப்புறந் தோர்துமெனப்
பொற்றோ டுணையாத் தெரிதந்தும்—குற்றம்
அறிவரிதென் றஞ்சுவதே செங்கோன்மை சென்று
முறையிடினுங் கேளாமை யன்று.

(ப-ரை.) செங்கோன்மை-அரசநீதியாவது, ஒற்றில்-ஒற்றுவரால், தெரியா-(உண்மை) அறியப்படா, (ஆதலால்) சிறைப்புறந்து-மறைவிடத்தில் (இருந்து), ஓர்துமென-அறிவோமென்று, பொற்றோள் துணையா-(தமது) அழகிய புயங்களே துணையாக, தெரிதந்தும்-(போய்) ஆராய்ந்தறிந்தும், குற்றம்-குற்றங்களை, அறிவு அரிது என்று-(உள்ளவாறு) அறிந்துகொள்ளுதல் கூடாதென்று, அஞ்சுவதே-பயப்படுதலேயாம், சென்று-போய், முறை இடினும்-(பிரசைகள் தங்கள் குறைகளை) சொன்னாலும், கேளாமை-செவிகொடாதிருத்தல், அன்று-(அரசநீதி) அல்ல.

(பொ-ரை.) அரசநீதியாவது ஒற்றரையனுப்பி உண்மையறிதலரிதென்றுட்கொண்டு தாமேபோய் அறிந்தும் குற்றங்களை அறிதல் அரிதென்று அஞ்சுவதேயன்றி, குடிகள்சென்று பலமுறையுந் தங்கள் குறைகளைச் சொன்னாலுஞ் செவிகொடாதிருத்தல் அன்று.

(க-ரை.) குடிகள் சென்று முறையிடுதற்குமுன் குற்றங்களையுங் குணங்களையும் அறிந்து நடத்தலே அரசநீதி.

(இ-பு.) செங்கோன்மை-எழுவாய். அந்தவைது-பயனிலை. ஓர்தும்-தன்மைப்பன்மை எதிர்காலவினைமுற்று. ஒற்று-முதனிலைத்தொழிற்பெயர்; அது ஆகுபெயராய்த் தூதுவர்மேனின்றது. குற்றம்-சாதியொருமை. * செங்கோல்-உவமையாகுபெயர். (எக)

எதிலார் யாதும் புகல விறைமகன்
கோதொரீஇக் கொள்கை முதுக்குறைவு—நேர்நின்று
காக்கை வெளிதென்பா ரென்சொலார் தாய்க்கொலை
சால்புடைத் தென்பாரு முண்டு.

(ப-ரை.) நேர்நின்று-எதிரேநின்று, காக்கை-காகம், வெளிது என்பார்-வெள்ளையென்று சொல்லுபவர், என்சொலார்-வேறுயாதுதான் சொல்லமாட்டார், தாய்க்கொலை-தாயைக்கொலைசெய்தாலும், சால்புடைத்து-தகுதியுடையது, என்பாரும்-என்றுசொல்வாரும், உண்டு-(உலகத்தில்) உளர், (ஆதலினால்) எதிலார்-அயலார், யாதும்புகல-எவற்றையுஞ் சொல்ல, இறைமகன்-அரசன், கோதுஒரீஇ-(அவைகளிலுள்ள) குற்றங்களை நீக்கி, கொள்கை-(குணத்தை) கொள்ளுதல், முதுக்குறைவு-பேரறிவாம்.

(பொ-ரை-) எதிரில் நின்று காக்கை வெண்மையென்று சொல்பவர்கள் வேறு யாதுதான் சொல்லமாட்டார்கள்? தாய்க்கொலை செய்யத்தக்கதென்று சொல்வாரு முலகத்திலுளர்; ஆதலால் குடிகள் எவற்றைச்சொல்லினும் அவைகளிலுள்ள குற்றத்தை நீக்கிக் குணத்தைக்கொள்ளுதலே அரசர்களுக்கு அறிவாம்.

(க-ரை.) குடிகள் எவற்றைச்சொல்லினும் குணத்தையுங் குற்றத்தையும் அரசன் ஆராய்ந்து அறிதல்வேண்டும்.

(இ-பு.) கொள்கை - எழுவாய். முதுக்குறைவு-பயனிலை. வெளிது-பண்படியாகவந்த அஃறிணை ஒன்றன்பாற் படர்க்கைக் குறிப்புவினைமுற்று. இறைமகன்-பண்புத்தொகை. கொள்கை-

* செவ்விய கோல்போறலிற் செங்கோலெனப்பட்டது.

தொழிற்பெயர். தாய்க்கொலை-இரண்டாம்வேற்றுமை உருபும் பயனுமுடன் றொக்க தொகை. (அ0)

கண்கூடாப் பட்டது கேடெனினுங் கீழ்மக்கட்
குண்டோ வுணர்ச்சிமற் றில்லாகும்—மண்டெரி
தான்வாய் மடுப்பினு மாசுணங் கண்டுயில்வ
பேரா பெருமூச் செறிந்து.

(ப-ரை.) மண்டெரி-நெருங்கி யெரிகின்ற அக்கினியானது, தான்வாய்மடுப்பினும்-தன்னைச் சுற்றிக்கொண்டாலும், மாசுணம்-பெரும்பாம்புகள், பேரா- (அவ்விடத்தினின்றும்) நீங்கா, பெருமூச்செறிந்து-பெருமூச்சுவிட்டு, கண்துயில்வ-நித்திரைசெய்வன, (அதுபோல) கேடு-கேடு, கண்கூடா-பிரத்தியக்ஷமாக, பட்டதெனினும்-உண்டானாலும், கீழ்மக்கட்கு-அறிவில்லாத கீழ்மக்களுக்கு, உணர்ச்சி-அறிவு, உண்டோ-உண்டாகுமோ, இல்லாகும்-இல்லையாம்.

(பொ-ரை.) மலைப்பாம்புகள் அக்கினி தங்களைச் சுற்றிய காலத்தும் தாம் அவ்விடத்தைவிட்டு நீங்காது நித்திரைசெய்யும்; அதுபோல அறிவில்லாத கீழ்மக்கள் கேடுவருதலைக் கண்டாலும் அதினின்றும் நீங்கும் அறிவு அவர்களுக்கு உதியாது.

(க-ரை.) அறிவில்லாத அரசன் கேடுவந்தாலும் தீமைகளை விடமாட்டான்.

(இ-பு.) உணர்ச்சி-எழுவாய். இல்லாகும்-பயனிலை. கேடு-முதனிலைத் தொழிற்பெயர். எரி-இகரவிகுதி புணர்ந்துகெட்டது. பேரா-வினைமுற்று வினையெச்சமாயிற்று. மண்டெரி-வினைத்தொகை. மற்று-அசை. (அக)

வாங்குங் கவளத் தொருசிறிது வாய்தப்பின்
தூங்குங் களிறோ துயருறா—ஆங்கதுகொண்
டூரு மெறும்பிங் கொருகோடி யுய்யுமால்
ஆருங் கிளையோ டயின்று.

(ப-ரை.) வாங்கும்-(தாம்) வாங்குகின்ற, கவளத்து-கவளவுணவினின்று, ஒருசிறிது-ஒருசிறியபங்கு, வாய் தப்பில்-வாயினின்றுந் தவறினால், தூங்கும்-அசைந்து நடக்கும், களிறே-யானையோ, துயர்உறு-துன்பத்தைப் பொருந்தாவாம், அதுகொண்டு- (தவறிய) அவ்வுணவைக்கொண்டு, இங்கு-இவ்வுலகத்தில், ஊரும்-ஊர்ந்து செல்லுகின்ற, ஒருகோடி-ஒருகோடி, எறும்பு-எறும்புகள், ஆரும்-நிறைந்த, கிளையோடு-சுற்றத்தோடு, அயின்று-உண்டு, உய்யும்-பிழைக்கும்.

(பொ-ரை.) யானைகளுக்குக் கொடுக்குங் கவளவுணவினின்றும் சிறிது தவறிவிழுந்தால் அவ்யானைகள் துன்பமடையாவாம். அங்ஙனஞ் சிந்திய உணவைக்கொண்டு ஒருகோடி எறும்புகள் சுற்றத்தோடு உண்டு பிழைக்கும்.

(க-ரை.) தமது செல்வத்திற் சிறிது குடிகள் அனுபவித்தற்கமையினும் அதுகண்டு அரசர்கள் மனம் வருந்தார்கள்.

(இ-பு.) எறும்பு-எழுவாய். உய்யும்-பயனிலை. அயின்று-இறந்தகால வினையெச்சம். வாங்குங்கவளம்-பெயரெச்சத்தொடர். ஒருசிறிது-பண்புத்தொகை. வாய்தப்பின்-நீக்கப்பொருளில்வந்த ஐந்தாம்வேற்றுமைத்தொகை. ஒருகோடி-பண்புத்தொகை. ஆருங்கிளை-பெயரெச்சத்தொடர். ஆங்கு-அசை. (அஉ)

உறுதி பயப்ப கடைபோகா வேனும்
இறுவரை காறு முயல்ப—இறுமுயிர்க்கும்
ஆயுண் மருந்தொழுக்க றீதன்று லல்லனபோல்
ஆவனவு முண்டு சில.

(ப-ரை) இறும் உயிர்க்கும்-இறக்கப்போகும் உயிர்களுக்கும், ஆயுள்-வாழ்நாளை (த்தரும்), மருந்து-மருந்தினை, ஒழுக்கல்-வாயில்விடுதல், றீதன்று-தீமையைத் தருவதன்று, (அதுபோல) அல்லனபோல்-ஆகாதனபோலத் தொடக்கத்திற் காணப்பட்டு, ஆவனவும் - (இறுதியில்) ஆகுங் காரியங்களும், சிலவுள-சிலவுண்டு, (ஆதலால்) உறுதி-நன்மையை, பயப்ப-தருஞ்செயல்கள், கடை போகாவேனும்-முடிவு பெறுவிடினும், இறுவரைகாறும்-

சாங்காலமளவும், முயல்ப-(அறிவுடையோர்) விடாது முயல்வார்கள்.

(பொ-ரை.) இறக்கப்போகும் உயிர்களுடைய வாயிலும் மருந்தை விடுதல் நன்மையேயாம்; அதுபோலத் தொடக்கத்திலே ஆகாதனபோலத் தோன்றி இறுதியில் ஆகுங்காரியங்களுமுண்டு. ஆதலால் அறிவுடையோர் நற்செயல்களை முடிவுபெறாவிடினுஞ் சாங்காலமளவும் விடாது செய்வார்கள்.

(க-ரை-) முடிவுபெறாவிடினும் நன்மையான செயல்களைத் தாமுள்ளவளவும் முயலல்வேண்டும்.

(இ-பு) அறிவுடையோர்-தோன்றா எழுவாய். முயல்ப-பயனிலை. உறுதி-தொழில் ஆகுபெயர். பயப்ப-வினையாலணையும் பெயர். முயல்ப-பலர்பாற் படர்க்கை. மருந்தொழுக்கல்-இரண்டாம் வேற்றுமைத்தொகை. (௮௩)

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரா ரவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்.

(ப-ரை.) கருமமே-(தாம் செய்ய முயன்ற) காரியத்திலே, கண்ணாயினார்-நினைவுடையவர்கள், மெய்-தேகத்தினது, வருத்தம்-துன்பத்தை, பாரார்-நோக்கார், பசிநோக்கார்-பசியையொரு பொருளாக மதியார், கண் துஞ்சார்-நித்திரை செய்யார், எவ்வெவர் தீமையும்-எவர்செய்யுந் தீமைகளையும், மேற்கொள்ளார்-உட்கொள்ளார், செவ்வி-காலத்தின், அருமையும்-கூடாமையையும், பாரார்-நோக்கார், அவமதிப்பும்-(பிறர்தம்மையும்) நன்குமதியாமையையும், கொள்ளார்-மனத்துட்கொள்ளார்.

(பொ-ரை.) தாம் முயன்றகாரியத்திலே நினைவுடையவர் உடம்பின் வருத்தத்தையும் பசியையுங் காலத்தின் அருமையையும் நோக்கார் நித்திரைசெய்யார். எவர்செய்யுந் தீமைகளையும் பிறர் தம்மை நன்குமதியாமையையும் மனத்துட் கொள்ளார்,

(க-ரை.) ஒன்றைச் செய்ய முயன்றவர்கள் அது முடிக்குமளவும் வருந் தீமைகளை உட்கொள்ளார்கள்.

(இ-பு.) கண்ணுயினார்-எழுவாய். பாரார், நோக்கார், கண்டுஞ்சார், கொள்ளார், பாரார், கொள்ளார்-பயனிலைகள். எவர் எவர்-எவ்வெவரென மரீஇற்று. பாரார்-எதிர்மறைத் தெரிநிலை வினைமுற்று. (அச)

சிறிய பகையெனினு மோம்புதற் றேற்றார்
பெரிதும் பிழைபா டுடையர்—நிறைகயத்
தாழ்நீர் மடுவிற் றலைகுதிப்பினும்
யானை நிழல்காண் டரிது.

(ப-ரை.) நிறை-நிறைந்த, ஆழ்கயத்து-மிகவும் ஆழமாகிய நீர்-நீரையுடைய, மடுவில்-தடாகத்தில்; தலை குதிப்பினும்-தலை குதித்தாலும், யானை-யானையினுடைய, நிழல்-நிழலை, காண்பு காணுதல், அரிது-இல்லையாம், (ஆதலின்) பகைசிறிய எனினும் பகைவர் தம்மைநோக்கச் சிறியவராயினும், ஓம்புதல்-காத்துக் கொள்ளுதலை, தேற்றார்-அறியாதவர்; பெரிதும்-மிகவும், பிழைபாடு-பிழைபடுதலை, உடையர்-உடையராவர்.

(பொ-ரை.) மிக ஆழ்ந்தநீரையுடைய தடாகத்திலே தலை குதித்தாலும் யானையினுடைய நிழலைக்காணுதல் அரிதாகும், ஆதலால் தம்மைநோக்கப் பகைவர் (துணைவலி முதலியவற்றால்) சிறியவராயினும் காத்துக்கொள்ளாத அரசர்கள் பெரிதும் பிழைபடுதலை யுடையராவர்கள்.

(க-ரை.) தம்மைநோக்கப் பகைவர் துணைவலி முதலியவற்றாற் சிறியவராயினும் அவரினின்றுந் தம்மைக் காத்துக்கொள்ளாத அரசர்கள் தம்பெருமையை யிழந்துவிடுவார்கள்.

(இ-பு.) தேற்றார்-எழுவாய். உடையார்-பயனிலை. பாடு-முதனிலைத் தொழிற்பெயர். ஓம்புதல் தேற்றார்-இரண்டாம்வேற்றுமைத்தொகை. தேற்றார்-வினையாலணையும்பெயர். நிறைகயம்-வினைத்தொகை. அரிது-குறிப்புவினைமுற்று. (அ௫)

புறநட் டகம்வேர்ப்பார் நச்சுப் பகைமை
வெளியிட்டு வேறுதல் வேண்டும்—கழிபெருங்
கண்ணோட்டஞ் செய்யேல் கருவியிட் டாற்றுவார்
புண்வைத்து மூடார் பொதிந்து.

(ப-ரை.) கருவி இட்டு-சத்திரஞ்செய்து, ஆற்றுவார்-ஆற்றுவாரே (யன்றி), புண்-புண்ணை, பொதிந்துவைத்து-மறைத்துவைத்து, மூடார்-மூடமாட்டார், (ஆதலினால்) புறம்நட்டு-புறத்திலே சிநேகங்கொண்டு, அகம் வேர்ப்பார்-மனத்திலே பகைப்பவரது, நச்சுப் பகைமை-நஞ்சைப்போலும் பகையை, வெளியிட்டு-பலருமறியச்சொல்லி, வேறுதல் வேண்டும் (அவருடன் கொண்ட சிநேகத்தை) நீக்கிவிடல்வேண்டும், கழிபெரும்-மிகுந்த, கண்ணோட்டம்-தாட்சிணியம், செய்யேல்-செய்யாதே.

(பொ-ரை.) புண்ணைச் சத்திரமிட்டு ஆற்றுவாரே (யன்றி) மறைத்துவைக்கமாட்டார்; ஆதலினால் புறத்திலே சிநேகர்போல நடித்துக்காட்டி அகத்திலே பகைப்பவருடைய பகையை வெளிப்படுத்தி அவருடைய நட்பையும் விட்டுவிடல் வேண்டும். இதில் மிகுந்த தாட்சிணியம் செய்யா தொழிக.

(க-ரை.) உட்பகையுடையவரை அஞ்சி அவருடைய நட்பை விட்டுவிடல் வேண்டும்.

(இ-பு.) நீ-தோன்றா எழுவாய். செய்யேல்-பயனிலை. நச்சுப்பகைமை-உவமைத்தொகை. செய்யேல்-முன்னிலை யேவல் எதிர்மறைவினைமுற்று. நஞ்சு-நச்செனவலித்தது. (அரு)

மனத்த கறுப்பெனி னல்ல செயினும்
அனைத்தெவையுந் தீயவே யாகும்—எனைத்துணையும்
தீயவே செய்யினு நல்லவாக் காண்பவே
மாசின் மனத்தி னவர்.

(ப-ரை.) கறுப்பு-(ஒருவரிடத்துக்) கோபம், மனத்த எனின்-தம்மனத்துளதாயின், நல்லசெயினும்-(அவர்தமக்கு) நன்மை

யானவற்றைச்செய்தாலும், அனைத்தையும்-அவையெல்லாம். தீயவேயாகும்-தீய்மையுடையனவேயாம், மாசு இல்-குற்றம் நீங்கிய, மனத்தினவர்-மனத்தையுடைய பெரியோர்கள், எத்துணையும்-எவ்வளவும், தீயவே-தீயவற்றையே, செய்யினும்- (தமக்குப் பிறர்) செய்தாலும், நல்லவா-நல்லனவாக, காண்ப-நினைப்பார்கள்.

(பொ-ரை.) ஒருவர்மேற் கோபமுளதாயின் அவர்செய்யும் நன்மைகளுந் தீமைகளாகவே காணப்படும். பெரியோர்கள் எவ்வளவு தீமைகளைப் பிறர் செய்தாலும் அவையெல்லாம் நன்மையென்றே கொள்வார்கள்.

(க-ரை.) ஒருவரிடத்துக் கோபமுளதாயின் அவர்செய்யும் நன்மைகளுந் தீமைகளாகவே தோற்றும்.

(இ-பு.) எவையும் மனத்தினவர்-எழுவாய். ஆகும், காண்ப-பயனிலை. * கறுப்பு-கோபம். நல்லசெயினும்-இரண்டாம்வேற்றுமைத்தொகை, நல்ல, தீய-பண்படியாகப்பிறந்த பெயரெச்சம். காண்ப-உயர்திணைப் பலர்பாற் படர்க்கை எதிர்காலவினைமுற்று.

இனியவ ரென்சொலினு மின்சொல்லே யின்னார்
கனியு மொழியுங் கடுவே—அனல்கொளுந்தும்
வெங்காரம் வெய்தெனினு நோய்தீர்க்கு மெய்பொடிப்பச்
சிங்கி குளிர்ந்துங் கொலும்.

(ப-ரை.) அனல் கொளுத்தும்-தீயைப்போற் சுடும், வெங்காரம்-வெய்யகாரமானது, வெய்தெனினும்-வெம்மையைத் தருவதாயினும், நோய்தீர்க்கும்-வியாதியை நீக்கும், சிங்கி-நஞ்சு, மெய்பொடிப்ப-உடல்புயகிக்க, குளிர்ந்தும்-குளிர்ச்சியைக்கொடுத்தும், கொல்லும்-கொல்லாநிற்கும், (அதுபோல) இனியவர்-(தம்மேல்) அன்புடையார், என்சொலினும்-யாதுசொன்னாலும், இன்சொல்லே-இனியசொல்லேயாம், இன்னார்-அன்பில்லாதவர்

* கறுப்பும் சிவப்பும் வெகுளிப்பொருளென்றார் தொல்காப்பியனார்.

(சொல்லும்), கனிமொழியும்-இனிய சொற்களும், கடுவே-நஞ்சே யாகும்,

(பொ-ரை.) வெய்யகாரமானது முன் வெப்பத்தைத் தந்தாலும் பின் வியாதியை நீக்கும். நஞ்சு முன் குளிர்ந்தும் பின் கொல்லும். அதுபோல, தம்மேல் அன்புடையவர் யாதுசொல்லினும் இனியனவேயாம். அன்பிலார் இனியனவற்றைச் சொல்லினும் நஞ்சேயாம்.

(க-ரை.) சொல்லளவை நோக்காது பயன் நோக்கவேண்டும்.

(இ-பு.) அது-தோன்றா எழுவாய். மொழி-எழுவாய். இன்சொல்லே, கடுவே-பயனிலை. இன்னார்-பண்படியாகப்பிறந்த எதிர்மறைக் குறிப்புவினையாலணையும்பெயர். காரம்-தொழிற்பெயர். குளிர்ந்து-இறந்தகால வினையெச்சம், அதுகொல்லும் என்னும் வினைமுற்றைக்கொண்டு முடிந்தது. (அஅ)

நல்லா றொழுக்கின் றலைநின்றார் நல்கூர்ந்தும்
அல்லன செய்தற் கொருப்படார்—பல்பொறிய
செங்கட் புலியே றறப்பசித்துந் தின்னாவாம்
பைங்கட் புனத்தபைங் கூழ்.

(ப-ரை.) பல்பொறிய-பலபுள்ளிகளையும், செங்கண்-சிவந்த கண்ணையுமுடைய, புலிஏறு-ஆண்புலி, அற-மிக, பசித்தும்-பசித்தாலும், பைங்கண்-பசுமையாகிய, புனத்த-வயலிலுள்ள, பைங்கூழ்-பயிரை, தின்னாவாம்-தின்னமாட்டாது, (அதுபோல) நல் ஆறு-நன்னெறியாகிய, ஒழுக்கின் தலை-ஒழுக்கத்திலே, நின்றார்-நின்றவர்கள், நல்கூர்ந்தும்-வறுமைவந்தவிடத்தும், அல்லன-தீமைகளை, செய்தற்கு-செய்ய, ஒருப்படார்-உடன்படார்.

(பொ-ரை.) பலபுள்ளிகளையும் சிவந்த கண்களையுமுடைய புலி மிகப்பசித்தாலும் புல்லைத் தின்னமாட்டாது. அதுபோல நல் ஒழுக்கமுடையோர் வறுமை வந்தவிடத்துந் தீயனவற்றைச் செய்தற்கு உடன்படார்.

(க-ரை.) நல்லொழுக்கமுடையவர் வறுமைவந்தாலும் அவ்வொழுக்கத்தினின்றுந் தவறார்.

(இ-பு.) நின்றார்:எழுவாய். ஒருப்படார்-பயனிலை. பசித்தும், நல்கூர்ந்தும்-வினையெச்சங்கள். ஒருப்படார்-எதிர்மறைத் தெரிநிலைவினைமுற்று. நின்றார்-வினையாலணையும் பெயர். பல்பொறிய-பண்புத்தொகை. செங்கட்புலி-இரண்டாம்வேற்றுமையுருபும் பயனுமுடன்றொக்க தொகை. (௪௧)

பெற்ற சிறுகப் பெறாத பெரிதுள்ளும்
சிற்றுயிர்க் காக்க மரிதம்மா—முற்றும்
வரவர வாய்மடுத்து வல்விராய் மாய
வெரிதழன் மாயா திரா.

(ப-ரை.) பெற்ற-(தாம்) பெற்ற பொருள்கள், சிறுக-சிறிதாகக்கொண்டு, பெறாத-பெறாத பொருள்களை, பெரிது உள்ளும்-பெரிதாக நினைக்கும், சிற்றுயிர்க்கு-சில வாழ்நாட்களையுடைய வுயிர்களுக்கு, ஆக்கம்-செல்வத்தாலுளதாகிய இன்பம், அரிது-இல்லை, வல்விராய்முற்றும் கடினமாகிய விறகுகள்முழுதும், வரவர-(தன்னிடத்து) வரவர, வாய்மடுத்து-உட்கொண்டு, மாய-அவ்விறகு எரிந்தொழிய, எரிதழல்-நெருப்பு, மாயாது-(தனக்குப் பற்றுக்கோடில்லாமையால்) கெடாமல், இரா-இருக்க மாட்டாது.

(பொ-ரை.) நெருப்பானது தன்னிடத்திலே கடினமான விறகுகளை இடவிட உட்கொண்டு அவ்விறகு எரிந்தொழியத் தனக்குப் பற்றுக்கோடில்லாமையால் கெட்டொழிந்தேவிடும், அதுபோலப் பெற்ற பொருள்களைச் சிறிதெனக்கொண்டு பெறாதபொருளைப் பெரிதாக நினைக்கும் சில்வாழ்நாட்களையுடைய உயிர்களுக்குச் செல்வத்தாலாகிய இன்பம் இல்லாதொழியும்.

(க-ரை.) உள்ளது போதுமென்ற மனமே குறைவற்ற களஞ்சியம்.

(இ-பு.) ஆக்கம்-எழுவாய். அரிது-பயனிலை. கிடைத்விறகு போதுமென்றமையாத தீ மேலும்மேலும் எரிய முயலுதலால்

அவ்விறகு அழியத் தானுமழிதல்போல, கிடைத்த செல்வம் போ துமென்றமையாது, மேலு மேலும் விரும்புதலால் அச்செல்வ அழியத் தானுமழியும் என உவமை அணியாய் நின்றது. பெற் பெரு த-வினையாலணையும் பெயர்கள். வரவர-வினையெச்ச அடு குத்தொடர். எரிதழல்-வினைத்தொகை. அம்மா-வியப்பிடை சொல். (௩0

வள்ளன்மை யில்லாதான் செல்வத்தின் மற்றையோன்
நல்குரவே போலு நனிநல்ல—கொன்னே
அருளில லன்பிலன் கண்ணறைய னென்று
பலரா லிகழப் படான்.

(ப-ரை.) அருள் இலன்-அருளில்லாதவனென்றும், அன் இலன்-அன்பில்லாதவனென்றும், கண்ணறையனென்று-தா சிணியமில்லாதவனென்றும், பலரால்-பலராலும், கொன்னே சும்மா, இகழப்படான்-இகழ்ந்து பேசப்படான் ஆதலினால், வ ளன்மை-கொடுக்குந்தன்மை, இல்லாதான்-இல்லாதவனது, செ ல்வத்தின்-செல்வத்தைப் பார்க்கினும், மற்றையோன்-கொடுக் விருப்புடையவனது, நல்குரவே-வறுமையே, நனிநல்ல-மிகநல் லனவேயாம்.

(பொ-ரை.) உயிர்களிடத்து அன்பில்லாதவனென்றும், அ ருளில்லாதவனென்றும், தாட்சிணியமில்லாதவனென்றும் ப ராலும் சும்மா இகழப்படமாட்டான், ஆதலினால் கொடுக்க விரு பமுடையவனுடைய வறுமையே நன்று.

(க-ரை.) ஈகையில்லாதவனுடைய செல்வத்தைப் பார் கினும் மற்றையோருடைய வறுமை மிகநன்று.

(இ-பு.) நல்குரவு-எழுவாய். நல்ல-பயனிலை. கண்ணறை யன்-கண்ணோட்டம் அறுதலையுடையவன். செல்வத்தின்-எல்லை பொருளில்வந்த ஐந்தாம்வேற்றுமைவிரி. நனிநல்ல-உரிச்சொ றொடர். போலும்-அசை. கொன்னே-இடைச்சொல். இகழ படான்-எதிர்மறை வினைமுற்று. (௩௧

ஈகை யரிதெனினு மின்சொலினு நல்கூர்தல்
ஓகோ கொடிது கொடிதம்மா—நாகொன்று
தீவினைக் கம்மியனால் வாய்பூட் டிடப்படின்மற்
றுவா ளிவரென்செய் வார்.

(ப-ரை.) ஈகை-கொடுத்தல், அரிதெனினும்-இல்லையாயினும், இன்சொலினும்-இனியசொற்களைச் சொல்லுதலினும், நல்கூர்தல்-வறுமையடைதல்; ஓகோ-மிக, கொடிதுகொடிது-கொடுமையாம் கொடுமையாம், தீவினைக் கம்மியனால்-கொலைத்தொழிலையுடைய இயமனாகிய கொல்லனால், நாகொன்று-நாக்கைக் கொன்று, வாய்-வாயாகிய கதவு, பூட்டிடப்படில்-பூட்டப்பட்டால், இவர் என்செய்வார்-இவர் யாதுதான் செய்வார்.

(பொ-ரை.) ஒருவர் கொடாவிடினும் இனியசொற்களைச் சொல்லாதிருத்தல் கொடுமை கொடுமை; இயமனாகிய கொல்லனால் நாவைக்கொன்று வாயாகிய கதவு பூட்டப்பட்டால் இவர் அப்பொழுது யாதுதான் செய்வார்.

(க-ரை.) கொடாவிடினும் இனிய சொற்களையேனுஞ் சொல்லவேண்டும்.

(இ·பு.) நல்கூர்தல்-எழுவாய். கொடிது-பயனிலை. கம்மியன்-காரணப்பெயர்; கம்-கம்மியரதுதொழில். ஆஆ-இரக்கப்பொருளில்வந்த இடைச்சொல். அரிது என்னும் வினைமுற்று எனின் என்னும் இடைச்சொல்லோடு புணர்ந்து ஒருசொன்னீர்மைப்பட்டு வினையெச்சமாயிற்று. கொடியது கொடியது வினைமுற்றடுக்குத்தொடர். பூட்டிடப்படின்-எதிர்கால வினையெச்சம். அம்மா-வியப்பிடைச்சொல். (கஉ)

சிறுமுயற்சி செய்தாங் குறுபயன் கொள்ளப்
பெறுமெனிற் றாழ்வரோ தாழார்—அறநல்ல
எண்மைய வாயினுங் கைவிட் டரிதெனினும்
ஒண்மையிற் றீர்ந்தொழுக லார்.

(ப-ரை.) ஒண்மையின்-நல்லொழுக்கத்தினின்றும், தீர்ந்து-நீங்கி, ஒழுகலார்-நடவாதவர், எண்மையவாயினும்-(செய்தற்கு) எளியனவாயினும், அறனலல்-பாவச்செயல்களை, கைவிட்டு-செய்யாது, அரிதெனினும்-(செய்தற்கு) அரியனவாயினும், சிறுமுயற்சி செய்து-(தருமமாயுள்ள) சிறியமுயற்சிகளைச் செய்து, உறுபயன்-(மிக்க) பிரயோசனத்தை, கொள்ளப் பெறுமெனில்-பெறக்கூடுமாயின், தாழ்வரோ-தாமதிப்பாரோ, தாழார்-தாமதியார்.

(பொ-ரை.) நல்லொழுக்கமுடையவர் செய்தற்கு எளியனவாயினும் பாவச்செயல்களைச் செய்யாது செய்தற்கரியனவாயினும் தருமமாயுள்ள சிறுமுயற்சிகளைச் செய்து மிக்கபிரயோசனம் பெறலாமாயின் அம்முயற்சியைச் செய்தற்குத் தாமதியார்.

(க-ரை.) நல் ஒழுக்கமுடையவர் செய்தற்கரியனவாயினும் தருமமாயுள்ளவைகளைச் செய்து அவற்றுறுய பயனைப் பெறத் தாமதியார்.

(இ-பு.) ஒழுகலார்-எழுவாய். தாழார்-பயனிலை. உறுபயன்-உரிச்சொற்றொடர். தாழார்-தெரிநிலை வினைமுற்று. ஒண்மையிற்றீர்ந்து-ஐந்தாம்வேற்றுமை விரி. (௫௩)

செயக்கடவ வல்லனவுஞ் செய்துமென் றென்பார்
நயத்தகு நாகரிக மென்னும்—செயிர்த்துரைப்பின்
நெஞ்சநோ மென்று தலைதுமிப்பான் றண்ணளிபோல்
எஞ்சா தெடுத்துரைக்கற் பாற்று.

(ப-ரை.) செயக்கடவ அல்லனவும்-செய்யத்தகாத செயல்களையும், செய்தும்-செய்வோம், என்பார்-என்று சொல்லுபவர்களுடைய, நயத்தகும்-(யாவராலும்) விரும்பத்தகும், நாகரிகம்-கண்ணோட்டம், என்னும்-என்னே பயனும், செயிர்த்து-கோபித்து, உரைப்பின்-பேசினால், நெஞ்சு நோமென்று ஒருவனுக்கு மனம் வருந்துமென்றுசொல்லி, தலை-(அவனுடைய) தலையை, துமிப்பான்-வெட்டுபவனுடைய, தண்ணளிபோல்-கிருபையைப்போல, எஞ்சாது-இடைவிடாது, எடுத்துரைக்கற்பாற்று-எடுத்துச்சொல்லுந் தன்மையையுடைத்து.

(பொ-ரை.) செய்யத்தகாத செயல்களையுஞ் செய்வோமென்று சொல்லுபவர்களுடைய நாட்டீனியம் என்னபயன்படும்! ஒருவனைக் கோபித்துப் பேசினல் அவன் மனம் வருந்துமென்று சொல்லித் தலையை வெட்டுவோனது கிருபைபோலாமென்று எடுத்துச்சொல்லுந் தன்மையுடைத்து.

(க-ரை-) செய்யத்தகாதவற்றைச் செய்துமுடிப்போம் என்று சொல்லுபவர்களுடைய நாட்டீனியம் கொலைசெய்பவனுடைய அருளை நிகர்க்கும்.

(இ-பு) நாகரிகம்-எழுவாய். என்னும்-பயனிலை. மன்-ஒழிபிசை இடைச்சொல். அது கூடாது என்னும் ஒழிந்தசொல்லைத் தந்து. அல்லன-குறிப்பு வினையாலணையும்பெயர். செய்து-தன்மைப்பன்மை வினைமுற்று. செயிர்த்து-இறந்தகால வினையெச்சம். தண்ணளி-ஒருசொல்லு. (௩௪)

பகையின்று பல்லார் பழிமெடுத் தோதி
நகையொன்றே நன்பயனுக் கொள்வான்—பயமின்றி
மெய்விதிர்ப்புக் காண்பான் கொடிறுடைத்துக் கொல்
கைவிதிர்த் தஞ்சப் படும் [வான்போல்

(ப-ரை.) பகை இன்று - பகையில்லாமல், பல்லார்-பலருடைய, பழி-பழிக்கப்படுஞ் செய்கைகளை, எடுத்து ஓதி-எடுத்துப் பலருமறியச் சொல்லி, நகை ஒன்றே-நகைத்தலாகிய ஒன்றே, நன்பயனு-(தனக்கு) நல்லபயனுக. கொள்வான்-கொள்ளுவோன், பயம் இன்று-பிரயோசனம் இல்லாமல், மெய் விதிர்ப்பு- (பிறருடைய) உடம்பின் நடுக்கத்தை, காண்பான்-காணும்பொருட்டு, கொடிறு-கபோலத்தை, உடைத்து-உடைத்து, கொல்வான்போல்-கொல்லுபவன்போல், கைவிதிர்த்து-கையையசைத்து, அஞ்சப்படும்-அஞ்சப்படுவான்.

(பொ-ரை.) பகையில்லாமற் பலருடைய பழிகளையுமெடுத்துச் சொல்லி நகையே பயனுகக்கொள்ளுபவன் பிரயோசனமில்லாமல் பிறருடைய உடம்பின் நடுக்கத்தைக் காணும்பொரு

ட்டுக் கபோலத்தை யுடைத்துக் கொல்லுபவன்போல் அஞ்சப் படுவான்.

(க-ரை.) தன்னோடு பழகியவர்களுடைய பழிகளையெடுத் துப் பேசுபவனை அஞ்சி நீங்கவேண்டும்.

(இ-பு.) கொள்வான்-எழுவாய். அஞ்சப்படும் - பயனிலை. இன்றி என்னும் வினையெச்சம் இன்று என நின்றது. நகையொன்று-பண்புத்தொகை. கொள்வான் - வினையாலணையும் பெயர். மெய்விதிர்ப்பு-ஆறும்வேற்றுமைத்தொகை. கைவிதிர்த்து-இரண்டாம் வேற்றுமைத்தொகை. கைவிதிர்த்தலாவது அச்சம்வந்தபொழுது தம்மையறியாது நிகழுங் கைநடுக்கம். (கூ௫)

தெய்வ முளதென்பார் தீய செயப்புகின்
தெய்வமே கண்ணின்று நின்றொறுக்கும்—தெய்வம்
இலதென்பார்க் கில்லைதம் மின்புதல்வர்க் கன்றே
பலகாலுஞ் சொல்வார் பயன்.

(ப-ரை.) தெய்வம்-கடவுள், உளதென்பார்-உண்டென்று விசுவாசிக்கிறவர்கள், தீய-தீமைகளை, செயப்புகின்-செயத்தொடங்கின், தெய்வமே-கடவுளே, கண் இன்று - தாட்சிணியமில்லாமல், நின்று-(இவர்) எதிரே நின்று, ஒறுக்கும்-தண்டிக்கும், தெய்வம்-கடவுள், இலது என்பார்க்கு-இல்லையென்று சொல்லுபவர்க்கு, இல்லை- (கடவுள் எதிர்நின்று தண்டித்தல்) இல்லை, தம்-(பெற்றோர்) தம்முடைய, இன்புதல்வர்க்கு அன்றே-இனிய புதல்வர்களுக்கு அல்லவா, பலகாலும்- (அப்புதல்வர்கள் தீநெறியிற் செல்லும்) பலமுறையும், பயன்-உறுதிமொழிகளை; சொல்வார்-சொல்லுவார்கள்.

(பொ-ரை.) பெற்றோர்கள் தம்முடைய இனிய புதல்வர்களுக்குப் பலதரமும் உறுதிமொழிகளைச் சொல்வதுபோல கடவுள் உண்டென்று விசுவாசிக்கிறவர்கள் தீமைசெய்யத்தொடங்கின் கடவுளே தாட்சிணியமின்றி எதிர்நின்று தண்டிப்பார். கடவுள் இல்லையென்பவர்களுக்கு அவ்வாறு எதிர்நின்று தண்டித்தல் இல்லை.

(க-ரை.) கடவுள் உண்டென்று விசுவசிக்கிறவர்கள், தீமை செய்தால் அக்கடவுள் எதிர்நின்று தண்டிப்பார். இல்லையென்பவர்களுக்கு முடிவில் தண்டிப்பார்.

(இ-பு.) தெய்வம்-எழுவாய். ஒறுக்கும்-பயனிலை. தெய்வம்-பொருளால் உயர்திணையேனும் சொல்லால் அஃறிணையாதல் உளது இலது என அஃறிணை முடிபேற்றது. (௩௯)

தீய செயல்செய்வா ராக்கம் பெருகினும்
தீயன தீயனவே வேறல்ல—தீயன
நல்லன வாகாவா நாவின் புறநக்கிக்
கொல்லுங் கவையமா போல்.

(ப-ரை.) இன்பு உற-(பரிசத்தானுண்டாகிய) இன்பமிக, நாநக்கி-நாவினால் நக்கி, கொல்லும்-(பின்பு) கொல்லுகின்ற, கவைய மாபோல்-காட்டுப் பசுப்போல, தீயசெயல்-தீமையாகிய செய்கைகளை, செய்வார்-செய்பவருக்கு, ஆக்கம்-செல்வம், பெருகினும்-வளர்ந்தாலும், தீயன-அத்தீவழியால் வந்த செல்வங்கள், தீயன-(முன்பு இன்பத்தைத் தந்தாலும் பின்பு) தீமையைத் தருவனவேயன்றி, வேறு அல்ல-நன்மையைத் தருவனவல்ல, தீயன-கெட்டபொருள்கள், நல்லன-நல்லபொருள்கள், ஆகாவாம்-ஆக மாட்டாவாம்.

(பொ-ரை.) நாவினால் இன்புற நக்கிக்கொல்லும் காட்டுப் பசுவைப்போலத் தீமைகளைச் செய்பவர்களுக்குச் செல்வம் பெருகினாலும் அந்தச்செல்வம் முன்பு இன்பத்தைக்கொடுத்துப் பின் தீமையைத் தருவதேயன்றி நன்மையைக் கொடுக்கமாட்டாது. ஆதலால் தீயவைகள் நல்லவைகள் ஆகமாட்டா.

(க-ரை.) தீயவழியால்வரும்பொருள் துன்பத்தைக் கொடுக்கும்.

(இ-பு.) தீய-எழுவாய். தீய-பயனிலை. தீயன-மூன்றனுள் நடுநின்றது குறிப்புவினைமுற்று. மற்றையவிரண்டும் வினையாலணையும்பெயர். கவையமா-பின்மொழியை விசேடித்துவந்த இரு

பெயரொட்டுப் பண்புத்தொகை. நாவின்புறநக்கி-என்பதில் இன்புற-இடைப்பிறவரல். எ-பிரிநிலை. (௯௭)

வஞ்சித் தொழுகு மதியிலீர்காள் யாவரையும்
வஞ்சித்தோ மென்று மகிழன்மின் — வஞ்சித்த
எங்கு முளனொருவன் காணுங்கொ லென்றஞ்சி
அங்கங் குலைவ தறிவு.

(ப-ரை.) வஞ்சித்து-(வேடத்தாற் பிறரை) வஞ்சித்து, ஒழுகும்-நடக்கும், மதியிலீர்காள்-அறிவில்லாதவர்களே, யாவரையும்-எல்லோரையும், வஞ்சித்தோமென்று-வஞ்சித்து விட்டோமென்று, மகிழன்மின்-மகிழ்ச்சியடையாதொழியுங்கள், வஞ்சித்த-(நீங்கள்) வஞ்சித்தவற்றை, எங்கும் உளன்-எவ்விடத்தும் வியாபகமாயிருக்கின்ற, ஒருவன்-ஒப்பற்ற கடவுள், காணுமென்று-காண்பாரென்று, அஞ்சி-பயந்து, அங்கம் குலைவது-உடம்பு நடுங்குவது, அறிவு-அறிவாகும்.

(பொ-ரை.) வேடத்தாற் பிறரை வஞ்சித்து நடக்கும் அறிவில்லாதவர்களே யாவரையும் வஞ்சித்து விட்டோமென்று மகிழ்ச்சியடையாதொழியுங்கள். நீங்கள் வஞ்சித்த செயல்களை எவ்விடத்தும் வியாபித்திருக்கின்ற கடவுள் காண்பாரென்று அஞ்சி உடம்பு நடுங்குவதே உங்களுக்கு அறிவாகும்.

(க-ரை.) வேடத்தாற் றீயவொழுக்கத்தை மறைத்துப் பிறரை வஞ்சிப்பது கொடும்பாவம்.

(இ-பு.) குலைவது-எழுவாய். அறிவு-பயனிலை. மகிழன்மின்-எதிர்மறை ஏவற் பன்மை வினைமுற்று. கொல்-அசைநிலை.

மறைவழிப் பட்ட பழிமொழி தெய்வம்
பறையறைந் தாங் கோடிப் பரக்கும் — கழிமுடைப்
புன்புலா லற்றம் புறம்பொதிந்து மூடினும்
சென்றுதைக்குஞ் சேயார் முகந்து.

(ப-ரை.) புறம்பொதிந்து-புறத்திலே மறைத்து, மூடி னும்-மூடினலும், கழிமுடை-மிகுந்த முடைநாற்றத்தையுடைய, புன்புலால் நாற்றம்-இழிவாகிய புலால்நாற்றம், சேயார்முக த்து-தூரத்திலுள்ளவர்களுடைய முகத்தில், சென்று உதைக்கும்-சென்றுதாக்கும், (அதுபோல) மறைவழிப்பட்ட-இரகசியமாகச் செய்த, (இழிதொழிலால்வந்த) பழிமொழி-பழிச்சொற்கள், தெய்வம் பறை அறைந்தால் ஆங்கு-தெய்வம் பறையடித்தாற்போல, ஓடி பரக்கும்-எங்குஞ்சென்று பரவும்.

(பொ-ரை.) புலால் மூடிவைத்தாலும் தூரத்திலுள்ளவர்களுடைய முகத்திலே சென்றுதாக்கும்; அதுபோல இரகசியமாகச்செய்த இழிதொழிலால் வந்த பழிச்சொற்கள் தெய்வம் பறையடித்தாற்போல எவ்விடத்திலும் பரக்கும்.

(க-ரை.) வேடத்தில் மறைந்துசெய்த இழிதொழில்கள் வெளிப்படும்.

(இ-பு.) பழி-எழுவாய். பரக்கும்-பயனிலை. மறை-முதனிலைத் தொழிற்பெயர், அறைந்தால் என்னும் வினையெச்சம் அறைந்து என நின்றது. கழிமுடை-உரிச்சொற்றொடர். முகத்து-ஏழாம்வேற்றுமை உருபு இறுதியிலே தொக்கதொகை. (கக)

முனைப்பாடியார்

இயற்றிய

அறநெறிச்சாரம்.

காலைச்செய் வோமென் றறத்தைக் கடைப்பிடித்துச்
சாலச்செய் வாரே தலைப்படுவார்—மாலை
கிடந்தா னெழுத லரிதான்மற் றென்கொல்
அறங்காலை செய்யாத வாறு.

* (ப-ரை.) காலை-இளமைப்பருவந்தொடங்கி, அறம்-தருமத்தை, செய்வோம் என்று (நாடோறும்) செய்வோமென்று, கடைப்பிடித்து-உறுதியாகக்கொண்டு, சாலச்செய்வாரே-மிகுதியுஞ் செய்பவர்களே, தலைப்படுவார்-நல்வழிப்படுவார், மாலை-இராக்காலத்தில், கிடந்தான்-படுத்தவன், எழுதல் அரிது- (உயிரோடு) மீட்டும் எழும்புதல் அரியது, (ஆதலினால்) அறம்-தருமத்தை, காலை-இளமைப்பருவந்தொடங்கி நாடோறும், செய்யாத ஆறு-செய்யாதவகை. என்-யாது.

(பொ-ரை.) இளமைப்பருவந் தொடங்கி நாடோறும் தருமத்தைச் செய்வோமென்று உறுதியாகக்கொண்டு செய்பவரே நல்வழிப்படுவார். இராக்காலத்தில் படுத்தவன் எழுதலரிது ஆதலினால் தருமத்தை இளமைப்பருவந்தொடங்கிச் செய்யாதவகை யாது.

(க-ரை.) தருமத்தை இளமைப்பருவந் தொடங்கிச் செய்தல்வேண்டும்.

(இ-பு.) செய்வார்-எழுவாய். தலைப்படுவார்-பயனிலை. காலைச்செய்வோம்-ஏழாம்வேற்றுமைத்தொகை. (௧00)

சென்றநா ளெல்லாஞ் சிறுவிரல்வைத் தெண்ணலாம்
நின்றநாள் யார்க்கு முணர்வரி—தென்றொருவன்
நன்மை புரியாது நாளுலப்ப விட்டிருக்கும்
புன்மை பெரிது புறம்.

(ப-ரை.) சென்றநாள் எல்லாம்-கழிந்தநாட்களெல்லாம், சிறுவிரல்வைத்து-சிறியவிரலைக் குறியாகக் கொண்டு, எண்ணலாம்-அளவிடலாம், நின்றநாள்-கழியாது நின்றநாட்கள், யார்க்கும்-எவர்க்கும், உணர்வு-அறிதல், அரிது என்று-கூடாதென்று கருதி, ஒருவன்-ஒருவன், நன்மைபுரியாது-தருமத்தைச் செய்யாது, நாள் உலப்ப-வாணாள் வீணாளாகக்கழிய, விட்டிருக்கும்-

---

* இக்கருத்துப்பற்றி "அன்றறிவாமென்னாதறஞ்செய்கமற்றது பொன்றுங்காற் பொன்றாத்துணை" யென்றார் திருவள்ளுவரும்.

விட்டிருக்கின்ற, புன்மை-தீமை, புறம்-வேறாக, பெரிது-பெரியது.

(பொ-ரை.) கழிந்த வாழ்நாட்களையெல்லாம் அளவிடலாம் கழியாது நின்றநாட்களோ யாவர்க்கும் அறிதல் கூடாதென்று கருதி ஒருவன் தருமத்தைச்செய்யாது வாணாளை வீணாகக் கழியவிட்டிருக்கின்ற சிறுமை பெருந்தீமையாம்.

(க-ரை.) வாழ்நாள் வீழ்நாட்படாமல் தருமத்தைச் செய்ய வேண்டும்.

(இ-பு.) புன்மை-எழுவாய். பெரிது-பயனிலை. சென்ற, நின்ற-இறந்தகாலப் பெயரெச்சங்கள். என்று-இடைச்சொல்லடியாகப்பிறந்த இறந்தகால வினையெச்சம். புரியாது-எதிர்மறைத் தெரிநிலைவினையெச்சம்; அது உலப்ப என்னும் நிகழ்கால வினையெச்சத்தைக்கொண்டு முடிந்தது. யார்க்கும் என்பதன் உம்மை முற்று. (௧0௧)

பட்ட வகையாற் பலரும் வருந்தாமல்
கட்டுடைத் தாகக் கருதிய நல்லறம்
முட்டுடைத் தாக விடைதவிர்ந்து வீழ்தலில்
நட்டறு ணுதலே நன்று.

(ப-ரை.) பலரும் வருந்தாமல்-பலருந் துன்பமடையாமல், பட்டவகையால்-தருமநூல்களிற் கூறியமுறையால், கட்டு உடைத்தாக-உறுதியுடையதாக, கருதிய-செய்யத்தொடங்கிய, நல்லறம்-அன்னதானமுதலிய தருமம், முட்டுடைத்தாக-குறைவையடைய, இடைதவிர்ந்து-நடுவேசெய்யாது, வீழ்தலில்-கைவிடுதலைப்பார்க்கிலும், நட்டு-பயிரைநட்டு, அறுணுதலே-கதிரை யறுக்காதவனுதல், நன்று-நன்று.

(பொ-ரை.) பலருந் துன்பப்படாமல் தருமநூல்களிற் கூறியபடி தனக்கு உறுதியாகச் செய்யத்தொடங்கிய அன்னதானமுதலிய தருமக்குறைவடையும்படி இடையே செய்யாது அழிதலினும் நெற்பயிரை நட்டுக் கதிரை யறுக்காதவனுதல் நன்று.

(க-ரை.) தான் தனக்கு உறுதியெனக்கொண்டு செய்யத் தொடங்கிய தருமத்தை முடிவுபெறச் செய்தல்வேண்டும்.

(இ-பு.) ஆதல்-எழுவாய். நன்று-பயனிலை. கருதல்-நினைத்தல்; அது ஈண்டுச்செய்தல் என்னும் பொருளில் நின்றது. கருதிய-இறந்தகாலப் பெயரெச்சம்; அது அறம் என்னும் பெயரைக் கொண்டு முடிந்தது. வருந்தாமல்-எதிர்காலவினையெச்சம். தவிர்ந்து இறந்தகால வினையெச்சம், அது வீழ்தல் என்னும் தொழிற்பெயரைக்கொண்டு முடிந்தது. வீழ்தலின்-இன் எல்லைப்பொருளில்வந்த ஐந்தாம்வேற்றுமையுருபு. (கOஉ)

பலகற்றோம் யாமென்று தற்புகழ வேண்டா
அலர்கதிர் ஞாயிற்றைக் கைக்குடையுங்—காக்கும்
சிலகற்றார் கண்ணு முளவாம் பலகற்றார்க்
கச்சாணி யன்னதோர் சொல்.

(ப-ரை.) அலர்கதிர்-பரந்த கிரணங்களையுடைய, ஞாயிற்றை-சூரியனுடைய வெப்பத்தை, கைக்குடையும்-கையிலுள்ள குடையும், காக்கும்-தடுக்காநிற்கும், சிலகற்றார்கண்ணும், சில நூல்களைக் கற்றவரிடத்திலும், பலகற்றார்க்கு-பலநூலைக் கற்றவர்க்கு, அச்சாணி-அச்சுருவாணியை. அன்ன-ஒத்த, சொல்-ஒரு சொல், உளவாம்-உளதாகும், (ஆதலால்) யாம்-நாம், பலகற்றோமென்று-பலநூல்களையுங் கற்றறிந்தோமென்று, தற்புகழ்தல்-தற்புகழ்ச்சி செய்தல், வேண்டா-வேண்டாவாம்.

(பொ-ரை.) ஞாயிற்றின் வெப்பத்தைக் கையிலுள்ள குடை தடுக்கும். பலநூல்களையுங் கற்றவர்க்கு அச்சாணியையொத்த ஒருசொல், சிலநூலைக் கற்றவரிடத்தில் உண்டு; ஆதலால் நாம் தற்புகழ்தல்வேண்டாம்.

(க-ரை.) தற்புகழ்ச்சி கூடாது.

(இ-பு.) சொல்-எழுவாய். உள-பயனிலை. பலசில-பண்படியாகப்பிறந்த பலவின்பாற் படர்க்கைப்பெயர், கைக்குடை-ஏழாம்வேற்றுமை உருபும் பயனுமுடன் றொக்கதொகை. (கOங)

தன்னைத்தா னெஞ்சங் கரியாகத் தானடங்கின்
பின்னைத்தா னெய்தாப் பயனில்லை— தன்னைக்
குடிகெடுக்கு நெஞ்சிற்குக் குற்றேவல் செய்யின்
பிடிபடுக்கப் பட்ட களிறு.

(ப-ரை.) தான்-ஆன்மாவானவன், தன்னை-தனக்கு, நெஞ்சம்-தன்மனமே, கரியாக-சாட்சியாக, தான் அடங்கின்-தான் அடங்குவானானால், பின்னை-பின்பு, எய்தா-அடையாத, பயன் இல்லை-பிரயோசனம் வேறில்லை. தன்னைக் குடிகெடுக்கும்-தன்னைக் குடியோடுகெடுக்கின்ற, நெஞ்சிற்கு-மனத்திற்கு, குற்றேவல்-அடித்தொண்டுகளை, செய்யின்-செய்வானானால், பிடிபடுக்கப்பட்ட-பாகனுடைய கையிலே யகப்பட்ட, களிறு-யானையை யொப்பான்.

(பொ-ரை.) ஆன்மாவானவன் தன்மனமே தனக்குச் சாட்சியாக அடங்குவானானால் அவன் எல்லாப்பயனையும் அடைவான். தன்னைக்கெடுக்கின்ற மனத்துக்குத் தொண்டுசெய்வானானாற் பாகனுடைய கையில் அகப்பட்ட யானையை யொப்பான்.

(க-ரை.) மனத்தை யடக்கினால் கருதியபயன்பெறுதல் கூடும்.

(இ-பு.) ஆன்மா-தோன்றா எழுவாய். களிறு - பயனிலை. குடிகெடுதல்-கருதிய பயனை இழப்பித்தல். குற்றேவல்-மனஞ் செலுத்தியவற்றில் விரைந்து பற்றுதல். (௧0௪)

நின்னை யறப்பெறு கிற்கிலே னன்னெஞ்சே
பின்னையான் யாரைப் பெறுகிற்பேன்—நின்னை
அறப்பெறு கிற்பேனேற் பெற்றேன்மற் றீண்டு
துறக்கந் திறப்பதோர் தாள்.

(ப-ரை.) நல்நெஞ்சே - நல்லமனமே, நின்னை - உன்னை, யான்-நான், அற-முழுதும், பெறுகிற்கிலேன்-பெறவல்லேனல்லேன், பின்னை-வேறு, யாரை-யாரைத்தான், பெறுகிற்பேன்-

என்வசமாகப் பெறவல்லேன், நின்னை-உன்னை அற-முழுதும், பெறுகிற்பேனேல்-என்வசமாகப் பெற்றேனானல், ஈண்டு-இவ்வுலகத்திற்றானே, துறக்கம்-துறக்கத்தைத், திறப்பது-திறப்பதாகிய, ஒரு-ஒரு, தாழ்-திறவுகோலையும், பெற்றேன்-பெற்றுவிட்டேன்.

(பொ-ரை.) மனமே! பிரியாமல் இருக்கின்ற உன்னை என் வசமாக்கிக்கொள்ள வல்லேனல்லேன். வேறு யாரைத்தான் என்வசமாக்கவல்லேன். உன்னை வசப்படுத்துவேனானல் துறக்கத்தினது திறவுகோலையும் பெற்றுவிட்டேன்.

(க-ரை.) மனத்தைத் தன்வசப்படுத்தினால் மோட்சத்தையடைதல் எளிது.

(இ-பு.) யான்-எழுவாய். பெற்றேன்-பயனிலை. பெறுகிற்கிலேன் என்பது பெறுகிற்பேன் என்பதின் எதிர்மறை வினைமுற்று. (க0ரு)

உள்ளூ ரிருந்தூந்த முள்ளமறப் பெற்றாரேல்
கள்ளவிழ் சோலையாங் காட்டுளார்—காட்டுள்ளும்
உள்ள மறப்பெறு கல்லாரே ஊட்டுள்ளும்
நண்ணி நடுவூ ருளார்.

(ப-ரை.) ஊருள் இருந்தும்-ஊரினுள்ளே வசித்தும், தம்-தமது, உள்ளம்-(பொருள்கள் மேற்கொண்ட) ஆசை, அறப்பெற்றாரேல்-நீங்கப்பெற்றாராயின், (அவரே) கள் அவிழ்-தேனொழுகாநின்ற, சோலை ஆம்காட்டுளார்-மரங்கள் நெருங்கிய காட்டின்கண் வசிக்கும் முனிவர்களாவர், காட்டுள்ளும்-காட்டினிடத்து வசித்தும், உள்ளம்-பொருள்களின்மேற் கொண்ட ஆசை, அறப்பெறுகல்லாரேல்-நீக்கப்பெறாராயின், நாட்டுள்ளும்-நாட்டின்கண்ணும், ஊர்நடு-ஊரின் மத்தியில், நண்ணி உளார்-பொருந்திவசிக்கும் இல்லறத்தாராவர்.

(பொ-ரை.) ஊரிலுள்ளே வசித்தும் பொருள்கண்மேற் கொண்ட பற்றிலராயின் அவரே காட்டில்வசிக்கும் முனிவர்க

ளாவர். பொருள்கள்மேற் பற்றுடையராயின் ஊரில் வசிக்கும் இல்லறத்தாரேயாவர்.

(க-ரை.) உள்ளத்தாற் பற்றை யொழிக்கவேண்டும்.

(இ-பு.) பெற்றார், பெறுகலார்-தோன்றா எழுவாய். உளார்-பயனிலை. பெறுகலார்-எதிர்மறை வினைமுற்று. உள்ளூர் நடுவூர் என்பன-முன்பின்னாகத்தொக்க ஆறாம்வேற்றுமைத்தொகைகள்; அவை ஊருள் ஊர்நடுஎன மாற்றிப் பொருளுரைக்கப்பட்டன. ()

காய்த லுவத்த லகற்றி யொருபொருட்கண்
ஆய்த லறிவுடையார் கண்ணதே—காய்வதன்கண்
உற்ற குணந்தோன்றா தாகு முவப்பதன்கண்
குற்றமுந் தோன்றாக் கெடும்.

(ப-ரை.) ஒருபொருட்கண் - ஒருபொருளினிடத்து, காய்தல் உவத்தல்-வெறுப்பு விருப்புக்களை, அகற்றி-நீக்கி, ஆய்தல்-(குற்றத்தையும் குணத்தையும்) ஆராய்தல், அறிவுடையார் கண்ணது-அறிவுடையவர்களிடத்துள்ளதாம், காய்வதன்கண்-வெறுப்புள்ள பொருளில், உற்ற-பொருந்திய, குணம்தோன்றாது ஆகும்-குணம்வெளிப்படாதாம், உவப்பதன்கண்-விருப்புள்ள பொருளின்கண், உற்ற-பொருந்திய, குற்றமும்-குற்றமும், தோன்றாக்கெடும்-தோன்றாமற் கெடும்.

(பொ-ரை.) வெறுப்புள்ள பொருளிலுள்ள குணமும் விருப்புள்ள பொருளிலுள்ள குற்றமும்தோன்றா. ஆதலால் அறிவுடையோர்கள் வெறுப்பு விருப்பு இல்லாமல் ஒருபொருளின் குற்றத்தையும் குணத்தையும் ஆராய்வார்.

(க-ரை.) விருப்பு வெறுப்பின்றி ஒன்றை யாராய்ந்தறிய வேண்டும்.

(இ-பு.) ஆய்தல்-எழுவாய். ஆகும் - பயனிலை. காய்தல், உவத்தல்-தொழிற்பெயர். அகற்றி-இறந்தகால வினையெச்சம், அது-ஆய்தலென்னுந் தொழிற்பெயரைக்கொண்டு முடிந்தது; அது-ஆகுமென்னும் வினைமுற்றைக்கொண்டு முடிந்தது. (௧0எ)

விருந்து புறந்தரான் வேளாண்மை செய்யான்
பெருந்தக் கவரையும் பேணுன்—பிரிந்துபோய்க்
கல்லான் கடுவினை மேற்கொண் டொழுகுமேல்
இல்வாழ்க்கை யென்ப திருள்.

(ப-ரை.) விருந்து-(தன்னிடத்துவந்த) விருந்தினரை, புறந்தரான்-உபசரியாதவனுய், வேளாண்மை-உபகாரத்தை, செய்யான்-செய்யாதவனுய், பெருந்தக்கவரையும்-அறிவாலுயர்ந்தோரையும், பேணுன்:வழிபடாதவனுய், பிரிந்து-மனைவியைப்பிரிந்து, போய்-புறவூரிற்போய், கல்லான்-(மூன்றுவருடகாலம்) கல்வியை நிறையக் கற்றுக்கொள்ளாதவனுய், கடுவினை-தீத்தொழிலை, மேற்கொண்டு-(ஒருவன்) கைக்கொண்டு, ஒழுகுமேல்-ஒழுகுவானுனல், இல்வாழ்க்கையென்பது- (அவனுக்கு) மனைவியோடு கூடிவாழும் வாழ்க்கையென்பது, இருள்-நரகமாகும்.

(பொ-ரை. ஒருவன் தன்னிடத்துவந்த விருந்தினரை உபசரியாமல், உபகாரஞ்செய்யாமல், அறிவுடையோரை வழிபடாமல், மனைவியைப்பிரிந்துபோய்க் கல்வியை நிரம்பக் கற்றுக்கொள்ளாமல் தீவினைகளை மேற்கொண்டு ஒழுகுவானுனல் அவனுக்கு இல்வாழ்க்கை நரகமாகும்.

(க-ரை.) விருந்தினரை உபசரித்தல் முதலியன இல்வாழ்வானுக்கு ஆவசியகம் வேண்டியனவாம்.

(இ-பு.) இல்வாழ்க்கை-எழுவாய். இருள்-பயனிலை. புறந்தரான், செய்யான், பேணுன், கல்லான் என்னும் வினைமுற்றுகள் எச்சமாய் நின்றன. ஒழுகுமேல்-எதிர்காலவினையெச்சம். ()

அட்டுண்டு வாழ்வார்க் கதிதிக ளெஞ்ஞான்றும்
அட்டுண்ணு மாட்சி யுடையவர்—அட்டுண்டு
வாழ்வார்க்கு வாழ்வா ரதிதிக ளென்றுரைத்தல்
வீழ்வார்க்கு வீழ்வார் துணை.

(ப-ரை.) அட்டு-சமைத்து, உண்டு-புசித்து, வாழ்வார்க்கு-வாழும் இல்லறத்தார்க்கு, எஞ்ஞான்றும்-எப்பொழுதும், அதிதிகள்-விருந்தினர்கள், அட்டு உண்ணாத-சமைத்து உண்ணாத, மாட்சி-பெருமை, உடையவர்-உடைய துறவறத்தவரே, அட்டு உண்டு-சமைத்து உண்டு, வாழ்வார்க்கு-வாழும் இல்லறத்தார்க்கு, வாழ்வார்-இல்லறத்தார், அதிதிகளென்று-விருந்தினரென்று, உரைத்தல்-சொல்லுதல், வீழ்வார்க்கு-விழுபவர்களுக்கு, வீழ்வார்-விழுபவர், துணை-துணையாந் தன்மையோடொக்கும்.

(பொ-ரை.) சமைத்துண்டுவாழும் இல்லறத்தார்க்கு அவ்வாறு சமைத்துண்ணாத துறவறத்தாரே விருந்தினர்கள். அவ்வாறன்றி இல்லறத்தார்க்கு இல்லறத்தாரே விருந்தினரென்று சொல்லுதல் விழுபவர் துணையாதல்போலும்.

(க-ரை.) இல்லறத்தார் துறவிகளையே விருந்தினராகக் கோடல்வேண்டும்.

(இ-பு.) உடையவர், உரைத்தல்-எழுவாய். அதிதிகள்போலும்-பயனிலை. வாழ்வார், வீழ்வார்-வினையாலணையும்பெயர்கள்.

மருவிய காதன் மனையாளுந் தானும்
இருவராய்ப் பூண்டுய்ப்பி னல்லால்—ஒருவரால்
இல்வாழ்க்கை யென்னு மியல்புடைய வான்சகடம்
செல்லாது தெற்றிற்று நின்று.

(ப-ரை.) மருவிய-கைக்கொண்ட, காதல்-விருப்பத்தையுடைய, மனையாளும்-மனைவியும், தானும்-கணவனும் ஆகிய, இருவரும்-இரண்டுபேரும், பூண்டு-சேர்ந்து ஈர்ப்பின் அல்லால்-இழுத்தாலேயல்லாமல், ஒருவரால்-அவருளொருவரால், இல்வாழ்க்கை என்னும்-இல்வாழ்க்கையென்று சொல்லப்படும், இயல்புடைய-தன்மையையுடைய, வான்சகடம்-பெரியபண்டி, தெற்றிற்று நின்று-தடைப்பட்டுநின்று, செல்லாது-செல்லமாட்டாது.

(பொ-ரை.) இல்வாழ்க்கையென்னும் பண்டி கணவன் மனைவியாகிய இருவரும் பூண்டு இழுத்தாலொழிய அவ்விருவ

ருள் ஒருவரால் இழுக்கப்படமாட்டாது.

(க-ரை.) கணவனும் மனைவியும் மனம் ஒத்து நடந்தால் இல்வாழ்க்கை நடைபெறும்.

(இ-பு.) சகடம்-எழுவாய். செல்லாது-பயனிலை. பூண்டு-இறந்தகால வினையெச்சம். செல்லாது-எதிர்மறை வினைமுற்று.

நாற்றமொன் றில்லாத பூவொடு சாந்தினை
நாற்றந்தான் வேண்டி யதுபோலும்—ஆற்ற
மறுவறு சீலமு நோன்புமில் லாரை
உறுபயன் வேண்டிக் கொளல்.

(ப-ரை.) ஆற்ற-மிகவும், மறு அறு-குற்றம்நீங்கிய, சீலமும்-ஒழுக்கமும், நோன்பும்-விரதமும், இல்லாரை-இல்லாதவரிடத்தில், உறுபயன்-அவற்றாலுண்டாகும்பிரயோசனத்தை, வேண்டி-(ஒருவன்) விரும்பி, கொளல்-நட்புக்கொள்ளுதல், நாற்றம்-வாசனை, ஒன்று-சிறிதும், இல்லாத-இல்லாத, பூவொடு சாந்தினை-பூவையும் சாந்தையும், நாற்றம்-வாசனையை, வேண்டியதுபோலும்-விரும்பிக்கொள்வதுபோலும்.

(பொ-ரை.) ஒழுக்கமும் விரதமும் இல்லாதவரிடத்தில் அவற்றாலுண்டாகும் பிரயோசனத்தை விரும்பி அவருடன் ஒருவன் நட்புக்கொள்ளுதல் வாசனையில்லாத பூவையும் சாந்தையும் வாசனைவேண்டி விரும்பி அணிவதுபோலும்.

(க-ரை.) ஒழுக்க முதலியவை இல்லாதவரிடத்தில் அவைகளைப் பெறுதல் கூடாது.

(இ-பு.) கொளல்-எழுவாய். போலும்-பயனிலை. உறுபயன்-வினைத்தொகை. வேண்டி-வினையெச்சம். உம்மை-எண். ஒன்றும் என்னும் உம்மை தொக்கது. (கககக)

இம்மை யடக்கத்தைச் செய்து புகழாக்கி
உம்மை யுயர்கதிக் குய்த்தலான்—மெய்ம்மையே

பட்டாங் கறமுரைக்கும் பண்புடை யாளரே
நட்டா ரெனப்படு வார்.

(ப-ரை.) இம்மை-இப்பிறப்பில், அடக்கத்தைச் செய்து-(மனமுதலிய பொறிகளை) அடக்கி, புகழ் ஆக்கி-கீர்த்தியைச்செய்து, உம்மை-வருபிறப்பில், உயர்கதிக்கு-மேலாகிய உலகத்தில், உய்த்தலால்-செலுத்தலினால், அறம்-தருமமாயுள்ளவைகளை, பட்டாங்கு-இருந்தபடி, உரைக்கும்-சொல்லும், பண்புடையாளரே-அறிவுடையவரே, மெய்ம்மையே-உண்மையாகவே, நட்டார்-சிநேகர், எனப்படுவார்-என்று சொல்லப்படுவார்.

(பொ-ரை.) இப்பிறப்பிலே மனமுதலிய பொறிகளை அடக்கிக் கீர்த்தியைச் செய்து வருபிறப்பில் மேலுலகிற் செலுத்தலால் தருமங்களை உள்ளபடியேசொல்லும் அறிவுடையவரே சிநேகரென்று சொல்லப்படுவார்.

(க-ரை.) அறிவுடையோருடைய சிநேகம் இம்மையிற் புகழையும் மறுமையில் முத்தியையுங் கொடுக்கும்.

(இ-பு.) பண்புடையாளர்-எழுவாய். எனப்படுவார்-பயனிலை. உயர்கதி-பண்புத்தொகை. கதிக்கென்பது-வேற்றுமை மயக்கம். பட்டாங்கு-உண்மை. (ககஉ)

வைகலு நீருட் கிடப்பினுங் கல்லிற்கு
மெல்லென்றல் சால வரிதாகு—மஃதேபோல்
வைகலு நல்லறங் கேட்பினுங் கீழ்கட்குக்
கல்லினும் வல்லென்னு நெஞ்சு.

(ப-ரை.) வைகலும்-நாடோறும், நீருள்-சலத்தினுள், கிடப்பினும்-கிடக்கப்பெற்றாலும், கல்லிற்கு-கல்லினுக்கு, மெல்லென்றல்-வன்மை நீங்கி மென்மையாதல், சால-மிக, அரிதாகும்-இல்லையாகும், அஃதேபோல்-அதுபோல, வைகலும்-நாடோறும், நல் அறம்-நன்மையாகிய தருமங்களை, கேட்பினும்-கேட்டாலும், கீழ்கட்கு-கீழ்மக்கட்கு, நெஞ்சு-மனம், கல்லினும்-கல்லினும்பார்க்க, வல்லென்னும்-வன்மையையுடையதாகும்.

(பொ-ரை.) கல் நாடோறும் நீருட்கிடந்தாலும் மென்மையடையாததுபோலக் கீழ்மக்கள் தருமநூலை நாடோறும் கேட்டாலும் அவர்கள் மனம் இளகுதல் இல்லை.

(க-ரை.) கீழ்மக்களுடைய மனம் ஒருகாலத்தும் தருமத்திற் செல்லாது.

(இ-பு.) நெஞ்சு-எழுவாய். வல்லென்னும்-பயனிலை. கீழ்-பண்பாகுபெயர், கல்லினும்-வல்லென்னும் எல்லைப்பொருளில் வந்த ஐந்தாம்வேற்றுமைவிரி. (௧௧௩)

பாம்புண்ட நீரெல்லா நஞ்சாம் பசுவுண்ட
தேம்படு தெண்ணீ ரமுதமாம்—ஓம்பற்
கொளியா முயர்ந்தோர்க்கு ஞான மதுபோல்
களியாங் கடையாயார் மாட்டு.

(ப-ரை.) பாம்பு-பாம்பினால், உண்ட-பருகப்பட்ட, நீர் எல்லாம்-நீர்முழுதும், நஞ்சாம்-நஞ்சாகும், பசு-பசுவினால், உண்ட-பருகப்பட்ட, தேம்படு-மதுரமாகிய, தெள்நீர்-தெளிந்தநீர், அமுதம் ஆம்-அமுதமாகும், அதுபோல்-அதுபோல, ஞானம்-ஞானநூல்கள், உயர்ந்தோர்க்கு-மேன்மக்களுக்கு, ஓம்பற்கு-காத்துக்கொள்ளுதற்குரிய, ஒளியாம்-அறிவாகும், கடையாயார்மாட்டு-கீழ்மக்கட்கு, களியாம் மயக்கமாகும்.

(பொ-ரை.) பாம்பினாற் பருகப்பட்ட நீர் நஞ்சாகும். பசுவினாற் பருகப்பட்ட நீர் அமுதமாகும். அதுபோல ஞானநூல்கள் கீழ்மக்கட்கு மயக்கமாம். மேன்மக்கட்கு அறிவாகும்.

(க-ரை.) ஞானநூல்கள் பக்குவர்க்கு அறிவையும் அபக்குவர்க்கு மயக்கத்தையுங் கொடுக்கும்.

(இ-பு.) ஞானம்-எழுவாய். ஒளியாம், களியாம்-பயனிலை. ஞானம்-ஆகுபெயர். மாட்டு-நான்காம்வேற்றுமைச் சொல் உருபு.

கல்லா வொருவனைக் காரணங் காட்டினும்
இல்லைமற் றொன்று மறனுணர்தல்—நல்லாய்
நறுநெய் நிறைபுழுக்க லுய்ப்பினு மூழை
பெறுமோ சுவையுணரு மாறு.

(ப-ரை.) கல்லா-நீதிநூல்களைக் கல்லாத, ஒருவனை-ஒருவனுக்கு, காரணம்-காரணத்தை, காட்டினும் - காட்டிச்சொன்னாலும், அறன்-தருமத்தை, உணர்தல்-அறிதல், ஒன்றும்-சிறிதும், இல்லை-இல்லை, நல்லாய்-பெண்ணே, நறுநெய்-நறியநெய், நிறை-நிறைந்த, புழுக்கல்-சோற்றில், மூழை-அகப்பையை, உய்ப்பினும்-இட்டாலும், சுவை-அவ்வுருசியை, உணருமாறு-உணருந் தன்மையை, பெறுமோ-அடையுமோ.

(பொ-ரை.) பெண்ணே! தருமநூல்களைக் கல்லாதவொருவனுக்குக் காரணங்காட்டிச் சொன்னாலும் தருமத்தைச் சிறிதும் உணர்வானல்லன், நெய்பெய்யப்பெற்ற சோற்றிலே அகப்பையை இட்டால் அது அச்சுவையை யறியாததுபோலும்.

(க-ரை.) தருமத்தை யறிதற்குக் கல்வி ஆவசியகம் வேண்டும்.

(இ-பு.) உணர்தல்-எழுவாய். இல்லை-பயனிலை. கல்லாத என்னும் பெயரெச்சம் கல்லா எனக்குறைந்து நின்றது. ஒருவனை என்பது-உருபுமயக்கம். மற்று-அசை. அறம்-அறன் எனப் போலியாயிற்று. ஓகாரம்-எதிர்மறை. (௧௧௫)

கட்டளை கோடித் திரியிற் கருதிய
இட்டிகையுங் கோடு மதுபோலும்—ஒட்டிய
காட்சி திரியி னறந்திரியு மென்றுரைப்பர்
மாட்சியின் மிக்கவர் தாம்.

(ப-ரை.) கட்டளை-கல்லறுக்குங் கருவி, கோடித்திரியில்-வளைந்து மாறிடில், கருதிய-அதனால் அறுக்க நினைத்த, இட்டிகையும்-செங்கல்லும், கோடும்-வளைந்துவிடும், அதுபோல்-அது

போல, ஒட்டிய-பொருந்திய, காட்சி-அறிவு, திரியின்-மாறுபடின், மாட்சியின்-பெருமையினால், மிக்கவர்-முதிர்ந்த பெரியோர், அறம்-தருமம், திரியுமென்று-மாறுபடுமென்று, உரைப்பர்-சொல்லுவார்.

(பொ-ரை.) கல்லறுக்குங்கருவி வளைந்தால் அதனாலறுக்கப்பட்ட செங்கல்லும் வளைந்துவிடும், அதுபோல ஒருவனுடைய அறிவுதிரியின் அறமும் மாறுபடுமென்று பெரியோர் கூறுவர்.

(க-ரை.) கருத்து வேறுபட்டால் அறமும் வேறுபடும்.

(இ-பு.) மிக்கவர்-எழுவாய். உரைப்பர்-பயனிலை. தாம் உம்-அசைகள். கோடி-வினையெச்சம். கருதிய-பெயரெச்சம். (௧௧௬)

கெடுக்கப் படுவது தீக்கருும நாளுங்
கொடுக்கப் படுவ தருளே—அடுத்தடுத்
துண்ணப் படுவது நன்ஞான மெப்பொழுதும்
எண்ணப் படுவது வீடு.

(ப-ரை.) நாளும்-எந்நாளும், கெடுக்கப்படுவது-நீக்கப்படுவது, தீக்கருமம்-தீச்செயல்களேயாம், நாளும்-எந்நாளும், கொடுக்கப்படுவது-பிறருக்குக் கொடுக்கப்படுவது, அருளே-கிருபையேயாம், அடுத்து அடுத்து-இடைவிடாமல், உண்ணப்படுவது-உட்கொள்ளப்படுவது, நல்ஞானம்-நன்மையாகிய அறிவேயாம், எப்பொழுதும்-எந்நாளும், எண்ணப்படுவது-சிந்திக்கப்படுவது, வீடு-மோக்ஷமேயாம்.

(பொ-ரை) எந்நாளும் நீக்கப்படுவது தீயசெயல்களும், கொடுக்கப்படுவது அருளும், உண்ணப்படுவது ஞானமும், எண்ணப்படுவது மோக்ஷமுமேயாம்.

(க-ரை.) நன்மைசெய்து, அருள்புரிந்து, ஞானத்தையுட்கொண்டு, மோக்ஷத்தைச் சிந்திக்கவேண்டும்.

(இ-பு.) கெடுக்கப்படுவது, கொடுக்கப்படுவது, உண்ணப்படுவது, எண்ணப்படுவது-எழுவாய்கள். தீக்கருமம், அருள், ஞா

னம், வீடு-பயனிலைகள், நாலும் என்பது கூட்டப்பட்டது. அடுத் தடுத்து-அடுக்குத்தொடர். ஏகாரம்-தேற்றமும் பிரிநிலையுமாய் நின்றது. (கசஎ)

திரையவித்து நீரா டலாகா வுரைப்பார்
உரையவித் தொன்றுஞ்சொ லில்லை—அரசராய்ச்
செய்துமா மென்னினு மாகா துளவரையால்
செய்தவர்க்கே யாகுந் திரு.

(ப-ரை.) திரை-கடலில் வீசும் அலையை, அவித்து-ஒழித்து, நீராடல்-ஸ்நானஞ்செய்தல், ஆகா-முடியா, உரைப்பார்-பேசும் சனங்களுடைய, உரை அவித்து-சொற்களை அடக்கி, ஒன்றுஞ்சொல்-ஒன்றுவிக்கும் சொற்கள், இல்லை-இல்லையாகும், அரசராய்-இராசாக்களைப்போலப் பொருளைச் சம்பாதித்து, செய்துமாமெனினும்-பின் தருமத்தைச் செய்வோமென்று கருதியிருந்தாலும், ஆகாது-அது முடியாது, உளவரையால்-தன்னிடத்திலேயுள்ள பொருலளவிற்கேற்ப, செய்தவர்க்கே-தருமத்தைச் செய்தவருக்கே, திரு-மோக்ஷம், ஆகும்-உண்டாகும்.

(பொ-ரை.) கடல் அலையை அடக்கி நீராடல் முடியாது. பேசுஞ் சனங்களுடைய சொல்லை அடக்கி யொன்றுவிக்குஞ் சொல்லில்லை. அவைபோல மிகுந்தபொருளைச் சம்பாதித்துப் பின் தருமத்தைச் செய்வோமென்று கருதியிருந்தால் முடியாது. தன்னிடத்துள்ள பொருளளவிற்கேற்பத் தருமஞ்செய்தவருக்கே மோக்ஷம் உளதாகும்.

(க-ரை.) உள்ளபொருளளவிற்கேற்பக் காலம் நீடிக்காமல் தருமஞ்செய்தல்வேண்டும்.

(இ-பு.) ஆடல், சொல், செய்தல், திரு-எழுவாய். ஆகா, இல்லை, ஆகாது, ஆகும், செய்தும்-தன்மைப்பன்மைவினைமுற்று.

உப்புக் குவட்டின் மிசையிருந் துண்ணினும்
இட்டுணாக் காலது கூராதாம்—தொக்க

உடம்பும் பொருளு முடையானோர் நன்மை
தொடங்காக்கா லென்ன பயன்.

(ப-ரை.) உப்புக்குவட்டின்மிசை - உப்புமலையின்மீது, இருந்து-இருந்து, உண்ணினும்-உண்டாலும், இட்டு-உப்பையிட்டு, உண்ணுக்கால்-உண்ணுவிடத்து, அது-அவ்வுணவு, கூராது-உருசியைக்கொடாது, (அதுபோல) தொக்க-(வினைவயத்தால்) வந்துசேர்ந்த, உடம்பும்-உடம்பும், பொருளும்-செல்வமும், உடையான்-உடைய ஒருவன், ஓர் நன்மை-ஓர் அறத்தை, தொடங்காக்கால்-ஆரம்பிக்காத பொழுது, பயன்- (அவற்றால் எய்தும்) பிரயோசனம், என்ன-என்னை; ஒன்றுமில்லை என்பதாம்.

(பொ-ரை.) உப்புக்குவியலின் மேலிருந்துண்டாலும் உப்பையிட்டுண்ணுவிடத்து அவ்வுணவு உருசியைக்கொடாது; அதுபோல எடுத்தவுடம்பும் பொருளுமுடையவொருவன் தருமஞ்செய்யாவிடத்துப் பயனில்லை.

(க-ரை.) உடம்பும் பொருளும் பெற்றால் தருமஞ்செய்து பயன்பெறவேண்டும்.

(இ-பு.) பயன்-எழுவாய். என்-பயனிலை. ஆம்-அசை. உண்ணுக்கால், தொடங்காக்கால்-வினையெச்சங்கள்.

இன்சொல் விளைநிலனா வீதலே வித்தாக
வன்சொற் களைகட்டு வாய்மை யெருவட்டி
அன்புநீர் பாய்ச்சி யறக்கதி ரீனவோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய். 16

(ப-ரை.) இன்சொல்-இனியசொல்லே, விளைநிலன் ஆக-கழனியாக, ஈதலே-கொடுத்தலே, வித்தாக-விதையாக, வன்சொல்-கடுஞ்சொல்லாகிய, களை-களையை, கட்டு-பிடுங்கி, வாய்மை-சத்தியமாகிய, எரு-எருவை, அட்டி-பெய்து, அன்புநீர்-அன்பாகிய நீரை, பாய்ச்சி-பாய்ச்சி, அறக்கதிர்-தருமமாகிய கதிரை, ஈன-கொடுக்க, ஓர் பைங்கூழ்-ஒப்பற்ற பயிரை, சிறுகாலை-இளமைப்பருவத்திலே, செய்-இடுவாய்.

(பொ-ரை.) இன்சொல்லே கழனியாக, ஈதலே வித்தாக, கடுஞ்சொல்லாகிற களையைப் பிடுங்கிச், சத்தியமாகிய எருவைப் பெய்து, அன்பாகிய நீரைப்பாய்ச்சித், தருமமாகிய கதிரை ஈனு ஒப்பற்றபயிரை இளமைப்பருவத்திலேசெய்.

(க-ரை.) இன்சொல் முதலியவைகளைக் கைக்கொண்டு ஒழுகு.

(இ-பு.) நீ-தோன்றா எழுவாய். செய்-பயனிலை. இன்சொல், வன்சொல், அன்புநீர், பைங்கூழ், அறக்கதிர்-பண்புத் தொகைகள். (க௨O)

குற்றத்தை நன்றென்று கொண்டு குணமின்றிச்
செற்ற முதலா வுடையவரைத்—தெற்ற
அறிந்தாரென் றேத்து மவர்களைக் கண்டால்
துறந்தெழுவார் தூய்க்காட்சி யார்.

(ப-ரை.) குற்றத்தை-குற்றமாயுள்ள செயல்களை, நன்று என்று-நற்செயல்களென்று, கொண்டு-கைக்கொண்டு, குணம்-நற்குணம், இன்றி-இல்லாமல், செற்றமுதலா-கோபமுதலிய குணங்களை, உடையவரை-உடையவர்களை, தெற்ற - மிகவும், அறிந்தாரென்று-அறிவுடையரென்று, ஏத்தும்-துதிக்கும், அவர்களை-அவ்வியல்புடையவர்களை, கண்டால்-கண்டால், தூய்க்காட்சியார் - மெய்யறிவினையுடையோர், துறந்து எழுவார்-அவரை விட்டெழுந்து செல்லுவர்.

(பொ-ரை.) குற்றமாயுள்ள செயல்களை நற்செயல்களென்றுகொண்டு கோபமுதலிய தீக்குணங்களையுடையவர்களை அறிவுடையோரென்று துதிக்குமியல்புடையவர்களைக் கண்டால் மெய்யறிவினையுடையோர் விட்டுநீங்குவர்.

(க ரை. தீயோரைப் பெரியோர் அடையார்.

(இ-பு.) காட்சியார்-எழுவாய். எழுவார்-பயனிலை. குற்றத்தை-என்பதில் அத்துச்சாரியை, ஐ-இரண்டாம்வேற்றுமை உருபு. செற்றம்-தொழிற்பெயர். உடையவர்-வினையாலணையும் பெயர்.

உணர்ச்சியச் சாக வுசாவண்டி யாகப்
புணர்ச்சிப் புலனைந்தும் பூட்டி—உணர்ந்ததனை
யூர்கின்ற பாக னுணர்வுடைய னாகுமேல்
பேர்கின்ற தாகும் பிறப்பு.

(ப-ரை.) உணர்ச்சி-அறிவு, அச்சுஆக-அச்சாணியாக, உசா-ஆராய்ச்சி, வண்டியாக-பண்டியாகவும், புணர்ச்சி-ஒன்றோடொன்று சம்பந்தமுடைய, புலன் ஐந்தும்ஐந்துபுலன்களையும், பூட்டி-அப்பண்டிகளை இயக்கும் எருதுகளாகப்பூட்டி, உணர்ந்து-உபாயத்தைத் தெரிந்து, அதனை-அப்பண்டியை, ஊர்கின்ற-செலுத்துகின்ற, பாகன்-ஆன்மாவானவன், உணர்வு-தன்னையறியும் அறிவு, உடையனாகுமேல் உடையவனாகுவானாயின், பிறப்பு-பிறவி, பேர்கின்றது-நீங்குதல், ஆகும்-உண்டாகும்.

(பொ-ரை.) அறிவே யச்சாக, ஆராய்ச்சியே பண்டியாகப், பஞ்சப்புலனும் அதனையியக்கும் எருதுகளாகப்பூட்டிச், செலுத்துமுபாயத்தையறிந்து அப்பண்டியையூர்கின்ற பாகன் தன்னையறியும் அறிவுடையவனாயின் பிறவிநீக்கமுண்டாம்.

(க-ரை.) கேட்டல் சிந்தித்தல் தெளிதல் முதலியவைகளால் பிறப்பு ஒழியும்.

(இ-பு.) பேர்கின்றது-எழுவாய். ஆகும்-பயனிலை. புணர்ச்சிப்புலன்-இரண்டாம்வேற்றுமைத்தொகை. ஐந்தும் என்பதன் உம்மைமுற்று. ஆகுமேல்-வினையெச்சம். பேர்கின்றது-தொழிற்பெயர். (௧௨௨)

முன்றுறையரையனார்

இயற்றிய

பழமொழி.

கல்வியா னாய கழிநுட்பங் கல்லார்முன்
சொல்லிய நல்லவுந் தீயவாம்—எல்லாம்
இவர்வரை நாட தமரையில் லார்க்கு
நகரமுங் காடுபோன் றாங்கு.

(ப-ரை-) எல்லாம்-பலவளங்களும், இவர்-நிறைந்த, வரை நாட-மலைநாட்டரசனே, தமரை-சுற்றத்தாரை, இல்லாரை- இல்லாதவருக்கு, நகரமும்-பட்டினமும், காடுபோன்றாங்கு-காடுபோன்றிருத்தல்போல, கல்வியான்-கல்வியினால், ஆய-உண்டாய, கழி நுட்பம்-மிகுந்த நுண்ணறிவால், (ஒருவன்) கல்லார்முன்-கல்லாதவர்முன்பு, சொல்லிய-சொன்ன, நல்லவும்-நல்லபொருள்களும், தீயஆம்-தீயபொருள்களாகும்,

(பொ-ரை.) பலவளங்களுநிறைந்த மலைநாட்டரசனே! சுற்றமில்லாதவருக்குப் பட்டினமுங் காடுபோன்றிருத்தல்போலக் கல்வியினாலாகிய நுண்ணறிவால் ஒருவன் கல்லார்முன்புசொல்லிய நல்லபொருள்களுந் தீயபொருள்களாகும்.

(க-ரை.) கல்லாதவருக்குக் கற்றோர் கூறும் நூற்பொருள் துன்பத்தைக் கொடுக்கும்.

(இ-பு.) நல்ல-எழுவாய், தீயவாம்-பயனிலை. போன்றது- ஈறுகெட்டுநின்றது. ஆய-பெயரெச்சம், நுட்பம்-ஆகுபெயர்- இல்லாரை-வேற்றுமை மயக்கம், (கஉரு)

நன்கொன் றறிபவர் நாழி கொடுப்பவர்க்
கென்றா முறுதியே சூழ்க வெறிதிரை

சென்றுலாஞ் சேர்ப்ப வதுபோல நீர்போயும்
ஒன்றிரண்டாம் வாணிக மில்.

(ப-ரை.) எறிதிரை வீசும் அலைகள், சென்று உலாம்-சென்றுஉலாவுகின்ற, சேர்ப்ப-கடற்றுறையையுடையவரசனே, நன்கு ஒன்று-நன்றியாகியவொன்றை, அறிபவர்-உணர்பவர், நாழி-நாழியரிசியேயெனினும், கொடுப்பவர்க்கு-தருபவர்க்கு, என்றும்-எந்நாளும், உறுதியே சூழ்க-கடைப்பிடியாயுள்ளவற்றை நினைக்குக, அதுபோல-அந்நன்றிபோல, நீர் போயும்-கடல்வழியாய்ச் சென்றாலும், ஒன்று-ஒன்று, இரண்டாம்-இரண்டாகப் பயன்படுகின்ற, வாணிகம் வியாபாரம், இல்-பிறிதில்லை.

(பொ-ரை.) கடற்றுறையையுடைய வரசனே! நன்றியாகிய வொன்றையறிபவர் நாழியரிசியேயெனினுங் கொடுப்பவருக்கு எந்நாளும் உறுதியைச்செய்குக. அந்நன்றிபோல ஒன்று இரண்டாகப் பயன்கொடுக்கும் வியாபாரம் பிறிதில்லை.

(க-ரை.) நன்றியை மறவாதிருத்தலின் மேலான தருமம் வேறில்லை.

(இ-பு.) அறிபவர்-எழுவாய். சூழ்க-பயனிலை. நாழி-ஆகுபெயர். சூழ்க - வியங்கோள்வினைமுற்று. உலாவும் என்பது உலாம் என விடைக்குறைந்துநின்றது. (கஉச)

நாடி நமரென்று நன்குபுறந் தந்தார்க்குக்
கேடு பிறரோடு சூழல்—கிளர்மணி
நீடுகல் வெற்ப நினைப்பின்றித் தாமிருந்த
கோடு குறைத்து விடல்.

(ப-ரை.) கிளர்-விளங்கும், மணி-இரத்தினங்களையுடைய, வெற்ப-மலைநாட்டரசனே, நாடி-ஆராய்ந்து, நமரென்று-நமக்கு இவர்தமராவரென்று மதித்து, நன்கு-மிகவும், புறந்தந்தார்க்கு-காத்தவருக்கு, பிறரோடு கேடு சூழல்-பிறரோடுசேர்ந்து கேடுசூழுதல், நினைப்பின்றி-உணர்வின்றி, தாமிருந்த-தாமிருந்த, கோ

டு-மரக்கொம்பை, குறைத்துவிடல்-குறைந்துவிட்டதனோடொக்கும்.

(பொ-ரை.) மலைநாட்டரசனே! நமக்கு இவர் தமராவரென்று மதித்து மிகவுங் காத்தவருக்குப் பிறரோடுசேர்ந்து கேடுசூழ்தல் உணர்வின்றித் தாமிருந்த மரக்கொம்பைக் குறைத்துவிட்டதனோடொக்கும்.

(க-ரை.) தன்னைக் காத்தவருக்குக் கேடுசெய்தல் தனக்கே குற்றமாம்.

(இ-பு.) சூழ்தல்-எழுவாய். ஒக்கும்-பயனிலை. நமர்=நம்மவர், புறந்தருதல், காத்தல், வெற்ப-விளியுருபேற்ற பெயர்கள்.)

இன்றி யமையா விருமுது மக்களும் [வோ
பொன்றினமை கண்டும் பொருள் பொருளாக்—கொள்ப
ஒன்றும் வகையா னறஞ்செய்க வூர்ந்துருளின்
குன்றும் வழிதடுப்ப தில்.

(ப-ரை.) இன்றியமையா-தம்மையின்றியுயிர்வாழாத, இருமுதுமக்களும்-தாயுந் தந்தையும், பொன்றினமை-இறந்துபோயினமை, கண்டும்-அறிந்தும், பொருள்-பொருளை, பொருளாகக்கொள்பவோ-பொருளாக மனத்திற் கொள்வாரோ, ஒன்றும்வகையால்-தமக்குப் பொருந்தும் வகையால், அறஞ்செய்க-தருமத்தைச்செய்க, குன்று-மலையும், ஊர்ந்து உருளின்-ஊர்ந்து உருளுமாயின், வழிதடுப்பது-அது உருளும் வழியைத் தடுக்குந்தடை, இல்லை-ஒன்றில்லை, (அதுபோலத் தாமிறக்கும்பொழுது முன் சம்பாதித்துவைத்த பொருளாற் றடுக்கமுடியாது)

(பொ-ரை.) தம்மையின்றி உயிர்வாழாத தாய்தந்தையரிருவரும் இறந்தமையைக் கண்டும் பொருளை ஒருபொருளாக மதிப்பாரோ, ஆதலால் தமக்கு இயலும்வகையாற் றருமத்தைச்செய்குக. மலை உருளுமாயின் அதைத்தடுக்கக்கூடிய தடையில்லை. அதுபோலத் தாமிறக்கும்பொழுது முன் சம்பாதித்த பொருளாற்றடுக்கமுடியாது.

(க-ரை.) தேடியபொருள் மரணத்தைத் தடுக்காது ஆதலால் அதுகொண்டு தருமஞ்செய்யவேண்டும்.

(இ-பு.) பெரியோர், ஒருவர்-தோன்றா எழுவாய். கொள்ப, செய்க-பயனிலை. பொன்றினமை-தொழிற்பெயர். அமையாத என்னும் பெயரெச்சத் தகரம் விகாரத்தாற் றொக்கது. (௧௨௯)

மாய்வதன் முன்னே வகைப்பட்ட நல்வினையை
ஆய்வின்றிச் செய்யாதார் பின்னை—வழிநினைந்து
நோய்காண் பொழுதி னறஞ்செய்வார்க் காணாமை
நாய்காணிற் கற்காணா வாறு.

(ப-ரை.) மாய்வதன்முன்னே-தமக்கிட்ட வாழ்நாள் நீங்குமுன்னே, வகைப்பட்ட-கூறுபட்ட, நல்வினையை-தருமத்தை, ஆய்வு இன்றி (இன்னநாட்செய்வோமென்று) ஆராயாமல், செய்யாதார்-(கையிற் பொருள்பெற்றவுடனே) செய்யாதவர், பின்னை வழி-பிற்காலத்திற் செய்வோமென்று, நினைந்து-நினைந்திருந்து, நோய்காண்பொழுதில்-தமக்கொரு நோயுறுதியாக வந்தபொழுதே, அறஞ்செய்வார்-அறஞ்செய்வாரை, காணாமை-காணப்பெறாமை, நாய்காணில்-நாயைக் கண்டபொழுது- கற்காணாவாறு-கல்லைக்காணாததுபோலும்.

(பொ-ரை.) ஒருவன் தமது வாழ்நாள் நீங்குமுன்னே தருமத்தை இன்னநாட்செய்வோமென்று விசாரியாமற் பொருள் கிடைத்தவுடனே செய்யாது பின்புசெய்வோமென்று நினைத்திருந்து, தமக்கொரு நோயுறுதியாக வந்தபொழுது அறஞ்செய்யக் கருதித் தம்பொருளைக்கொண்டு அறஞ்செய்கவென்று சொன்னால் அவர் சொன்னவாறே அறஞ்செய்வாரைப் பெறாமை நாய் கண்டபொழுது கற்காணப்படாததுபோலும்.

(க-ரை.) பொருள் கிடைத்தபொழுது தருமஞ்செய்யாதவர் பயனடையார்.

(இ-பு.) காணாமை-எழுவாய். ஒக்கும்-தோன்றாப்பயனிலை.

காணுமை-தொழிற்பெயர். காணுத என்பது-காணுஎன ஈறுதொக்கநின்றது. ஆறு-உவமவுருபு. (கஉஎ)

தமரேயுந் தம்மைப் புகழ்ந்துரைக்கும் போழ்தில்
அமரா ததனை யகற்றலே—வேண்டும்
அமையாரும் வெற்ப வணியாரே தம்மைத்
தமவேனுங் கொள்ளாக் கலம்.

(ப-ரை.) அமை-மூங்கில், ஆரும்-நிறைந்த, வெற்ப-மலைநாட்டரசனே, தமரேயும்-சுற்றத்தாராயினும், தம்மைப்புகழ்ந்து-தம்மைப்புகழ்ந்து, உரைக்கும்-சொல்லும், போழ்தில்-காலத்தில், அமராத அதனை-தம்மோடு பொருந்தாத புகழை அவர்சொல்லாமல், அகற்றல்வேண்டும்-நீக்கல்வேண்டும், தமவேனும்-தம்முடைய ஆபரணமாயினும், கொள்ளாக்கலம்-அணியத்தகாத ஆபரணத்தால், தம்மை அணியாரே-(ஒருவர்) தம்மையலங்கரியார்.

(பொ-ரை.) மலைநாட்டரசனே! ஒருவர் தாம் அணியத்தகாத ஆபரணங்களை உடையவராயிருந்தாலும் அவற்ருற்றம்மையணிந்துகொள்ளமாட்டார் அதுபோலச் சுற்றத்தாராயினும் தம்மைப் புகழ்ந்துரைக்கும்பொழுது தம்மோடு பொருந்தாதபுகழை அவர் சொல்லாமல் நீங்கல்வேண்டும்.

(க-ரை) தமக்கில்லாத குணத்தையெடுத்துப் புகழ்ந்தால் அதை யேற்றுக்கொள்ளக்கூடாது.

(இ-பு.) ஒருவர்-தோன்ரு எழுவாய். அகற்றல்வேண்டும்-பயனிலை. தம்-குறிப்புவினைமுற்று. அ-பலவின்பால்விகுதி. ஏகாரம்-தேற்றம். (கஉஅ)

மறுமனத்தா னல்லாத மாநலத்த வேந்தன்
உறுதனத்த னாகி யொழுகின்—செறுமனத்தார்
பாயிரங் கூறிப் படைதொக்க லென்செய்ப
ஆபிரங் காக்கைக்கோர் கல்.

(ப-ரை.) மறு-குற்றமுடைய, மனத்தான் அல்லாத-மனத்தையுடையவனல்லாத, மாநலத்த-பெரிய நலத்தையுடைய, வேந்தன்-அரசன், உறுமனத்தன் ஆகி-எல்லார்மேலும் அன்புடைய மனத்தனாகி, ஒழுகின்-ஒழுகுவானானால், செறுமனத்தார்-கோபிக்குமனத்தையுடையபகைவர், பாயிரங்கூறி-வீரத்துக்குவேண்டும் முகவுரைகளைச்சொல்லி, படைதொக்கல்-சேனைகளைத் திரட்டலால், என்செய்ப-அவ்வரசனை யாதுசெய்யவல்லவராவர், ஆயிரங்காக்கைக்கு-ஆயிரங் காக்கைக்கு, ஓர்கல்-ஒருகல்லெறிபோல நிற்கும் (அவர் சென்றமுறை.)

(பொ-ரை.) பெரிய நலத்தையுடைய அரசன் எல்லார்மேலும் அன்புடையனாகி யொழுகுவானானால் சத்துருக்கள் வீரத்துக்குரிய முகவுரைகளைச் சொல்லிச் சேனையைத் திரட்டலால் அவ்வரசனை யாதுசெய்ய வல்லவராவர். அவர் சென்றமுறை ஆயிரங்காக்கைக்கு ஒரு கல்லெறிபோலும்.

(க-ரை.) குடிகளிடத்து அன்புள்ளவரசனைப் பகைவர் திரண்டும் வெல்லமுடியாது.

(இ-பு.) மனத்தார்-எழுவாய். என்செய்ப-பயனிலை. உறுமனத்தார், செறுமனத்தார்-வினைத்தொகை. செய்ப-உயர்திணைப் பலர்பாற்படர்க்கை வினைமுற்று. (௧௨௯)

கற்றறிந்தார் கண்ட வடக்க மறியாதார்
பொச்சாந்துந் தம்மைப் புகழ்ந்துரைப்பார்—தெற்ற
அறைகல் லருவி யணிமலை நாட
நிறைகுட நீர்தளும்ப லில்.

(ப-ரை.) தெற்ற-தெளிவாக, அறைகல்-பாறைக்கல்லிலே, அருவி-சலம்வந்துவிழும், அணிமலைநாட-அழகிய மலைநாட்டரசனே, கற்றறிந்தார்-நூல்களைக் கற்றறிந்தவர், கண்டது-அறிந்தது, அடக்கம்-அடக்கத்திற்குக் காரணமாம், அடங்காதார்-கற்றறிந்து அடங்காதார், பொச்சாந்தும்-மறந்தும், தம்மை-தம்மை, புகழ்ந்து உரைப்பர்-புகழ்ந்து கூறுவர், நீர்நிறைகுடம்-நீர்நிறை

ந்தகுடம், தளும்பல்-தளும்புதல், இல்-இல்லை, (குறைகுடமே தளும்பும்.)

(பொ-ரை.) அழகிய மலைநாட்டரசனே! நூல்களைக் கற்றறிந்தவர் அறிந்தது அடக்கத்திற்குக் காரணமாம். கற்றறியார் மறந்தும் தம்மைப் புகழ்ந்து கூறுவர். நிறைகுடம் தளும்புதலில் குறைகுடமே தளும்பும்.

(க-ரை.) கற்றவர் அடங்குவர், கல்லார் அடங்கார்.

(இ-பு.) கண்டது, அடங்கார்-எழுவாய். அடக்கம், உரைப்பர்-பயனிலை. அறிந்தார் என்றும், கற்றறியாரென்றும் பாடம். பொச்சாந்து, புகழ்ந்து-இறந்தகாலவினையெச்சம். (கரு0)

கோவாத சொல்லுங் குணமில்லா மாக்களை
நாவா யடக்க லரிதாகும்—நாவாய்
களிகள்போற் றாங்குங் கடற்சேர்ப்ப வாங்கி
வளிதோட் கிடுவாரோ வில்.

(ப-ரை.) களிகள்போல்-கள்நுகர்ந்து ஆடுங் களிகளைப் போல, நாவாய்-மரக்கலங்கள், தூங்கும்-அசையும், கடற்சேர்ப்ப-கடற்கரையையுடையவரசனே, கோவாத-பொருத்தமில்லாதவற்றை, சொல்லும்-சொல்லுகின்ற, குணம்இல்லா-குணமில்லாத, மாக்களை-மனுடர்களை, நாவாய் நாக்கையும் வாயையும், அடக்கல்-அடக்கும்படிசெய்தல், அரிதுஆகும்-பிறருக்கு அரிதாகும், வளி வாங்கி-காதணியை வாங்கி, தோட்கு-தோளுக்கு, இடுவாரோ-அணிவாரோ, இல்-இல்லை (அதுபோல.)

(பொ-ரை.) மரக்கலங்கள் செல்லுங் கடற்கரையையுடையவரசனே! வாளியென்னுங் காதணியைவாங்கித் தோளுக்கு இடுதல் கூடாததுபோல பொருந்தாதவற்றைச் சொல்லுங் குணமில்லாத மனுடர்களை நாக்கையும் வாயையு மடக்குதல் கூடாது.

(க-ரை.) பொருத்தமில்லாத சொற்களைச் சொல்பவருடைய நாவை யடக்கல் முடியாது.

(இ-பு.) அடக்கல்-எழுவாய். அரிது-பயனிலை. குணம் குணை ன் எனப் போலியாயிற்று. (கஙக)

உடைப்பெருஞ் செல்வத் துயர்ந்த பெருமை
அடக்கமி லுள்ளத்த னாகி—நடக்கையில்
ஒள்ளிய னல்லான்மேல் வைத்தல் குரங்கின் கைக்
கொள்ளி கொடுத்து விடல்.

(ப-ரை.) உடைப்பெருஞ் செல்வத்து-உடைய பெருஞ்செல்வத்தினால் வரும், உயர்ந்த-உயர்ந்த, பெருமை-பெருமையை, அடக்கம் இல்-பிறரால் அடக்கவும் அடங்காத, உள்ளத்தனாகி-மனத்தையுடையனாகி, நடக்கையில்-ஒழுக்கத்தால், ஒள்ளியன் அல்லான்-சிறப்பு இல்லாதவனை, மேல் வைத்தல்-மேலாகவைத்தல், குரங்கின்கை-குரங்கினது கையில், கொள்ளி-கொள்ளிக் கட்டையை, கொடுத்துவிடல் கொடுத்துவிடுதலோடொக்கும்.

(பொ-ரை.) உடைப்பெருஞ் செல்வத்தினால் வரும் உயர்ந்ததன்மையைப் பிறரால் அடக்கவும் அடங்காத மனத்தையுடையவனாகி ஒழுக்கத்தாற் சிறப்பில்லாதவனை, மேல்வைத்தல் குரங்கின்கையிலே கொள்ளிக்கட்டையைக் கொடுத்துவிடுதலோடொக்கும்.

(க-ரை.) ஒழுக்கமில்லாதவனிடத்தில் அதிகாரத்தை வைத்தல் கூடாது.

(இ-பு.) வைத்தல்-எழுவாய், ஒக்கும்-தோன்றாப் பயனிலை. செல்வத்துயர்ந்த-மூன்றாம் வேற்றுமைத்தொகை. ஒள்ளியன்-ஒண்மையென்னும் பண்படியாகவந்த பெயர். (கஙஉ)

எண்ணக் குறைபடாச் செல்வமு மிற்பிறப்பும்
மன்ன ருடைய வுடைமையுட்—மன்னரால்
இன்ன ரெனல்வேண்டா விம்மைக்கு மும்மைக்கும்
தம்மை யுடைமை தலை.

(ப-ரை.) எண்ண-எண்ணுகைக்கு, குறைபடா-அளவுபடாத, செல்வமும்-செல்வத்தாலும், இப்பிறப்பும்-குடிப்பிறப்பாலும், மன்னர்-அரசரை, உடைய-தமக்குறுதியாக்கிக்கொண்ட, உடைமையும்-உடைமையாலும், மன்னரால்-பிற அரசரால், இன்னர் எனல்-தம்மை இத்தன்மையரென்று மதிக்கும்படி புகழுக்காயின செய்தல், வேண்டா-வேண்டுதலில்லை, இம்மைக்கும்-இப்பிறப்பிற்கும், உம்மைக்கும்-மறுபிறப்பிற்கும், தம்மை உடைமை-உறுதிபயக்குந்தலைமையாகத் தம்மனத்தைத் தம்வயத்ததாக்கித் தம்மையுணர்தலே, தலை-தலையாய காரியம்.

(பொ-ரை.) அளவுபடாத செல்வத்தாலும் குடிப்பிறப்பாலும் அரசரைத் தமக்குறுதியாக்கிக்கொண்ட உடைமையாலும் பிறவரசரால் தம்மை இத்தன்மையரென்று மதிக்கும்படி புகழுக்காயின செய்தல் வேண்டுவதில்லை. இம்மைக்கும் மறுமைக்கும் உறுதிபயக்குந் தலைமையாகத் தம்மனத்தைத் தம்வயத்ததாக்கித் தம்மையுணர்தலே தலையாகிய காரியம்.

(க-ரை.) தம்மனதைத் தம்வசமாக்கிக் கொள்ளலே சிறந்தது.

(இ-பு.) உடைமை-எழுவாய். தலை-பயனிலை. செல்வம், இற்பிறப்பு உடைமை-இவ்விடங்களில் ஆல் உருபு விரிக்குக.

அருமை யுடைய பொருளுடையார் தங்கண்
கருமமுடையாரை நாடார்—எருமைமேல்
நாரை துயில்வதியு மூர குளந்தொட்டுத்
தேரை வழிச்சென்றார் இல்.

(ப-ரை.) எருமைமேல் எருமையின்மேல், நாரைதுயில்வதியும்-நாரை நித்திரைசெய்யும், ஊர-மருதநிலத்தையுடையவரசனே, அருமையுடைய-பெறுதற்கரிய, பொருள் உடையார்-பொருள்யாதானுமொன்றனையுடையார், தங்கண்-தம்மிடத்து, கருமம்-கொள்ளுந்தொழிலை, உடையாரை-உடையவரை, நாடார்-தேடமாட்டார், குளம்-குளத்தை, தொட்டு-தோண்டி, தேரை-

(அதன்கணுறைவதற்காகத்) தவளை, வழி-பின்னே, சென்றார் இல்-சென்றவர் இல்லை. (அதுபோல.)

(பொ-ரை.) மருதநிலத்தையுடைய அரசனே! குளத்தைத் தோண்டி அதன்கண் உறைவதற்காகத் தவளையுள்ள விடந்தேடிச் சென்றவர் இல்லை, அதுபோல பெறுதற்கரிய பொருள் யாதானுமொன்றனை யுடையார் தம்மிடத்துக்கொள்ளுந் தொழிலையுடையவரை, ஆராயவேண்டுவதில்லை.

(க-ரை.) அன்புடையவரிடத்தில் பலருந் தாமேவந்தடைவர்.

(இ-பு.) பொருளுடையார்-எழுவாய். நாடார் - பயனிலை. தொட்டு-இறந்தகால வினையெச்சம். (௧௩௪)

பொல்லாது சொல்லி மறைந்தொழுகும் பேதைதன்
சொல்லாலே தன்னைத் துயர்ப்படுக்கும்—நல்லாய்
மணலின் முழுகி மறைந்து கிடக்கும்
நுணலுந்தன் வாயாற் கெடும்.

(ப-ரை.) நல்லாய்-பெண்ணே, பொல்லாது-தீயவற்றை, சொல்லி-பிறரைச் சொல்லி, மறைந்து ஒழுகும்-கரந்து நடக்கும், பேதை-அறிவிலி, தன்சொல்லாலே-தான் சொல்லுஞ் சொல்லாலே, தன்னை-தன்னை, துயர்ப்படுக்கும்-துன்பத்தின்கண் அகப்படுத்தும், மணலுள்-மணலுள்ளே, மூழ்கிமறைந்து கிடக்கும் முழுகியொளித்துக்கிடக்கும், நுணலும்-தவளையும், தன்வாயால்-(தனதுகுரலைக்காட்டித்) தனது வாயினால், கெடும்-தன்னைத்தின்பார்க்கு அகப்படுத்தும் (அதுபோலும்.)

(பொ-ரை.) பெண்ணே! மணலுள் மூழ்கி ஒளித்து உறையும் தவளையும் தன் குரலைக் காட்டித் தன் வாயாற் றன்னைத் தின்பார்க்கு அகப்படுத்தும் அதுபோல் பொல்லாதனவற்றைப் பிறரைச் சொல்லிக் கரந்துநடக்கும் அறிவிலான் தான்சொல்லுஞ் சொல்லாலே தன்னைத் துன்பத்தின்கண் அகப்படுத்துவான்.

(க-ரை.) பிறர்குற்றங்கூறுவோர் தமக்குத்தாமே துன்பம் வருவிப்பர்.

(இ-பு.) பேதை-எழுவாய், துயர்ப்படுக்கும்-பயனிலை. பொல்லாது-வினையாலணையும் பெயர். பேதை-உயர்திணை இருபாற்குமுரிய பெயர். உம்மை-இழிவுசிறப்பு. (கருரு)

மிக்குப் பெருகி மிகுபுனல் பாய்ந்தாலும்
உப்பொழிதல் செல்லா வொலிகடல்போல்—மிக்க
இனநல நன்குடைய வாயினு மென்றும்
மனநல மாகாவாங் கீழ்.

(ப-ரை.) மிக்குப்பெருகி - மிகப்பிரவாகித்து, மிகுபுனல்-யாற்றுநீர், பாய்ந்தாலும்-புகப்பாயினும், ஒலிகடல் ஒலிக்கின்ற கடல், உப்பு ஒழிதல்செல்லா-உவர்ப்பு நீங்காது அதுபோல, மிக்க இனநலம்-மிக்க இனத்தின் நன்மை, நன்குஇடைய ஆயினும்-மிக உண்டாயினும், என்றும்-எந்நாளும், மனநலம்-மனத்தால் நல்லன, ஆகாவாம்-ஆகமாட்டார், கீழ்-கீழ்மக்கள்.

(பொ-ரை) மிகப்பெருகி யாற்றுநீர் புகப்பாயினும் கடல் உவர் நீங்காததுபோல கீழ்மக்கள் மிக இனத்தின் நன்மையுண்டாயினும் எந்நாளும் மனத்தால் நல்லவர் ஆகமாட்டார்.

(க-ரை) கீழ்மக்கள் மேன்மக்களோடு கூடினாலும் அவர் மனம் நன்றாவதில்லை.

(இ-பு.) கீழ்-எழுவாய். ஆகா-பயனிலை. கீழ்-பண்பாகுபெயர். மிகுபுனல்-வினைத்தொகை. செல்லாத என்பது செல்லா என இறுதிகெட்டுநின்றது. மனநலம் - மனத்தாலாகிய நலம் எனவிரியும். ஆம்-அசை. (கருசு)

முறைதெரிந்து செல்வார்க்கு நல்கூர்ந் தவர்க்கும்
இறைதிரியா நேரொக்கல் வேண்டும்—முறைதெரிந்து
நேரொழுகா ரேயி னதுவா மொருபக்கம்
நீரொழுகிப் பாலொழுகு மாறு.

(ப-ரை.) செல்வர்க்கும்-செல்வமுடையவர்க்கும், நல்கூர்ந்தவர்க்கும்-வறியவருக்கும், முறை தெரிந்து-செய்பு முறைமையை யறிந்து, இறைதிரியாது-சிறிதும் வழுவாதே, நேரொக்கல்வேண்டும்-நடுவாகச் செய்யவேண்டும், முறைதெரிந்து-முறைமையை யறிந்து, நேர் ஒழுகாறுயின்-அரசன் நடுவாகச் செய்யாறுயின், அது-அது, ஒருபக்கம்-ஒருபிள்ளையின்பக்கத்துத் தாய்முலையால், பால் ஒழுகி-பாலொழுகி, நீரொழுகுமாறு-ஒருபிள்ளையின் பக்கத்து நீரொழுகுமாறு, ஆம்-ஆம்.

(பொ-ரை.) செல்வருக்கும் வறியவருக்கும் செய்யுமுறைமையறிந்து வழுவாதே நடுவாகச் செய்யவேண்டும். முறைதெரியாது அரசன் நடுவாகச்செய்யாறுயின் அது ஒருபிள்ளையின் பக்கத்துத் தாய்முலையாற் பாலொழுகி ஒருபிள்ளையின் பக்கத்து நீரொழுகுமாறுபோலும் ஆம்.

(க-ரை.) அரசன் நடுவுநிலைமையில் தவறக்கூடாது.

(இ-பு.) அது-எழுவாய். ஆம்-பயனிலை. முறைதிரிந்தென்றூற் பாடம். (௬௩எ)

புன்சொல்லு நன்சொல்லும் பொய்யின் றுணர்கிற்பார்
வன்சொல் வழியராய் வாழ்தலு முண்டாமோ
புன்சொ லிடர்படுப்ப தல்லா லொருவனை
இன்சொ லிடர்ப்படுப்ப தில்.

(ப-ரை.) புன்சொல்லும்-புன்சொல்லால்வரும் பயனையும், நன்சொல்லும்-நல்லசொல்லால்வரும் பயனையும், பொய்யின்று-பழுதின்றி, உணர்கிற்பார்-உணரவல்லார், வன்சொல்-பிறரை வன்சொற்சொல்லியொழுகும், வழியராய்-நெறியராய், வாழ்தலும்-ஒழுகுதலும், உண்டாமோ-உண்டாகுமோ, புன்சொல்-தான் பிறரைச்சொல்லும் புன்சொல், ஒருவனை இடர்ப்படுப்பது அல்லால்-ஒருவனைத் துன்பத்துட் படுத்துவதல்லது, (தான்பிறரைச் சொல்லும்) இன்சொல்-இனியசொல், இடர்ப்படுப்பது-தனக்குத் துன்பத்தைத் தருவது, இல்-இல்லை,

(பொ-ரை.) புன்சொல்லால் வரும் பயனையும் நன்சொல்லால் வரும்பயனையும் பகுதின்றியறியவல்லார் பிறரை வன்சொற் சொல்லியொழுகும் நெறியராய் வாழ்தல் இல்லை. தான் பிறரைச் சொல்லும் புன்சொல் தன்னைத் துன்பஞ்செய்வதே யல்லாமல் இன்சொல் துன்பஞ்செய்வதில்லை.

(க-ரை.) அறிவுடையோர் புன்சொற்களைக் கூறுர்.

(இ-பு.) வாழ்தல்-எழுவாய். உண்டாமோ-பயனிலை' உணர்கிற்பார் என்பதில்-கில் என்பது ஆற்றலையுணர்த்தும் இடைநிலை. ஓ-எதிர்மறைப்பொருளில் வந்தது. (கருஅ)

நல்லாதனுர்

இயற்றிய

திரிகடுகம்.

தன்குணங் குன்றுந் தகைமையுந் தாவில்சீர்
இன்குணத்தா ரேவின செய்தலும்—நன்குணர்வின்
நான்மறை யாளர் வழிச்செலவு மிம்மூன்றும்
மேன்முறை யாளர் தொழில்.

(ப-ரை.) தன்-தனது, குணம்- (குடிப்பிறப்பின்) குணம், குன்றுத் தகைமையும்-குறைவுபடாமைக்கு ஏதுவாகிய ஒழுக்கமும், தா இல் சீர்-அழிவில்லாத கீர்த்தியைத் தருகின்ற, இன் குணத்தார்-இனியகுணத்தை யுடையோர், ஏவின-ஏவிய தொழில்களை, செய்தலும்-செய்தலும், நன்கு உணர்வின்-தருமவியல்பையறியும் அறிவுடைய, நான்மறையாளர்-பிராமணர்களது, வழிச்செலவும்-வழியிலே நடத்தலும், இம்மூன்றும், மேல்முறையா

ளர்-மேலாகிய முறையினை யுடையவரது, தொழில்-தொழில்க ளாம்.

(பொ-ரை.) தனது குடிப்பிறப்பின் குணம் குறைவுபடா மைக் கேதுவாகிய வொழுக்கமும், இனியகுணத்தையுடையோர் ஏவிய தொழில்களைச் செய்தலும், அறிவுடைய பிராமணர்களது வழியிலே நடத்தலும் ஆகிய இம்மூன்றும் மேலாகிய முறையினை யுடையவரது தொழில்களாம்.

(இ-பு.) மூன்று-எழுவாய். தொழில்-பயனிலை. குன்று-ஈறுகெட்ட எதிர்மறைத் தொழிற்பெயர். ஏவின-வினையாலணை யும்பெயர். நன்கு-பண்புச்சொல். நான்மறை, இருக்கு, யசுர், சாமம், அதர்வம். (கஙகூ)

தாளாள னென்பான் கடன்படா வாழ்பவன்
வேளாள னென்பான் விருந்திருக்க வுண்ணாதான்
கோளாள னென்பான் மறவாதா னிம்மூவர்
கேளாக வாழ்த லினிது.

(ப-ரை.) தாளாளன் என்பான்-முயற்சியையுடையனென் று சொல்லப்படுகின்றவன், கடன்படா-கடன்படாது, வாழ்ப வன்-வாழ்கின்றவன், வேளாளன் என்பான்-உபகாரி என்று சொல்லப்படுவான், விருந்து-விருந்தினரை, இருக்க-விட்டு, உண் ணாதான்-தான் புசியாதவன், கோளாளன் என்பான்-(பிறர் விதி த்த காரியங்களை மனத்திற்) கொள்ளுதலில் வல்லவனென்று சொல்லப்படுவான், மறவாதான்-(பின்பு அவற்றை) மறவாத வன், இம்மூவர்-இம்மூவரையும், கேள் ஆக-தனக்கு நட்பாளராக ச் செய்துகொண்டு, வாழ்தல்-வாழ்வது, இனிது-(ஒருவனுக்கு) இன்பத்தைத் தருவதாகும்.

(பொ-ரை.) கடன்படாது வாழ்பவன், விருந்தினரை விட் டுத் தான் புசியாதவன், பிறரறிவித்தவற்றை மனத்திற்கொண்டு பின்பு அவற்றை மறவாதவன் ஆகிய இம்மூவரையும் தனக்கு நட் பாளராகச் செய்துகொண்டுவாழ்தல் இன்பத்தைத் தருவதாகும்

(இ-பு.) வாழ்தல்-எழுவாய். இனிது-பயனிலை. எனப்படுவா ன் என்பது என்பானெனச் செயப்படுபொருள் விகுதிகெட்டு நின்றது. தாள்-முயற்சி வேளாண்மை-உபகாரம். கேள்-நட்பு. ()

வருவாயுட் கால்வழங்கி வாழ்தல் செருவாய்ப்பச்
செய்தவை நாடாச் சிறப்புடைமை—எய்தப்
பலநாடி நல்லவை கற்றலிம் மூன்றும்
நலமாட்சி நல்லவர் கோள்.

(ப-ரை.) வருவாயுள்-(தமக்கு) வரும்பொருள்களிலே, கால்-நாலிலொருபங்கு, வழங்கி-தருமத்திற் செலவுசெய்து, வாழ்தல்-வாழ்தலும், செருவாய்ப்ப-போரினிடத்தே வெற்றி கிடைக்க, செய்தவை-தான்செய்த காரியங்கள், நாடா-ஆராயாதபடி, சிறப்புடைமை-யாவர்க்கும் விளங்கித்தோன்றும் சிறப்புடையனுதலும், எய்த-நிரம்ப, பலநாடி-பலவற்றையும் ஆராய்ந்து, நல்லவை-நல்லவைகளை, கற்றல்-கற்றலும், இம்மூன்றும்-ஆகிய இம் மூன்றும், நலமாட்சி-நற்குண நற்செய்கைகளாற் பேர்பெற்ற, நல்லவர்-நல்லவருடைய, கோள்-கொள்கைகளாம்.

(பொ-ரை.) தமக்குள்ள சம்பாத்தியத்தில் காற்பங்கு தருமத்திற் செலவுசெய்து வாழ்தலும், போரிலே வெற்றியுண்டாகத் தான் செய்தவைகள் எளிதில் யாவர்க்கும் விளங்கித்தோன்றுஞ் சிறப்புடையனுதலும், பலவற்றையுமாராய்ந்து அவற்றுள் நல்லவைகளை நிரம்பக்கற்றலும் ஆகிய இம்மூன்றும் நற்குண நற்செய்கையை யுடையவருடைய கொள்கைகளாம்.

(இ-பு.) மூன்று-எழுவாய். கோள்-பயனிலை. தன்னநுபவத்திற்கு இரண்டுபங்கும் ஆஸ்திக்கு ஒருபங்கும் அறத்திற்கு ஒரு பங்குமாகப் பங்கிட்டு வைக்கவேண்டுமென்று பொருணூலில் விதித்தலால் அறத்திற்கு நாலிலொருபங்காயிற்று. வருவாய்-தொழிலாகுபெயர். கால்-ஆகுபெயர். நாடா-ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். கோள்-முதனிலைத் தொழிற்பெயர். (கசக)

உண்பொழுது நீராடி யுண்டலு மென்பெறினும்
பால் பற்றிச்சொல்லா விடுதலுந் தோல்வற்றிச்

சாயினுஞ் சான்றாண்மை குன்றாமை யிம்மூன்றும்
தூஉய மென்பார் தொழில்.

(ப-ரை.) உண்பொழுது - உண்ணும்பொழுது, நீர் ஆடி-ஸ்நானம்பண்ணி, உண்டலும்-உண்ணுதலும், என்பெறினும்-யாது பயன்பெறுவதாயினும், பால்பற்றி-ஒரு பக்ஷத்தைப்பற்றி, சொல்லாவிடுதலும்-சொல்லாதிருத்தலும், தோல்வற்றி-பசியால் உடம்புவற்றி, சாயினும்-இறத்தல் சமீபித்தவிடத்தும், சான்றாண்மை-தன்பெருமை, குன்றாமை-குறையாமல் நடத்தலும், இம்மூன்றும், தூஉயம் என்பார்-மனமொழிமெய்களால் யாம் பரிசுத்தராகக் கடவோமென்று நினைப்பவருடைய, தொழில்-செய்கைகளாம்.

(பொ-ரை.) ஸ்நானம்பண்ணி யுண்ணுதலும், ஒருபக்ஷத்தைப்பற்றிச் சொல்லாதிருத்தலும், பசியால் உடம்பு வற்றியிறத்தல் சமீபித்தவிடத்தும் தன் பெருமை குறையாமல் நடத்தலும் ஆகிய மூன்றும் மனமொழி மெய்களால் பரிசுத்தராகக் கடவோமென்று நினைப்பவருடைய தொழில்களாம்.

(இ-பு.) மூன்று-எழுவாய். தொழில்-பயனிலை. வற்றி-வினையெச்சம்; அது சாயின் என்னும் எச்சத்தைக்கொண்டு முடிந்தது. தோல்-ஆகுபெயர். (கசஉ)

தன்னச்சிச் சென்றாரை யெள்ளா வொருவனும்
மன்னிய செல்வத்துப் பொச்சாப்பு நீத்தானும்
என்று மழுக்கா றிகந்தானு மிம்மூவர்
நின்ற புகழுடை யார்.

(ப-ரை.) தன்நச்சி-தன்னை விரும்பி, சென்றாரை-அடைந்த இரவலரை, எள்ளா-இகழாத, ஒருவனும்-ஒப்பற்றவனும், மன்னிய-நிலையான, செல்வத்து-செல்வம் பெற்றகாலத்து, பொச்சாப்பு-மறதியை, நீத்தானும்-நீங்கினவனும், என்றும்-எப்போதும், அழுக்காறு- (பிறர் செல்வங்கண்டு) பொறாமை, இகந்தானும்-நீங்கினவனும், இம்மூவர்-ஆகிய இம்மூவரும், நின்ற-நிலைபெற்ற, புகழ் உடையார்-புகழையுடையவராவர்.

(பொ-ரை.) தன்னை விரும்பி அடைந்த இரவலரை இகழாதவனும், செல்வம் பெற்றகாலத்து மறதியைவிட்டவனும், பிறர் செல்வங்கண்டு பொறாமை கொள்ளாதவனும் ஆகிய மூவரும் நிலைபெற்ற புகழுடையராவர்.

(இ-பு.) மூவர்-எழுவாய். உடையார்-பயனிலை. நச்சி-வினையெச்சம்; அது சென்றார் என்னும் வினையாலணையும் பெயரைக் கொண்டு முடிந்தது. எள்ளா-ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். நீத்தான், இகந்தான் வினையாலணையும் பெயர்கள். நின்ற-பெயரெச்சம். (கசங)

கோலஞ்சி வாழுங் குடியுங் குடிதழீஇ
ஆலம்வீழ் போலு மமைச்சனும்—வேலின்
கடைமணிபோற் றிண்ணியான் காப்புமிம் மூன்றும்
படைவேந்தன் பற்று விடல்.

(ப-ரை.) கோலுக்கு-தன் செங்கோலுக்கு, அஞ்சி-பயந்து, வாழும்-வாழாநின்ற, குடியும்-குடியும், குடிதழீஇ-குடிகளைத்தழுவி, ஆலம் வீழ்போலும்-ஆலம்விழுதுபோலத் தாங்கவல்ல, அமைச்சனும்-மந்திரியும், வேலின்-வேலினிடத்து, கடைமணிபோல்-பூண்போல, திண்ணியான்-திட்பமுடையவனுடைய, காப்பும்-காவலும், இம் மூன்றும்-ஆகிய இம்மூன்றையும், படைவேந்தன்-சேனையையுடையவரசன், பற்றுவிடல்-பற்றுவிடாதொழுகுக.

(பொ-ரை.) செங்கோனுக்குப் பயந்து வாழாநின்ற குடியும், குடியைத்தழுவித் தாங்கவல்ல அமைச்சனும், திண்மையுடையவனது காவலும் ஆகிய இம்மூன்றையும் அரசன் பற்றுவிடாதொழுகுக,

(இ-பு.) வேந்தன்-எழுவாய். விடல்-பயனிலை. விடல்-அல் ஈற்று எதிர்மறை வியங்கோள் வினைமுற்று. வீழ்-முதனிலைத் தொழிற்பெயர். அது ஆகுபெயராய் விழுதை உணர்த்திற்று. படைவேந்தன்-இரண்டாம்வேற்றுமை யுருபும் பயனுமுடன்றொக்க தொகை. (கசச)

முந்நீர்த் திரையி னெழுந்தியங்கா மேதையும்
நுண்ணூற் பெருங்கேள்வி நூற்கரை கண்டானும்
மைந்நீர்மை யின்றி மயலறுப்பா னிம்மூவர்
மெய்ந்நீர்மை மேனிற் பவர்.

(ப-ரை.) முந்நீர்-சமுத்திரத்தின், திரையின்-அலைபோல, எழுந்து-எழுந்து, இயங்கா-மனம் அலையாத, மேதையும்-அறிவை யுடையவனும், நுண்-நுட்பமாகிய, நூல்-சிந்தனைகளாலும், பெரும்-மிகுதியாகிய, கேள்வி-கேள்விகளினாலும், நூல்-நூல்களின், கரை-முடிவை, கண்டானும்-கண்டவனும், மைநீர்மை-குற்றமாகிய குணத்தன்மை, இன்றி-இல்லாதபடி, மயல்-ஆசாபாசத்தை, அறுப்பான்-அறுப்பவனும், இம்மூவர்-ஆகிய இம்மூவரும், மெய்நீர்மை-மெய்க்குணத்தையுடைய, மேல்-மோக்ஷத்திலே, நிற்பவர்-நிற்பவராவர்.

(பொ-ரை.) மனமலையாத அறிவுடையவனும், நுட்பமாகிய சிந்தனையாலும் கேள்விகளாலும் நூல்களின் முடிவைக் கண்டவனும், ஆசாபாசத்தையறுப்பவனும் ஆகிய இம்மூவரும் மோக்ஷத்திலே நிற்பவராவர்.

(இ-பு.) மூவர்-எழுவாய். நிற்பவர்-பயனிலை. மைந்நீர்மை, மெய்ந்நீர்மை-பண்புத்தொகைகள். மயலறுப்பான் - இரண்டாம் வேற்றுமைத்தொகை. (௯௫)

தன்னை வியந்து தருக்கலுந் தாழ்வின்றிக்
கொன்னே வெகுளி பெருக்கலும்—முன்னிய
பல்பொருள் வெஃகுஞ் சிறுமையு மிம்மூன்றும்
செல்வ முடைக்கும் படை.

(ப-ரை.) தன்னை-தன்னை, வியந்து-மெச்சிக்கொண்டு, தருக்கலும்-அகங்கரித்தலும், தாழ்வு-அடக்கம், இன்றி-இல்லாமல், கொன்னே-வீணாக, வெகுளி-கோபத்தை, பெருக்கலும்-வளர்த்தலும், முன்னிய-முற்பட்ட, (பிறருடைய) பல்பொருள்-பலவகைப் பொருள்களையும், வெஃகும்-இச்சிக்கின்ற, சிறுமையும்-

அற்பகுணமும், இம்மூன்றும்-ஆகிய இம்மூன்றும், செல்வம்-ஒருவனுக்குச் செல்வத்தை, உடைக்கும்-அழிக்கின்ற, படை-ஆயுதங்களாம்.

(பொ-ரை.) தன்னைத்தானே மெச்சிக்கொண்டு அகங்கரித்தலும், வீணாகக் கோபத்தை வளர்த்தலும், பிறருடைய பொருளை இச்சிக்கின்ற குணமும் ஆகிய இம்மூன்றும் ஒருவனுக்குச் செல்வத்தை அழிக்கின்ற ஆயுதங்களாம்.

(இ-பு.) மூன்று-எழுவாய். படை-பயனிலை. தருக்கல்-தொழிற்பெயர். முன்னிய என்றது முன் என்னும் இடைச்சொல்லடியாகப்பிறந்த பெயரெச்சம். பல்பொருள் பண்புத்தொகை. ()

வைததனை யின்சொல்லாக் கொள்வானு நெய்பெய்த
சோறென்று கூழை மதிப்பானு—மூறிய
கைப்பதனைக் கட்டியென் றுண்பானு மிம்மூவர்
மெய்ப்பொருள் கண்டுவாழ் வார்.

(ப-ரை.) வைததனை-ஒருவன் வைதவசைகளை, இன் சொல்லா-இனிய சொல்லாக, கொள்வானும் - கொள்கின்றவனும், நெய் பெய்த-நெய் வார்த்த, சோறு என்று-சோறென்று, கூழை மதிப்பானும்-தான்பெற்றகூழை மதிக்கின்றவனும், ஊறிய கைப்பதனை-மிகுந்த கைப்புடையதாகிய ஒருணவை, கட்டி என்று-வெல்லம் என்று, உண்பானும்-உண்ணுகின்றவனும், இம்மூவர்-ஆகிய இம்மூவரும், மெய்ப்பொருள்-உண்மைப்பொருளை, கண்டு வாழ்வார்-அறிந்து வாழப்பெறுவார்.

(பொ-ரை.) ஒருவன் வைதவசைகளை இனிய சொல்லாகக் கொள்ளுகின்றவனும், நெய்வார்த்த சோறென்று கூழை மதிக்கின்றவனும், கைப்புடைய உணவை வெல்லமென்று உண்கின்றவனும் ஆகிய மூவரும் கடவுளை அறிந்து வாழப்பெறுவர்.

(இ-பு.) மூவர் எழுவாய்-வாழ்வார்-பயனிலை. கட்டி-வெல்லம். மெய்ப்பொருள்-கடவுள். கூழ்-மாவினுற் சமைக்கப்பட்டது.

கண்ணுக் கணிகலங் கண்ணேட்டங் காமுற்ற
பெண்ணுக் கணிகல நாணுடைமை—நண்ணும்
மறுமைக் கணிகலங் கல்வியிம் மூன்றும்
குறியுடையார் கண்ணே யுள.

(ப-ரை.) கண்ணுக்கு-கண்ணுக்கு, அணிகலம்-ஆபரணமாவது, கண்ணேட்டம்-தாக்ஷிணியமுடைமையாம், காமுற்ற-கணவனால் விரும்பப்பட்ட, பெண்ணுக்கு-பெண்ணுக்கு, அணிகலம்-ஆபரணமாவது, நாண்உடைமை - வெட்கமுடைமையாம், நண்ணும்-தானேவருகின்ற, மறுமைக்கு-மறு பிறப்பிற்கு, அணிகலம்-ஆபரணமாவது, கல்வி-வித்தையாகும், இம்மூன்றும்-இம்மூன்றும், குறியுடையார்கண்ணே-இயற்கை யறிவுடையாரிடத்தே, உள-உளவாம்.

(பொ-ரை.) கண்ணுக்குத் தாக்ஷிணியமும், பெண்ணுக்கு வெட்கமுடைமையும், மறுமைக்குக் கல்வியும் ஆபரணமாகும்; இவைகள் இயற்கை யறிவுடையாரிடத்தே யுளவாம்.

(இ-பு.) மூன்று எழுவாய். உள-பயனிலே. ஒருவன் இம்மையிற் கற்ற கல்வியானது அவனை நல்வழிப்படுத்தி மறுமையில் இன்பம் பயத்தலால் மறுமைக்கணிகலமென்றார். (கசஅ)

கிளைஞர்க் குதவாதான் செல்வமும் பைங்கூழ்
விளைவின்கட் போற்றா னுழவும்—இளையனாய்க்
கள்ளுண்டு வாழ்வான் குடிமையு மிம்மூன்றும்
உள்ளன போலக் கெடும்.

(ப-ரை.) கிளைஞர்க்கு-சுற்றத்தாருக்கு, உதவாதான் - உதவாதவனுடைய, செல்வமும்-செல்வமும், பைங்கூழ்-பசியபயிர், விளைவின்கண்-தனக்குப் பயன்கொடுக்குங்காலத்து, போற்றான்-பாதுகாக்கமாட்டாதவனுடைய, உழவும்-உழவுதொழிலும், இளையனாய்-இளையனாயிருந்து வைத்து, கள் உண்டு கட்குடித்து, வாழ்வான்-வாழ்கின்றவனுடைய, குடிமையும்-குடிப்பிறப்பும், இம்மூன்றும்-ஆகிய இம்மூன்றும், உள்ளனபோல-நிலைநிற்பனபோல, கெடும்-தோன்றிக் கெடும்.

(பொ-ரை.) சுற்றத்தாருக்கு உதவாதவனுடைய செல்வமும், பயிர் பயன்கொடுக்குங்காலத்துப் பாதுகாக்கமாட்டாதவனுடைய உழவுதொழிலும், இளையனாயிருந்து கட்குடித்து வாழ்கின்றவனுடைய குடிப்பிறப்பும் ஆகிய மூன்றும் நிலைநிற்பனபோலத் தோன்றிக்கெடும்.

(இ-பு.) மூன்று-எழுவாய். கெடும்-பயனிலை. பைங்கூழ்-பயிர். போற்றான் வினையாலணையும் பெயர். (கசக)

நன்றிப் பயன்றூக்கா நாணிலியுஞ் சான்றோர்முன்
மன்றிற் கொடும்பா டுரைப்பானும்—நன்றின்றி
வைத்த வடைக்கலங் கொள்வானு மிம்மூவர்
எச்ச மிழந்துவாழ் வார்.

(ப-ரை.) நன்றிப்பயன்-ஒருவன் தனக்குச்செய்த நன்றியின் பிரயோசனத்தை, தூக்கா-அளந்தறியாத, நாண் இலியும்-நாணில்லாதவனும், சான்றோர்முன்-பெரியோர்முன்னே, மன்றில்-சபையிலே நின்று, கொடும்பாடு-கொடிய சொற்களை, உரைப்பானும்-சொல்லுகின்றவனும், நன்று இன்றி-நற்செய்கை இலனாகி, வைத்த-ஒருவன் வைத்த, அடைக்கலம்-அடைக்கலப்பொருளை, கொள்வானும்-அபகரிக்கின்றவனும், இம்மூவர்-ஆகிய இம்மூவரும், எச்சம் இழந்து-தமக்குப்பின் சந்தானத்தை இழந்து, வாழ்வார்-வாழ்வார்கள்.

(பொ-ரை.) ஒருவன் தனக்குச் செய்த நன்றியின் பயனை அளந்தறியாதவனும், பெரியோர்முன்னே சபையிலேநின்று கொடியசொற்களைச் சொல்லுகின்றவனும், ஒருவன் வைத்த அடைக்கலப்பொருளை அபகரிக்கின்றவனும் ஆகிய இம்மூவரும் தமக்குப்பின் சந்தானத்தை இழந்துவாழ்வார்கள்.

(இ-பு.) மூவர்-எழுவாய். வாழ்வார்-பயனிலை. வாழ்வார் என்றது குறிப்பால் கெடுவார் என்பதை உணர்த்திற்று. எச்சம்-கீர்த்தியுமாம். (கூகo)

நோவஞ்சா தாரோடு நட்பும் விருந்தஞ்சும்
ஈர்வளையை யில்லத் திருத்தலும்—சீர்பயவாக்

தன்மை யிலாள ரயலிருப்பு மிம்மூன்றும்
நன்மை பயத்த லில.

(ப-ரை.) நோ-துன்பத்தை, அஞ்சாதாரோடு-அஞ்சிப் பாதுகாவாதாரோடு, நட்பும்-கொண்ட சிநேகமும், விருந்து-விருந்தினரை, அஞ்சும்-கண்டு பயப்படும், ஈர்வளையை-ஈரப்பட்டவளையலை யணிந்த மனைவியை, இல்லத்து-வீட்டில், இருத்தலும்-வைத்துக்கொண்டு வாழ்தலும், சீர் சிறப்பு, பயவா-தாராத, தன்மை இலாளர்-குணத்தை இல்லாதவருடைய, அயல்-பக்கத்தில், இருப்பும்-வசித்தலும், இம்மூன்றும், நன்மை-நன்மையை, பயத்தல்-கொடுத்தல், இல-இல்லை.

(பொ-ரை.) துன்பத்திற்கு அஞ்சிப் பாதுகாவாதவரோடு செய்யும் நட்பும், விருந்தினரைக்கண்டு பயப்படும் மனைவியை வீட்டில் வைத்துக்கொண்டு வாழ்தலும், நற்குணமில்லாதவருடை அயலில் இருத்தலும் ஆகிய இம்மூன்றும் நன்மையைக் கொடுக்கமாட்டா,

(இ-பு.) மூன்று-எழுவாய். இல பயனிலை. ஈர்வளை-அன்மொழித்தொகை. (கருக)

இல்லார்க்கொன் றீயு முடைமையு மிவ்வுலகில்
நில்லாமை யுள்ளு நெறிப்பாடு மெவ்வுயிர்க்கும்
துன்புறுவ செய்யாத தூய்மையு மிம்மூன்றும்
நன்றறியு மாந்தர்க் குள.

(ப-ரை.) இல்லார்க்கு-வறியவர்க்கு, ஒன்று ஒருபொருளை, ஈயும்-கொடுக்கும், உடைமையும்-உதாரகுணமுடைமையும், இவ்வுலகில்-இந்த உலகத்தில், நில்லாமை-நிலையாமையை, உள்ளும்-நினைக்கும், நெறிப்பாடும்-முறைமையும், எவ்வுயிர்க்கும்-எவ்வகைப்பட்ட உயிர்களுக்கும், துன்பு உறுவ-துன்பத்தைக்கொடுக்குஞ் செயல்களை, செய்யாத-செய்யாத, தூய்மையும்-நற்குணமும், இம்மூன்றும்-ஆகிய இம்மூன்றும், நன்று அறியும்-தருமத்தை அறிகின்ற, மாந்தர்க்கு-மனுடர்களுக்கு, உள-உள்ளனவாம்.

(பொ-ரை.) வறியவருக்குப் பொருளைக் கொடுக்கும் உதாரகுணமுடைமையும், உலகத்தில் நிலையாமையை யறியும் முறைமையும், உயிர்களுக்குத் துன்பஞ்செய்யாத நற்குணமும் ஆகிய மூன்றும் தருமத்தை அறிகின்ற மனுடர்களுக்கு உள்ளனவாம்.

(இ-பு.) மூன்று-எழுவாய். உள-பயனிலை. உறவு-வினையாலணையும் பெயர். (கடுஉ)

காவோ டறக்குளந் தொட்டானு நாவினல்
வேதங் கரைகண்ட பார்ப்பானும்—தீதிகந்
தொல்வதுபாத் துண்ணு மொருவனு மிம்மூவர்
செல்வ ரெனப்படு வார்.

(ப-ரை.) காவோடு-சோலையைவைத்து, அறக்குளம்-அறத்திற்குரிய குளத்தினை, தொட்டானும்-தோண்டினவனும், நாவினல்-நாவினலோதி, வேதம்-வேதங்களின், கரை - எல்லையை, கண்ட-கண்டறிந்த, பார்ப்பானும்-பிராமணனும், தீது இகந்து-தீயவழியைக் கடந்து, ஒல்வது-தனக்கு இசைவதனை, பாத்து-பகுந்து, உண்ணும்-உண்ணுகின்ற, ஒருவனும், இம்மூவர்-ஆகிய இம்மூவரும், செல்வர்-செல்வத்தையுடையவர், எனப்படுவார்-என்று சொல்லப்படுவர்.

(பொ-ரை.) சோலையைவைத்துக் குளத்தினைத்தோண்டினவனும், நாவினலோதி வேதங்களின் எல்லையைக்கண்ட பிராமணனும், தீயவழியைக்கடந்து பகுத்துண்பவனும் ஆகிய மூவருஞ் செல்வமுடையவரென்று சொல்லப்படுவார்.

(இ-பு.) மூவர்-எழுவாய். எனப்படுவார்-பயனிலை.

நிறைநெஞ் சுடையானை நல்குர வஞ்சும்
அறனை நினைப்பானை யல்பொரு ளஞ்சும்
மறவனை யெவ்வுயிரு மஞ்சுமிம் மூன்றும்
திறவதிற் றீர்ந்த பொருள்.

(ப-ரை.) நிறை-புலன்கண்மேற் போகாது நிறுத்தும், நெ

ஞ்சு-மனசை, உடையானை-உடையவனை, நல்குரவு-வறுமை, அஞ்சும்-பயப்படும், அறனை-தருமத்தையே, நினைப்பானை-சிந்திக்கின்றவனை, அல்பொருள்-பாவம், அஞ்சும்-பயப்படும், மறவனை-கொலைத்தொழில் செய்வோனை, எவ்வுயிரும்-எல்லாவுயிரும், அஞ்சும்-பயப்படும், இம்மூன்றும்-ஆதலால் இந்த மூன்றச்சமும், திறவதில்-வேறுபாட்டின், தீர்ந்த-நீங்கியொத்த, பொருள்-பொருள்களாம்.

(பொ-ரை.) புலன்கள்மேற் போகாது நிறுத்தப்படும் மனசையுடையானுக்கு வறுமையும், தருமத்தையே நினைப்பானுக்குப் பாவமும், கொலைதொழில் செய்பவனுக்கு எல்லாவுயிரும் பயப்படும் ஆதலால் இந்த மூன்றச்சமும் ஒத்த பொருள்களாம்.

(இ-பு.) மூன்று-எழுவாய். பொருள்-பயனிலை. அல்பொருள்-பாவம். (கஞ௪)

வாய்நன் கமையாக் குளனும் வயிறாத்
தாய்முலை யுண்ணாக் குழவியும்—சேய்மரபின்
கல்விமாண் பில்லா தமாந்தரு மிம்மூவர்
நல்குரவு சேரப்பட் டார்.

(ப-ரை.) வாய்-நீர்வரும்வழி, நன்கு-நன்றாக, அமையா-அமைந்திராத, குளனும்-தடாகமும், வயிறு-தன்வயிறு, ஆர-நிறைய, தாய்முலை-தாயின் முலைப்பாலை, உண்ணா-உண்ணாத, குழவியும்-குழந்தையும், சேய்மரபில்-இளமைப் பருவத்தில், கல்விமாண்பு-கல்வி மாட்சிமையை, இல்லாத-பெறாத, மாந்தரும்-மனிதரும், இம்மூவர்-ஆகிய இம்மூவரும், நல்குரவு-வறுமை, சேரப்பட்டார்-அடையப்பட்டவராவர்.

(பொ-ரை.) நீர்வரும்வழி நன்றாக அமைந்திராத தடாகமும், வயிறு நிறையத் தாயின் முலைப்பாலை உண்ணாத குழந்தையும், இளமையிலே கல்வியின் பெருமை பெறாத மனிதரும் ஆகிய மூவரும் வறுமை அடையப்பட்டவராவர்.

(இ-பு.) மூவர்-எழுவாய். சேரப்பட்டார்-பயனிலை. சேய்

மரபு என்பதற்கு வம்மிச பரம்பரையி னீட்சியெனினுமாம். ()

ஈதற்குச் செய்க பொருளை யறநெறி
சேர்தற்குச் செய்க பெருநூலை—யாதும்
அருள்புரிந்து சொல்லுக சொல்லையிம் மூன்றும்
இருளுலகஞ் சேராத வாறு.

(ப-ரை.) ஈதற்கு-பிறருக்குக் கொடுக்கும்பொருட்டு, பொருளை-திரவியத்தை, செய்க-தேடக்கடவன், அறநெறி-தருமமார்க்கத்தை, சேர்தற்கு-சம்பாதித்தற்பொருட்டு, பெருநூலை-பெரிய நூல்களை, செய்க-கற்கக்கடவன், யாதும்-யாதாயினும், சொல்லை-ஒருசொல்லைச் சொல்லின், அருள் புரிந்து-அருளை விரும்பி, சொல்லுக-சொல்லக்கடவன், இம்மூன்றும்-இம்மூன்று செய்கைகளும், இருள் உலகம்-நரகத்தை, சேராத-சேரவொட்டாத, ஆறு-வழிகளாம்.

(பொ-ரை.) பிறருக்குக் கொடுக்கும்பொருட்டுத் திரவியத்தைத் தேடலும், தருமமார்க்கத்தைச் சம்பாதித்தற்பொருட்டு நூல்களைக்கற்றலும், யாதாயினுஞ் சொல்லின் அருளை விரும்பிச் சொல்லுதலும் நரகத்தைச் சேரவொட்டாத வழிகள் ஆதலால் இம்மூன்றையும் ஒருவன் செய்யக்கடவன்.

(இ-பு.) மூன்று-எழுவாய். ஆறு-பயனிலை. இருள் உலகம்-நரகம். (௯௫)

கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி கொண்டன
செய்வகை செய்வான் றவசி கொடிதொரீஇ
நல்லவை செய்வா னரச னிவர்மூவர்
பெய்யெனப் பெய்யு மழை.

(ப-ரை.) கொண்டான்-தன்னைக்கொண்ட கணவனுடைய, குறிப்பு அறிவாள்-குறிப்பறிந்து நடக்கின்றவள், பெண்டாட்டி-பெண்டாட்டியாவள், கொண்டன-தான் மேற்கொண்ட, செய்வகை-விரதங்களைச் செய்யத்தக்க முறைப்படி, செய்வான்-செய்கின்றவன், தவசி-தவசியாவன், கொடிது-தீங்கினை, ஒரீஇ-நீக்கி,

நல்லவை-உயிர்களுக்கு இதமானவைகளை, செய்வான்-செய்கின்றவன், அரசன்-அரசனானவன், இம்மூவர்-இம்மூவரும், பெய் என-பெய்யென்று சொல்லவே. மழை பெய்யும்-மழை பெய்யும்.

(பொ-ரை.) தன்னைக் கொண்டவனுடைய குறிப்பறிந்து நடக்கின்றவள் பெண்டாட்டியாவள், தான் மேற்கொண்ட விரதங்களை முறைப்படி செய்பவனே தவசியாவன். உயிர்களுக்கு இதமானவைகளைச் செய்பவனே அரசனாவன் ஆதலால் இம்மூவரும் பெய்யென்றுசொல்ல மழைபெய்யும்.

(இ-பு.) மழை-எழுவாய். பெய்யும்-பயனிலை. கொண்டான்-வினையாலணையும் பெயர். பெண்டாட்டி-மனைவி. (கருஎ)

ஐங்குரவ ராணை மறுத்தலு மார்வுற்ற
எஞ்சாத நட்பினுட் பொய்வழங்கும்—நெஞ்சமர்ந்த
கற்புடை யாளைத் துறத்தலு மிம்மூன்றும்
நற்புடையி லாளர் தொழில்.

(ப-ரை.) ஐங்குரவர்-(அரசன் உபாத்தியாயன் பிதா தமையன் ஆசாரியன் என்று சொல்லப்பட்ட ஐந்து குரவர்களுடைய, ஆணை-ஆக்கினையை, மறுத்தலும்-தடுத்து நடத்தலும், ஆர்வுற்ற-விரும்பப்பட்டவைகளே, எஞ்சாத-குறைவுபடாமற் பெறுதற்குரிய, நட்பினுள்-சிநேகிதரிடத்து, பொய்வழங்கும்-பொய்பேசுதலும், நெஞ்சு அமர்ந்த-தன் மனம் விரும்பிய, கற்புடையாளை-கற்புடைமனைவியை, துறத்தலும்-விட்டுத் துறத்தலும், இம்மூன்றும், நற்புடை-நன்மையைத் தம்மிடத்து, இலாளர்-இல்லாதவருடைய, தொழில்-தொழில்களாம்.

(பொ-ரை.) அரசன் உபாத்தியாயன் பிதா தமையன் ஆசாரியன் என்னும் ஐங்குரவர்களுடைய ஆணையை மறுத்து நடத்தலும், பெறுதற்கரிய சிநேகரிடத்துப் பொய்வழக்குப் பேசலும் தன்மனம் விரும்பிய கற்புடைய மனையைத் துறத்தலும் ஆகிய இம்மூன்றும் நற்குணமில்லாதவருடைய தொழில்களாம்.

(இ-பு.) மூன்று-எழுவாய். தொழில்-பயனிலை. (கருஅ)

விளம்பிநாகனார்

இயற்றிய

நான்மணிக்கடிகை.

கள்ளி வயிற்றி னகில்பிறக்கும் மான்வயிற்றின்
ஒள்ளரி தாரம் பிறக்கும் பெருங்கடலுள்
பல்விலைய முத்தம் பிறக்கு மறிவார்யார்.
நல்லாள் பிறக்குங் குடி.

(ப-ரை.) கள்ளி-கள்ளியினுடைய, வயிற்றின்-வயிற்றில், அகில்-அகிற்கட்டை, பிறக்கும்-தோன்றும், மான்-மானினது, வயிற்றின்-வயிற்றிலே, ஒள்-ஒள்ளிய, அரிதாரம்-அரிதாரம், பிறக்கும்-தோன்றும், பெரும்-பெரிய, கடலுள்-கடலினிடத்து, பல்விலைய-பலபொருள்களையும் விலையாகவுடைய, முத்தம்-முத்துக்கள், பிறக்கும்-தோன்றும், நல்லாள்-நல்லறிவினையுடைய வொருமகன், பிறக்கும்-பிறக்கின்ற, குடி-குடியினை, அறிவார்-அறியவல்லவர், யார்-யாவர்.

(பொ-ரை.) கள்ளியினுடைய வயிற்றில் அகிற்கட்டையும், மானுடைய வயிற்றில் அரிதாரமும், கடலில் முத்தும் பிறக்கும். நல்லறிவினையுடைய வொருமகன் பிறக்குங் குடியை யறிய வல்லவர் யாவர்.

(இ-பு.) அறிவார்-எழுவாய். யார்-பயனிலை. பிறக்கும்-செய்யுமென்னும் வினைமுற்று. யார் வினாவினைக் குறிப்புமுற்று. ()

கற்றார்முற் றோன்றா கழிவிரக்கங் காதலித்தொன்
றுற்றார்முற் றோன்று முறுமுதல்—தெற்றென
அல்ல புரிந்தார்க் கறந்தோன்றா வெல்லாம்
வெகுண்டார்முற் றோன்றாக் கெடும்.

(ப-ரை) கற்றார்முன்-கற்றவரிடத்து, கழிவு-சென்றபொருளுக்கு, இரக்கம்-இரங்குதல், தோன்றா-தோன்றாவாகும், காதலித்த ஒன்று-விரும்பியதொருபொருளை, உற்றார்முன்-பெற முயலுபவர்களிடத்து அவ்விரும்பிய பொருளை, உறாமுதல்-தமக்கு எய்தாமைக்குக் காரணம், தோன்றா-தோன்றாவாகும், தெற்றென-தெளிய, அல்ல-பாவமாயுள்ள தொழில்களை, புரிந்தார்க்கு-செய்து பயின்றவர்களுக்கு, அறம்-தருமமாயுள்ள செயல்கள், தோன்றா-தோன்றாவாகும், வெகுண்டார்முன்-கோபத்தையுடையவர்களுக்கு, எல்லாம்-எல்லாநன்மையும், தோன்றா தோன்றாதபடி, கெடும்-கெட்டுப்போம்.

(பொ-ரை.) கற்றவரிடத்துக் கழிந்தபொருளுக்கு இரங்குதலும், விரும்பியதொன்றைப் பெற முயல்பவர்களிடத்து அவ்விரும்பிய பொருள் எய்தாமைக்குக் காரணமும், பாவத்தொழில்களைப் பயின்றவர்களுக்குத் தருமச்செயலும், கோபத்தையுடையவர்களுக்கு நன்மையுந் தோன்றாவாகும்.

(இ-பு.) இரக்கம் முதலியவை எழுவாய். தோன்றா கெடும்-பயனிலை. உற்றார்-முயலுபவர். (ககO)

கன்றாமை வேண்டுங் கடிய பிறர்செய்த
நன்றியை நன்றாக் கொளல்வேண்டும் —என்றும்
விடல்வேண்டுந் தன்கண் வெகுளி யடல்வேண்டும்
ஆக்கஞ் சிதைக்கும் வினை.

(ப-ரை.) பிறர்செய்த-அன்னியர்செய்த, கடிய-கடுஞ்செயல்களில், கன்றாமைவேண்டும்-மனம் வருந்தாதொழிதல் வேண்டும், நன்றியை-நன்மையை, நன்றா-நன்மையாக, கொள்ளல்வேண்டும்-மனத்தின்கண் கொளல்வேண்டும், என்றும்-எஞ்ஞான்றும், வெகுளி-கோபத்தை, விடல் வேண்டும்-நீக்கவேண்டும், ஆக்கம்-உயர்ச்சியை, சிதைக்கும்-கெடுக்கும். வினை-தொழில்களை, அடல் வேண்டும்-கெடுக்கவேண்டும்.

(பொ-ரை.) பிறர் தனக்குச்செய்த கடுஞ்செயல்களில் மனம் வருந்தாதொழிதலும், நன்றியை மனத்திற் கொள்ளுதலும்,

கோபத்தைத் நீக்குதலும், தன் பெருமையைக் கெடுக்குந் தொழில்களைக் கெடுத்தலும் வேண்டும்.

(இ-பு.) கன்றுமை, கொளல், விடல், அடல்-எழுவாய். வேண்டும்-பயனிலை. கன்றுமை-எதிர்மறைத்தொழிற்பெயர். ஆக்கம்-உயர்ச்சி. (௧௯௧)

பறைநன்று பண்ணமையா யாழி னிறைநின்ற
பெண்ணன்று பீடிலா மாந்தரின் — பண்ணழிந்
தார்தலி னன்று பசித்தல் பசைந்தாரில்
தீர்தலிற் றீப்புகுத னன்று.

(ப-ரை.) பண் அமையா-பண்ணமைக்கப்படாத, யாழின்-யாழோசையிலும், பறை-பறையோசை, நன்று-நல்லது, பீடு இலா-பெருமையில்லாத, மாந்தரின்-ஆடவரினும், நிறை நின்ற-கற்புடைய, பெண் நன்று-பெண் நல்லது, பண்-ஒழுக்கம், அழிந்து-கெட்டு, ஆர்தலின்-உண்டலினும், பசித்தல், நன்று-நல்லது, பசைந்தாரில்-அன்புடையாரினின்றும், தீர்தலின்-நீங்குதலினும், தீப்புகுதல்-தீக்குதித்தல், நன்று நல்லது.

(பொ-ரை) பண்ணமைக்காத யாழினிசையிலும் பறையோசையும், பெருமையில்லாத ஆடவரிலுங் கற்புடைய பெண்ணும், ஒழுக்கமழிந்து உண்டலினும் பசியோடிருத்தலும், அன்புடையாரினின்று நீங்குதலினும் தீக்குதித்தலும் நன்று.

(இ-பு.) பறை, பெண், பசித்தல், தீப்புகுதல்-எழுவாய். நன்று-பயனிலை. அமையாத என்பது அமையாவெனக் குறைந்து நின்றது. (௧௯௨)

இன்னாமை வேண்டி னிரவெழுக விந்நிலத்து
மன்னுதல் வேண்டி னிசைநடுக — தன்னொடு
செல்வது வேண்டி னறஞ்செய்க வெல்வது
வேண்டின் வெகுளி விடல்.

(ப-ரை.) இன்னாமை-துன்பத்தை, வேண்டின்-விரும்பினு

ல், இரவு-யாசித்தற்கு, எழுக-எழக்கடவன், இந்நிலத்து-இவ்வுலகத்தில், மன்னுதல் வேண்டின்-நிலைநின்று விளங்கவேண்டின், இசைநடுக-கீர்த்தியை நிறுத்தக்கடவன், தன்னொடு-தன்னோடு (மறுமைக்குத் துணையாக), செல்வது-வருவதை, வேண்டின்-விரும்பினால், அறம்-தருமத்தை, செய்க-செய்யக்கடவன், வெல்வது-வெற்றியை, வேண்டின்-விரும்பினால், வெகுளி கோபத்தை விடல்-விடக்கடவன்.

(பொ-ரை.) ஒருவன் துன்பத்தை விரும்பினால் யாசிக்குக, இவ்வுலகத்தில் நிலைபெறவேண்டிற் கீர்த்தியை நிறுத்துக, தன்னோடு மறுமைக்குத் துணையாகவேண்டின் அறஞ்செய்க, வெற்றியை விரும்பின் கோபத்தைவிடுக.

(இ-பு.) ஒருவன்-தோன்றா எழுவாய், எழுக, நடுக, செய்க, விடல்-பயனிலை. (கசரு)

அலைப்பான் பிறிதுயிரை யாக்கலுங் குற்றம்
விலைப்பாலிற் கொண்டூன் மிசைதலுங் குற்றம்
சொலற்பால வல்லாத சொல்லுதலுங் குற்றம்
கொலைப்பாலுங் குற்றமே யாம்.

(ப-ரை.) அலைப்பான்-கொல்ல, பிறிது உயிரை-மற்றோருயிரை, ஆக்கலும்-வளர்த்தலும், குற்றம்-குற்றமாகும், விலைப்பாலில்-விலையின் பகுதியால், ஊன்-மாமிசத்தை, கொண்டு-வாங்கி, மிசைதலும்-உண்ணுதலும், குற்றம்-குற்றமாகும், சொலற்பால அல்லாத-சொல்லுதற் கருகமில்லாத சொற்களை, சொல்லுதலும்-சொல்லுதலும், குற்றம்-குற்றமாகும், கொலைப்பாலும்-கொலை செய்தலும், குற்றமேயாம்-குற்றமேயாகும்.

(பொ-ரை.) கொல்லுதற் பொருட்டுப் பிறிதோருயிரை வளர்த்தலும், விலைகொடுத்து வாங்கி மாமிசத்தைப் புசித்தலும், சொல்லுதற் கருகமில்லாத சொற்களைச் சொல்லுதலும், கொலை செய்தலும் குற்றமேயாகும்.

(இ-பு.) ஆக்கல், மிசைதல், சொல்லுதல், கொலை-எழுவாய். குற்றம்-பயனிலை. பான்-வினையெச்சவிகுதி. (கசச)

கோனோக்கி வாழுங் குடியெல்லாந் தாய்முலையின்
பானோக்கி வாழுங் குழவிகள் — வானத்
துளிநோக்கி வாழு முலக முலகின்
விளிநோக்கி யின்புறூஉங் கூற்று.

(ப-ரை.) கோல்-அரசனுடைய செங்கோலை; நோக்கி-காவலாகப் பெற்று, குடி எல்லாம்-பிரசைகளெல்லாம், வாழும்-வாழாநிற்கும், தாய்முலையின்-தாயினுடைய முலையினின்றுவரும், பால் நோக்கி-பாலைப் பருகி, குழவிகள்-குழந்தைகள், வாழும்-வாழாநிற்கும், வானத்துளி-மழைத்துளியை, நோக்கி-பெற்று, உலகம்-உயிர்கள், வாழும்-வாழாநிற்கும், உலகின்-பூமியின்கணுள்ள உயிர்களின், விளி-இறத்தலை, நோக்கி-விரும்பி, கூற்று-இயமன், இன்புறூஉம்-இன்பத்தை யடைவான்.

(பொ-ரை.) பிரசைகள் அரசனுடைய செங்கோலின் காவலைப்பெற்றும், குழந்தைகள் தாயினுடைய முலையினின்று வரும் பாலைப் பருகியும், உயிர்கள் மழையைப்பெற்றும் வாழாநிற்கும். இயமன் உயிர்களின் இறப்பைநோக்கிச் சந்தோஷமடைவான்.

(இ-பு.) குடி, குழவிகள், உலகம், கூற்று எழுவாய். வாழும் இன்புறூஉம் பயனிலை. விளிமுதனிலைத்தொழிற்பெயர். (கசகு)

திருவிற் றிறலுடைய தில்லை யொருவற்குக்
கற்றலின் வாய்த்த பிறவில்லை — எற்றுள்ளும்
இன்மையி னின்னாத தில்லை யிலமென்னும்
வன்மையின் வன்பாட்ட தில்.

(ப-ரை.) திருவின்-செல்வத்தைப்போல, ஒருவற்கு-ஒருவனுக்கு, திறல்-வலிமையை, உடையது-உடையது, இல்லை-பிறிதில்லை, கற்றலின் வாய்த்த-கல்வியைப்போற் பயன்படுவ, பிற இல்லை-வேறில்லை, எற்று உள்ளும்-எவற்றுள்ளும், இன்மையின்-வறுமைபோல, இன்னாதது-துன்பத்தைத் தருவது, இல்லை-இல்லையாகும், இலம் என்னும்-யாதொரு பொருளும் இலமென்று பிறரை இரக்கும், வன்மையின்-வன்மைபோல், வன்பாட்டது-வன்மையுடையது. இல்-இல்லை.

(பொ-ரை.) செல்வத்தைப்போல வொருவனுக்கு வலிமை யுடையதும், கல்விபோற் பயன்படுவதும், வறுமைபோலத் துன்பத்தைத் தருவதும், பிறரை இரக்கும் வன்மையில் வன்மையை யுடையதும் இல்லை.

(இ-பு.) உடையது, பிற, இன்னாதது, வன்பாட்டது-எழுவாய், இல்லை, இல்-பயனிலை. இன் உருபு-உவமைப்பொருட்டு. இன்னாதது, வன்பாட்டது வினையாலணையும்பெயர். (கசகூ)

கரப்பவர்க்குச் செல்சார் கவிழ்தலெஞ் ஞான்றும்
இரப்பவர்க்குச் செல்சாரொன் றீவார்—பரப்பமைந்த
தானைக்குச் செல்சார் தறுகண்மை யூனுண்டல்
செய்யாமை செல்சா ருயிர்க்கு.

(ப-ரை.) கரப்பவர்க்கு-(இரந்தவர்க்கு ஒன்றுங்கொடாது) மறுப்பவருக்கு, செல்சார்-பற்றுக்கோடு, கவிழ்தல்-முகங் கவிழ்தல், எஞ்ஞான்றும்-எப்பொழுதும், இரப்பவர்க்கு-யாசிப்பவருக்கு, செல்சார்-பற்றுக்கோடாவார். ஒன்று ஈவோர்-யாதானுமொன்றைக் கொடுப்பார், பரப்பு அமைந்த-பரத்தல் நிரம்பிய, தானைக்கு-சேனைக்கு, செல்சார்-பற்றுக்கோடு, தறுகண்மை-அஞ்சாமை, உயிர்க்கு-உயிர்கட்கு, செல்சார்-பற்றுக்கோடு, ஊன் உண்டல் ஊனை யுட்கொள்ளலை, செய்யாமை-செய்யாதிருத்தல்.

(பொ-ரை.) இரந்தவருக்குக் கொடாமல் மறுப்பவருக்குப் பற்றுக்கோடு முகங்கவிழ்தலும், யாசிப்பவருக்குப் பற்றுக்கோடு கொடுப்பவரும், சேனைக்குப் பற்றுக்கோடு அஞ்சாமையும், உயிருக்குப் பற்றுக்கோடு ஊனை யுட்கொள்ளாமையுமேயாம்.

(இ-பு.) செல்சார்-எழுவாய். கவிழ்தல், ஈவோர், தறுகண்மை. செய்யாமை-பயனிலை. (கசுஎ)

பிறக்குங்காற் பேரெனவும் பேரா விறக்குங்கால்
நில்லெனவு நில்லா வுயிரனைத்தும்—நல்லாள்
உடன்படிற் றானே பெருகுங் கெடும்பொழுதில்
கண்டனவுங் காணா கெடும்.

(ப-ரை.) உயிர் அனைத்தும்-உயிர் எல்லாம், பிறக்குங்கால்-உடம்பெடுக்கும் பொழுது, பேரெனவும் (அப்பிறப்பை) ஒழியெனவும், பேரா-ஒழிக்கமாட்டா, இறக்குங்கால்-உடம்பைவிட்டு நீங்கும்பொழுது, நில்லெனவும்-(அவ்வுடம்பில்) நீங்காது நில்லெனவும், நில்லா-நிற்கமாட்டா, நல்லாள்-இலக்குமி, உடன்படில்-விரும்பினால், தானே-செல்வந்தானே, பெருகும்-விருத்தியாகும், கெடும்பொழுதில்-இலக்குமி நீங்குங்காலத்தில், கண்டனவும்-உள்ள பொருளும், காணு-புலப்படாமல், கெடும்-நீங்கும்.

(பொ-ரை.) உயிரெல்லாம் உடம்பெடுக்கும்பொழுது ஒழியென்றாலும் ஒழியா, உடம்புவிட்டு நீங்கும்பொழுது நில் என்றாலும் நிற்கமாட்டா, இலக்குமி வருங்காலத்திற் செல்வந் தானே பெருகும், இலக்குமி நீங்குங்காலத்தில் உள்ளபொருளும் புலனாகாமற் கெட்டுவிடும்.

(இ-பு.) உயிர்-எழுவாய். நில்லா, பேரா-பயனிலை. செல்வம்-எழுவாய். பெருகும்-பயனிலை. கண்டன-எழுவாய். கெடும்-பயனிலை. காணுது என்னும் எதிர்மறைவினையெச்சம் காணுவெனக் கெட்டுநின்றது. பேரா, நில்லா-எதிர்மறை வினைமுற்றுக்கள். (௧௬அ)

போரின்றி வாடும் பொருநர்சீர் கீழ்வீழ்ந்த
வேரின்றி வாடு மரமெல்லாம்—நீர்பாய
மடையின்றி நீணெய்தல் வாடும் படையின்றி
மன்னர்சீர் வாடி விடும்.

(ப-ரை.) பொருநர்சீர் யுத்தவீரருடைய பெருமை, போர் இன்றி-யுத்தம் இல்லாவிடின், வாடும்-குறையும், கீழ் வீழ்ந்த-நிலத்தின்கீழே சென்ற, வேர் இன்றி-வேரில்லாவிடத்து, மரம் எல்லாம்-மரங்களெல்லாம், வாடும்-உலரும், நீர்பாய்-நீர்பாய்கின்ற, மடை இன்றி-மடையின்கண் நீர் இல்லாவிடின், நீள்நெய்தல்-நீண்ட நெய்தற்பூ, வாடும்-அழியும், மன்னர்சீர்-அரசர்களுடைய பெருமை, படையின்றி-சேனையில்லாவிடின், வாடிவிடும்-குறைந்துவிடும்.

(பொ-ரை.) யுத்தவீரருடைய பெருமை யுத்தமில்லாமையாலும், அரசர்கள்பெருமை சேனையில்லாமையாலுங் குறையும், மரங்கள் பூமியின்கீழ்ச்சென்று வேரில்லாமையாலும், நெய்தற்பூ மடையின்கண் நீரில்லாமையாலும் வாடும்.

(இ-பு.) மரம், நெய்தல்-எழுவாய். வாடும்-பயனிலை. சீர்-எழுவாய். வாடும், வாடிவிடும்-பயனிலை. வாடிவிடும் என்பதில் விடு-துணிவுப்பொருளில் வந்த இடைநிலை. நெய்தல் ஆகுபெயர். தாமரையென்பதுபோல. (கசகூ)

நாற்ற முரைக்கு மலருண்மை கூறிய
மாற்ற முரைக்கும் வினைநலந் தூக்கின்
அகம்பொதிந்த தீமை மனமுரைக்கு முன்னம்
முகம்போல முன்னுரைப்ப தில்.

(ப-ரை.) நாற்றம்-கந்தமானது, மலர் உண்மை-பூவுண்டென்பதை, உரைக்கும்-சொல்லும், வினைநலம்-தொழிலின் பயனை, கூறியமாற்றம்-ஒருவன் சொல்லிய சொல்லே, உரைக்கும்-சொல்லும், தூக்கின்-ஆராயின், அகம்-உள்ளத்தில், பொதிந்த-அடக்கிய, தீமை-தீமையை, மனம்-அவன் மனமே, உரைக்கும்-சொல்லும், முன்னம்-முன்னமே அந்நினைவை, முகம்போல-முகத்தைப்போல, முன்னுரைப்பது முற்படவறிவிப்பது, இல்-வேறில்லை.

(பொ-ரை.) கந்தம் மலருண்மையையும், ஒருவனுடைய சொல் தொழிலின் பயனையும், மனம் உள்ளத்திலடங்கிய தீமையையும் அறிவிக்கும். முன்னமே முகம்போல அந்நினைவைச் சொல்வது பிறிதில்லை.

(இ-பு.) நாற்றம், மாற்றம், மனம், உரைப்பது-எழுவாய். உரைக்கும், இல்-பயனிலை. (கஎ0)

மழையின்றி மாநிலத்தார்க் கில்லை மழையும்
தவமிலா ரில்வழி யில்லை தவமும்
அரசிலா ரில்வழி யில்லை யரசனும்
இல்வாழ்வா ரில்வழி யில்.

(ப-ரை.) மழை இன்றி-மழை இல்லாதவிடத்து, மாநிலத்தார்க்கு-பெரிய பூமியிலுள்ளார்க்கு, இல்லை-உணவில்லை, மழையும்-அம்மழையும், தவம் இலார்-தவஞ்செய்யாதார், இல்வழி-இல்லாவிடங்களில், இல்-இல்லை, தவமும்-அத்தவமும், அரசிலார் இல்வழி-நீதிசெலுத்தும் அரசரில்லாவிடங்களில், இல்-இல்லை, அரசரும்-இராசரும், இல்வாழ்வாரில்வழி-குடிகள் இல்லாவிடங்களில், இல்-இல்லையாம்.

(பொ-ரை.) மழையில்லாவிடத்து உலகத்தார்க்குணவும், தவமில்லாரிடங்களில் அம்மழையும், நல்வழியிலே செலுத்தும் அரசரில்லாவிடங்களில் தவமும், குடிகளில்லாவிடங்களில் அரசரும் இல்லை.

(இ-பு.) உணவு, மழை, தவம், அரசர்-எழுவாய். இல்லை, இல்-பயனிலை. (கஎக)

யாறு ளடங்குங் குளமுள வீறுசால்
மன்னர் விழையுங் குடியுள தொன்மரபின்
வேத முறுவன பாட்டுள வேளாண்மை
வேள்வியோ டொப்ப வுள.

(ப-ரை.) யாறு-ஆறு மிகுந்தாலும், உள்ளடங்கும்-புறம்போகாதபடி தன்னுள்ளடங்கும், குளம்-குளங்களும், உள-உளவாயிருக்கின்றன, வீறுசால்-பெருமைமிகுந்த, மன்னர் விழையும்-அரசரால் விரும்பப்படும், குடி-உள-குடிகளும் உளவாயிருக்கின்றன, தொன்மரபின்-பழைய முறைமையினையுடைய, வேதம் உறுவன-வேதத்தின் பொருளடங்கிய, பாட்டுள-செய்யுட்களுமுளவாயிருக்கின்றன, வேள்வியோடு-யாகத்தோடு, ஒப்ப-ஒப்பனவாக, வேளாண்மை-கொடையும், உள-உளவாயிருக்கின்றன.

(பொ-ரை.) ஆறு மிகுந்தாலும் புறம்போகாதபடி தன்னுளடக்குங் குளமும், அரசரால் விரும்புங் குடியும், வேதத்தின் பொருளை உள்ளடக்கிய பாட்டும், யாகத்தோடொத்த கொடையும் உளவாயிருக்கின்றன.

(இ-பு.) குளம், குடி, பாட்டு, வேளாண்மை எழுவாய். உள-பயனிலை. ஒப்ப இடைச்சொல். (கஎஉ)

கண்ணிற் சிறந்த வுறுப்பில்லை கல்வியின்
நுண்ணிய வாயா பொருளில்லை—கொண்டானின்
துன்னிய கேளிர் பிறரில்லை யீன்றாளின்
என்ன கடவுளு மில்.

(ப-ரை.) கண்ணில் ஒருவனுக்குக் கண்ணினும்பார்க்க, சிறந்த-உயர்ந்த, உறுப்பு-அவயவங்கள், இல்லை-இல்லை, கல்வியின்-கல்வியைப்பார்க்கினும், நுண்ணியவாய-நுட்பமாகிய அறிவைத் தருவன, பொருள் இல்லை-பொருள்கள் இல்லை, கொண்டானின்-நாயகனைப்பார்க்கினும், துன்னிய-நெருங்கிய, கேளிர்-சுற்றத்தார், பிறர் இல்லை-வேறொருவரில்லை, ஈன்றாளின்-பெற்றவளைப் போல, கடவுளும் தெய்வமும், இல்-இல்லை.

(பொ-ரை.) கண்ணினும் பார்க்கச் சிறந்த உறுப்பும், கல்வியினும்பார்க்க அறிவைக்கொடுக்கும் பொருளும், நாயகனைப்பார்க்கினும் சுற்றத்தாரும், தாயைப்போன்ற கடவுளும் இல்லை.

(இ-பு.) உறுப்பு, பொருள், கேளிர், கடவுள் எழுவாய். இல்லை, இல்-பயனிலை. இல் இன் எல்லைப்பொருளில் வந்த ஐந்தாம் வேற்றுமையுருபுகள். உம்மை-சிறப்பு. (கஎங)

என்று முளவாகு நாளு மிருசுடரும்
என்றும் பிணியுந் தொழிலொக்கும்—என்றும்
கொடுப்பாருங் கொள்வாரு மன்னர் பிறப்பாரும்
சாவாரு மென்று முளர்.

(ப-ரை.) என்றும்-எந்நாளும் இடையறாது, நாளும்-நாண் மீன்களும், இருசுடரும்-சந்திர சூரியர்களும், உளவாகும்-உள, என்றும்-எந்நாளும், பிணியும்-நோயும், தொழில்-உழவு வாணிப முதலிய தொழில்களும், ஒக்கும்-தம்முள் ஒக்கும், என்றும்-எந்நாளும், கொடுப்பாரும்-கொடுப்பவரும், கொள்வாரும்-ஏற்பவரும், அன்னர்-அத்தன்மையர், என்றும் எந்நாளும், பிறப்பாரும்-பி

றப்பவரும், சாவாரும்-இறப்பவரும், உளர்-உளராவர்.

(பொ-ரை.) எப்பொழுதும் நாண்மீனும் சந்திரசூரியர்களும் நோயும் வாணிபமுதலிய தொழில்களும் கொடுப்பவரும் ஏற்பவரும் இறப்பவரும் பிறப்பவரும் உளராவர்.

(இ-பு) நாள், சுடர், பிணி, தொழில், கொடுப்பார், கொள்வார், பிறப்பார், சாவார்-எழுவாய். உளவாரும், ஒக்கும். அன்னர், உளர்-பயனிலை. அன்னர்-குறிப்புவினைமுற்று. (கஎச)

பழியின்மை மக்களாற் காண்க வொருவன்
கெழுவின்மை கேட்டா லறிக பொருளின்
நிகழ்ச்சியா னாக்க மறிக புகழ்ச்சியால்
போற்றாதார் போற்றப் படும்.

(ப-ரை.) பழியின்மை-பழிபடவாழாமையை, மக்களால்-ஒருவன் மக்கட்பேற்றினால், காண்க-அறிருக, கெழுவின்மை-ஒருவன் தனக்கு நட்பில்லாமையை, கேட்டால்-கேடுவருதலால் அறிக-அறிருக, பொருளின் நிகழ்ச்சியான்-பொருள் வருகின்ற முறையானே, ஆக்கம்-ஒருவன் செல்வத்தை, அறிக-அறிருக புகழ்ச்சியால்-ஒருவன் புகழுண்டாக வழங்குமாயின், போற்றாதார்-தன் பகைவராலும், போற்றப்படும்-புகழப்படும்.

(பொ-ரை.) ஒருவன் மக்கட்பேற்றினால் பழிபடவாழாமையை அறிருக, ஒருவன் தனக்கு நண்பில்லாமையைக் கேட்டால் அறிருக. பொருள்வருகின்ற தன்மையால் ஒருவன் செல்வத்தை அறிருக. புகழுண்டாக வழங்குவானாயின் அவன் தன் பகைவராலும் போற்றப் படுவான்.

(இ-பு.) ஒருவன்-எழுவாய். காண்க, அறிக, போற்றப்படும் பயனிலை. கெழு-முதனிலைத் தொழிற்பெயர். (கஎரு)

ஊனுண் டுழுவை நிறம்பெறூஉ நீர்நிலைத் தாட்
புல்லினா னின்புறூஉங் காலேயம்—நெல்லின்
அரிசியா னின்புறூஉங் கிழெல்லாந் தத்தம்
வரிசையா லின்புறூஉ மேல்.

(ப-ரை.) உழுவை-புலி, ஊனுண்டு-தசையை யுண்டு, திறம் பெறூஉம்-திறம்பெற்று விளங்கும், காலேயம்-பசுக்கூட்டங்கள், நீர் நிலத்து-நீருடைய நிலத்தெழுந்த, புல்லினால்-புற்களினால், இன்புறூஉம்-மகிழும், கீழ் எல்லாம்-கீழ்மக்களெல்லாம், நெல்லின்-அரிசியாலாக்கப்பட்ட சோற்றினால் பசிதீர்ந்து, இன்புறூஉம்-மகிழும், மேல்-மேன்மக்கள், தத்தம்-தங்கள்தங்கள், வரிசையான்-தகுதிக்குரிய செயலால், இன்புறூஉம்-மகிழும்.

(பொ-ரை) புலி ஊனையுண்டு திறம்பெறும், பசுக்கள் புற்களைத்தின்று மகிழும், கீழ்மக்கள் சோற்றையுண்டு மகிழ்வார்கள், மேன்மக்கள் தங்கள் தங்கள் தகுதிக்குரிய செயலால் மகிழ்வார்கள்.

(இ-பு.) உழுவை, காலேயம், கீழ், மேல்-எழுவாய். பெறும், உறும்-பயனிலை. (கஎசு)

கைத்திலர் நல்லார்கைத் துண்டாகக் காப்பாரின்
வைத்தாரி னல்லர் வறியவர்—பைத்தெழுந்து
வைதாரி னல்லார் பொறுப்பவர் செய்தாரின்
நல்லார் சிதையா தவர்.

(ப-ரை.) கைத்துண்டா-கைப்பொருளுண்டாகி, காப்பாரின்-பாதுகாப்பவரின், கைத்திலர்-கைப்பொருளில்லாதார், நல்லர்-நல்லராவர், வைத்தாரின்-அப்பொருளை வைத்திழப்பவரின், வறியவர்-தரித்திரர், நல்லர்-நல்லவராவர், பைத்து எழுந்து-வெகுண்டெழுந்து, வைதாரின்-வைதவரிலும், பொறுப்பவர்-அதனைப் பொறுப்பவர், நல்லர்-நல்லவராவர், செய்தாரின்-உதவியைச் செய்தவரிலும், சிதையாதவர்-அதனை மறவாதவர், நல்லர்-நல்லவராவர்.

(பொ-ரை.) பொருளுண்டாகிப் பாதுகாப்பவரினும் பொருளில்லார் நல்லவர். பொருள் வைத்திழப்பவரினும் தரித்திரர் நல்லவர். கோபித்து வைதவரிலும் பொறுப்பவர் நல்லவர். நன்றி செய்தவரிலும் மறவாதவர் நல்லவர்.

(இ-பு-) கைத்திலர், வறியவர், பொறுப்பவர், சிதையாதவர்-எழுவாய். நல்லர்-பயனிலை. ஆம்-அசை.

இன் உருபுகள் ஐந்தாம்வேற்றுமை எல்லைப்பொருளில் வந்தன. கைத்துண்டாக்காப்பாரின் நல்லர் என்று பாடந்திரித்துக்கொள்க. (௧௭௭)

மகனுரைக்குந் தந்தை நலத்தை யொருவன்
முகனுரைக்கு முண்ணின்ற வேட்கை—அகனீர்ப்
பிலத்தியல்பு புக்கா னுரைக்கு நிலத்தியல்பு
வான முரைத்து விடும்.

(ப-ரை.) மகன்-புத்திரனுடைய குணமே, தந்தை நலத்தை-தனது பிதாவினுடைய குணத்தை, உரைக்கும்-சொல்லும், ஒருவன்முகம்-ஒருவனுடைய முகம், உள்நின்ற-அவன் மனத்துள்ள, வேட்கை-விருப்பத்தை, உரைக்கும்-காட்டும், அகனீர்ப்பிலத்தியல்பு-ஆழமாகிய நீர்நிறைந்த பிலத்தினியல்பை, புக்கான்-அதன்கட்சென்றான், உரைக்கும்-காட்டுவன், நிலத்தியல்பு-பூமியிலுள்ள மக்களது குணத்தை, வான்-மழை, உரைத்துவிடும் (பெய்தும் பெய்யாதும்) அறிவிக்கும்.

(பொ-ரை.) புத்திரனுடையகுணமே பிதாவினுடைய குணத்தைச் சொல்லும். ஒருவனுடைய முகம் அவன் மனத்துள்ள விருப்பத்தைக் காட்டும். ஆழமாகிய நீர்நிறைந்த பிலத்தியல்பை அதன்கட்புகுந்தான் காட்டுவன், பூமியிலுள்ள மக்கள் குணத்தை மழைபெய்தும் பெய்யாதும் அறிவிக்கும்.

(இ-பு.) மகன், முகன், புக்கான், வானம்-எழுவாய். உரைக்கும், உரைத்துவிடும்-பயனிலை. முகம் முகன் எனப் போலியாயிற்று. (௧௭௮)

தேவ ரனையர் புலவருந் தேவர்
தமரனைய ரோரூ ருறைவார்—தமருள்ளும்
பெற்றன்னர் பேணி வழிபடுவார் கற்றன்னர்
கற்றாரைக் காத லவர்.

(ப-ரை.) புலவர்-அறிவுடையோர், தேவர்-தேவர்களை, அனையர்-போல்வர், ஓர்ஊருறைவர்-ஓர் ஊரில் வசிப்போர், தேவர்-தேர்களுடைய, தமர்-சுற்றத்தாரை, அனையர் ஒப்பர், பேணி-அப்புலவரை விரும்பி, வழிபடுவோர்-வழிபாடுசெய்வோர், தமருள்-அத்தேவருடைய சுற்றத்தாருள் (வைத்து). பெற்றார்-அருள்பெற்றவரோடு, அன்னர்-ஒப்பர், கற்றாரை-கல்வியறிவுடையவரை, காதலர்-விரும்புவோர், கற்றார்-கற்றவரோடு, அன்னர்-ஒப்பாவர்.

(பொ-ரை.) அறிவுடையோர் தேவர்களைப்போல்வர், ஓரூரில் வசிப்போர் அத்தேவர்களுடைய சுற்றத்தாரை யொப்பர், புலவரை விரும்பி வழிபடுவோர் அவர் சுற்றத்தாருள் வைத்து அருள்பெற்றவராவர், கற்றவரை விரும்புவோர் கற்றவரோடொப்பர்.

(இ-பு.) புலவர், உறைவார், வழிபடுவார், காதலவர்-எழுவாய். அனையர், அன்னர்-பயனிலை. பெற்றார் அன்னர்-கற்றார் அன்னர் என்பன பெற்றன்னர், கற்றன்னர் எனத்தொகுத்தல் விகாரம்பெற்று நின்றன. (களகூ)

சாவாத வில்லை பிறந்த வுயிரெல்லாம்
தாவாத வில்லை வலிகளும்—மூவாத
விளமையி சைந்தாரு மில்லை வளமையில்
கேடின்றிச் சென்றாரு மில்

(ப-ரை.) பிறந்தவுயிர் எல்லாம்-உடம்பெடுத்த வுயிர்களெல்லாவற்றுள்ளும், சாவாத-இறவாதவுயிர்கள், இல்லை-இல்லையாம், வலிகளும்-வலிகளுள்ளும், தாவாத-கெடாதவன்மைகள், இல்லை-இல்லையாம், மூவாத-மூத்துக்கழியாத, இளமை-இளமைப்பருவம், இசைந்தாரும்-பெற்றுடையோரும், இல்லை-இல்லையாம், வளமையில்-செல்வத்தால், கேடு இன்றி-(இடையிலே) அழிவில்லாமல், சென்றாரும்-போயினாரும், இல்-இல்லையாம்.

(பொ-ரை.) உடம்பெடுத்த உயிர்களெல்லாவற்றுள்ளும் இறவாத உயிர் இல்லை. எவ்வகை வலிகளுள்ளுங் கெடாதவலிமை

கள் இல்லை. செல்வத்தால் இடையில் அழிவில்லாமற் போனவரும் இல்லை.

(இ-பு.) சாவாத, தாவாத, இசைந்தார், சென்றார்-எழுவாய். இல்லை, இல்-பயனிலை. சாவாத, தாவாத-அஃறிணைப் பலவின்பால் படர்க்கை எதிர்மறை வினையாலணையும் பெயர். மூவாத என்னும் பெயரெச்சத்திறுதி தொக்கது. (கஅ0)

கொடுப்பி னசனங் கொடுக்க விடுப்பின்
உயிரிடை யீட்ட விடுக்க—எடுப்பின்
கிளையுட் கழிந்தா ரெடுக்க கெடுப்பின்
வெகுளி கெடுத்து விடல்.

(ப-ரை) கொடுப்பின் - ஒருவனுக்குக் கொடுப்பானாயின், அசனம்-உணவை, கொடுக்க - கொடுக்கக்கடவன், விடுப்பின்-(ஒன்றை) நீக்குவானாயின், உயிர் இடையீட்ட-ஒருயிருக்கு இடையூறாயுள்ளவற்றை, விடுக்க-நீக்கக்கடவன், எடுப்பின்-தாங்குவானாயின், கிளையுள்-சுற்றத்தாருள், கழிந்தார்-தாழ்ந்தவரை, எடுக்க-தாங்கக்கடவன், கெடுப்பின்-(ஒன்றனை)-கெடுப்பானாயின், வெகுளி-தன்மனத்துண்டாகுங் கோபத்தை, கெடுத்துவிடல்-கெடுத்துவிடக் கடவன்.

(பொ-ரை.) ஒருவனுக்குக் கொடுப்பானாயின் உணவைக் கொடுக்கக் கடவன். ஒன்றை நீக்குவானாயின் ஒருயிருக்கு இடையூறாயுள்ளவற்றை நீக்கக்கடவன். தாங்குவானாயின் சுற்றத்தாருள் தாழ்ந்தவரைத் தாங்கக்கடவன். ஒன்றைக் கெடுப்பானாயின் தன் மனத்துண்டாகும் வெகுளியைக் கெடுக்கக்கடவன்.

(இ-பு.) ஒருவன்-தோன்றா எழுவாய், கொடுக்க, விடுக்க, எடுக்க, கெடுத்துவிடல்-பயனிலை. கெடுத்துவிடல்-அல்லீற்றுவியங்கோள்வினைமுற்று. (கஅக)

நல்லார்க்குந் தம்மூரென் றூரில்லை நன்னெறிச்
செல்வார்க்குந் தம்மூரென் றூரில்லை—அல்லாக்

கடைகட்குந் தம்மூரென் றூரில்லை தங்கைத்
துடையார்க்கு மெவ்வூரு மூர்.

(ப-ரை.) நல்லார்க்கும்-அறிவுடையோர்க்கும், தம்மூரென்று-தம்முடைய ஊரென்று, ஊர் இல்லை-ஒரு ஊரும் இல்லை, நன்னெறிச் செல்வார்க்கும்-நன்னெறியிலே செல்லும் அருந்தவருக்கும், தம் ஊரென்று-தம்முடைய ஊரென்று, ஊர் இல்லை-ஒரு ஊரும் இல்லை, அல்லாக் கடைகட்கும்-நன்னெறியிற் செல்லாத கீழ்மக்களுக்கும், தம்மூரென்று-தம்முடைய ஊரென்று, ஊர் இல்லை-ஒருரில்லை, தம்-தமது, கைத்து-கையில், உடையார்க்கு-பொருளுடையார்க்கு, எவ்வூரும்-எந்தவூரும், ஊர்-தமது ஊராகும்.

(பொ-ரை.) அறிவுடையோர்க்கும் தம்மூரென்று ஒருரில்லை, அரிய தவத்தினை யுடையோர்க்கும் தம்மூரென்று ஒருரில்லை, அறிவில்லாத கீழ்மக்களுக்கும் தம்மூரென் றோருரில்லை, பொருளுடையார்க்கு எவ்வூருந் தம்மூரேயாம்.

(இ-பு.) ஊர்-எழுவாய். இல்லை, ஊர்-பயனிலை. (கஅஉ)

கல்லா வொருவர்க்குத் தம்வாயிற் சொற்கூற்றம்
மெல்லிய வாழைக்குத் தானீன்ற காய்கூற்றம்
அல்லவை செய்வார்க் கறங்கூற்றங் கூற்றமே
இல்லிருந்து தீங்கொழுகு வாள்.

(ப-ரை.) கல்லா-நூல்களைக் கற்காத, ஒருவர்க்கு-ஒருவருக்கு, தம்வாயில்-தமது வாயினின்றுவரும், சொல்-சொற்கள், கூற்றம்-இயமனும், மெல்லிய-மிருதுவாகிய, வாழைக்கு-வாழைக்கு, தான் ஈன்ற-தான்பெற்ற, காய்-காயே, கூற்றம்-இயமனும், அல்லவை-பாவங்களை, செய்வார்க்கு-செய்பவருக்கு, அறம்-தருமதேவதையே, கூற்றம்-இயமனும், இல் இருந்து-ஒருவனுக்கு மனைவியாக இருந்து, தீங்கு-தீயவழியில், ஒழுகுவாள்-நடப்பாள், (நாயகனுக்கு) கூற்றமே-இயமனேயாவள்.

(பொ-ரை.) நூல்களைக் கற்காதவருக்கு அவர் வாய்ச்சொ

ல்லே இயமனாகும், வாழைக்குத் தானீன்ற காயே இயமனாகும், பாவஞ்செய்வார்க்குத் தருமதேவதையே இயமனாகும், ஒருவனுக்கு மனைவியாக இருந்து தீயவழியில் ஒழுகுபவள் நாயகனுக்கு இயமனேயாவள்.

(இ-பு.) சொல், காய், அறம்; ஒழுகுவாள் எழுவாய். கூற்றம்-பயனிலை. அல்லவை-தருமமல்லாதவை. (கஅங)

கள்ளாமை வேண்டுங் கடிய வருதலால்
தள்ளாமை வேண்டுந் தகுதியுடைய
நள்ளாமை வேண்டுஞ் சிறியாரோ டியார்மாட்டும்
கொள்ளாமை வேண்டும் பகை.

(ப-ரை.) கடிய-அஞ்சத்தக்க துன்பங்கள், வருதலால்-வருதலினால், கள்ளாமைவேண்டும்-களவுசெய்யாதிருத்தல் வேண்டும், தகுதியுடைய-தகுதியாகிய ஒழுக்கத்தை, தள்ளாமை வேண்டும்-நீக்காது கைக்கொள்ளவேண்டு, சிறியாரோடு-அறிவில்லாத கீழ்மக்களோடு, நள்ளாமை வேண்டும்-நட்புக்கொள்ளாதிருத்தல்வேண்டும், பகை-பகையை, யார்மாட்டும்-எவரிடத்தும், கொள்ளாமை-கொள்ளாதிருத்தல், வேண்டும் வேண்டும்.

(பொ-ரை.) அஞ்சத்தக்க துன்பங்கள் வருதலால் களவு செய்யாதிருத்தல் வேண்டும், தகுதியாகிய வொழுக்கத்தை நீக்காது கைக்கொள்ளவேண்டும், அறிவில்லாத கீழ்மக்களோடு நட்புக்கொள்ளாதிருத்தல் வேண்டும், எவரிடத்தும் பகைகொள்ளாதிருத்தல் வேண்டும்.

(இ-பு.) ஒருவன்-தோன்றா எழுவாய். வேண்டும்-பயனிலை. கள்ளாமை, நள்ளாமை, கொள்ளாமை-எதிர்மறைத் தொழிற்பெயர்கள். (கஅச)

இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம்
வளமிலாப் போழ்தத்து வள்ளன்மை குற்றம்
கிளைஞரில் போழ்திற் சினங்குற்றங் குற்றம்
தமரல்லா ரில்லகத் தூண்.

(ப-ரை.) இளமைப்பருவத்து - சிறுவயசிலே, கல்லாமை- கற்றுக்கொள்ளாமை, குற்றம்-குற்றமாம், வளம்-வருவாய், இலா- இல்லாத, போழ்தத்து-காலத்தில், வள்ளன்மை-கொடைக்குண ம், குற்றம்-குற்றமாம், கிளைஞர் சுற்றத்தார், இல்-இல்லாத போழ்தில்-இடத்தில், சினம்-கோபித்தல், குற்றம்-குற்றமாம், தமர்-சுற்றத்தார், அல்லார்-அல்லாதவரது, இல்லகத்து-வீட்டில், ஊண்-உண்ணுதல். குற்றம்-குற்றமாம்.

(பொ-ரை.) சிறுவயசிலே கற்றுக்கொள்ளாமையும், வருவாயில்லாதபொழுது கொடுத்தலும், சுற்றத்தாரில்லாவிடத்துக் கோபித்தலும், அந்நியர் வீட்டில் உண்ணுதலுங் குற்றமாம்.

(இ-பு.) கல்லாமை, வள்ளன்மை, சினம், ஊண்-எழுவாய். குற்றம் பயனிலை. போழ்தத்துஎன்பதில் அத்து சாரியை.(கஅரு)

எல்லா விடத்துங் கொலைதீது மக்களைக்
கல்லா வளர விடறீது—நல்லார்
நலந்தீது நாணற்று நிற்பிற் குலந்தீது
கொள்கை யழிந்தக் கடை.

(ப-ரை.) எல்லா இடத்தும்- (நன்மையைப் பயந்தாலும்) எல்லாவிடத்தும், கொலை-கொலைசெய்தல், தீது-தீமையாம், மக்களை-பிள்ளைகளை, கல்லா-கற்காமல், வளரவிடல் - வளரவிடல், தீது-தீமையாம், நாண்-வெட்கம், அற்று-நீங்கி, நிற்பில்-நின்றால், நல்லார்-பெண்களுடைய, நலம்-அழகு, தீது-தீமையாம், கொள்கை-ஒழுக்கம், அழிந்தக்கடை-அழிந்தவிடத்து, குலம்-அவன் பிறந்தகுலம், தீது-குற்றத்தையடையும்.

(பொ-ரை.) நன்மை பயக்குமாயினும் எந்தவிடத்திலுங் கொலையும், பிள்ளைகளைக் கல்வி கற்பியாமல் வளரவிடுதலும், நாணில்லாவிடத்துப் பெண்கள் அழகும், ஒழுக்கமில்லாவிடத்துக் குலமுங் குற்றமாம்.

(இ-பு,) எல்லாவிடத்துங் கொலை தீதெனப் பாடந்திரித்

துக்கொள்க. கொலை, வளரவிடல், நலம், குலம்-எழுவாய். நீது-பயனிலை. (கஅசு)

மாசு படினு மணிதன்சீர் குன்றாவாம்
பூசிக் கொளினு மிரும்பின்கண்—மாசோடும்
பாசத்து ளிட்டு விளக்கினுங் கீழ்தன்னை
மாசுடைமை காட்டி விடும்.

(ப-ரை.) மணி-இரத்தினம், மாசுபடினும்-அழுக்கடைந்தாலும், தன்சீர்-தன் குணத்தினின்றும், குன்றா-குறையாவாம், பூசிக்கொளினும்-கழுவிக்கொளினும், இரும்பின்கண்-இரும்பினிடத்து, மாசோடும்-குற்றம் உண்டாகும், பாசத்துள் இட்டு-விலங்கிலிட்டு, விளக்கினும்-அறிவித்தாலும், கீழ்-கீழ்மகன், மாசுடைமைதன்னை-குற்றமான கீழ்ச்செய்கைகளைக், காட்டி விடும்-மீட்டுஞ் செய்வான்.

(பொ-ரை.) இரத்தினம் அழுக்கடைந்தாலும் தன்குணத்திற் குறையாவாம், கழுவினாலும் இரும்பினிடத்துக் கறையுண்டாகும், விலங்கிலிட்டு அறிவித்தாலும் கீழ்மகன் குற்றமான செய்கைகளையே மீட்டுஞ் செய்வான்.

(இ-பு.) மணி, மாசு, கீழ்-எழுவாய். குன்றா, ஓடும், காட்டிவிடும்-பயனிலை. அம்-அசை. (கஅஎ)

ஒருவ னறிவானு மெல்லாம் யாதொன்றும்
ஒருவ னறியா தவனும்—ஒருவன்
குணனடங்கக் குற்ற முளானு மொருவன்
கணனடங்கக் கற்றானு மில்.

(ப-ரை.) எல்லாம்-எல்லாப்பொருளும், அறிவான் ஒருவன்-அறிந்தவொருவனும், யாதொன்றும்-யாதொருபொருளையும், அறியாதவன் ஒருவனும்-அறியாதவொருவனும், குணன் அடங்க-குணம் இல்லாமல், குற்றம் உளான் ஒருவனும்-குற்றமுள்ளவொருவனும், கணன்-கூட்டமாகிற நூல்களை, அடங்க-முழுவதும், கற்றான் ஒருவனும்-கற்றவொருவனும், இல்-இல்லை.

(பொ-ரை.) எல்லாப் பொருளையும் அறிந்தவனும், யாதொரு பொருளையு மறியாதவனும், குணமில்லாமற் குற்றமுள்ளவனும், நூல்களையெல்லாங் கற்றவனும் இல்லை.

(இ-பு.) அறிவான், அறியாதவன், குற்றமுளான், கற்றான்-எழுவாய். இல்-பயனிலை. கணன், குணன்-இறுதிப்போலி. ()

காரியாசான்

இயற்றிய

சிறுபஞ்சமூலம்.

பொருளுடையான் கண்ணதே போக மறனும்
அருளுடையான் கண்ணதே யாகும்—அருளுடையான்
செய்யான் பழிபாவஞ் சேரான் புறமொழியும்
உய்யான் பிறர்செவிக் குய்த்து.

(ப-ரை.) போகம்-இன்பமானது, பொருளுடையான் கண்ணது-செல்வமுடையவனது இடத்தேயாகும், அறனும்-தருமமும், அருளுடையான்-கிருபையை யுடையவனது, கண்ணது ஆகும்-இடத்தேயாகும், அருளுடையான்-கிருபையை யுடையவன், பழிசெய்யான்-பழிக்கப்படுஞ் செயல்களைச் செய்யான், பாவஞ்சேரான்-பாவத்தையடையான், புறமொழியும்-புறங்கூறுதலையும், பிறர்செவிக்கு உய்த்து-பிறருடைய செவியிற் செலுத்தி, உய்யான்-வாழான்.

(பொ-ரை.) இன்பம் செல்வமுடையவனிடத்தும், அறம் கிருபை யுடையவனிடத்தும் உள்ளனவாம், அருளுடையவன் பழிக்கப்படுஞ் செயல்களைச் செய்யான், பாவத்தையடையான், புறங்கூறுதலைச் செய்யான்.

(இ-பு.) போகம், அரண், உடையான்-எழுவாய், கண்ணது, ஆகும், செய்யான், சோரான்-பயனிலை. ஏ-பிரிநிலை உம்மை சிறப்பு.

படைதனக்கி யானை வனப்பாரும் பெண்ணின்
இடைதனக்கு நுண்மை வனப்பாம்—நடைதனக்குக்
கோடா மொழிவனப்புக் கோற்கதுவே சேவகர்க்கும்
வாடாத வன்கண் வனப்பு.

(ப-ரை.) யானை-யானை, படைதனக்கு-சேனைக்கு, வனப்பு ஆகும்-அழகாகும், எண்ணின்-ஆராயின், இடைதனக்கு-(பெண்களுடைய) இடைக்கு, நுண்மை-சிறுமை, வனப்பாம்-அழகாம், நடைதனக்கு-ஒழுக்கத்துக்கு, கோடாமொழி-பட்சபாதமில்லாத சொல், வனப்பு-அழகாகும், கோற்கு-செங்கோலுக்கும், அதுவே-அக்கோடாமொழியேயாம், சேவகர்க்கு-வீரர்களுக்கு, வாடாத-குறைவுபடாத, வன்கண்-அஞ்சாமை, வனப்பு-அழகாம்.

(பொ-ரை.) சேனைக்கு யானையும், பெண்களுடைய இடைக்கு நுண்மையும், ஒழுக்கத்துக்கும் செங்கோற்கும் பட்சமில்லாத சொல்லும், வீரர்களுக்கு அஞ்சாமையும் அழகேயாகும்.

(இ-பு.) யானை, நுண்மை, மொழி, வன்கண்-எழுவாய், வனப்பு-பயனிலை. (கக௦)

கண்வனப்புக் கண்ணோட்டங் கால்வனப்புச் செல்லாமை
எண்வனப்பித் துணையா மென்றுரைத்தல்—பண்வனப்புக்
கேட்டார் நன்றென்றல் கிளர்வேந்தன் றன்னாடு
வாட்டா னன்றென்றல் வனப்பு.

(ப-ரை.) கண்-கண்ணுக்கு, வனப்பு-அழகாவது, கண்ணோட்டம்-தாட்சிணியமேயாம், கால்-காலுக்கு, வனப்பு-அழகாவது, செல்லாமை-(பிறரிடத்து யாசிக்கச்) செல்லாமையாம், எண்-ஆராய்ச்சிக்கு, வனப்பு-அழகாவது, இத்துணையாம்-இவ்வளவினையுடையது, என்று உரைத்தல்-என்று சொல்லுதல், பண்-இசைக்கு, வனப்பு-அழகாவது, கேட்டார்-கேட்டோர், நன்று என்றல்-இனிமையுடைத்தென்று சொல்லுதல், கிளர்வேந்தன்-படையோடு

விளங்கும் அரசனுக்கு, வனப்பு-அழகாவது, தன் நாடு-தனது நாட்டிலுள்ள குடிகள், வாட்டான்-துன்பஞ்செய்யான், நன்று என்றல்-நன்மைசெய்கின்றானென்று சொல்லுதல் ஆம்.

(பொ-ரை.) கண்ணுக்கு அழகாவது கண்ணோட்டமும், காலுக்கு அழகாவது பிறரிடத்திற்சென்று யாசியாமையும், ஆராய்ச்சிக்கு அழகாவது இவ்வளவினையுடையதென்று சொல்லுதலும், அரசனுக்கு அழகாவது தன் நாட்டிலுள்ள குடிகள் இவன் துன்பஞ்செய்யான் நன்மைசெய்கின்றானென்று சொல்லுதலுமாம்.

(இ-பு.) வனப்பு-எழுவாய். கண்ணோட்டம், செல்லாமை, உரைத்தல், என்றல்-பயனிலை. (கசுக)

சிலம்பிக்குத் தன்சினை கூற்றநீள் கோடு
விலங்கிற்குக் கூற்ற மயிர்தான்—வலம்படா
மாவிற்குக் கூற்றமா ஞெண்டிற்குத் தன்பார்ப்பு
நாவிற்கு நன்றல் வசை.

(ப-ரை.) சிலம்பிக்கு-சிலந்திக்கு, தன்சினை-தனது முட்டை, கூற்றம்-மரணத்தைக் கொடுக்கும், விலங்கிற்கு-மிருகத்திற்கு, நீள்கோடு-நீண்டகொம்பு, கூற்றம்-துன்பத்தைக்கொடுக்கும், வலம்படா-வெற்றியில்லாத, மாவிற்கு-கவரிமானுக்கு, மயிர்-அதன் மயிர், கூற்றம்-மரணத்தைக்கொடுக்கும், ஞெண்டிற்கு-நண்டிற்கு, தன்பார்ப்பு-தனது குஞ்சு, (கூற்றம்) - மரணத்தைக் கொடுக்கும், நாவிற்கு-நாவினுக்கு, நன்று அல் வசை-நன்மையைத்தராத பழிச்சொற்கள், (கூற்றம்) -இயமனாம்.

(பொ-ரை.) சிலந்திக்குத் தனது முட்டையும், மிருகத்திற்கு நீண்டகொம்பும், கவரிமாவிற்கு அதன் மயிரும், நண்டிற்கு அதன் குஞ்சும், நாவிற்கு வசையும் கூற்றமேயாம்.

(இ-பு.) சினை, கோடு, மயிர், பார்ப்பு, வசை-எழுவாய். கூற்றம்-பயனிலை. தான்-அசை. அல்லாத என்பது அல்லெனக் குறைந்து நின்றது. (கசுஉ)

நாணிலான் சால்பு நடையிலா னன்னோன்பும்
ஊணிலான் செய்யு முதாரதையும் — ஏணிலான்
சேவகமுஞ் செந்தமிழ் தேற்றான கவிசெயலும்
நாவகமே நாடி னகை.

(ப-ரை.) நாண் இல்லான்-நாணமில்லாதவனது, சால்பும்-அமைதிக்குணமும், நடை இலான்-நல்லொழுக்கமில்லாதவனது, நல் நோன்பும்-நல்ல விரதமும், ஊண் இலான்-உணவு இல்லாதவன், செய்யும்-செய்கின்ற, உதாரதையும்-கொடையும், ஏண் இலான்-வலிமையில்லாதவனது, சேவகமும்-வீரமும், செந்தமிழ்-செந்தமிழை, தேற்றான்-அறியாதவன், கவிசெயலும்-செய்யுள் செய்தலும் ஆகிய இவ்வைந்தும், நா அகம்-நாக்கினிடத்தால், நாடின்-பேசின், நகை-நகைக்கிடமாம்.

(பொ-ரை.) நாணமில்லாதவனது அமைதிக்குணமும், நல்லொழுக்கமில்லாதவனது விரதமும், உணவில்லாதவன் செய்யும் கொடையும், வலிமையில்லாதவனது வீரமும், செந்தமிழ் அறியாதவன் கவிசெய்தலும் நகைக்கிடமாம்.

(இ-பு.) சால்பு, நோன்பு, உதாரதை, சேவகம், செயல்-எழுவாய். நகை-பயனிலை. தேற்றான் தன்வினை பிறவினையாய் நின்றது. (கசுந)

பெருங்குணத்தார்ச் சேர்மின் பிறன்பொருள் வவ்வன்மின்
கருங்குணத்தார் கேண்மை கழிமின் — ஒருங்குணர்ந்து
தீச்சொல்லே காமின் வருங்காலன் றிண்ணிதே
வாய்ச்சொல்லே யன்னன் வழக்கு.

(ப-ரை.) பெருங்குணத்தார்-மேன்மைக் குணமுடையவரை, சேர்மின்-நட்புக்கொள்ளுங்கள், பிறன்-பிறனுடைய, பொருள்-செல்வத்தை, வவ்வன்மின்-கவராதிருங்கள், கரும் குணத்தார்-கீழ்க்குணமுடையவருடைய, கேண்மை-நட்பை, கழிமின்-நீக்கிவிடுங்கள், ஒருங்கு-முற்றும், உணர்ந்து-ஆராய்ந்து, தீச்சொல்-தீயசொற்களை, காமின்-சொல்லாமற் காத்துக்கொள்ளுங்கள்,

காலன்-இயமன், திண்ணிதே-நிச்சயமாகவே, வரும்-வருவான், வாய்ச்சொல்லே-வாய்ச்சொல், அன்று-அல்ல, வழக்கு-உலகவழக்கேயாம்.

(பொ-ரை) மேன்மைக் குணமுடையவரை நட்புக்கொள்ளுங்கள், பிறருடைய செல்வத்தைக் கவராதிருங்கள், கீழ்க்குணமுடையவர் நட்பை நீக்குங்கள், ஆராய்ந்து தீயசொற்களைச் சொல்லாமற் காத்துக்கொள்ளுங்கள், இயமன் நிச்சயமாக வருவான் இது வாய்ச்சொலல்ல வழக்கமேயாம்.

(இ-பு.) நீங்கள்-தோன்று எழுவாய். சேர்மின், வவ்வன்மின், கழிமின், காமின்-பயனிலை. காலன்-எழுவாய். வரும்-பயனிலை, ஏ-தேற்றம். (ககூசு)

மயிர்வனப்புங் கண்கவரு மார்பின் வனப்பும்
உகிர்வனப்புங் காதின் வனப்புஞ்—செயிர்தீர்ந்த
பல்லின் வனப்பும் வனப்பல்ல நூற்கியைந்த
சொல்லின் வனப்பே வனப்பு.

(ப-ரை.) மயிர்-(ஒருவனுக்கு) சிகையினது, வனப்பும்-அழகும், கண்கவரும்-கண்ணைத் தன்னிடத்திற் கவரும், மார்பின்-மார்பினது, வனப்பும்-அழகும், உகிர்-நகத்தின், வனப்பும்-அழகும், காதின்-காதினது, வனப்பும்-அழகும், செயிர்-குற்றம், தீர்ந்த-நீங்கிய, பல்லின்-தந்தங்களின், வனப்பும்-அழகும், வனப்பு அல்ல-அழகென்றுசொல்லப்படா, நூற்கு-நூலுக்கு, இயைந்த-பொருந்திய, சொல்லின்-சொல்வன்மையால் வரும், வனப்பே-அழகே, வனப்பு-அழகாகும்.

(பொ-ரை.) ஒருவனுக்குச் சிகையினழகும் மார்பினழகும் நகத்தினழகும் காதினழகும் பல்லினழகும் அழகல்ல, நூற்கியைந்த சொல்வன்மையால் வரும் அழகே அழகென்று சொல்லப்படும்.

(இ-பு.) வனப்பு-எழுவாய். அல்ல, வனப்பு-பயனிலை. ()

வார்சான்ற கூந்தல் வரம்புயர வைகலும்
நீர்சான் றுயரவே நெல்லுயருஞ்—சீர்சான்ற

தாவாக் குடியுயரத் தாங்கருஞ்சீர்க் கோவுயர்தல்
ஓவா துரைக்கு முலகு.

(ப-ரை.) வார்சான்ற-நீட்சியமைந்த, கூந்தல் - கூந்தலையுடையவளே, வரம்பு உயர வயல்வரம்பு உயர, நீர்சான்று உயர-நீர்மிக்குயர்ந்து, வைகலும்-நாடோறும், நெல்லு உயரும்-நெல்லு உயர்ந்து வளரும் என்றும், சீர்சான்ற-சிறப்புமிக்க, தாவா கெடுதலில்லாத, குடி உயர-குடிகள் உயர்ச்சியையடைய, தாங்கரும்-தாங்குதற்கரிய, சீர்-சிறப்பையுடைய, கோ உயர்தல்-அரசன் உயர்ச்சியை யடையுமென்று, உலகு-உயர்ந்தோர், ஓவாது-இடைவிடாது, உரைக்கும்-சொல்லுவார்.

(பொ-ரை.) நீண்ட கூந்தலையுடையவளே! வயல்வரம்புயர, நீருயர்ந்து நாடோறும் நெல்லுயருமென்றும், குடிகளுயர அரசன் உயர்ச்சியை யடைவானென்றும் உயர்ந்தோர் இடைவிடாது சொல்லுவர்.

(இ-பு.) உலகு-எழுவாய். உரைக்கும் பயனிலை. தாவாத என்னும் பெயரெச்சம் குறைந்து நின்றது. உயர என்பதை உயர்ந்து எனத் திரிக்குக. (கசுக)

அழியாமை யெத்தவமுஞ் சார்ந்தாரை யாக்கல்
பழியாமை பாத்தல்யார் மாட்டும்—ஒழியாமை
கன்றுசா வப்பால் கறவாமை செய்யற்க
மன்றுசார் வாக மனை.

(ப-ரை.) எத்தவமும்-யாதொருதவத்தையும், அழியாமை-கெடாமையும், சார்ந்தாரை-தன்னையடுத்தவரை, பழியாமை-பழிக்காமல், ஆக்கல்-உயரச்செய்தலும், யார்மாட்டும்-எவரிடத்தும், ஒழியாமை-நீங்காது, பாத்தல்-பகுத்துண்டலும், (செய்குக) கன்றுசாவ-கன்று சாவும்படி, பால்-பாலை, கறவாமை-கறவாதிருத்தலும், மன்று-சபைக்கு, சார்வாக-பக்கத்திலே, மனை-வீட்டைக் கட்டுதலும், செய்யற்க-செய்யாதிருக்கக் கடவன்.

(பொ-ரை.) தவத்தைக் கெடாமையும் தன்னையடுத்தவரைப்

பழிக்காமல் உயர்த்தலும் எவரிடத்தும் நீங்காது பகுத்துண்டலும் செய்குக, கன்றுசாவப் பால்கறவாமையும் சவைக்கருகே வீட்டைக்கட்டுதலும் செய்யாதொழிக.

(இ-பு.) ஒருவன்-தோன்றா எழுவாய். செய்குக, செய்யற்க-பயனிலை. செய்குக-சொல்லெச்சம். (கசஎ)

பொச்சாப்புக் கேடு பொருட்செருக்குத் தான்கேடு
முற்றாமை கேடு முரண்கேடு—தெற்றத்
தொழின்மகன் றன்னோடு மாறாயி னென்றும்
உழுமகற்குக் கேடென் றுரை.

(ப-ரை.) என்றும்-எக்காலும், பொச்சாப்பு-மறதி, கேடு-கேட்டைத்தருவதாம்; பொருட் செருக்கு-செல்வச்செருக்கு, கேடு-கேட்டைத்தருவதாம், முற்றாமை-அறிவில் முதிராமை, கேடு-கேட்டைத்தருவதாம்; முரண்-பிறரோடு பகைத்தல், கேடு-கேட்டைத்தருவதாம். தெற்ற-உறுதியாக, தொழின்மகனோடு-தொழில்செய்பவனோடு, மாறு ஆயின்-பகைகொள்வானாயின், உழுமகற்கு-உழுவுதொழிலுடையானுக்கு, கேடு என்று-கேடாமென்று, உரை-சொல்லு.

(பொ-ரை.) மறதியும், செல்வச்செருக்கும், எடுத்துக்கொண்ட தருமத்தை முடியாதிருத்தலும், பிறரோடு பகைத்தலும், தொழின்மகனை உழுமகன்பகைத்தலும் எக்காலும் கேட்டைத் தருவனவாம்.

(இ-பு.) நீ-தோன்றா எழுவாய். சொல்லு-பயனிலை. தான்-அசை. (கசஅ)

பொன்பெறுங் கற்றான் பொருள்பெறு நற்கவி
என்பெறும் வாதி யியம்பெறும்—முன்பெறக்
கல்லார்கற் றாரினத்த ரல்லார் பெறுபவே
நல்லா ரினத்து நகை.

(ப-ரை.) கற்றான்-வித்துவான், பொன்பெறும்- (இம்மை மறுமைக்குரிய) பொருளையடைவான், நற்கவி-நல்ல கவிஞன், பொருள்பெறும்-செல்வத்தை யடைவான், வாதி-தார்க்கிகன், என்பெறும்-யாதுபெறுவானெனில், இயம்-வெற்றியாகிய கீர்த்தியை, பெறும்-பெறுவான், முன்பெற-இளமைப்பருவத்தில், கல்லார்-கற்காதவரும், கற்றார் இனத்து-கற்றவர் கூட்டத்தோடு, அல்லார்-சேராதவரும், நல்லார் இனத்து-பெரியோர் கூட்டத்து, நகை-இகழ்ச்சியை, பெறுப-பெறுவர்.

(பொ-ரை.) வித்துவான் இம்மைமறுமைக்குரிய பொருளையடைவான். நல்லகவிஞன் செல்வத்தை யடைவான், தார்க்கிகன் வெற்றியை யடைவான், இளமைப்பருவத்திலே கற்காதவரும், கற்றார்கூட்டத்தைச் சேராதவரும் பெரியோரால் இகழ்ச்சியைப் பெறுவார்.

(இ-பு.) கற்றான், கவி, வாதி, கல்லார், அல்லார்-எழுவாய். பெறும், பெறுப-பயனிலை. பெறுப-பலர்பாற் படர்க்கை எதிர்கால வினைமுற்று. ஓ-அசை. (௧௧௧)

நல்ல வெளிப்படுத்துந் தீய மறந்தொழிந்
தொல்லை யுயிர்க்கூற்றாக் கோலாகி—யொல்லுமேல்
மாயம் பிறர்பொருட்கண் மாற்றுக மானத்தான்
ஆயி னொழித லறிவு.

(ப-ரை.) நல்ல-நன்மைகளை, வெளிப்படுத்து-வெளியிடுதலும், தீய-தீமைகளை, மறந்தொழிந்து-மறந்துவிடுதலும், ஒல்லுமேல்-கூடுமாயின், ஒல்லை-விரைந்து, உயிர்க்கு-உயிர்களுக்கு, ஊற்றுக்கோலாகி-ஊன்றுகோலாதலும், மாயம்-வஞ்சகத்தை, பிறர்-பிறருடைய, பொருட்கண்-பொருளிடத்து, மாற்றி-நீக்கலும், மானத்தான்-மானங்கெடவரின், ஒழிதல்-இறத்தலும், ஆயின்-உண்டாயின், அறிவு-இவையே அறிவாகும்.

(பொ-ரை.) நன்மைகளை வெளியிடலும், தீமைகளை மறந்துவிடுதலும், உயிர்களுக்கு ஊன்றுகோலாதலும், பிறர்பொருளை

வஞ்சகஞ்செய்யாமையும், மானங்கெடவந்தால் உயிர்விடுதலுமாகிய இவைகளை அறிவாகும்.

(இ-பு.) வெளிப்படுதல், மறந்தொழிதல், ஊன்றுகோலாதல், மாற்றல், ஒழிதல்-எழுவாய். அறிவு-பயனிலை. (உ00)

நன்புலத்தாள் வையடக்கி நாளுநா ளேர்போற்றிப்
புன்புலத்தைச் செய்தெருப் போக்கியபின்—இன்புலத்த
பண்கலப்பை பார்ப்படுப் பானுழவோ னென்றிவை
நுண்கலப்பை நூலோரு வார்.

(ப-ரை.) நன்புலத்தாள்-விளைநிலத்தாள், வை அடக்கி-வைக்கோலையடக்குதலும், நாள்நாளும்-நாடோறும், ஏர்போற்றி-உழவுகாளைகளைப் பாதுகாத்தலும், புன்புலத்தை - கரம்புநிலங்களை, இன்புலத்த-நன்னிலமாக, செய்து-திருத்தலும், பின்-பின்பு, எருப்போக்கி-எருப்பெய்தலும், கலப்பை-கலப்பையாற் செய்யப்படும், பண்-உழவுதொழிலைச் செய்தலும், என்றிவை-என்றுசொல்லப்பட்ட இத்தொழில்களை, படுப்பான்-செய்பவன், பார்-உலகத்தில், உழவோன்-உழவுதொழிலாளனென்று, நுண்கலப்பை நூல்-நுண்ணிய கிருஷிநூலை, ஓதுவார்-கற்றோர் (சொல்லுவார்.)

(பொ-ரை.) விளைநிலத்தாள் வைக்கோலடக்குதல், உழவுகாளைகளைப் பாதுகாத்தல், கரம்புநிலங்களை நன்னிலமாகத் திருத்தல், எருப்பெய்தல், உழுதல் என்று சொல்லப்பட்ட தொழில்களைச் செய்பவனே உழவனென்று கிருஷிநூலார் சொல்லுவர்.

(இ-பு.) ஓதுவார்-எழுவாய். சொல்லுவார்-பயனிலை எச்சங்களை யெல்லாம் தொழிற்பெயராகக் கொண்டு முடிக்குக. ()

நீரற நன்று நிழனன்று தன்னில்லுள்
பாரற நன்றுபாத் துண்பானேல்—நேர்பெற
நன்று கனிசாலை நாட்டில் பெரும்போகம்
ஒன்றுமாஞ் சால வுடன்.

(ப-ரை.) நீர் அறம்-தண்ணீர்த்தருமம், நன்று-நல்லது, நிழல்-வழிப்போக்கில் நிழன்மரம்வைத்தல், நன்று-நல்லது, தன் இல்லுள்-தன்வீட்டில், பார் அறம்-தங்க இடங் கொடுத்தலாகிய தருமம், நன்று-நல்லது, நேர்பெற-முறைமைபொருந்த, பாத்து-பகுத்து, உண்பானேல்-உண்பானாயின், (அவ்வுணல்) நன்று-நல்லது, தளி சாலை-கோயிலையும் மடங்களையும், நாட்டில்-நிலைபெறச்செய்தால், (அச்செய்கை) நன்று-நல்லது, (இவைசெய்தோர்க்கு) உடன்-உடனே, சால-மிகவும், பெரும்போகம்-பெரியபோகம், ஒன்றும்-பொருந்தும்.

(பொ-ரை.) தண்ணீர்த்தருமமும், வழிப்போக்கின் நிழன்மரம் வைத்தலும், தன்வீட்டிற்றங்க இடங்கொடுத்தலும், முறைமைபொருந்தப் பகுத்துண்டலும், கோயில் மடங்களை நாட்டுதலுமாகிய தருமங்கள் நல்லனவாம். இவற்றைச்செய்தோர் உடனே பெரிய போகங்களைப் பொருந்துவார்.

(இ-பு) போகம்-எழுவாய். ஒன்றும்-பயனிலை. நன்று என்பது பின்னுங் கூட்டப்பட்டது. ஆம்-அசை. (உ0உ)

குளந்தொட்டுக் கோடு பதித்து வழிசீத்
துளந்தொட் டுழுவய லாக்கி—வளந்தொட்டுப்
பாகு படுகிணற் றோ டென் றிவை பாற்படுத்தான்
ஏகுஞ் சுவர்க்க மினிது.

(ப-ரை.) வளம்தொட்ட-வளம்பொருந்தத்தோண்டிய, பாகுபடு-பகுதியையுடைய, கிணற்றோடு-கிணற்றோடு, குளம்தொட்டு-குளத்தைத் தோண்டுதலும், கோடுபதித்து-மரங்களை நடுதலும், வழிசீத்து-வழிதிருத்தலும், உளம்-(மேட்டுநிலத்தை) உள்ளே, தொட்டு-தோண்டி, உழுவயலாக்கி உழுவயலாக்கலும், என்றஇவை-என்றுசொல்லப்பட்ட இவ்வைந்தையும், பாற்படுத்தான்-பகுதிபடச் செய்தவன், சுவர்க்கம்-சுவர்க்கத்தை, இனிது ஏகும்-இடையூறின்றியடைவான்.

(பொ-ரை) வளம்பொருந்திய கிணற்றோடு குளந்தோண்டுதலும், மரங்கள்வைத்தலும், வழிதிருத்தலும், மேட்டுநிலத்தைத்

தோண்டி வயலாக்கலும் ஆகிய இவ்வைந்தையும் செய்தவன் சுவர்க்கத்தையடைவான்.

(இ-பு) படுத்தான்-எழுவாய். எதும்-பயனிலை. (உ0ரு)

தான்பிறந்த வில்நினைந்து தன்னைக் கடைப்பிடித்துத்
தான்பிற ராற்கருதற் பாடுணர்ந்து—தான்பிறரால்
சாக வெனவாழான் சான்றோரா லெந்நாளும்
ஆக வெனவாழ்த னன்று.

(ப-ரை.) தான்பிறந்த-தான்றோன்றிய, இல் நினைந்து-குடியை நினைந்து, தன்னை-தன்னை, கடைப்பிடித்து-நல்வழியிற் செலுத்தி, தான்பிறரால்-தான் மற்றையோரால், கருதற்பாடு-நன்குமதிக்கப்படுதலை, உணர்ந்து-அறிந்து, தான் பிறரால்-தான் மற்றையோரால், சாகவென-சாகக்கடவனென்று சொல்லும்படி, வாழான்-வாழாதவனாய், சான்றோரால்-பெரியோர்களால், எந்நாளும்-எப்பொழுதும், ஆகவென-வாழக்கடவனென்று சொல்லும்படி, வாழ்தல்-வாழுதல், நன்று நல்லது.

(பொ-ரை,) தான்றோன்றிய குடியை நினைத்துத் தன்னை நல்வழியிற் செலுத்தித் தான் மற்றையோரால் நன்குமதிக்கற்பாட்டையறிந்து பிறரால் சாகக்கடவனென வாழாமற் சான்றோரால் வாழக்கடவனென்று சொல்லும்படி வாழுதல் நன்று.

(இ-பு) வாழ்தல்-எழுவாய். நன்று-பயனிலை. வாழான்-முற்று எச்சமாய் நின்றது. சாக, ஆக-வியங்கோள் வினைமுற்றுக்கள். (உ0சு)

புண்பட்டார் போற்றுவா ரில்லாதார் போகுயிர்கள்
கண்கெட்டார் காலிரண்டு மில்லாதார்—கண்கடைப்பட்
டாழ்ந்து நெகிழ்ந்தவர்க் கீந்தார் கடைபோக
வாழ்ந்து கழிவார் மகிழ்ந்து.

(ப-ரை.) புண்பட்டார்-போரிலே காயப்பட்டவர், போற்றுவார்-காப்பவர், இல்லாதார்-இல்லாதவர், போகு உயிர்கள்-இ

றக்கும் அவதியையுடைய உயிர்கள், கண்கெட்டார்-குருடர்கள், கால் இரண்டு இல்லாதார்-சப்பாணிகள், (என்று சொல்லப்பட்டவர்களிடத்தில்) கண் கடைப்பட்டு-தங்கடைக்கண்ணைச் செலுத்தி, ஆழ்ந்து-மனமுருகி, நெகிழ்ந்து-இரங்கி, அவர்க்கு-அவர்களுக்கு, ஈந்தார்-கொடுத்தவர், கடைபோக-தமக்குரிய வாழ்நாள் முழுதும், மகிழ்ந்து-மகிழ்ச்சியோடு, வாழ்ந்து-வாழ்ந்து, கழிவார்-இறப்பார்.

(பொ-ரை.) போரிலே காயப்பட்டவர், காப்பவரில்லாதார், இறக்கும் அவதியையுடையவுயிர்கள், குருடர்கள், காலிரண்டுமில்லாத சப்பாணிகள் என்று சொல்லப்பட்டவருக்கு மனமுருகிக் கொடுத்தவர் தம் வாழ்நாண்முழுதும் மகிழ்ச்சியோடு வாழ்ந்து இறப்பார்.

(இ-பு.) ஈந்தார்-எழுவாய். கழிவார்-பயனிலை. (௨0௫)

கழிந்தவை தானிரங்கான் கைவாரா நச்சான்
இழிந்தவை யின்புறா னில்லாதார்—மொழிந்தவை [ல்
மென்மொழியா லுண்ணெகிழ்ந் தீவானேல் விண்ணோரா
இன்மொழியா லேற்றப் படும்.

(ப-ரை.) கழிந்தவை-சென்றபொருளுக்கு, இரங்கான்-இரங்காதவனாய், கைவாரா-கைக்குவாராதபொருளை, நச்சான்-விரும்பாதவனாய், இழிந்தவை-இழிதொழில்களை, இன்புறான்-செய்யாதவனாய், இல்லாதார்-தரித்திரர், மொழிந்தவை-இரந்துகேட்டபொருளை, மென்மொழியால்-மிருதுவசனத்தோடு, உள்நெகிழ்ந்து-மனமுருகி, ஈவானேல்-கொடுப்பானாயின், விண்ணோரால்-தேவர்களால், இன்மொழியால்-இன்சொற்கொண்டு, ஏற்றப்படும்-உயர்த்தப்படுவான்.

(பொ-ரை.) சென்றபொருட்கு இரங்காதவனும், கைக்குவாராதபொருளை விரும்பாதவனாய், இழிதொழில்களைச் செய்யாதவனாய், மிருதுவாகிய வசனத்தைச் சொல்லுதலோடு தரித்திரர் கேட்டபொருள்களை மனமுருகிக் கொடுப்பானாயின் அவன் தேவர்களால் இன்சொற்கொண்டு உயர்த்தப்படுவான்.

(இ-பு.) ஒருவன்-எழுவாய். ஏற்றப்படும்-பயனிலை. தான்-அசை. (உ0௬)

தோற்கன்று காட்டிக் கறவார் கறந்தபால்
பாற்பட்டா ருண்ணார் பழிபாவம்—பாற்பட்டார்
ஏற்றயரா வின்புற்று வாழ்வன வீடழியக்
கூற்றயரச் செய்யார் கொணர்ந்து.

(ப-ரை.) பாற்பட்டார்-நன்னெறியிலொழுகுவோர், தோற்கன்று-தோலாற்செய்கிற கன்றை, காட்டி-(பசுவுக்கு) காட்டி, கறவார்-பாலைக்கறக்கமாட்டார், கறந்தபால்-அப்படிக் கறந்தபாலை, பாற்பட்டார்-பெரியோர், உண்ணார்-உட்கொள்ளார், பாற்பட்டார்-பெரியோர், பழிபாவம்-பழியையும் பாவத்தையும், செய்யார்-செய்யார், அயரா-வருந்தாது, இன்புற்று-மகிழ்ந்து, வாழ்வன-வாழுமுயிர்களை, கூற்று-இயமனும், அயர-அஞ்ச, ஏற்று-கைப்பற்றி, கொணர்ந்து-கொண்டுவந்து, ஈடு-வலி, அழிய-கெட, செய்யார்-கொலைசெய்யார்.

(பொ-ரை.) நன்னெறியிலொழுகுவோர் தோற்கன்றைக் காட்டிப் பால்கறவார். அப்படிக்கறந்த பாலை உட்கொள்ளார். பழியையும் பாவத்தையுஞ் செய்யார். இன்பத்தோடுவாழு முயிர்களைக் கைப்பற்றிக்கொண்டுவந்து கொலை செய்யார்.

(இ-பு.) பாற்பட்டார்-எழுவாய். கறவார், உண்ணார், செய்யார்-பயனிலை. செய்யார் என்பது-இரண்டிடத்துங் கூட்டப்பட்டது. (உ0௭)

சத்தமெய்ஞ் ஞானந் தருக்கஞ் சமயமே
வித்தகர் கண்டவீ டுள்ளிட்டாங்—கத்தகத்
தந்தவிவ் வைந்து மறிவான் றலையாய
சிந்திப்பிற் சிட்டன் சிறந்து.

(ப-ரை.) சத்தம்-இலக்கணநூலும், மெய்ஞ்ஞானம்-மெய்ஞ்ஞானநூலும், தருக்கம்-தருக்கநூலும், சமயம்-சமயநூலும், வித்

தகர்-ஞானிகள், கண்ட-செய்த. வீடு-வீட்டுநூலும், உள் இட்டு-சேர்த்து, தந்த-தரப்பட்ட, அத்தக-அத்தகுதியையுடைய, இவ்வைந்து-இவ்வைந்து நூலையும், அறிவான்-கற்றுணர்ந்தான், சிந்திப்பின்-ஆராயின், சிறந்து-மேம்பட்டு, தலையாய-முதன்மையான, சிட்டன்-அறிவுடையோனும்.

(பொ-ரை.) இலக்கண நூலும், மெய்ஞ்ஞான நூலும், தருக்க நூலும், சமய நூலும், ஞானிகள் செய்த வீட்டுநூலும் ஆகிய இவ்வைந்தையுங் கற்றுணர்ந்தான் தலையாய அறிவினையுடையான்.

(இ-பு.) அறிவான்-எழுவாய். சிட்டன் பயனிலை. தகவு என்பது தக எனக் குறைந்து நின்றது. (உ0அ)

கண்ணுங்காற் கண்ணுங் கணிதமெழுத் தியாழினொ
டெண்ணுங்காற் சாந்தே யிலைநறுக்கிட்—டெண்ணுங்கா
இட்டவிவ் வைந்து மறிவா னிடையாய [லை
சிட்டனென் றெண்ணப் படும்.

(ப-ரை) கண்ணுங்கால்-ஆராயுமிடத்து, கண்ணும்-சிந்திக்கத்தகும், கணிதம்-எண்ணும், எழுத்து-எழுத்து வன்மையும், யாழினொடு-யாழ்வாசித்தலோடு, எண்ணுங்கால்-வைத்தெண்ணுமிடத்து, சாந்து-சுதைதீற்றலும், இலைநறுக்கிடு-இலைகிள்ளலும், இட்ட-சொல்லிய, இவ்வைந்தும்-இவ்வைந்தும், அறிவான்-அறிபவன், இடையாய-நடுவாயுள்ள, சிட்டன் என்று-அறிவுடையவனென்று, எண்ணப்படும்-நினைக்கப்படுவான்.

(பொ-ரை.) எண்ணல், எழுதல், யாழ்வாசித்தல்சுதைதீற்றல், இலைகிள்ளல் என்னும் கைத்தொழிலைந்தினையும் அறிந்தவன் இடையாய சிட்டனென்றெண்ணப்படுவான்.

(இ-பு.) அறிவான்-எழுவாய். எண்ணப்படும்-பயனிலை. முற்செயுளால் மனதின் றொழிலைச்சொல்லி இச்செயுளாற் கைத்தொழிலைச் சொன்னார். (உ0கூ)

கற்புடைய பெண்ணமிழ்து கற்றடங்கி னானமிழ்து
நற்புடைய நாடமிழ்து நாட்டுக்கு—நற்புடைய
மேகமே சேர்கொடி வேந்தமிழ்து சேவகனும்
ஆகவே செய்யி னமிழ்து.

(ப-ரை.) கற்புடைய-கற்பினையுடைய, பெண்-மனைவி, அமிழ்து-அமிர்தமாவள், கற்று-நூல்களைக் கற்று, அடங்கினான்-புலன்களையடக்கினான், அமிழ்து-அமிழ்தமாவான், நற்புடைய-நற்செய்கையையுடைய, நாடு நாட்டிலுள்ளவர், அமிழ்து-அமிர்தமாவார், நாட்டுக்கு-அந்நாட்டுக்கு, மேகம்சேர் - மேகம்சேர்கின்ற, கொடி-கொடியையுடைய, வேந்து-அரசன், அமிழ்து-அமிழ்தமாவான், சேவகனும்-அரசன்தொழில் செய்பவனும், ஆகவே-ஆகக்கடவனவற்றைச், செய்யின்-செய்வானாயின், அமிழ்து-அமிழ்தமாவான்.

(பொ-ரை.) கற்புடைமனைவியும் கற்றுப் புலனடங்கினவனும் நற்செய்கையையுடைய நாட்டிலுள்ளாரும் மேகத்தையொத்த தொடியையுடைய அரசனும் அரசனுக்கு ஆவனவற்றைச் செய்யும் சேவகனும் அமிழ்தமாம்.

(இ-பு.) பெண், அடங்கினான், நாடு, வேந்து, சேவகன்-எழுவாய். அமிழ்து-பயனிலை, நாடு ஆகுபெயர். (௨௪௦)

பிழைத்த பொறுத்தல் பெருமை சிறுமை
இழைத்ததீங் கெண்ணி யிருத்தல்—பிழைத்தல்
பகைகெட வாழ்வது பல்பொருளாற் பல்லார்
நகைகெட வாழ்வது நன்று.

(ப-ரை.) பிழைத்த-குற்றங்களை, பொறுத்தல்-பொறுத்துக்கொள்ளுதல், பெருமை-பெருமைக்குணமாம், இழைத்த-பிறர்செய்த, தீங்கு-தீமையை, எண்ணி-நினைத்து, இருத்தல்-இருத்தல், சிறுமை-சிறுமைக்குணமாம், பிழைத்தல்-(தீமையினின்றும்) நீங்கியிருத்தல், நன்று-நல்லது, பகைகெட-நட்பாக, வாழ்வது-வாழுதல், நன்று-நல்லது, பல்பொருளால்-பலபொருள்களோடு,

பல்லார்-(ஈவோரிரப்போர் முதலிய) பலருடைய, நகைசெட-புகழ்பெற, வாழ்தல்-வாழுதல், நன்று-நல்லது.

(பொ-ரை.) குற்றத்தைப்பொறுத்தல் பெருமைக்குணமாகும் தீமையை நினைத்தல் சிறுமைக்குணமாகும். தீமையினீங்கியிருத்தலும் நட்பாக வாழ்தலும் புகழ்பெற வாழ்தலும் நல்லனவாம்.

(இ-பு.) பொறுத்தல், இருத்தல்-எழுவாய். பெருமை, சிறுமை-பயனிலை. பிழைத்தல், வாழ்வது, வாழ்வது-எழுவாய். நன்று-பயனிலை. நன்று-இரட்டித்தது. (உகக)

கதநன்று சான்றாண்மை தீது கழிய
மதநன்று மாண்பில்லார் முன்னர்—விதநன்றும்
கோய்வாயிற் கீழுயிர்க்கீ துற்றுக் குரைத்தெழுந்த
நாய்வா யுணால்ல தசை.

(ப-ரை.) மாண்பிலார் முன்னர்-அறிவிலார்முன்னே, கதம்-கொபம், நன்று-நன்மையாகும், சான்றாண்மை-பொறுமை, தீது-தீமையயக்கும், கழிய-மிகுந்த, மதன்-வன்மை, நன்று-நன்மையாகும், கோவாயின்-கள்ளைமுகக்கும் கருவியையொத்த வாயினையுடைய, கீழ் உயிர்க்கு-எளியவுயிர்களுக்கு, ஈ-கொடுக்கும், துற்று-உணவு, நன்று-நல்லது, குரைத்து-குலைத்து, எழுந்த-எழும்பிய, நாய்வாயுண-நாயினுடைய வாயின்கண், (இடும்) தசைவிதம்-தசையாகிய உணவுகளும், நல்ல நல்லனவாம்.

(பொ-ரை.) அறிவிலர்க்கு முன்னே கோபமும் வலிமையும், நன்மையாம். பொறுமை தீமையாம். எளிய உயிர்களுக்குக் கொடுக்கும் உணவும் நாய்க்குக் கொடுக்கும் உணவுகளும் நல்லனவாம்.

(இ-பு.) கதம், சான்றாண்மை, நன்று, தீது-பயனிலை. மதன்-எழுவாய். நன்று-பயனிலை. துற்று, விதம்-எழுவாய், நன்று, நல்ல-பயனிலை. விதம்-விலங்குணவு. (உகஉ)

தாயுமானவர் பாடல்.

அங்கிங்கெ னாதபடி யெங்கும் பிரகாசமா
 யானந்த பூர்த்தி யாகி
அருளொடு நிறைந்ததெது தன்னருள் வெளிக்குளே
 யகிலாண்ட கோடி யெல்லாம்
தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
 தழைத்ததெது மனவாக்கினில்
தட்டாம னின்றதெது சமய கோடிகளெலாந்
 தந்தெய்வ மெந்தெய்வமென்
றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவு நின்றதெது
 வெங்கணும் பெருவழக்காய்
யாதினும் வல்லவொரு சித்தாகி யின்பமா
 யென்றைக்கு முள்ளதெதுமேல்
கங்குல்பக லறநின்ற வெல்லையுள தெதுவது
 கருத்திற் கிசைந்த ததுவே
கண்டன வெலாமோன வுருவெளிய தாகவுங்
 கருதி யஞ்சலி செய்குவாம்.

அங்கு-அவ்விடம், இங்கு-இவ்விடம், என்னாதபடி-என்ன டிக்கூறாதபடி, எங்கும்-எவ்விடத்தும், பிரகாசமாய் (நீக்கமின்றி) ஒளிவடிவமாய், ஆனந்தபூர்த்தியாகி-ஆனந்தமே நிறைவாகி, அருளொடு-அருளினால், நிறைந்ததெது-நிறைந்துள்ளதெது, தன் அருள் வெளிக்குளே-தனது அருளாகிய வெளியினிடத்தே, அகில அண்டகோடி எல்லாம்-அளவில்லாத அண்டகோடிகளெல்லாம், தங்கும்படிக்கு-தன்னிடத்திலே பொருந்தும்படிக்கு, இச்சை வைத்து-இச்சைகொண்டு, உயிர்க்கு உயிராய்-ஆன்மாக்களுக்கெல்லாம் பரமான்மாவாய், தழைத்ததெது-பிரகாசிப்பதெது, மனம் வாக்கினில்-மனத்துக்கும் வாக்குக்கும், தட்டாமல்-எட்டாமல்,

(ப-ரை.) நீர் அறம்-தண்ணீர்த்தருமம், நன்று-நல்லது, நிழல்-வழிப்போக்கில் நிழன்மரம்வைத்தல், நன்று-நல்லது, தன் இல்லுள்-தன் வீட்டில், பார் அறம்-தங்க இடங் கொடுத்தலாகிய தருமம், நன்று-நல்லது, நேர்பெற-முறைமைபொருந்த, பாத்து-பகுத்து, உண்பானேல்-உண்பானாயின், (அவ்வுணல்) நன்று-நல்லது, தனி சாலை-கோயிலையும் மடங்களையும், நாட்டில்-நிலைபெறச்செய்தால், (அச்செய்கை) நன்று-நல்லது, (இவைசெய்தோர்க்கு) உடன்-உடனே, சால-மிகவும், பெரும்போகம்-பெரியபோகம், ஒன்றும்-பொருந்தும்.

(பொ-ரை.) தண்ணீர்த்தருமமும், வழிப்போக்கின் நிழன் மரம் வைத்தலும், தன்வீட்டிற்றங்க இடங்கொடுத்தலும், முறைமைபொருந்தப் பகுத்துண்டலும், கோயில் மடங்களை நாட்டுதலுமாகிய தருமங்கள் நல்லனவாம். இவற்றைச்செய்தோர் உடனே பெரிய போகங்களைப் பொருந்துவார்.

(இ-பு) போகம்-எழுவாய். ஒன்றும்-பயனிலை. நன்று என்பது பின்னுங் கூட்டப்பட்டது. ஆம்-அசை. (உ0உ)

குளந்தொட்டுக் கோடு பதித்து வழிசீத்
துளந்தொட் டுழுவய லாக்கி—வளந்தொட்டுப்
பாகு படுகிணற்றோ டென்றிவை பாற்படுத்தான்
ஏகுஞ் சுவர்க்க மினிது.

(ப-ரை.) வளம்தொட்ட-வளம்பொருந்தத்தோண்டிய, பாகுபடு-பகுதியையுடைய, கிணற்றோடு-கிணற்றோடு, குளம்தொட்டு-குளத்தைத் தோண்டுதலும், கோடுபதித்து-மரங்களை நடுதலும், வழிசீத்து-வழிதிருத்தலும், உளம்- (மேட்டுநிலத்தை) உள்ளே, தொட்டு-தோண்டி, உழுவயலாக்கி உழுவயலாக்கலும், என்றிவை-என்றுசொல்லப்பட்ட இவ்வைந்தையும், பாற்படுத்தான்-பகுதிபடச் செய்தவன், சுவர்க்கம்-சுவர்க்கத்தை, இனிது ஏகும்-இடையூறின்றி யடைவான்.

(பொ-ரை) வளம்பொருந்திய கிணற்றோடு குளந்தோண்டுதலும், மரங்கள்வைத்தலும், வழிதிருத்தலும், மேட்டுநிலத்தைத்

தோண்டி வயலாக்கலும் ஆகிய இவ்வைந்தையும் செய்தவன் சுவர்க்கத்தையடைவான்.

(இ-பு) படுத்தான்-எழுவாய். எரும்-பயனிலை. (உ0௫)

தான்பிறந்த இல்நினைந்து தன்னைக் கடைப்பிடித்துத்
தான்பிறராற் கருதற் பாடுணர்ந்து—தான்பிறரால்
சாக வெனவாழான் சான்றோரா லெந்நாளும்
ஆக வெனவாழ்த னன்று.

(ப-ரை.) தான்பிறந்த-தான்தோன்றிய, இல்நினைந்து-குடியை நினைந்து, தன்னை-தன்னை, கடைப்பிடித்து-நல்வழியிற் செலுத்தி, தான்பிறரால்-தான் மற்றையோரால், கருதற்பாடு-நன்கு மதிக்கப்படுதலை, உணர்ந்து-அறிந்து, தான் பிறரால்-தான் மற்றையோரால், சாகவென-சாகக்கடவனென்று சொல்லும்படி, வாழான்-வாழாதவனாய், சான்றோரால்-பெரியோர்களால், எந்நாளும்-எப்பொழுதும், ஆகவென-வாழக்கடவனென்று சொல்லும்படி, வாழ்தல்-வாழுதல், நன்று நல்லது.

(பொ-ரை,) தான்தோன்றிய குடியை நினைத்துத் தன்னை நல்வழியிற் செலுத்தித் தான் மற்றையோரால் நன்குமதிக்கற்பாட்டையறிந்து பிறரால் சாகக்கடவனென வாழாமற் சான்றோரால் வாழக்கடவனென்று சொல்லும்படி வாழுதல் நன்று.

(இ-பு) வாழ்தல்-எழுவாய். நன்று-பயனிலை. வாழான்-முற்று எச்சமாய் நின்றது. சாக, ஆக-வியங்கோள் வினைமுற்றுக்கள். (உ0௬)

புண்பட்டார் போற்றுவா ரில்லாதார் போகுயிர்கள்
கண்கெட்டார் காலிரண்டு மில்லாதார்—கண்கடைப்பட்
டாழ்ந்து நெகிழ்ந்தவர்க் கீந்தார் கடைபோக
வாழ்ந்து கழிவார் மகிழ்ந்து.

(ப-ரை.) புண்பட்டார்-போரிலே காயப்பட்டவர், போற்றுவார்-காப்பவர், இல்லாதார்-இல்லாதவர், போகு உயிர்கள்-இ

றக்கும் அவதியையுடைய உயிர்கள், கண்கெட்டார்-குருடர்கள், கால் இரண்டு இல்லாதார்-சப்பாணிகள், (என்று சொல்லப்பட்டவர்களிடத்தில்) கண் கடைப்பட்டு-தங்கடைக்கண்ணைச் செலுத்தி, ஆழ்ந்து-மனமுருகி, நெகிழ்ந்து-இரங்கி, அவர்க்கு-அவர்களுக்கு, ஈந்தார்-கொடுத்தவர், கடைபோக-தமக்குரிய வாழ்நாள் முழுதும், மகிழ்ந்து-மகிழ்ச்சியோடு, வாழ்ந்து-வாழ்ந்து; கழிவார்-இறப்பார்.

(பொ-ரை.) போரிலே காயப்பட்டவர், காப்பவரில்லாதார், இறக்கும் அவதியையுடையவுயிர்கள், குருடர்கள், காலிரண்டுமில்லாத சப்பாணிகள் என்று சொல்லப்பட்டவருக்கு மனமுருகிக் கொடுத்தவர் தம் வாழ்நாண்முழுதும் மகிழ்ச்சியோடு வாழ்ந்து இறப்பார்.

(இ-பு.) ஈந்தார்-எழுவாய். கழிவார்-பயனிலை. (உ0ரு)

கழிந்தவை தானிரங்கான் கைவாரா நச்சான்
இழிந்தவை யின்புறா னில்லாதார்—மொழிந்தவை [ல்
மென்மொழியா லுண்ணெகிழ்ந் தீவானேல் விண்ணோரா
இன்மொழியா லேற்றப் படும்.

(ப-ரை.) கழிந்தவை-சென்றபொருளுக்கு, இரங்கான்-இரங்காதவனாய், கைவாரா-கைக்குவாராதபொருளை, நச்சான்-விரும்பாதவனாய், இழிந்தவை-இழிதொழில்களை, இன்புறான்-செய்யாதவனாய், இல்லாதார்-தரித்திரர், மொழிந்தவை-இரந்துகேட்டபொருளை, மென்மொழியால்-மிருதுவசனத்தோடு, உள்நெகிழ்ந்து-மனமுருகி, ஈவானேல்-கொடுப்பானாயின், விண்ணோரால்-தேவர்களால், இன்மொழியால்-இன்சொற்கொண்டு, ஏற்றப்படும்-உயர்த்தப்படுவான்.

(பொ-ரை.) சென்ற பொருட்கு இரங்காதவனும், கைக்குவாராதபொருளை விரும்பாதவனாய், இழிதொழில்களைச் செய்யாதவனாய், மிருதுவாகிய வசனத்தைச் சொல்லுதலோடு தரித்திரர் கேட்டபொருள்களை மனமுருகிக் கொடுப்பானாயின் அவன் தேவர்களால் இன்சொற்கொண்டு உயர்த்தப்படுவான்.

(இ-பு.) ஒருவன்-எழுவாய். எற்றப்படும்-பயனிலை. தான்-அசை. (உ0சு)

தோற்கன்று காட்டிக் கறவார் கறந்தபால்
பாற்பட்டா ருண்ணார் பழிபாவம்—பாற்பட்டார்
ஏற்றயரா வின்புற்று வாழ்வன வீடழியக்
கூற்றயராச் செய்யார் கொணர்ந்து.

(ப-ரை.) பாற்பட்டார்-நன்னெறியிலொழுகுவோர், தோற்கன்று-தோலாற்செய்கிற கன்றை, காட்டி-(பசுவுக்கு) காட்டி, கறவார்-பாலைக்கறக்கமாட்டார், கறந்தபால்-அப்படிக் கறந்தபாலை, பாற்பட்டார்-பெரியோர், உண்ணார்-உட்கொள்ளார், பாற்பட்டார்-பெரியோர், பழிபாவம்-பழியையும் பாவத்தையும், செய்யார்-செய்யார், அயரா-வருந்தாது, இன்புற்று-மகிழ்ந்து, வாழ்வன-வாழுமுயிர்களை, கூற்று-இயமனும், அயர-அஞ்ச, ஏற்று-கைப்பற்றி, கொணர்ந்து-கொண்டுவந்து, ஈடு-வலி, அழிய-கெட, செய்யார்-கொலைசெய்யார்.

(பொ-ரை.) நன்னெறியிலொழுகுவோர் தோற்கன்றைக் காட்டிப் பால்கறவார். அப்படிக்கறந்த பாலை உட்கொள்ளார். பழியையும் பாவத்தையுஞ் செய்யார். இன்பத்தோடுவாழு முயிர்களைக் கைப்பற்றிக்கொண்டுவந்து கொலை செய்யார்.

(இ-பு.) பாற்பட்டார்-எழுவாய். கறவார், உண்ணார், செய்யார்-பயனிலை. செய்யார் என்பது-இரண்டிடத்துங் கூட்டப்பட்டது. (உ0எ)

சத்தமெய்ஞ் ஞானந் தருக்கஞ் சமயமே
வித்தகர் கண்டவீ டுள்ளிட்டாங்—கத்தகத்
தந்தவிவ் வைந்து மறிவான் றலையாய
சிந்திப்பிற் சிட்டன் சிறந்து.

(ப-ரை) சத்தம்-இலக்கணநூலும், மெய்ஞ்ஞானம்-மெய்ஞ்ஞானநூலும், தருக்கம்-தருக்கநூலும், சமயம்-சமயநூலும், வித்

தகர்-ஞானிகள், கண்ட-செய்த. வீடு-வீட்டுநூலும், உள் இட்டு-சேர்த்து, தந்த-தரப்பட்ட, அத்தக-அத்தகுதியையுடைய, இவ்வைந்து-இவ்வைந்து நூலையும், அறிவான்-கற்றுணர்ந்தான், சிந்திப்பின்-ஆராயின், சிறந்து-மேம்பட்டு, தலையாய-முதன்மையான, சிட்டன்-அறிவுடையோனும்.

(பொ-ரை.) இலக்கண நூலும், மெய்ஞ்ஞான நூலும், தருக்க நூலும், சமய நூலும், ஞானிகள் செய்த வீட்டுநூலும் ஆகிய இவ்வைந்தையுங் கற்றுணர்ந்தான் தலையாய அறிவினையுடையான்.

(இ-பு.) அறிவான்-எழுவாய். சிட்டன்-பயனிலை. தகவு என்பது தக எனக் குறைந்து நின்றது. (௨௦௮)

கண்ணுங்காற் கண்ணுங் கணிதமெழுத் தியாழினொ
டெண்ணுங்காற் சாந்தே யிலைநறுக்கிட்—டெண்ணுங்கா
இட்டவிவ் வைந்து மறிவா னிடையாய [லெ
சிட்டனென் றெண்ணப் படும்.

(ப-ரை) கண்ணுங்கால்-ஆராயுமிடத்து, கண்ணும்-சிந்திக்கத்தகும், கணிதம்-எண்ணும், எழுத்து-எழுத்து வன்மையும், யாழினொடு-யாழ்வாசித்தலோடு, எண்ணுங்கால்-வைத்தெண்ணுமிடத்து, சாந்து-சுதைநீற்றலும், இலைநறுக்கிடு-இலைகிள்ளலும், இட்ட-சொல்லிய, இவ்வைந்தும்-இவ்வைந்தும், அறிவான்-அறிபவன், இடையாய-நடுவாயுள்ள, சிட்டன் என்று-அறிவுடையவனென்று, எண்ணப்படும்-நினைக்கப்படுவான்.

(பொ-ரை.) எண்ணல், எழுதல், யாழ்வாசித்தல்சுதைநீற்றல், இலைகிள்ளல் என்னும் கைத்தொழிலைந்தினையும் அறிந்தவன் இடையாய சிட்டனென்றெண்ணப்படுவான்.

(இ பு.) அறிவான்-எழுவாய். எண்ணப்படும்-பயனிலை. முற்செயுளால் மனதின் றொழிலைச்சொல்லி இச்செயுளாற் கைத்தொழிலைச் சொன்னார். (௨௦௯)

கற்புடைய பெண்ணமிழ்து கற்றடங்கி னானமிழ்து
நற்புடைய நாடமிழ்து நாட்டுக்கு—நற்புடைய
மேகமே சேர்கொடி வேந்தமிழ்து சேவகனும்
ஆகவே செய்யி னமிழ்து.

(ப-ரை.) கற்புடைய-கற்பினையுடைய, பெண்-மனைவி, அமிழ்து-அமிர்தமாவள், கற்று-நூல்களைக் கற்று, அடங்கினான்-புலன்களையடக்கினான், அமிழ்து-அமிழ்தமாவான், நற்புடைய-நற்செய்கையையுடைய, நாடு நாட்டிலுள்ளவர், அமிழ்து-அமிர்தமாவார், நாட்டுக்கு-அந்நாட்டுக்கு, மேகம்சேர் - மேகம்சேர்கின்ற, கொடி-கொடியையுடைய, வேந்து-அரசன், அமிழ்து-அமிழ்தமாவான், சேவகனும்-அரசன்றொழில் செய்பவனும், ஆகவே-ஆகக்கடவனவற்றைச், செய்யின்-செய்வானாயின், அமிழ்து-அமிழ்தமாவான்.

(பொ-ரை.) கற்புடைமனைவியும் கற்றுப் புலனடங்கினவனும் நற்செய்கையையுடைய நாட்டிலுள்ளாரும் மேகத்தையொத்த தொழிலையுடைய அரசனும் அரசனுக்கு ஆவனவற்றைச் செய்யும் சேவகனும் அமிழ்தமாம்.

(இ-பு.) பெண், அடங்கினான், நாடு, வேந்து, சேவகன்-எழுவாய். அமிழ்து-பயனிலை, நாடு ஆகுபெயர். (௨௧௦)

பிழைத்த பொறுத்தல் பெருமை சிறுமை
இழைத்ததீங் கெண்ணி யிருத்தல்—பிழைத்தல்
பகைகெட வாழ்வது பல்பொருளாற் பல்லார்
நகைகெட வாழ்வது நன்று.

(ப-ரை.) பிழைத்த-குற்றங்களை, பொறுத்தல்-பொறுத்துக்கொள்ளுதல், பெருமை-பெருமைக்குணமாம், இழைத்த-பிறர் செய்த, தீங்கு-தீமையை, எண்ணி-நினைத்து, இருத்தல்-இருத்தல், சிறுமை-சிறுமைக்குணமாம், பிழைத்தல்-(தீமையினின்றும்) நீங்கியிருத்தல், நன்று-நல்லது, பகைகெட-நட்பாக, வாழ்வது-வாழுதல், நன்று-நல்லது, பல்பொருளால்-பலபொருள்களோடு,

பல்லார்-(ஈவோர்பிரப்போர் முதலிய) பலருடைய. நகைகெட-புகழ்பெற. வாழ்தல்-வாழுதல், நன்று-நல்லது.

(பொ-ரை.) குற்றத்தைப்பொறுத்தல் பெருமைக்குணமாகும் தீமையை நினைத்தல் சிறுமைக்குணமாகும். தீமையினீங்கியிருத்தலும் நட்பாக வாழ்தலும் புகழ்பெற வாழ்தலும் நல்லனவாம்.

(இ-பு.) பொறுத்தல், இருத்தல்-எழுவாய். பெருமை, சிறுமை-பயனிலை. பிழைத்தல், வாழ்வது, வாழ்வது-எழுவாய். நன்று-பயனிலை. நன்று-இரட்டித்தது. (உகக)

கதநன்று சான்றாண்மை தீது கழிய
மதநன்று மாண்பில்லார் முன்னர்—விதநன்றும்
கோய்வாயிற் கிழுயிர்க்கீ துற்றுக் குரைத்தெழுந்த
நாய்வா யுணல்ல தசை.

(ப-ரை.) மாண்பிலார் முன்னர்-அறிவிலார்முன்னே, சதம்-கோபம், நன்று-நன்மையாகும், சான்றாண்மை-பொறுமை, தீது-தீமைபயக்கும், கழிய-மிகுந்த, மதன்-வன்மை, நன்று-நன்மையாகும், கோவாயின்-கள்ளைமுகக்குங் கருவியையொத்த வாயினையுடைய, கீழ் உயிர்க்கு-எளியவுயிர்களுக்கு, ஈ-கொடுக்கும், துற்று-உணவு, நன்று-நல்லது, குரைத்து-குலைத்து, எழுந்த-எழும்பிய, நாய்வாயுள-நாயினுடைய வாயின்கண், (இடும்) தசைவிதம்-தசையாகிய உணவுகளும், நல்ல நல்லனவாம்.

(பொ-ரை.) அறிவிலாருக்கு முன்னே கோபமும் வலிமையும், நன்மையாம். பொறுமை தீமையாம். எளிய உயிர்களுக்குக் கொடுக்கும் உணவும் நாய்க்குக் கொடுக்கும் உணவுகளும் நல்லனவாம்.

(இ-பு.) கதம், சான்றாண்மை, நன்று, தீது-பயனிலை. மதன்-எழுவாய். நன்று-பயனிலை. துற்று, விதம்-எழுவாய், நன்று, நல்ல-பயனிலை, விதம்-விலங்குணவு. (உகஉ)

தாயுமானவர் பாடல்.

அங்கிங்கெ னாதபடி யெங்கும் பிரகாசமா
யானந்த பூர்த்தி யாகி
அருளொடு நிறைந்ததெது தன்னருள் வெளிக்குளே
யகிலாண்ட கோடி யெல்லாம்
தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது மனவாக்கினில்
தட்டாம னின்றதெது சமய கோடிகளெலாந்
தந்தெய்வ மெந்தெய்வ மென்
றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவு நின்றதெது
வெங்கணும் பெரு வழக்காய்
யாதினும் வல்லவொரு சித்தாகி யின்பமா
யென்றைக்கு முள்ள தெதுமேல்
கங்குல்பக லறநின்ற வெல்லையுள தெதுவது
கருத்திற் கிசைந்த ததுவே
கண்டன வெலாமோன வுருவெளிய தாகவுங்
கருதி யஞ்சலி செய்குவாம்.

அங்கு-அவ்விடம், இங்கு-இவ்விடம், என்னாதபடி-என்றுசுட்டிக்கூறாதபடி, எங்கும்-எவ்விடத்தும், பிரகாசமாய் (நீக்கமின்றி) ஒளிவடிவமாய், ஆனந்தபூர்த்தியாகி-ஆனந்தமே நிறைவாகி, அருளொடு-அருளினால், நிறைந்ததெது-நிறைந்துள்ளதெது, தன் அருள் வெளிக்குளே-தனது அருளாகிய வெளியினிடத்தே, அகில அண்டகோடி எல்லாம் அளவில்லாத அண்டகோடிகளெல்லாம், தங்கும்படிக்கு-தன்னிடத்திலே பொருந்தும்படிக்கு, இச்சை வைத்து-இச்சைகொண்டு, உயிர்க்கு உயிராய்-ஆன்மாக்களுக்கெல்லாம் பரமான்மாவாய், தழைத்ததெது-பிரகாசிப்பதெது, மனம் வாக்கினில்-மனத்துக்கும் வாக்குக்கும், தட்டாமல்-எட்டாமல்,

நின்றதெந்து-நின்றதெது, சயமகோடிகள் எலாம்-அளவில்லாத சமயங்களெல்லாம், தம் தெய்வம்-தமது தெய்வம், எம் தெய்வம்-எமது தெய்வம், என்று-என்று, எங்கும்-எவ்விடத்திலும், தொடர்ந்து-வந்து, எதிர்வழக்கிடவும்-எதிர்வாதஞ்செய்யவும், நின்றதெது-நின்றதெது, எங்கணும்-எவ்விடத்தினும், பெருவழக்காய்-மிக்குவழங்கிவருவதாய், யாதினும்-எவற்றினும், வல்ல-வலிய, ஒரு-ஒப்பற்ற, சித்து ஆகி-ஞானமே வடிவாய், இன்பமாய்-சுகானுபவமேயாய், என்றைக்கும்-முக்காலத்திலும், உள்ளதெது-அழியாமல் நிலையுள்ளதெது, மேல்-மேலும், கங்குல் பகல்அற-இராப்பகல் ஒழிய, நின்ற-பொருந்திய, எல்லை உளதெது-இடத்தில் விளங்குவதெது, அது-அப்பொருளே, கருத்திற்கு-அறிவிற்கு, இசைந்தது-பொருந்தியது, (ஆதலால்) கண்டன எலாம்-காணப்பட்டவைகளெல்லாம், மோன உருவெளியது ஆகவும்-அசைவற்ற சிதாகாசமேயுருவமாகவும், கருதி-புத்திபண்ணி, அஞ்சலிசெய்குவாம்-அஞ்சலி பண்ணுவாம்.

(இ-பு.) நாம்-தோன்றா எழுவாய். அஞ்சலிசெய்குவாம்-பயனிலை. (உகங)

எத்தனை விதங்கடான் கற்கினுங் கேட்கினுமென்
னிதயமு மொடுங்க வில்லை
யானெனு மகந்தைதா னெள்ளளவு மாறவிலை
யாதினும் மபிமான மென்
சித்தமிசை குடிகொண்ட தீமையொ டிரக்கமென்
சென்மத்து நானறிகி லேன்
சீலமொடு தவவிரத மொருகனவி லாயினுந்
தெரிசனங் கண்டு மறியேன்
பொய்த்தமொழி யல்லான் மருந்துக்கு மெய்ம்மொழி
புகன்றிடேன் பிறர் கேட்கவே
போதிப்ப தல்லாது சும்மா விருந்தருள்
பொருந்திடாப் பேதை நானே
அத்தனை குணக்கேடர் கண்டதாக் கேட்டதா

வவனிமிசை யுண்டோ சொலாய்
அண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
யானந்த மான பரமே.

எத்தனை-எவ்வளவாய், விதங்கள்-அறிவுநூல்களை, கற்கினும்-கற்றுணர்ந்தாலும், கேட்கினும்-கேட்டாலும், என்-என்னுடைய, இதயம்-மனம், ஒடுங்க இல்லை-பற்றுநீங்கி நிற்கவில்லை, யான் எனும்-நானென்கிற, அகந்தை-அகங்காரம், எள்ளளவும்-சிறிதும், மாறவில்லை-நீங்கவில்லை, யாதினும்-எவற்றினும், அபிமானம்-மிகுந்தவிருப்பு, என்சித்தமிசை-எனது மனசினிடத்து, குடிகொண்டது-நிறைந்திருக்கின்றது, ஈகையொடு இரக்கம்-சற்பாத்திரத்திற் கொடுத்தலோடு ஆன்மாக்களிடத்துச் செய்யப்படும் இரக்கமும், என்சென்மத்தும்-என்பிறப்பிலும், நான் அறிகிலேன்-நான் செய்தறியேன், சீலமொடு-நல்லொழுக்கத்தோடு, தவம்-ஐம்பொறி அடக்கலும், விரதம்-மனம் பொறிவழிச்செல்லாமல் உண்டி சுருக்கலும், ஒருகனவிலாயினும்-ஒருகனவிலேனும், தெரிசனம் கண்டும் அறியேன்-தெரிசித்துமறியேன், பொய்த்தமொழி அல்லால்-பொய்வார்த்தையேயல்லாமல், மருந்துக்கும்-சிறிதும், மெய்மொழி-உண்மைவார்த்தை, புகன்றிடேன்-பேசிடேன், பிறர்-மற்றையோர், கேட்கவே-கேட்கும்படி, போதிப்பது அல்லாது-நன்னெறியைப் போதிப்பதேயல்லாமல், சும்மாயிருந்து-மௌனமாயிருந்து, அருள்-கிருபையை, பொருந்திடா-அடையாத, பேதைநானே-பேதையேன்நான், (ஆதலால்) அத்தனை-அவ்வளவு, குணக்கேடர் - நற்குணமில்லாதவர்கள், கண்டதாக - கண்டதாகவும், கேட்டதாக-கேட்டதாகவும், அவனிமிசை-பூமியில், உண்டோ-உள்ளதோ, அண்டபகிர் அண்டமும்-பிரமாண்டத்திலுள்ள பல அண்டமும், அடங்க-சேர, ஒரு-ஒப்பற்ற, நிறைவாகி-பரிபூரணமாய், ஆனந்தபரமான-பரமானந்த சொரூபமான, பரமே-மேலானபொருளே, சொலாய்-சொல்லியருளாய்.

(இ-பு.) நீ-தோன்றா எழுவாய். சொலாய்-பயனிலை. ()

தந்தைதாய் தமர்தார மகவென்னு மிவையெலாஞ்
சந்தையிற் கூட்ட மிதிலோ

சந்தேக மில்லைமணி மாடமா ளிகைமேடை
சதுரங்க சேனை யுடனே
வந்ததோர் வாழ்வுமோ ரிந்த்ரசாலக் கோலம்
வஞ்சனை பொறாமை லோபம்
வைத்தமன மாங்கிருமி சேர்ந்தமல பாண்டமோ
வஞ்சனை யிலாத கனவே
எந்தநா ளுஞ்சரி யெனத்தேர்ந்து தேர்ந்துமே
யிரவுபக லில்லா விடத்
தேகமாய் நின்றநின் னருள்வெள்ள மீதிலே
யானென்ப தறவு மூழ்கிச்
சிந்தைதான் றெளியாது சுழலும்வகை யென்கொலோ
தேடரிய சத்தாகி யென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேசோ மயா னந்தமே.

தந்தை-பிதா, தாய்-மாதா, தமர்-சுற்றத்தார், தாரம்-மனைவி, மகவு-பிள்ளை, என்னும்-என்றுசொல்லப்பட்ட, இவை எலாம்-இப்பொருள்களெல்லாம், சந்தையிற்கூட்டம்-ஒன்றாய் இரண்டாய் பத்தாய் நூறாய்க்கூட்டி அவ்வாறே பிரிகின்ற சந்தையிற் கூடும் கூட்டமாம், இதிலோ-இவ்வார்த்தையிலோ, சந்தேகம்-ஐயம், இல்லை-இல்லை, மணிமாடம்-இரத்தினம் அழுத்திச் செய்யப்பட்ட மாடங்களும், மாளிகை-மாளிகைகளும், மேடை-மேடைகளும், சதுரங்கசேனையுடனே-நால்வகைச் சேனையுடனே, வந்த-பொருந்திய, ஓர்-ஒப்பற்ற, வாழ்வும்-வாழ்க்கையும், ஓர்-ஒரு, இந்திரசாலக் கோலம்-தோன்றி மறைகின்ற வடிவமேயாம், வஞ்சனை-கபடமும், பொறாமை-பிறர் கல்வி செல்வமுதலியவற்றைக் கண்டு பொறாமையும், உலோபம்-ஈயாமையும், வைத்த-நிறைந்த, மனமாம் கிருமி-மனமாகிய புழு, சேர்ந்த-நெருங்கிய, மலபாண்டமோ-மலபாண்டமாகிய சரீரமோ, வஞ்சனை இலாத-பொய்யாத, கனவே-சொப்பனமேயாம், எந்தநாளும் - எந்தநாளும், சரியென-ஒப்பென்று, தேர்ந்து தேர்ந்தும்-ஆராய்ந்து அறிந்தும், இரவுபகல் இல்லா இடத்து-இராப்பகல் அற்றவிடத்தில்,

ஏகமாய்-ஏகவஸ்துவாய், நின்ற-பிரகாசித்துவிளங்கிய, நின்-உனது, அருள்வெள்ளமீதிலே-கிருபைக் கடலிலே, யானென்பது அறவும்-அகங்காரநீங்கவும், மூழ்கி-அமிழ்ந்தி, சிந்தைதான்-மனம், தெளியாது-அழியாமல், சுழலும்வகை-சுழலுந்தன்மை, என்-என்னை, தேடரிய-தேடியறிதற்கரிய, சித்தாகி-சித்தாகி, என்-எனது, சித்தமிசை-மனதிலே, குடிகொண்ட-நீங்காதிருக்கின்ற, அறிவான-சித்தான, தெய்வமே-தெய்வமே, தேசோமயம்-பிரகாசமாகிய, ஆனந்தமே-ஆனந்தவடிவாயுள்ள பொருளே, (அருளுதி.)

(இ-பு.) கொல்லும், ஓவும்-அசை. தந்தை-முறைப்பெயர். தேர்ந்து தேர்ந்து-வினையெச்ச அடுக்குத்தொடர். (உகரு)

பொன்னை மாதரைப் பூமியை நாடிடேன்
என்னை நாடிய வென்னுயிர் நாதனே
உன்னை நாடுவ னுன்னருட் டூவெளி
தன்னை நாடுவன் றன்னந் தனியனே.

(ப-ரை.) என்னைநாடிய-என்னைப் பொருளாகவிரும்பி அடிமைகொண்ட, என்உயிர்நாதனே-எனது ஆன்மநாயகரே, தன்னந்தனியேன்-தனித்தவனாகிய நான், பொன்னை-பொன்னையும், மாதரை-பெண்ணையும், பூமியை-பூமியையும், நாடிடேன்-விரும்பாது, உன்னை-தேவரீரை, நாடுவன்-விரும்புவன், உன் அருள்-உனதுகிருபையை, தூவெளிதன்னை-சுத்தமாகிய ஞானகாசத்தை, நாடுவன்-விரும்புவன்.

(பொ-ரை.) என்னைப் பொருளாக அடிமைகொண்ட ஆன்மநாயகரே! தனித்தவனாகிய யான் மண் பெண் பொன் என்னும் மூன்றாசையும் விட்டுத் தேவரீரையும் தேவரீருடைய அருள்வெளியாகிய சிதம்பரத்தையும் விரும்புவன்.

(இ-பு.) நான்-எழுவாய். நாடுவன்-பயனிலை. (உகசு)

கையு மெய்யுங் கருத்துக் கிசையவே
ஐய தந்ததற் கைய மினியுண்டோ

பொய்ய னேன்சிந்தைப் பொய்கெடப் பூரண
மெய்ய தாமின்ப மென்று விளைவதே.

(ப-ரை.) ஐய-யாவராலும் பூசிக்கப்படும் சுவாமீ! கையும்-(தேவரீருடைய திருத்தொண்டைச் செய்து உய்யும்படி) கைகளையும், மெய்யும் - மானிடதேகத்தையும், கருத்துக்கு-திருவுள்ளக் கருத்துக்கு, இசைய-பொருந்த, தந்ததற்கு-கொடுத்தமைக்கு, இனி-இனிமேல். ஐயம் உண்டோ-சந்தேகமுளதோ, (ஆதலால்) பொய்யனேன்-பொய்வாழ்வை யுடையேனது, சிந்தைப் பொய் கெட-மனத்திலுள்ள அஞ்ஞானங்கெட, பூரணமெய்யதாம்-நித்தியமாய்நிறைந்த, இன்பம்-இன்பம், என்று எப்பொழுது, விளைவது-பலிப்பது, (அருள்வாய்.)

(பொ-ரை.) யாவராலும் பூசிக்கப்படும் சுவாமீ! தேவரீருடைய திருத்தொண்டைச் செய்து உய்வதற்குக் கைகளையும் மானிடதேகத்தையும் திருவுள்ளத்துக்கு இசையத்தந்ததற்கோ சந்தேகமில்லை. ஆதலால் பொய்வாழ்வையுடைய எனது அஞ்ஞானங்கெட நித்தியானந்த இன்பம் என்று வந்து பொருந்தும்? அருள்வாய். (உகஎ)

சோதி யேசுட ரேசுக மேதுணை
நீதி யேநிச மேநிறை வேநிலை
ஆதி யேயுனை யானடைந் தேனகம்
வாதி யாதருள் வாயருள் வானையே.

(ப-ரை.) சோதியே-சோதிவடிவே, சுடரே-சந்திர சூரியர் வடிவே, சுகமே-இன்பவடிவே, துணை-துணையாயுள்ளவரே, நீதியே-பக்ஷபாதமில்லாதவரே, நிசமே-முக்காலத்துமுள்ள பொருளே, நிறைவே-பரிபூரணமே, நிலை ஆதியே-சகலபிரபஞ்சங்களும் நிற்றற்கு இடமாயிருப்பவரே, உனை-தேவரீரை, அடைந்தேன்-அடைந்தேன், அகம்-ஆணவமலம், வாதியாது-துன்பஞ்செய்யாது, அருள்வானை-ஞானாகாசத்தை, அருள்வாய்-தந்தருளும்.

(பொ-ரை.) சோதிவடிவாயுள்ளவரே! சந்திரசூரியவடிவுள்ளவரே! இன்பவடிவே! சகல உயிர்வருக்கங்களுக்கும் துணையா

யாயுள்ளவரே! பக்ஷபாதமில்லாதவரே! முக்காலத்துமுள்ள பொருளே! பரிபூரணப் பொருளே! உலகம நிற்றற்கு ஆதாரமாயுள்ளவரே! தேவரீரை அடைந்தேன். அடியேனை ஆணவமலம் வாதியாமல் ஞானகாசத்தைத் தந்தருளும். (உகஅ)

இரும்பைக் காந்த மிழுக்கின்ற வாறெனைத்
திரும்பிப் பார்க்கவொட் டாது திருவடிக்
கரும்பைத் தந்துகண் ணீர்கம் பலையெலாம்
அரும்பச் செய்யென தன்னையொப் பாமனே.

(ப-ரை.) எனது-அடியேனுடைய, அன்னை ஒப்பாம்-தாயையொத்திருக்கும், மன்னே-சுவாமீ, இரும்பை-இரும்பை, காந்தம்-காந்தமானது, இழுக்கின்றவாறு-(தன்னிடத்து) இழுக்குந்தன்மைபோல, எனை-அடியேனை, திரும்பி-(வேறொன்றையும்) திரும்பி, பார்க்கவொட்டாது-பார்க்கவிடாமல், திருவடிக்கரும்பை-திருவடியாகிய கரும்பை, தந்து-கொடுத்தருளி, கண்ணீர்-ஆனந்தபாஷ்பம், கம்பலை-நடுக்கமுதலிய அன்புக்குரிய அடையாளங்கள், எலாம்-எல்லாம், அரும்பச்செய்-உண்டாகும்படி செய்தருளுவாய்.

(பொ-ரை.) சுவாமீ! இரும்பைக் காந்தமானது எதிர்ப்பட்டமாத்திரத்தில் தன்னிடத்து இழுக்குமாறுபோல அடியேனுக்குத் திருவடியாகிய கரும்பைத்தந்து ஆனந்தபாஷ்பம் நடுக்கமுதலிய அன்புக்குரிய அடையாளங்களையும் உண்டாகும்படி செய்தருளுவாய்.

(இ-பு.) நீ-தோன்றா எழுவாய். செய்-பயனிலை.

சொல்லற்கரிய பரம்பொருளே
சுகவாரிதியே சுடர்க்கொழுந்தே
வெல்லற்கரிய மயலிலெனை
விட்டெங்கொளித்தா யாகெட்டேன்
கல்லிற்பசிய நாருரித்துக்
கடுகிற்பெரிய கடலடைக்கும்
அல்லிற்கரிய வந்தகனார்க்
காளாக்கினையோ வறியேனை.

(பதவுரை.) சொல்லற்கரிய - வசனித்தற்கரிய, பரம்பொருளே-மேலானபொருளே, சுகவாரிதியே-பேரின்பக்கடலே, சுடர்க்கொழுந்தே-சோதிசொரூபரே, வெல்லற்கரிய-யாவராலும் மேற்கொள்ளுதற்கரிய, மயலில்-மயக்கத்தில், எனைவிட்டு-அடியேனைவிட்டு, எங்கொளித்தாய்-எவ்விடத்து மறைந்தாய், ஆ கெட்டேன்-ஆ கெட்டொழிந்தேன், கல்லில்-(கடினபதார்த்தமாகிய) கல்லிலே, பசியநார்-பசுமையாகிய நாரை, உரித்து-உரித்து, கடுகில்-மிகச்சிறிய பொருளாகிய கடுகைக்கொண்டு, பெரியகடல் அடைக்கும்-மிகப்பெரிய கடலைத் தூர்க்கும், அல்லின்-இருளைப்பார்க்கினும், கரிய-கருநிறத்தையுடைய, அந்தகனார்க்கு-இயமனுக்கு, ஆள் ஆக்கினையோ-அடிமையாக்கினையோ, (யான்) அறியேன்-அறியமாட்டேன்.

(பொழிப்புரை.) பரம்பொருளே! பேரின்பக்கடலே! சோதிசொரூபமே! எவரும் மேற்கொள்ளுதற்கரிய மயக்கத்திலே அடியேனைவிட்டு எங்கொளித்தீர் ஆகெட்டேன். கடினபதார்த்தமாகிய கல்லிலே பசிய நாரையுரித்து மிகச்சிறியபொருளாகிய கடுகைக்கொண்டு பெரிய கடலைத்தூர்க்கும் இயமனுக்கு அடிமையாக்கினீரோ அறியேன்.

(இ-பு.) யான்-தோன்றாஎழுவாய். கெட்டேன்-பயனிலை.

நீதிமஞ்சரி விளக்கம் முற்றிற்று.

அநுபந்தம்.

ஆகுபெயர்.

(1) ஆகுபெயராவது யாது?

ஒரு பொருளின் இயற்பெயரால் அப்பொருளோடு சம்பந்தமுடைய பிறிதொரு பொருளைத் தொன்று தொட்டு வழங்குவது ஆகுபெயராம். அவ்வாகுபெயர் பதின்மூன்று வகைப்படும்.

அவையாவன:—

1.	பொருளாகுபெயர்.	(உ-ம்.)	தாமரைபோலுமுகம்.
2.	இடவாகுபெயர்.	,,	ஊரடங்கிற்று.
3.	காலவாகுபெயர்.	,,	காரறுத்தது.
4.	சினையாகுபெயர்.	,,	வெற்றிலைநட்டான்.
5.	குணவாகுபெயர்.	,,	வெள்ளைவந்தது.
6.	தொழிலாகுபெயர்.	,,	வற்றலுண்டான்.
7.	அளவையாகுபெயர்.	,,	காலாலேநடந்தான்.
8.	சொல்லாகுபெயர்.	,,	இதற்குரைசொல்லு.
9.	தானியாகுபெயர்.	,,	விளக்குமுறிந்தது.
10.	கருவியாகுபெயர்.	,,	திருவாசகம்.
11.	காரியவாகுபெயர்.	,,	இந்நூலலங்காரம்.
12.	கருததாவாகுபெயர்.	,,	திருவள்ளுவர் படித்தான்.
13.	உவமையாகுபெயர்.	,,	பாவைவந்தாள்.

(2) தெரிநிலைவினை குறிப்புவினை என்னும் இரண்டுந் தனித்தனி எத்தனைவகைப்படும்?

முற்று, பெயரெச்சம், வினையெச்சம் என மூன்றுவகைப்படும். இவையெல்லாம் உடன்பாட்டிலும் எதிர்மறையிலும் வரும்.

(3) வியங்கோள் வினைமுற்றுக்கள் யாவை?

க, அ, என்னும் விகுதிகளைப்பெற்று இருதிணையைம்பான் மூவிடங்களுக்கும் பொதுவாய் எதிர்காலங்காட்டி வரும் ஏவல் வினைமுற்றுக்களாம்.

(உ-ம்.) யான் வாழ்க, யாம் வாழ்க, நீ வாழ்க, நீர் வாழ்க, அவன் வாழ்க, அவள் வாழ்க, அவர் வாழ்க, அது வாழ்க, அவை வாழ்க, ஐயா வா.

செய்யுமென்முற்று.

(4) செய்யுமென் வாய்பாட்டுப் படர்க்கைவினைமுற்று எப்பால்களுக்குப் பொதுவாய் வரும்?

உயர்திணை யொருமைக்கும், அஃறிணை யொருமை பன்மைகளுக்கும் பொதுவாய் வரும்.

(உ-ம்.) அவன் வரும், அவள் வரும், அது வரும், அவை வரும்.

பொதுவினைக்குறிப்பு.

(5) தெரிநிலை வினைமுற்றேயன்றிக் குறிப்புவினைமுற்றும் பாலிடங்கட்குப் பொதுவாய் வருதலுண்டோ?

வேறு, இல்லை, உண்டு, யார் என்னும் நான்கு வினைக்குறிப்புமுற்றும் இருதிணை யைம்பான் மூவிடங்களுக்கும் பொதுவாய் வரும்.

(உ-ம்.) அவன், அவள், அவர், அது, அவை, நீ, நீர், யான், யாம். } வேறு, இல்லை, உண்டு, யார்.

(6) பெயர்ச்சொல்லேயன்றி வினைச்சொலும் வேற்றுமையுருபேற்று வருமா?

பொருளினது தொழினிகழ்ச்சியை அறிவிக்கும் வினை அப்பொருளுக்குப் பெயராய் வழங்கப்படும்போது வேற்றுமை யுருபேற்றுவரும்.

(உ-ம்.) வந்தானை, வந்தானல் தெரிகிலை வினையாலணையும்பெயர். மூன்பு பெரியனை, மூன்பு பெரியனல் குறிப்புவினையாலணையும் பெயர்.

(7) அன்மொழித்தொகையாவது யாது?

வேற்றுமைத்தொகை முதலாகிய ஐவகைத் தொகைக்கும் புறத்தில் வேறுமொழி தொக்க தொடராம்.

(உ-ம்.)

1. பூங்குழல்—இரண்டாம் வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது பூவையுயுடைய குழலினையுடையாள் என விரியும்.

2. தாழ்குழல்—வினைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது தாழ்ந்த குழலினையுடையாள் என விரியும்.

3. கருங்குழல்—பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது கருமையாகிய குழலினையுடையாள் என விரியும்.

4. தேன்மொழி—உவமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது தேன்போலு மொழியினையுடையாள் என விரியும்.

5. உயிர்மெய்—உம்மைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. இது உயிரு மெய்யுங் கூடிப்பிறந்த எழுத்து என விரியும்.

(8) வினைத்தொகையாவது யாது?

காலங்காட்டும் இடைநிலையும் விகுதியுந் தொக்க பெயரெச்சத்தொடராம்.

(உ-ம்.)

நேற்றுக் கொல்யானை—இறந்தகால வினைத்தொகை.

இன்று கொல்யானை—நிகழ்கால வினைத்தொகை.
நாளைக் கொல்யானை—எதிர்கால வினைத்தொகை.

வடமொழிச் சந்திகள்.

(1.) தீர்க்க சந்தி.

1. அ ஆ வின்முன் அ ஆ வரின், ஈறும் முதலுங் கெட ஆ வொன்று தோன்றும்:—

(உ-ம்.)	பத	+	அம்புயம்	=	பாதாம்புயம்.
	சிவ	+	ஆலயம்	=	சிவாலயம்.
	சேநா	+	அதிபதி	=	சேநாதிபதி.
	சதா	+	ஆநந்தம்	=	சதாநந்தம்.

2. இ ஈ யின்முன் இ ஈ வரின், ஈறும் முதலுங்கெட ஈயொன்று தோன்றும்:—

(உ-ம்.)	கிரி	+	இந்திரன்	=	கிரீந்திரன்.
	கிரி	+	ஈசன்	=	கிரீசன்.
	மஹீ	+	இந்திரன்	=	மஹீந்திரன்.
	நதீ	+	ஈசன்	=	நதீசன்.

3. உ ஊ வின்முன் உ ஊ வரின், ஈறும் முதலுங்கெட ஊ வொன்று தோன்றும்:—

(உ-ம்.)	குரு	+	உபதேசம்	=	குரூபதேசம்.
	மேரு	+	ஊர்த்துவம்	=	மேரூர்த்துவம்.
	வதூ	+	உத்துவாகம்	=	வதூத்துவாகம்.
	வதூ	+	ஊரு	=	வதூரு.

(2.) குண சந்தி

1. அ ஆ வின்முன் இ ஈ வரின், ஈறும் முதலுங் கெட ஏ யொன்று தோன்றும்:—

(உ-ம்.)	நர	+	இந்திரன்	=	நரேந்திரன்.
	சுர	+	ஈசன்	=	சுரேசன்.

தரா + இந்திரன் = தரேந்திரன்.
மகா + ஈசன் = மகேசன்.

2. அ ஆ வின்முன் உ ஊ வரின், ஈறும் முதலுங்கெட ஓ வொன்று தோன்றும்:—

(உ-ம்.)	பாத	+	உதகம்	= பாதோதகம்.
	ஞான	+	ஊர்ச்சிதன்	= ஞானோர்ச்சிதன்.
	கங்கா	+	உற்பத்தி	= கங்கோற்பத்தி.
	தயா	+	ஊர்ச்சிதன்	= தயோர்ச்சிதன்.

(3.) விருத்தி சந்தி.

1. அ ஆ வின்முன் எ ஐ வரின், ஈறும் முதலுங் கெட ஐ யொன்று தோன்றும்:—

(உ-ம்.)	லோக	+	ஏகநாயகன்	= லோகைகநாயகன்.
	சிவ	+	ஐக்கியம்	= சிவைக்கியம்.
	தரா	+	ஏகவீரன்	= தரைகவீரன்.
	மகா	+	ஐசுவரியம்	= மகைசுவரியம்.

2. அ ஆ வின்முன் ஓ ஔ வரின், ஈறும் முதலுங்கெட ஔ வொன்று தோன்றும்:—

(உ-ம்.)	கலச	+	ஓதனம்	= கலசௌதனம்.
	திவ்விய	+	ஔடதம்	= திவ்வியௌடதம்.
	கங்கா	+	ஓகம்	= கங்கௌகம்.
	மகா	+	ஔதாரியம்	= மகௌதாரியம்.

4725a